BIBLE QUESTIONS / Tamil

# பைபிள் கேள்விகள்



## கேள்விகளுக்குப் பதில் தரும் கேள்விகள்

R. ஸ்டான்லி

# பைபிள் கேள்விகள்

**கேள்விகளுக்குப்**
**பதில் தரும்**
**கேள்விகள்**

**R. ஸ்டான்லி,** B.E.,M.TECH.,

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

Evangeline Stanley Jones
13 Church Colony
Vellore 632 006, India
<evangeline@stanleyonbible.com>

**BIBLE QUESTIONS** (Tamil)

Copyright 2018 R. STANLEY
13 Church Colony
Vellore 632 006
*00 91 98437 07600*
*00 91 98430 11943*

First Edition: August 2018

*பேச்சு வடிவத்திலிருந்த இச்செய்திகளை எழுத்து வடிவமைத்தவர்:*
Mrs. கோகிலா பொன்னுசாமி

*தட்டெழுத்து:* Miss M. சங்கீதா, Blessing Computers, Vellore

*பக்க வடிவமைப்பு:*
Mr. K. குணசேகரன்
ஓய்வு பெற்ற மிஷனரி
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

*அச்சுப் பிழை திருத்தம்:*
Mrs. லினெட்டா சம்பத்குமார்
Mr. M. மரியஜோசப்
Mr. C. சுதாகர் & குழுவினர்

*ஆங்கிலமாக்கம் ஆயத்தமாகிறது.*

விலை ரூ. 100/-

*அச்சடிப்பு:*
New Shenbagam Offset, Sivakasi

**- அர்ப்பணம் -**

*என்னை*
*பைபிள் பிரியனாகவும்*
*பைபிள் பித்தனாகவும்*
*மாற்றிய*
*பரிசுத்த ஆவியானவருக்கு ...*



*''கர்த்தாவே,*

*உமது வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு*

*மிகுந்த சமாதானம் உண்டு;*

*அவர்களுக்கு இடறுதல் இல்லை!''*

*''உமது வேதத்தில்*

*எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்;*

*நாள் முழுவதும்*

*அது என் தியானம்!''*

*(சங்கீதம் 119:165,97)*

# பொருளடக்கம்


□ பைபிள் கேள்விகள் ... 7

1. தேவன் நமது பக்கம் இருந்தால் ... ... 9

2. கண் கண்ட சகோதரனிடம் அன்புகூராதவன் ... ... 14

3. பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால் ... ... 21

4. நீ காலாட்களோடு ஓடும்போதே இளைத்தால் ... ... 29

5. நீ பெற்றுக்கொண்டவனானால் ... ... 36

6. உலகப் பொருளைப்பற்றி உண்மையாய் இராவிடில் ... 44

7. நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் ... ... 50

8. கர்த்தர் எங்களோடு இருந்தால் ... ... 57

9. தேவன் இதைச் செய்கிறதில்லை என்றால் ... ... 64

10. கர்த்தர் உன்னை இரட்சிக்காதிருந்தால் ... ... 71

11. உடல் முழுவதும் கண்ணானால் ... ... 77

12. நீர் பாவம் செய்தால் ... நீதிமானாயிருந்தால் ... ... 83

13. பாதாளமே கர்த்தர் பார்வைக்குத் திறந்திருக்க ... ... 91

14. தேவன் எவன்மீது இரக்கமாயிருக்கச் சித்தமோ ... ... 99

15. சொந்தக் குமாரனையே ஒப்புக்கொடுத்தவர் ... ... 106





16. மரணத்துக்கேதுவான ஊழியம் மகிமை என்றால் ... ... 113

17. நான் தயாளனாயிருப்பதால் ... ... 121

18. நாமெல்லாரும் நியாயாசனத்தின்முன் நிற்கவிருக்க ... 128

19. யூதனாகிய நீர் யூதர் முறைமையில் நடவாதிருக்க ... 136

20. தேவன் அடைத்தால் ... ... 145

21. உப்பு உவர்ப்பற்றுப்போனால் ... ... 152

22. பூவுலகுக்கடுத்த காரியங்களையே சொல்லியும் ... ... 159

23. நல்ல பழங்கள் தருமென்று காத்திருக்க ... ... 166

24. பரிசுத்தவான்கள் உலகை நியாயந்தீர்க்கவிருக்க ... ... 172

25. நான் வரும்வரை இவன் இருக்கச் சித்தமானால் ... ... 178

26. பாதுகாப்பிற்காய்ப் பிதாவை வேண்டிக்கொண்டால் ... 185

27. வானங்களும், வானாதி வானங்களும் கொள்ளாதே ... 191

28. சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதவன் ... ... 198

29. நாங்கள் ஞான நன்மைகள் விதைத்திருக்க ... ... 206

30. நீர் கிறிஸ்துவுமல்ல, தீர்க்கதரிசியுமல்ல என்றால் ... ... 213

# பைபிள் கேள்விகள்

## கேள்விகளுக்குப் பதில் தரும் கேள்விகள்

ஆன்மீகச் சத்தியங்களை நமக்குப் போதிப்பதற்குப் பைபிள் பல்வேறு முறைகளைக் கையாளுகிறது. அவற்றில் ஒன்று கேள்விகளைக் கேட்டு நம்மைச் சிந்திக்க வைப்பதும் அதற்கான விடைகளைக் கண்டுபிடிக்க நம்மைத் திருவசன ஆராய்ச்சிக்குள் நடத்துவதுமாகும்.

பழைய ஏற்பாட்டில் 2272 கேள்விகளும், புதிய ஏற்பாட்டில் 1022 கேள்விகளும் என மொத்தம் பைபிளில் 3294 கேள்விகள் காணப்படுகின்றன. இவைகளிலிருந்து சவால்களுடன் கேட்கப்பட்டுள்ள கேள்விகளைத் தெரிந்தெடுத்து இந்நூலில் உங்களுடன் தியானிக்கிறேன். ''இப்படியிருக்குமானால் எப்படி, ஏன், என்ன?'' என்பது போன்ற பாணியில் உள்ளவையே இக்கேள்விகள். இக்கேள்விகளை அதினதின் வசனச் சூழமைவில் தியானிக்கும்போது நமது கேள்விகள் பலவற்றிற்குத் திருப்திகரமான விடைகளைப் பெறலாம். எனவே இப்புத்தகத்திற்குக் ***''கேள்விகளுக்குப் பதில் தரும் கேள்விகள்.''*** (Questions which answer our Questions) என்று உப தலைப்பு கொடுத்துள்ளேன்.

நேரமெடுத்து வாசியுங்கள். வசனக் குறிப்புகளை உங்கள் வேதாகமத்தில் திறந்துபாருங்கள். தூயாவியானவரின் உதவியோடு அவற்றைத் தியானியுங்கள். உங்களது ஆன்மீக வாழ்வில் ஒரு தெளிவும் தெம்பும் கிடைக்கும்.

2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் நாகர்கோவில், பாளையங்கோட்டை, நாசரேத் மற்றும் ஈரோடு ஆகிய ஊர்களில் நடத்தப்பட்ட ''பைபிள் பிரியர் கூடுகைகளில்'' (Bible Lovers Meet) தலா ஏழு கேள்விகளின் பேரில் செய்தியளித்தேன். இன்னும் இரு கேள்விகளைச் சேர்த்து இப்புத்தகத்தில் 30 கேள்விகள் வெளிவருகின்றன. இன்னும்



இதுபோன்ற பல கேள்விகளைத் தியானித்துக்கொண்டிருக்கிறேன். அடுத்து வரும் பதிப்புகளில் அவை சேர்க்கப்படலாம். இந்த நான்கு கூடுகைகளில் கொடுக்கப்பட்ட செய்திகளை ஒலித்தட்டுகளில் வெளியிட்டோம். இறைமக்கள் நடுவில் அவை பெரும் வரவேற்பைப் பெற்றன. இச்செய்திகளை எழுத்து வடிவில் கொண்டு வந்த திருமதி கோகிலா பொன்னுசாமி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. நாசரேத்து மர்காஷியஸ் கல்லூரியில் இவர்கள் பேராசிரியையாகப் பணியாற்றிக்கொண்டு கர்த்தருடைய ஊழியத்தில் தீவிர ஈடுபாடு கொண்டுள்ளார்கள்.

வழக்கமாக அந்தந்தப் பிராந்திய மொழியாக்கங்களுடன் ஆங்கிலத்தில் பிரசங்கிக்கும் நான் இக்கூடுகைகளில் நேரடியாய்த் தமிழில் பேசினேன். எனவே இந்நூல் முதலாவது தமிழில் வெளிவருகிறது. ஆங்கிலமாக்கம் நடந்துகொண்டிருக்கிறது. பைபிள் பிரியர்களாக நீங்கள் ஒரு சிலர் தினமும் ஒரு மணி நேரம் கூடி நாளொன்றுக்கு ஒரு கேள்வியைத் தியானித்தால் ஒரு மாதத்திற்குப் போதுமானது இந்நூலில் உண்டு. முயன்று பாருங்கள். திருமறையை எப்படியெல்லாம் தியானிக்கலாம் என்று அறிந்து அகமகிழ்வீர்கள். முடிவில் திருப்பாடகனோடு சேர்ந்து, ''கர்த்தாவே, சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன்; உமது கற்பனையோ மகா விஸ்தாரம்'' என்று வியப்பீர்கள் (சங் 119:96). அதின் விளைவு என்னவாயிருக்கும் என்று அடுத்த வசனமே கூறுகிறது: ''கர்த்தாவே, உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம்'' (வச 97).

தத்துவ ரீதியாக இக்கேள்விகள் வரிசைப்படுத்தப்படவில்லை. எனவே இப்புத்தகத்தை நீங்கள் எந்தக் கேள்வியிலிருந்தும் வாசிக்கத் துவங்கலாம். உங்கள் நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்பப் பரிசுத்த ஆவியானவர் இதில் உங்களை நடத்த உங்களுக்காய் ஜெபிக்கிறேன்.

## கேள்வி 1

***''தேவன் நமது பக்கம் இருந்தால்***
***நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்?''***

**(ரோமர் 8:31)**

இக்கேள்வியின் சூழமைவைப் புரிந்துகொள்ள 28 முதல் 39 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். இப்பகுதியில் ஏழு கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளதைக் கவனியுங்கள்.

கிறிஸ்தவ வாழ்வில் சோதனைகளையும் வேதனைகளையும் சந்திக்காதது யார்? எச்சூழலிலும் நம்மை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்கக்கூடிய இக்கேள்வியை எவ்வித அழுத்தத்துடன் வாசிக்க வேண்டுமென்று கவனியுங்கள்: தேவன் நமது பக்கம் இருந்தால், ***''நமக்கு''*** விரோதமாய் இருப்பவன் யார்? தேவன் நமது பக்கம் இருந்தால், நமக்கு ***''விரோதமாய்''*** இருப்பவன் யார்? தேவன் நமது பக்கம் இருந்தால், நமக்கு விரோதமாய் ***''இருப்பவன்''*** யார்? தேவன் நமது பக்கம் இருந்தால், நமக்கு விரோதமாய் இருப்பவன் ***''யார்?''*** இப்படித்தான் திருவசனங்களைத் திரும்பத் திரும்ப வாசித்து உள்வாங்கிக் கொள்ளவேண்டும்!

நமக்கு விரோதமாய் என்று சொல்லும்போது ''எக்காரியத்தில்'' நமக்கு விரோதமாய் என்பதை விளங்கிக்கொள்ளவேண்டும். அன்றாடக வாழ்வில் ஏற்படும் பிரச்னைகளே நமக்கு எதிரானவை என்று சாதாரணமாக எண்ணிவிடக்கூடாது. பிரதானமாக நமக்கு எதிராயிருப்பது நம்மைக் குறித்த முடிவான இறைச்சித்தத்திற்கு எதிரானவையே. நமது வாழ்வில் தேவன் அனுமதிக்கும் நன்மையோ தீமையோ எல்லாவற்றிற்கும் முடிவான நோக்கம் நாம் அவரது குமாரனைப்போல் மாற வேண்டும் என்பதே. இதுவே நம்மைக் குறித்த அவரது நோக்கங்களி



லெல்லாம் நோக்கம், விருப்பங்களிலெல்லாம் விருப்பம், திட்டங்களிலெல்லாம் திட்டம்! இதைத்தான் நாம் பல சமயங்களில் எடுத்தாளும் ரோமர் 8:28,29 ஆகிய வசனங்கள் குறிப்பிடுகின்றன —

''தேவனது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரிடம் அன்புகூருகிறவர்களுக்கு அனைத்தும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம். தமது குமாரன் அநேக சகோதரர்க்குள் முதற்பேறானவராயிருக்கும்படி, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்க முன்குறித்திருக்கிறார்.'' ''சகலமும் நன்மைக்கென்றே'' என்று சொல்லும்போது, இயேசுபோல மாற்றப்படுவதே அந்த நன்மை என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் இயேசுவைப்போல மாறுவதற்காகவே அவர் நம்மைப்போல் மாறினார் (எபி 2:17ஆ). ''சகலமும் நன்மைக்கே'' என்ற சொற்றொடரை இவ்விதம் அந்த வசனச் சூழமைவிலேயே அர்த்தங்கொள்ள வேண்டும். வேத வியாக்கியான விதிமுறைகளில் இது முக்கியமானதொன்று. திருவசனங்களை அவற்றின் சூழமைவில் வியாக்கியானிக்காததாலேயே பல துர்வுபதேசங்கள் தோன்றுகின்றன.

கிறிஸ்தவத்திற்கு வெளியே ''மனவளக் கலை'' என்று ஒன்றுண்டு. இதனைப் பயிற்றுவிப்போர் சாதகச் சிந்தனை (Positive Thinking) என்ற தத்துவத்தை வலியுறுத்துவர். அவர்கள் அடிக்கடி சொல்லும் கூற்று, ''நல்லதே நடக்கும்'' என்பதாகும். ''நல்லது'' என்று அவர்கள் குறிப்பிடுவது பெரும்பாலும் இவ்வுலக ஆசிகளுக்கு அடுத்தது. ஆனால் ரோமர் 8:28இலுள்ள ''நன்மை'' என்பது அதிவுன்னத விண்ணக நோக்கு!

இயேசுவைப்போல் நாம் மாறவேண்டும் என்று ''நாம்'' விரும்புவதைவிட, இயேசுவைப்போல் நம்மை மாற்றவேண்டும் என்று ''தேவன்'' அதிகம் விரும்புகிறார். என்னே ஊக்கம்! இதைத்தான் ''தேவன் நமது பக்கம்'' என்று பவுலடியார் சுட்டிக்காட்டுகிறார். இயேசுவைப்போல் நம்மை மாற்றவேண்டும் என்று பிதாவாகிய தேவனே செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது, யார் நமக்கு எதிராய் நிற்க முடியும்?

இந்த வசனப் பகுதியிலுள்ள சவால்நிறை கேள்விகள் பிசாசுக்கு எதிராகத் தொடுக்கப்படுகின்றன. ''தேவன் தெரிந்துகொண்டவர்கள் மீது குற்றம் சாட்டுகிறவன் யார்? ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?'' (வச 33,34). ஏனென்றால், இரவும் பகலும் தேவனுடைய பிள்ளைகள்மீது குற்றம் சாட்டுவதே பிசாசின் தொழில் (வெளி 12: 10,11). அவனுக்கு எதிராக நாம் கூறவேண்டிய ''சாட்சியின் வசனம்'' இதோ: ''தேவனே என்னை நீதிமானாக்குகிறவர். கிறிஸ்துவே எனக்காக மரித்து எழுந்தவர். அவரே தேவனுடைய வலப்பக்கத்தில் அமர்ந்துகொண்டு எனக்காய் வேண்டுதல் செய்கிறவர்'' (ரோ 8:33,34).

இந்த இடத்தில் பாவவுணர்வுக்கும் (conviction), குற்றவுணர்வு (guilt), அல்லது தீர்ப்புணர்வுக்கும் (condemnation) உள்ள வேறுபாட்டைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளுதல் அவசியம். பாவவுணர்வைத் தருவது பரிசுத்த ஆவியானவர். அவர் பாவவுணர்வைத் தந்து நம்மைப் பாவ அறிக்கைக்கும் மனந்திரும்புதலுக்கும் நடத்துகிறார். அவர் ஒருபோதும் இறைமக்களைத் தண்டனைத் தீர்ப்புணர்வுக்குள் நடத்துவதேயில்லை. நாம் தியானித்துக்கொண்டிருக்கும் ரோமர் 8ஆம் அத்தியாயத்தின் முதல் வசனமே கூறுவது இதுதான்! குற்றவுணர்வு அல்லது தீர்ப்புணர்வுக்குள் நடத்துவது பிசாசு மட்டுமே. இந்த வேறுபாட்டை நாம் புரிந்துகொள்வது வெற்றி வாழ்வுக்கான ஓர் இரகசியம். ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதை விளக்குகிறேன். ஆண்டவரைப் பேதுரு மறுதலித்தார். ஆண்டவரை யூதாஸ் காட்டிக் கொடுத்தார். யூதாசின் தவற்றைவிடப் பேதுருவின் தவறுதான் கொடியது. ''இயேசுவைத் தெரியாது'' என்று மும்முறை பேதுரு மறுதலித்தார். ''இயேசுவைத் தெரியும்'' என்று ஒரேமுறைதான் யூதாஸ் காட்டிக்கொடுத்தார். ஆனால் பேதுருவுக்கு ஏற்பட்டது பாவவுணர்வு; அவர் இயேசுவிடம் திரும்பினார். யூதாசுக்கு ஏற்பட்டது குற்றவுணர்வும் தீர்ப்புணர்வும்; அவர் மார்க்கத்தை நோக்கி ஓடினார். முடிவை நாமறிவோம். பிரியமானவரே, அடுத்த முறை பிசாசு உங்களது பாவங்களை நினைப்பூட்டி உங்களைக் குற்றவுணர்வுக்குள் கொண்டுவந்தால், *''அதைக் கல்வாரியின் இரத்தத்தாலே மூடியாச்சுதே''* என அவனிடம் உரக்கக் கூறுங்கள்; அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் (யாக் 4:7). இச்சத்தியத்தை மறப்பவர்



தங்களது இரட்சிப்பின் சந்தோஷத்தை இழப்பர். குற்றவுணர்வை மக்கள் மூலமாகவும் பிசாசு நமக்குக் கொண்டுவருவான். இதற்குக் குடும்பத்தினரும் விதிவிலக்கல்ல. அது நம்மைத் திருத்துவதற்கா அல்லது தீர்த்துக்கட்டவா என்பதை அடையாளங்காணுவது நமது பொறுப்பு.

ஏதோ ஒரு தடவை நீங்கள் பிசாசுக்கும் அவனது தீயசக்திகளுக்கும் எதிர்த்து நின்றுவிட்டால் அது முடிவான வெற்றியாகிவிடாது. அடிக்கப்படும், கொல்லப்படும் அனுபவம் ''எந்நேரமும்'' இருந்து கொண்டேயிருக்கும் (ரோ 8:35). பிசாசு ஓடிப்போவான், ஓடிவந்தும் விடுவான்! இயேசுவின் மூன்று அபார வெற்றிகளையும் தொடர்ந்து பிசாசு ''சில காலம்'' மட்டுமே அவரை விட்டு விலகிப்போனான் (லூக் 4:13). உபத்திரவம், வியாகுலம், துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம் போன்றவற்றைப் பவுலடியார் நம்மை அடித்துக் கொல்லும் அனுபவங்களாய் வரிசைப்படுத்துகிறார் (ரோ 8:35,36). இவையெல்லாவற்றையும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பதற்கு ஆயுதங்களாய்ப் பிசாசு பயன்படுத்துகிறான் (வச 39). கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முயலும் சக்திகள் தீமை தருபவையாகவும் செயல்படலாம், நன்மை அளிப்பவை போலவும் செயல்படலாம். 38 மற்றும் 39ஆம் வசனங்களிலுள்ள பட்டியல் இதனைத் தெளிவுபடுத்தும். ''வாழ்வோ மாள்வோ, உயர்வோ தாழ்வோ!'' ''நிச்சயமான நிகழ்காரியங்களோ, நிச்சயமற்ற வருங்காரியங்களோ!'' தேவதூதர்களும் இப்பட்டியலில் இடம் பெறுகின்றனர்!

தேவன் நம்மீது வைத்துள்ள அன்பு நித்தியமானது, நிபந்தனையற்றது. நாம் எதையும் செய்து நம்மீது தேவனது அன்பைக் கூட்ட முடியாது; அப்படியே நாம் எதையும் செய்வதினால் நம்மீதுள்ள அவரது அன்பு குறைந்துவிடாது. (You cannot do anything to make God love you more; you cannot do anything to make God love you less!) தகப்பனுக்குக் கீழ்ப்படிந்தாலும் கீழ்ப்படியாவிட்டாலும் பிள்ளை பிள்ளைதான். தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களில் நாம் ஈடுபடும்போது அவரோடுள்ள நமது ஐக்கியம் (fellowship) பாதிக்கப்படுகிறது, உறவு (relationship) முறிந்துபோவதில்லை. ஆனால் தந்தைமீது

உண்மையான பாசம் இருக்குமானால் அவரது அன்பைப் பிள்ளை யானவன் எப்படி அலட்சியப்படுத்தமுடியும்? பன்றிகள் நடுவில் நாறிக்கொண்டிருந்தபோதும் கெட்ட குமாரன் ''என் தகப்பன்'' என்றுதான் தனக்குள் சொல்லிக்கொண்டான். எல்லாவற்றையும் நாசமாக்கிவிட்டுத் திரும்பிவந்த அவனைத் தந்தை ''என் குமாரன்'' என்றே தழுவிக்கொண்டார். இது பொறுப்போடுள்ள சிலாக்கியம். அவன் தனது தந்தை வீட்டிற்கு திரும்பி வராதிருந்தால்?

''நான் என் ஆண்டவரைத் தேடிச் செல்லவில்லை. அவரே என்னை முன்னறிந்தார். அவரே என்னை முன்குறித்தார். அவரே என்னை அழைத்தார். அவரே என்னை நீதிமானாக்கினார். அவரே என்னை மகிமைப்படுத்துவார்'' (ரோ 8:29,30). இதைத்தான் எரே மியா தீர்க்கதரிசி மூலம் தேவன் இப்படிச் சொன்னார்: ''அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருண்யத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன் ... இஸ்ரவேலுக்கு நான் பிதாவா யிருக்கிறேன்; எப்பிராயீம் என் சேஷ்ட புத்திரனாயிருக்கிறான்'' (எரே 31:3,9ஆ).

பாடுவோம் —

*அன்பே, அன்பே, அன்பே, ஆருயிர் உறவே,*
*ஆனந்தம் ஆனந்தமே!*

*ஒரு நாள் உம் தயை கண்டேனையா,*
*அந்நாள் என்னை வெறுத்தேனையா;*
*உம் தயை பெரிதையா, என்மேல்,*
*உம் தயை பெரிதையா!*

*பூலோகத்தின் பொருளின் மகிமை*
*அழியும் புல்லின் பூவைப் போல்;*
*வாடாதே ஐயா, அன்பு,*
*வாடாதே ஐயா!*

— பாஸ்டர் R. டைட்டஸ்



# கேள்வி 2

***''கண்ட சகோதரனிடம் அன்புகூராமலிருப்பவன் காணாத தேவனிடம் எப்படி அன்புகூருவான்?''***

**(1 யோ 4:20)**

''சொந்தக் கண்ணால் பார்த்துப் பழகக்கூடிய சகமனிதரிடம் அன்பு செலுத்த முடியாதவன் ஒருவரும் பார்க்க முடியாத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்த முடியும்?'' என்று இயேசுவுக்கு மிகவும் நெருக்க மாயிருந்த யோவான் எனும் சீடன் தனது கடிதத்தில் இக்கேள்வியை எழுப்புகிறார். இது தத்துவ நீதியான கேள்விதானா? மனிதராகிய நாம் ஒருவேளை இது நியாயமான கேள்வியல்ல என வாதிடலாம். ஆனால் இயேசுவானவரைப் பொருத்தவரை இது முழுக்க முழுக்க நியாய மான, தத்துவரீதியான கேள்வியாகும். இதை எப்படிச் சொல்லுகிறேன் என்று கவனியுங்கள் —

தங்களையே நீதிமான்கள் என்று எண்ணிக்கொண்டு பிறரை அலட்சியப்படுத்திய அன்றைய மதவாதிகளாகிய பரிசேயர் என்ப வர்களில் ஒரு வழக்கறிஞர் இருந்தார். அவர் இயேசுவிடம் வந்து, ''போதகரே, நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை பிரதானமா னது?'' என்று கேட்டார் (மத் 22:34-36). அதற்கு இயேசு கொடுத்த உடனடிப் பதில்: ''உன் தேவனாகிய கர்த்தரிடம் உன் முழு இருதயத் தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூர்ந்திடு; இதுவே முதலாம் பிரதான கற்பனை'' (வச 37,38). அந்த வழக்கறிஞரைப் பொருத்தமட்டில் அவரது கேள்விக்குக் கச்சிதமான, முழுமையான பதில் கிடைத்துவிட்டது. ஆனால் இயேசுவோ அங்கு நிறுத்தவில்லை. அவரைப் பொருத்தமட்டில் வழக்கறிஞரின் கேள்விக்குப் பாதிப் பதில்தான் கொடுத்திருந்தார். எனவே அவர் தொடர்ந்து, இடைவெளியில்லாமல், சொன்னது: ''இதற்குச் சமமான

இரண்டாம் கட்டளை என்னவென்றால், உன்னிடம் நீ அன்புகூருவது போலவே பிறனிடத்திலும் அன்புகூர்ந்திடு'' (வச 39). இதிலும் ஆண்டவர் நிறுத்தவில்லை. தொடர்ந்து அவர் கூறியது: ''இவ்விரு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுவதும் தீர்க்கதரிசனங் களும் அடங்கியிருக்கின்றன'' (வச 40).

அந்த வழக்கறிஞருக்கு இயேசு நாதர் கொடுத்த பதிலிலிருந்து நாம் புரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், இவ்விரு கட் டளைகளில் ஒன்றில்லாது அடுத்தது நிறைவுபெறாது. மகிபனை நேசிப்பதும் மனிதனை நேசிப்பதும் ஒரே நாணயத்தின் இரு பக்கங் கள். ஒரு பக்கம் மட்டும் அச்சு உள்ள நாணயம் செல்லுமோ?

அன்று அவர்கள் கரங்களில் இருந்தது பழைய ஏற்பாடு. ஆண் டவர் அதனை இரு பிரிவுகளாய்ப் பகுத்தார். ஒன்று ''நியாயப்பிர மாணம்,'' அடுத்தது ''தீர்க்கதரிசனங்கள்.'' நியாயப்பிரமாணம் என்றால் தேவன் தந்த நீதிச்சட்டம், நியதிகள். அவற்றை மக்களுக்கு நினைவுபடுத்துபவையே தீர்க்கதரிசனங்கள். தீர்க்கர்களாகிய ஏசாயாவும், எரேமியாவும், எசேக்கியேலும், மற்றவர்களும் இதைத் தானே செய்தார்கள்! தேவனது நியாயப்பிரமாணத்தின் இரத்தினச் சுருக்கம்தான் ''பத்துக் கட்டளைகள்.'' அவற்றை இங்கு வரிசைப் படுத்தி நினைவுபடுத்திக்கொள்வோம் —

1. வேறே தேவர்கள் வேண்டாம்.
2. விக்கிரகங்கள் வேண்டாம்.
3. கடவுளது பெயரைச் சாதாரணமாக்க வேண்டாம்.
4. ஓய்வுநாளில் சொந்த வேலை வேண்டாம்.
5. பெற்றோரை மதித்து நடக்கவேண்டும்.
6. கொலை செய்யக்கூடாது.
7. விபசாரம் செய்யக்கூடாது.
8. களவு செய்யக்கூடாது.
9. பொய் சாட்சி சொல்லக்கூடாது.
10. பிறரதை இச்சிக்கக்கூடாது.



இந்தப் பத்துக் கட்டளைகளில் இரு பிரிவுகள் அடங்கியுள்ளன. ஒன்று முதல் நான்கு வரையிலான கட்டளைகள் நமக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை அடுத்தவை. ஐந்து முதல் பத்து வரையுள்ள கட்ட ளைகள் நமக்கும் பிறருக்கும் உள்ள உறவை அடுத்தவை. நாற்பது சதவீதம் தேவனை நோக்கியது; அறுபது சதவீதம் சகமனிதரை நோக்கியது. இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்தி வெளிப்படை யில்லையா? இந்தப் பத்துக் கட்டளைகளைச் சமமாகத் தேவன் பிரித் திருக்கலாமே! அவரோடுள்ள ஐக்கியத்திற்கு 40%; சகமனிதரோ டுள்ள உறவுக்கு 60%. இதைத்தானே அந்த வழக்கறிஞரிடம் ஆண் டவர் வலியுறுத்தினார்?

இன்றையக் கிறிஸ்தவத்தில் எங்கு பார்த்தாலும் ஆராதனை, ஆராதனை! நல்லது! ஆனால் அடுத்த பக்கம் என்னவானது? பிரிய மானவர்களே, கரங்களை உயர்த்தி ஆண்டவரைத் துதிப்பது எளிது; ஆனால் அந்தக் கரங்கள் எப்படிப்பட்டவையாயிருக்கவேண்டும் என்பதைக் கவனிக்கத் தவறுகிறோமே. 1 தீமோ 2:8, ''கோபமும், தர்க்கமும் இல்லாத பரிசுத்த கைகள்.'' ''கோபம், தர்க்கம்'' என்பது சகவுறவுகளிலுள்ள குறைபாடுகளைக் குறிக்கும். பிறருடன் மனக்கசப்பு, அவர்கள்மீது எரிச்சல், பொறாமை, அவர்களைப்பற்றி அவதூறு, அவர்களை மன்னியாமை, அவர்களுக்கு விரோதமான செயல்கள், சதிகள், அவர்களை ஏமாற்றுதல், இப்படிப்பட்ட அன்பற்ற செயல்கள் நம்மிடம் காணப்படுமானால் ஆராதனையில் நாம் உயர்த்தும் கரங்கள் பரிசுத்தமானவை அல்ல, அசுத்தமானவை. தேவ னுக்குமுன் அவை நறுமணத்தை அல்ல, துர்நாற்றத்தையே வீசும். ஒருவரோடொருவர் அன்புடன் வாழ்ந்தால்தான் நமது ஆராதனை, துதி, ஸ்தோத்திரம், தொழுகை யாவும் தேவனுக்குமுன் ''சுகந்த வாசனையாக'' எழும்பும் (எபே 5:2).

சகவுறவு எனும் பரிமாணம் நமது கிறிஸ்தவ வாழ்விலும் பணி யிலும் எவ்வளவு முக்கியம் என்பதை ஆண்டவர் தமது மலைப் பிரசங் கத்தில் தெள்ளத்தெளிவாய்க் கூறியுள்ளார்: மத் 5:23,24, ''நீ பலி பீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் மீது உன் சகோதரனுக்குக் குறை உண்டு என்று அங்கு நினைவு வந்தால்,

அங்கேயே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முதலாவது உன் சகோதரனோடு ஒப்புரவாகி, பின்னர் வந்து உன் காணிக்கையைச் செலுத்து.'' ''சகோதரனோடு சரியான உறவு இல்லாது செலுத்தப்படும் காணிக்கையைச் சர்வ வல்லவர் ஏற்றுக் கொள்வது எப்படி?'' என்பதே ஆண்டவர் இங்கு வலியுறுத்தும் செய்தி. இதைத்தான் அப்போஸ்தலன் யோவான், ''கண்ட சகோதரனிடம் அன்பு செலுத்தாதவன் காணக்கூடாத தேவனிடம் அன்பு செலுத்துவது எப்படி?'' எனச் சவாலிட்டார்.

காணிக்கைகளைக் குறித்துப் பேசப்படாத ஆலய ஆராதனைகளும், மிஷனரிக் கூட்டங்களும் அபூர்வம். ''தாராளமாய்க் கொடுங்கள், உற்சாகமாய்க் கொடுங்கள், தியாகமாய்க் கொடுங்கள்'' என்றெல்லாம் முழங்கும் பிரசங்கிமாரில் எத்தனை பேர் சகவுறவுகள் சரி செய்யப்படுவதை வலியுறுத்துகிறார்கள்? ''யார் எப்படி வாழ்ந்தாலென்ன? நமக்கு வரவேண்டிய காணிக்கைதான் முக்கியம்'' என்ற துர்வுபதேச மனப்பான்மையே எங்கும் நிலவுகிறது. இதனால்தான் எழுப்புதல் தாமதிக்கிறது. புதிய ஏற்பாட்டு நிருபங்களை வாசித்துப் பாருங்கள். அவற்றில் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுவது சரியான சகவுறவுகளா, காணிக்கைகளா? ஆலயங்களில் சண்டைகள், சபைகளில் பிரிவினைகள், நற்செய்தியறிவிப்பு நிறுவனங்களில் விரோதங்கள், மிஷனரி இயக்கங்களில் பாரபட்சங்கள், இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இவைகளுக்காய் நாம் மனந்திரும்பி, ஒருவரோடொருவர் ஒப்புரவாதல் என்பதற்கு முக்கியத்துவமும், முதன்மைத்துவமும் தராவிடில் நம்மைக் கொண்டு இச்சமுதாயத்தில் தேவன் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால்தான் நாம் கிறிஸ்துவின் சீடரென்று ''உலகம்'' அறிந்துகொள்ளும் (யோ 13:35). எமில் அண்ணனின் (1941-2013) ஏக்கப் பாடல் ஒன்றிலிருந்து ஒரு கவி —

*விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு,*
*அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு;*
*ஒரு மனம் ஒற்றுமை அங்கு உண்டு,*
*என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்!*



பிரியமானவரே, யாருக்கு விரோதமாகவும் கசப்பை மனதில் வைத்திராதிருங்கள். கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல் நாமும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வோம். அவர் நம்மை மன்னித்ததுபோலவே நாமும் பிறரை மன்னிப்போம். நாம் தவறிழைத்தவரோ, தவறிழைக்கப்பட்டவரோ, அதைப்பற்றிக் கவையில்லை; ஒப்புரவாகுதலை முன்னெடுக்கவேண்டியது நாம்தான். யாவரையும் நாம் மன்னித்துவிட்டால் நமது மனது இலகுவாகும்.

தீர்க்கன் ஏசாயா மூலம் ஆண்டவர் தமது மக்களுக்குக் கொடுத்த கடினமான வார்த்தைகளை நாம் எளிதாய் எடுத்துக்கொள்ளக்கூடாது. சகவுறவுகளைச் சரிசெய்யாமல் செலுத்தப்படும் காணிக்கைகளை ''வீண்'' என்கிறார் ஆண்டவர்; ஆசரிப்புகளைச் ''சகிக்கமாட்டேன்'' என்கிறார்; பண்டிகைகளை ''வெறுக்கிறேன்'' என்கிறார்; அவருக்கு முன் விரிக்கப்படும் கைகளைப் ''பார்க்கமாட்டேன்'' என்கிறார் (ஏசா 1:13-15). சரியான சகவுறவுகளென்று ஆண்டவர் எவற்றைக் குறிக்கிறார் என்று பாருங்கள்: பிறர்க்கு நன்மை செய்தல், நியாயமாய் நடத்தல், தள்ளப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டோரை ஆதரித்தல், அனாதைகளையும் விதவைகளையும் பராமரித்தல் போன்றவை (வச 17). இவற்றைச் செய்யாவிடில் அதுதான் கருஞ்சிவப்பான பாவமாம் (வச 18).

ஆராதனையில் ஆர்வம் காட்டுமளவு தானதர்மம் செய்வதில் கவனம் செலுத்துவதில்லை. ஆராதனையின் ஆரவாரத்தில் நாம் தானதர்மம் செய்ய மறந்துவிடுகிறோமாம். இதுவே எபிரெய நிருப ஆக்கியோனின் கருத்து (எபி 13:15,16). தேவனுக்கு நேரே கைகளை உயர்த்துவது ஆராதனையின் ஒரு பக்கம்; தேவையுள்ளோரை நோக்கிக் கைகளை நீட்டுவது ஆராதனையின் மறுபக்கம். தேங்காய், மாங்காய், புளியிலும்கூடத் தசமபாகம் செலுத்திவிட்டு எளியவர்க்கு இரக்கம் காட்டத் தவறும் பரிசேய மார்க்கம்தான் நமது சபைகளை நோய்வாய்ப்படுத்தியுள்ளது (மத் 23:23). தங்கள் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்காய்க் கொடுக்கும் சகேயுக்களால் நமது சபைகள் நிறையட்டும். நமக்குக் கிரிக்கெட் பைத்தியம் உண்டு; ஆனால் தனது சொத்துக்களையெல்லாம் அனாதை இல்லங்களுக்கும், மிஷனரி

இயக்கங்களுக்கும் கொடுத்துவிட்டு, ஆப்பிரிக்காவிற்கு மிஷனரியாய்ச் சென்ற பிரபல இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் C. T. ஸ்டட் அவர்களின் பைத்தியம் நம்மைப் பிடிக்காதா?

இவ்வத்தியாயத்தில் இன்னொரு முக்கியமான, ஆனால் வலியுறுத்தப்படாத, உபதேசத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். அரசுக்கும் அதிகாரத்திற்கும் கீழ்ப்படிவது ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதாம். இதைக் குறித்துப் பவுலடியார் எழுதியுள்ளது மிகத் தெளிவாயுள்ளது: ரோ 13:1,2, ''எந்த மனிதனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியட்டும்; ஏனெனில், தேவனாலே அல்லாமல் ஒரு அதிகாரமும் இல்லை; ஏற்படுத்தப்பட்டிருக்கும் அதிகாரங்கள் தேவனால் நியமிக்கப்பட்டவை. எனவே அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்பவன் தேவனது நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே தண்டனைத் தீர்ப்பை வருவித்துக்கொள்ளுகிறார்கள்'' இவ்வரிகளை எழுதிவிட்ட அப்போஸ்தலன் வரி ஏய்ப்பைக் குறித்து நம்மை எச்சரிக்கிறார் (வச 6,7). வருமான வரி அதிகாரிகள் எத்தனைபேர் கிறிஸ்தவ ஊழியர்கள் மற்றும் ஊழியங்களைப் பார்த்து ஏளனமாய்ச் சிரிக்கிறார்கள் தெரியுமா? இந்த அதிகாரிகளில் பெரும்பாலானோர் கிறிஸ்தவரல்லாதோர். அவர்களைக் கிறிஸ்துவிடம் ஈர்ப்பதற்கு நம்மிடம் என்ன சாட்சியுண்டு? என்ன கவர்ச்சியுண்டு? இந்தியாவிலுள்ள உயர்குல இந்துக்கள்மீது நாம் சுவிசேஷத்தினால் இன்னும் தாக்கம் ஏற்படுத்தாததற்கு ஒரு காரணம் கணக்கு வழக்கு காரியங்களில் நமது பரிதாப நிலையே.

''இராயனுக்கு வரி கொடுப்பது நியாயமா?'' என்று இயேசுவிடம் கேட்கப்பட்டபோது, ஒரு நாணயத்தைக் கொண்டுவரச் சொன்னார். ''அதிலுள்ள அச்சுச் சொரூபம் யாருடையது?'' என்று கேட்டார். ''இராயனுடையது'' என்றனர். உடனே அவர் சொன்னது: ''இராயனுடையதை இராயனுக்கும் இறைவனுடையதை இறைவனுக்கும் கொடுங்கள்'' என்றார் (மத் 22:17-21; மாற் 12:14; லூக் 20:22). இராயனுக்கு வரி செலுத்தும்படி முதலாவது சொல்லிவிட்டுத்தான் கடவுளுக்குக் காணிக்கை கொடுப்பதைக் குறிப்பிடுகிறார். இந்த வரிசையை மாற்ற நமக்கு என்ன உரிமையுண்டு? வரி ஏய்ப்பு



செய்துவிட்டுக் கொடுக்கப்படும் காணிக்கை பரலோகப் பதிவேட்டில் வரவு வைக்கப்பட மாட்டாது. காணிக்கைப் பெட்டியில் போடப்படுவதால் கருப்புப் பணமானது வெள்ளைப்பணம் ஆகிவிடாது. இந்த வித்தைகளால் ''உயிருள்ள'' தேவனை ஏமாற்றமுடியாது.

ஆதிக் கிறிஸ்தவர்கள் பணத்தைக் கையாண்ட விதத்தைக் கண்ட மற்றவர்கள் பயமடைந்தனர் (அப் 2:43-45). இன்று சபையைப் பார்த்துச் சமுதாயம் பயப்படுகிறதா, சமுதாயத்தைப் பார்த்துச் சபை பயப்படுகிறதா?

''கண்ட சகோதரனிடம் அன்பு செலுத்தாதவன் காணாத தேவனிடம் எப்படி அன்பு செலுத்த முடியும்?'' என்ற அப்போஸ்தலன் யோவானின் கேள்வியை நியாயப்படுத்த அப்போஸ்தலன் யாக்கோபு கேட்ட கேள்வியையும் கவனிப்போம்: யாக் 3:9-12, ''நாவினால் நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவ சாயலில் உண்டாக்கப்பட்ட மனிதரை அதே நாவினால் தூற்றுகிறோம் ... ஒரே ஊற்றிலிருந்து இனிப்பான தண்ணீரும் கசப்பான தண்ணீரும் சுரக்குமா? அத்திமரம் ஒலிவப்பழங்கள் கொடுக்குமா? திராட்சைச்செடி அத்திப் பழங்கள் தருமா?'' இருதயத்தில் பிறருக்கு விரோதமாய்க் கசப்பை வைத்துக்கொண்டு பரமனுக்கு இனிய பாடல்கள் பாடுவது ''சத்தியத்திற்கு விரோதமானது, பேய்த்தனத்திற்கு அடுத்தது'' (வச 14,15). இதற்குமேல் இங்கு சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? அப்போஸ்தலன் யோவானது கேள்வியின் மீதுள்ள தியானத்தை இங்கு நிறுத்திக்கொள்வோம்.



# கேள்வி 3

***''பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்?''***

**(லூக்கா 23:31)**

பாரமான சிலுவையைச் சுமக்கமுடியாமல் இயேசு தடுமாறிய போது, கருப்பினத்தவராகிய சீமோன் என்பவர்மீது அதனை வைத்து இயேசுவின் பின்னே சுமந்துவரும்படிச் செய்தார்கள். இக்கொடூரக் காட்சியைக் கண்ட ஏராளமான மக்களும், குறிப்பாக மகளிரும், புலம்பி அழுதுகொண்டு அவருக்குப் பின்னால் சென்றனர். இயேசு அவர்களைத் திரும்பிப் பார்த்துச் சொன்னது: ''எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் ... பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்?'' (லூக் 23:26-31).

இயேசுவின் இக்கூற்றின் பொருளைக் கவனிப்போம்: ''நான் பாவமே செய்யாதவன்; சத்தியத்தையே பேசியவன்; மக்களுக்கு நன்மையே செய்தவன்; விண்ணிலிருந்து உண்டானவன்; எனக்கே இக்கதியென்றால், மண்ணிலிருந்து உண்டாகிய பாவிகளாகிய உங்களுக்கு உங்களது விசுவாசத்தின் எதிரிகள் என்னதான் செய்யமாட்டார்கள்?'' இயேசுவின் இவ்வார்த்தைகளில் நாம் நமது மனதிலிருத்த வேண்டிய கடினமானதொரு உபதேசம் உண்டு. அதென்னவெனில், இயேசுவைப் பின்பற்றும் எவரும் பாடுகளுக்குத் தப்பமுடியாது. அவர் ஒரே தடவைதான் சிலுவையில் அறையப்பட்டார்; நமக்கோ இது அனுதின அனுபவமாகிவிடும்.

இன்று உலகெங்குமுள்ள கிறிஸ்தவ வட்டாரங்களில் ஒரு துர்வுபதேசம் சூறாவளிக் காற்றாய் வீசிக்கொண்டிருக்கிறது. அது என்னவெனில், ''நமக்காய் இயேசு பாடுபட்டுவிட்டதால் நாம் பாடுபட வேண்டிய அவசியமில்லை'' என்பதே. ஆனால் நமதாண்டவரும் அப்போஸ்தலரும் கொடுத்துள்ள ஆரோக்கிய உபதேச வார்த்தைகளைக் கவனியுங்கள் —

☐ யோவான் 16:33, ''என்னிடம் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் உற்சாகம் கொள்ளுங்கள்; நான் உலகை வென்றுவிட்டேன்!'' உபத்திரவம் ''இருக்கலாம்'' என்றல்ல, உபத்திரவம் ''இருக்கும்'' என்றார் இயேசு. அவர் பாடுபடுவதற்கு முன்னதாகவே தீர்க்கதரிசனமாக அவர் மொழிந்த வார்த்தைகள் இவை. புதரிலிருந்து மான் குட்டி துள்ளி வருவதுபோல், வேதப் புத்தகத்திலிருந்து துள்ளிக்குதித்துவரும் இச்சத்தியத்தை அப்படியே அணைத்துக்கொள்ளுங்கள். உபத்திரவம் பெருகும்போது அவர் தருவது ''சமாதானம்,'' நாம் காத்துக்கொள்ளவேண்டியது ''உற்சாகம்.'' பெரிய வெள்ளியோடு எல்லாம் முடிந்துவிடாது; ஈஸ்டர் ஞாயிறு வரும். இதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். இயேசுவின் வெற்றியை நமதாக்க அவர் இங்கு நம்மை அழைத்துள்ளார். மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த அவர் நம்மையும் உயிர்ப்பிப்பார் (ஓசி 6:1,2).

☐ ரோமப் பேரரசின் கொடுங்கோலாட்சியில் நசுங்கிக்கொண்டிருந்த பிலிப்பிய விசுவாசிகளுக்குப் பவுல் எழுதியது: பிலி 1:29, ''கிறிஸ்துவிடம் விசுவாசமாயிருக்க மட்டுமல்ல, அவர் பொருட்டுப் பாடுபடுவதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.'' விசுவாசமும் தேவனிடமிருந்து பெற்ற அருள்தான்; பாடுகளும் அவரிடமிருந்து வரும் அருள்தான்! இயேசுவுக்கு இருந்த போராட்டம் நம்மெல்லாருக்கும் உண்டு என்றார் அவர். இப்பொழுது, தனக்கு இருக்கும் போராட்டம் அனைத்து விசுவாசிகளுக்கும் உண்டு என்கிறார் (வச 30). அப்போஸ்தலரது உபதேசம் இவ்வளவு தெளிவாக இருக்கும்போது எவ்வளவாய்ப் பிசாசு மக்களைக் குருடாக்கி ஏமாற்றிவருகிறான்! பெர்க்மான்ஸ் ஐயா இயற்றிய பாடல் ஒன்றில் எனக்கு அதிகம் பிடித்தமான ஒரு வரி: *''வாழ்க்கை என்பது போராட்டமே!''*

□ இயேசுவிடம் வந்துவிட்டால் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து விடும் என்ற இன்றைய ஏமாற்று உபதேசத்திற்கு எதிராக ஆதி அப் போஸ்தலர் அன்றே விசுவாசிகளை எச்சரித்தனர். புது விசுவாசி களுக்கு அவர்கள் செய்த பின்தொடர் ஊழியத்தைக் கவனியுங்கள்: அப் 14:22, ''சீடருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, 'நாம் அநேக உபத்திரவங்கள் வழியாய்த் தேவனுடைய இராஜ்யத்தில் நுழைய வேண்டும்' என்று சொன்னார்கள்.'' ''அநேக'' உபத்திரவங்கள் என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டதைக் கவனியுங்கள். அதாவது, உபத்திர வங்கள் ஒன்றின்பின் ஒன்றாக வந்துகொண்டே இருக்கும். எனவே தான் ''ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமா யிருக்கிறது'' என்று தமது ஊழியத் துவக்கக் காலத்திலேயே இயேசு போதித்துவிட்டார் (மத் 7:14). இந்த வார்த்தைகளைச் சொல்லிய வுடன், அடுத்து, ''கள்ளத் தீர்க்கதரிசிகளைக்'' குறித்து அவர் மக் களை எச்சரித்தார் (வச 15).

உபத்திரவங்கள் அல்லது பாடுகள் என்பது (1) வார்த்தைகள் மூலம் வரலாம், அல்லது (2) அடி உதைகள் என்றும் வரலாம். இவை யிரண்டிற்கும் நமது மனதை நாம் ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் —

**(1)** தேவனுடைய வார்த்தையினாலும் அவரது ஆவியினாலுமே இயேசு பிசாசுகளைத் துரத்தினார். ஆனால் அவருக்குப் பிசாசுகளின் தலைவனாகிய ''பெயல்செபூல்'' என்ற பெயரைச் சூட்டினர் (மத் 10:25). இதைவிடக் கேவலமாகப் பேசமுடியுமா? ஆண்டவர் இதை யடுத்து நமக்கு விடும் சவால்: ''வீட்டுத் தலைவனையே பெயல் செபூல் என்று அழைப்பார்களானால், அவனது வீட்டாரை அப்படி அழைப்பது அதிக நிச்சயம் அல்லவா?'' அதாவது தேவனுக்குமுன் உத்தமமாய் நடப்பவர்கள் வசைச் சொல்லுக்குத் தப்பவே முடியாது. பிறருக்கு நாம் நல்லதே செய்துவந்தாலும் நம்மைத் தூற்றுவோர் இருக்கத்தான் செய்வார்கள். மக்களைப் பிசாசின் அலைக்கழிப்பி லிருந்து விடுவிப்பது நற்செயல்தானே? திருமுழுக்கினன் யோவான் எவ்வளவோ கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தார். அவருக்கே பிசாசு பிடித் திருக்கிறது என்றார்கள் (லூக் 7:33).



இயேசு கிறிஸ்துவின் ''அடிச்சுவடுகளைப்'' பின்பற்றவேண்டும் என்று குறிப்பாய்த் திருமறையில் ஒரேயிடத்தில்தான் குறிப்பிடப்பட் டுள்ளது. அதை எழுதியது அப்போஸ்தலனாகிய பேதுரு (1 பேது 2:21-23). இயேசுவானவர் பாவம் செய்யவில்லை என்று பொதுவாக எழுதிவிட்டு, ''அவரது வாயில் வஞ்சனை காணப்படவில்லை'' என்று குறிப்பாகச் சொல்லுகிறார். அதாவது, ''அவர் வையப்படும்போது பதிலுக்கு வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும்'' இருந் தார். இயேசுவோடு மிக நெருக்கமாயிருந்த பேதுரு கவனித்ததே இக்காரியம். யாராவது நம்மைத் திட்டிவிட்டால் உடனே பதிலுக்குத் திட்டிவிடுவது மனித இயல்பு; யாராவது நம்மைப் பயமுறுத்தினால், ''நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்'' என்று சொல்லுவது மனித இயல்பு. ஆனால் இதையெல்லாம்பற்றிச் சற்றும் கவலை கொள் ளாமல், ''என் தேவன் பார்த்துக்கொள்வார்'' என்று அமர்ந்திருப்பதே தெய்வீகப் பண்பு (வச 23). யாராவது நம்மைப் பழித்துப் பேசும்போது, ''நான் மட்டும் பழைய ஆளாய் இருந்திருந்தால் உன்னை என்ன செய்திருப்பேன், தெரியுமா?'' என்ற வார்த்தைகள் நமது வாயிலிருந்து வருவதில்லையா? புதிய மனிதனானபின்பும் பழைய மனிதன்மீது அவ்வளவு காதலா? எகிப்தைவிட்டு வெளிவந்தவர்களிடமிருந்து எகிப்து வெளிவரவில்லை என்று இதைத்தான் குறிப்பிடுகிறோம். மண்ணுலகில் இயேசுவிடமிருந்து நியாயம் எடுபட்டுப் போனாலும் அவர் விண்ணுலக நியாயாதிபதியிடம் தம்மை ஒப்படைத்து அமரிக் கையாயிருந்தார் (வச 23).

மக்கள் நமக்கு எதிராகப் பேசும்போது நாம் அமைதியாயிருந்தால் அவர்கள் நமது தலைக்குமேல் ஏறிவிடுவார்கள் என்றெண்ணு கிறோம். ஏறட்டுமே! எவ்வளவு நேரம்தான் தலைமீது நிற்கமுடியும்? நம் தலைமீது அபிஷேக எண்ணெய் இருப்பதால் சீக்கிரம் வழுக்கி விழுந்துவிடுவார்கள்! ''என் சத்துருக்களுக்கு முன்பாக ... என் தலை யை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்'' என்று தாவீது சும்மாவா பாடினார்? (சங் 23:5). அவர்மீது சுமத்தப்படாத பழியா? அவருக்கெதிராய்ப் பேசப்படாத வசைமொழியா? தாவீதுக்கும் தாவீ தின் குமாரனுக்கும் ஒன்றுபோலவே நடந்தது.

*என் மீட்பர் சென்ற பாதையில் நீ செல்ல ஆயத்தமா?*
*கல்வாரி மலைப் பாதையில் பங்கைப் பெறுவாயா?*

(2) தேவ பக்தியாய் நடக்க மனதுள்ளோர் சொல்லாலும் அடிபடுவர், கல்லாலும் அடிபடுவர். தமது ஊழியத்தின் துவக்கக் காலத்திலேயே தமது சீடரைப் பார்த்து இயேசு சொல்லிய வார்த்தைகள்: ''மனிதரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்'' (மத் 10:17). இது கிறிஸ்தவத்திற்கு உள்ளேயேயிருந்து நமக்கு வரும் உபத்திரவம். இது நடக்குமா? நிச்சயம் நடக்கும். பெரும்பாலான நமது சபைகளில் ஈசாக்குகளைவிட இஸ்மவேல்கள்தான் அதிகம். ஆவியின்படிப் பிறந்தவர்களைவிட மாம்சத்தின்படிப் பிறந்தவர்களே கூடுதல். இரட்சிக்கப்பட்டவர்களைவிடப் பெயர்க் கிறிஸ்தவர்களே பெரும்பாலர். மறுபடி பிறவாத பண்டிகைக் கிறிஸ்தவர்களே மறுபடி பிறந்த மெய்க்கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவர் என்று அப்போஸ்தலன் பவுல் அன்றே எழுதிவைத்துவிட்டார்: கலா 4:29, ''மாம்சத்தின்படிப் பிறந்தவன் ஆவியின்படிப் பிறந்தவனை அப்பொழுது துன்பப்படுத்தினதுபோல, இப்பொழுதும் நடந்துவருகிறது.'' இப்படி எப்பொழுதும் நடந்துவரும்!

தமது ஊழியத்தின் இறுதிக் கட்டத்திலும் இதே வார்த்தைகளை ஆண்டவர் தமது ஊழியரிடம் கூறினார்: ''உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தின் பொருட்டு நீங்கள் எல்லா மக்களாலும் பகைக்கப்படுவீர்கள்'' (மத் 24:9). இது பெயர்க் கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவரல்லாதோரிடமிருந்தும் வரும் இன்னல்களையும் இம்சைகளையும் குறிக்கிறது. உலகின் பல பாகங்களில் கிறிஸ்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் பலர் சுடப்படுவதையும் தலைவாங்கப்படுவதையும் கேள்விப்பட்டுக்கொண்டேயிருக்கிறோம். இத்தீவிரவாதிகள் இந்திய எல்லைக்குள் நுழைவதற்கு அதிகக் காலம் பிடிக்காது. ஞாயிறு ஆராதனை நடந்தகொண்டிருக்கும்போது, திடீரென ஒரு கூட்ட மர்மநபர்கள் ஆலயத்திற்குள் நுழைந்து, ''இயேசு ஒருவரே வழி என்று சொன்னால் உங்களைச் சுட்டுவிடுவோம்; பல வழிகளில் இயேசுவும்



ஒருவர் என்று நீங்கள் சொன்னால் விட்டுவிடுவோம்'' என்று உரக்கக் கூறுவார்களானால், நண்பரே, நம்மில் எத்தனைபேர், நமது விசுவாசத்திற்காய்த் தைரியமாய் நிற்போம்? எது கதிர், எது பதர் என்று அப்பொழுது தெரிந்துவிடும். இங்குதான் கிறிஸ்தவம் இரண்டாய் உடையும். இதோ இயேசுவின் முன்னறிவிப்பு: ''அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்'' (மத் 24:10). தலைபோனாலும் பரவாயில்லை என்று நிமிர்ந்து நிற்பவனே இரட்சிக்கப்படுவான் (வச 13).

*ஊரார், இனத்தார் மத்தியில் துன்பம் சகிப்பாயா?*
*மூர்க்கர், கோபிகள் நடுவில் திடனாய் நிற்பாயா?*

ஆயர்களே, போதகர்களே, ஆண்டுதோறும் நீங்கள் பண்ணும் 52 ஞாயிறு பிரசங்கங்களில் ''இரத்தசாட்சியாய் மரிப்பது எப்படி?'' என்று எத்தனை முறை உங்கள் சபையாருக்குச் சொல்லிக்கொடுத்து அவர்களை ஆயத்தப்படுத்துகிறீர்கள்? ஆன்மீகப் போராட்டம் குறித்த கருத்தரங்குகளில் ''வீர மரணம்'' அதாவது ''இரத்தசாட்சி மரணம்,'' குறித்துப் பேசப்படாதது ஏன்? இரத்த சாட்சிகளின் காலம் முடிந்துவிட்டது எனும் பிசாசின் பொய்யை நம்பிவிட்டோமோ?

அப்போஸ்தலர் 1:8இலுள்ள ''சாட்சிகள்'' என்பதற்கு மூல மொழியில் அர்த்தமே ''இரத்தசாட்சிகள்'' என்பதே. இதையே சீடத்துவத்தின் அடிப்படை நிபந்தனையாய் இயேசு முன்வைத்தார்: ''யாதொருவன் என்னிடம் வந்து ... தனது உயிரையும் வெறுக்காவிடில் அவன் எனக்குச் சீடனாய் இருக்கமுடியாது'' (லூக் 14:26). ''யாதொருவன்'' என்றால் எவரும் இதற்கு விதிவிலக்கல்ல. கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் இரத்தசாட்சியாய் இறக்கவேண்டும் என்பதல்ல; ஒவ்வொருவனும் இரத்தசாட்சியாய் இறக்க ஆயத்தமாயிருக்கவேண்டும் என்பதே இங்கு பொருள். நமது பாதுகாப்பிற்காய் ஜெபிக்கவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் கிறிஸ்தவத்திற்கான எதிரிகள் கைகளிலிருந்து எப்பொழுதுமே ஆண்டவர் நம்மைக் காப்பாற்றிவிடுவார் என்பதற்கு திருமறைவுபதேசமோ, திருமறைச் சான்றோ இல்லை. பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்த

ஆண்டவர் யாக்கோபுவைச் சிரச்சேதத்திற்கு ஒப்புக்கொடுத்தார் (அப் 12:1-16). பேதுருவுக்காய் அவ்வளவு ''ஊக்கமாய்'' ஜெபித்த சபை யார் யாக்கோபுக்காக ஜெபித்திருக்கமாட்டார்களோ? பிரியமானவர் களே, வாளுக்குச் சிலர் தப்புவார்கள், வேறு சிலரோ இரையாவார்கள் (எபி 11:34,37). அப்படியே, பேதுருவைத் தூதன் மூலம் காப்பாற் றிய ஆண்டவர் தூதன்போல் முகப்பிரகாசம் கொண்டிருந்த ஸ்தே வானைத் தப்புவிக்க முடியவில்லையோ? (அப் 6:15; 7:59,60). இப்படித்தான் சமநிலைப்படுத்தித் திருமறையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

''ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக் களில் சோர்ந்துபோகாதபடி, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய் யப்பட்ட விபரீதங்களைச் சகித்த இயேசுவையே நினைத்துக்கொள் ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுவதில் இரத்தம் சிந்து மளவு நீங்கள் இன்னும் போராடவில்லையே'' (எபி 12:3,4). இங்கு ''பாவம்'' என்பது ''அவிசுவாசம்'' என்பதைக் குறிக்கும் (வச 1). அதா வது, சுவிசேஷத்திற்கு எதிரிடையான எதையும் குறிக்கும்.

கிறிஸ்தவ வெற்றி வாழ்க்கை குறித்த பிரசங்கங்களிலும் போத னைகளிலும் தவறாமல் மேற்கோள் காட்டப்படுவது வெளி 12:11ஆ, ''ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத் தினாலும் பிசாசை ஜெயித்தார்கள்.'' ஆனால் இவ்வசனத்தின் முதல் பகுதியை ஏன் விட்டுவிடுகிறோம்? ''மரணம் நேரிடுகிறதாயிருந்தா லும் அதற்குத் தப்பும்படி தங்கள் உயிரையும் பாராமல் ...'' இது இரத்தசாட்சி மரணமேயன்றி வேறென்ன? இங்கு வெற்றி என்பது ''உயிர் பிழைப்பு'' அல்ல; மாறாக, ஆட்டுக்குட்டியானவர் இரத்தம் சிந்தியதை நினைவுகூர்ந்து அவருக்காய்க் கடைசிவரை சாட்சி சொல்லி ''உயிர் துறப்பு'' ஆகும். நமது வசதிக்கேற்ப திருவசனங் களை வியாக்கியானிப்பதில், அப்பப்பப்பா, நாம் எத்தனை கெட்டிக் காரர்! ''மரணம்வரை உண்மையாயிரு; அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' என்று சிமிர்னா சபைக்குக் கிறிஸ்து சொன்ன தின் பொருளென்ன? (வெளி 2:10). ''காவல் தண்டனை, ஆயுள் தண்டனை, மரண தண்டனை!'' அன்றே அப்படியென்றால் இன்று?



இன்றைய இந்தியக் கிறிஸ்தவராகிய நமக்கு இயேசுவின் வார்த்தைகள் முழுக்க முழுக்க நடைமுறையான அர்த்தமுள்ளவை: ''பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்?'' (லூக் 23:31). ''பட்ட மரம்'' என்பது ஆங்கில வேதாகமத்தில் ''காய்ந்த கட்டை'' (dry wood) என்றிருக்கிறது! பல்வேறு கோணங்களிலிருந்து பல்வேறு முறைகளில் பிசாசானவன் திருச்சபையைத் தாக்கிக்கொண்டிருக்கிறான். இவற்றையெல்லாம் சந்திக்க நாம் சத்துவமற்றிருக்கிறோம். திருச்சபைகளிலும் திருச் சங்கங்களிலும் அடித்தளமே ஆடிப்போயிருக்கிறது. இது ''தீங்கு நாள்'' (எபே 6:13). ஆன்மீகப் படைக்கலன்களில் நாம் ஒன்றுவிடாது அணிந்து நிற்கவேண்டும். ''சத்தியம்'' கலப்படம் செய்யப்படக் கூடாது; வாழ்வில் நடைமுறை ''நீதி'' தியாகம் பண்ணப்படக் கூடாது; எப்பொழுதும் எங்கும் சுவிசேஷத்தை அறிவிக்க ''ஆயத் தம்'' அவசியம்; ''விசுவாசம்'' என்பதில் தளர்வோ சமரசமோ கூடாது; உலகச் சிற்றின்பங்களில் அல்ல, நாம் பெற்றுள்ள ஆன்மீக ''இரட் சிப்பு'' என்பதிலேயே மனக்களிப்பு காணப்படவேண்டும்; ''ஜெபம்'' என்பது எல்லாவற்றையும் எல்லாரையும் உள்ளடக்கித் தூயாவியான வரின் உதவியுடன் ஏறெடுக்கப்படவேண்டும் (வச 14-18). இவ்வித ஆயுதந்தரிப்பு இல்லையேல் தினமும் வலுக்கும் இன்றைய யுத்தத் தில் புறமுதுகு காட்டி ஓடிவிடுவோம்! சகோதரி சாராள் நவரோஜி (1938-2014) அவர்களது பாடலைப் பாடுவோம் —

*இரத்த சாட்சிக் கூட்டம் சத்யப் பாதையில்*
*நித்தம் தம்மைத் தத்தம் செய்து வீர சேவையில்*
*ஜீவன் சுகம் பெலன் யாவையும் ஈந்ததால்*
*சுத்த சுவிசேஷம் ஓங்குதே!*



# கேள்வி 4

***''நீ காலாட்களோடு ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால், குதிரைகளோடு எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள நாட்டிலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் வெள்ளப் பெருக்கெடுத்து வரும்போது நீ என்ன செய்வாய்?''***

**(எரேமியா 12:5)**

இறைமக்கள் மற்றும் இறைப்பணியாளரது இதயங்களில் கேள்விகள் எழுவது இயல்பு. அவற்றில் பல கேள்விகள் தேவனைச் சம்பந்தப்படுத்தியவையாய் இருக்கும். நமது கேள்விகளுக்கெல்லாம் பதில் தர அவர் கடமைப்பட்டவரல்ல எனினும், அவற்றை அவர் செவிகொடுத்துக் கேட்கிறார்; தேவைப்படும்போது அவற்றிற்குப் பதிலும் கொடுக்கிறார். தன்னைச் சூழ நடந்துகொண்டிருந்த காரியங்களைக் குறித்துத் தீர்க்கன் எரேமியாவின் மனதில் பல கேள்விகள் கொந்தளித்து எழும்பின. தனது கேள்விகளுக்கு அவர் தேவனிடம் கொடுக்கும் முன்னுரையைக் கவனியுங்கள்: ''கர்த்தாவே, உம்முடன் வழக்காடப்போனால், தேவரீர் நீதியுள்ளவராமே; ஆனாலும் உம்முடைய நியாயங்களைக் குறித்து உம்முடன் நான் பேசும்படி வேண்டுகிறேன்'' (எரே 12:1அ). இதைத் தொடர்ந்து அவர் கேள்விகளை அடுக்குகிறார்: ''தீயோரின் வாழ்வு வளம் பெறக் காரணம் என்ன? நம்பிக்கைத் துரோகம் செய்வோர் அமைதியுடன் வாழ்வது ஏன்? எவ்வளவு காலம் மண்ணுலகம் புலம்பிக்கொண்டிருக்கும்?'' (வச 1ஆ,4). இதற்குப் பதில் தரும் வகையில்தான் நாம் மேல் குறிப்பிட்ட கேள்வியைத் தீர்க்கன் முன் தேவன் வைக்கிறார்: ''காலாட்களோடு ஓடியே களைத்துப் போகும் நீ குதிரைகளோடு எப்படி ஓடப்போகிறாய்?'' (வச 5).

தேவனோடு நெருங்கி வாழ்ந்து, மன்றாட்டுப் பணியில் தீவிரங்கொண்டு, அவரது கண்ணீரில் பங்குகொண்டு வாழ்ந்த எரேமியா போன்றதொரு தீர்க்கனுக்கே இவ்வித விரக்தி உண்டாகுமானால்



நமக்கும் இவ்விதச் சலிப்பு உண்டாவது இயல்பானதுதான். ஆதி பக்தர் பலரும் பல வேளைகளில் இவ்வித நிலைக்குத் தள்ளப்பட்டனர். நீதிமானாகிய யோபு கேட்ட கேள்விகள்: ''தீயோர் வாழ்வதேன், நீண்ட ஆயுள் பெறுவதேன், வலியோராய் வளர்வதேன்? ... சர்வ வல்லவருக்கு நாங்கள் பணிபுரிந்து, அவரை நோக்கி மன்றாடுவதால் என்ன பயன்?'' (யோபு 21:7-15). இதே பாணியைத் தீர்க்கன் மல்கியா காலத்து மக்கள் தொடர்ந்தனர்: ''தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரீட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்கள்'' (மல் 3:15).

இன்று தாண்டவமாடும் ஒரு துர்வுபதேசத்திற்கு எதிரான போதகம் இங்கிருக்கிறது. தீர்க்கதரிசிகள் என்ற பெயரில் பலர் குடுகுடுப்புக் காரராய் மாறிவிட்டனர். ''நல்ல காலம் பொறக்குது! நல்ல காலம் பொறக்குது!'' என்பதே அவர்கள் பல்லவி. இன்றைய நிலைமை மாறி எல்லாம் நேர்த்தியாகும் என்றே சொல்லி அவர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர். திருமறை இப்படிச் சொல்லவே இல்லை. நாட்கள் செல்லச் செல்ல, கடைசிக் காலத்தின் கடைசிக் கட்டத்திற்குள் நாம் வர வர, உலகின் நிலைமை இன்னும் மோசமாகிக்கொண்டே போகும் என்பதுதான் திருமறையில் நெடுகவே நாம் காணும் முன்னறிவிப்பு. இதோ சில எடுத்துக்காட்டுகள் —

□ மத்தேயு 24:12, ''அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகரது அன்பு தணிந்துபோகும்.'' இறுதிக்கால அடையாளமொன்று இது என்று இயேசு குறிப்பிட்டார். ''கிரமம்'' என்றால் ஒழுங்கு அல்லது கட்டுப்பாடு எனப் பொருள்படும். ''அக்கிரமம்'' என்றால் ஒழுங்கின்மை, கட்டுப்பாடின்மை எனப் பொருள். இன்று உலகெங்கும், முன்னேற்றமடைந்த நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும், காணப்படுவது இதுதானே? சட்டதிட்டங்களை அவமதித்தல், விதிகளை மீறுதல், பிறருடையவற்றை அபகரித்தல், நீதிநெறிகளை அலட்சியம் பண்ணுதல், சன்மார்க்க ஒழுக்கக்கேடு, இன்னும் இவை போன்ற காரியங்கள்தானே நாளுக்குநாள் பெருகிக்கொண்டே போகின்றன? தினசரிச் செய்தித்தாள்களை நிரப்புவது இவைதானே? கலாத்தியர் 5:19-21இல் அப்போஸ்தலன் பவுல் வரிசைப்படுத்தியுள்ள அத்த

னையும் தினமும் நடந்துகொண்டுதானே இருக்கின்றன? சமாதான மும் அமைதியும் அபூர்வமாகி வருகின்றனவே! ''தேவனிடமும் மனிதரிடமும் அன்புடன் நடந்துவருவதால் நமக்கு என்ன கிடைத்து விட்டது'' என்ற விரக்தி விசுவாசிகள் நடுவிலும் உண்டாகிக்கொண் டுதானே இருக்கிறது?

□ 2 தீமோத்தேயு 3:13, ''பொல்லாதவர்களும் எத்தர்களுமான வர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவும் மேலும் மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.'' பவுலின் இவ்வார்த்தை கள் இதைவிடத் தெளிவாயிருக்கமுடியுமா? மார்க்கவுலகில் ஏமாற்று வேலை! அரசியல் வட்டாரங்களில் ஏமாற்று வேலை! வணிகத்துறை யில் ஏமாற்று வேலை! சகவுறவுகளில் ஏமாற்று! இன்று ஏமாற்று வேலை இல்லாத ஒரு துறையைக் காட்டுங்களேன்! இவ்வசனப் பகுதியில் ஒரு முக்கியமான திருச்சத்தியத்தை அப்போஸ்தலன் பவுல் கொண்டுவருகிறார். இவ்விதச் சமுதாயச் சீர்கேடுகளினால் அதிகம் பாதிக்கப்படுவது ''தேவ பக்தியாய் நடக்க மனதுள்ளவர்கள் தான்'' (வச 12). சூழ்நிலை எப்படி மாறினாலும், துன்மார்க்கம் எவ் வளவு பெருகினாலும், நான் தேவ பக்தியை விட்டுவிடமாட்டேன் என்று தீர்மானம் எடுத்தாலே போதும், ''மிகுந்த துன்பம்'' நமதாகும். இவ்விதச் சூழலில் தாக்குப்பிடிப்பது எவ்வளவு கடினம் என்பதை நன்கறிந்திருந்த பவுல் இளைஞன் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த ஊக்க வார்த்தைகள்: ''நீயோ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் உறுதியாயிரு ... சிறுவயது முதல் நீ பயின்றுவரும் பரிசுத்த வேத எழுத்துக்களை மறந்துவிடாதே ... நான் உனக்குக் கற்பித்த சத்தியங் களை விட்டுவிடாதே'' (வச 14,15). இவ்வார்த்தைகளைத் தனிப் பட்ட முறையில் நம்மொவ்வொருவருக்கும் வரும் இறைச்செய்தி யாய் எடுத்துக்கொள்வோம்.

□ லூக்கா 18:8, ''மனுமகன் வரும்போது பூவுலகில் விசுவாசத் தைக் காண்பாரோ?'' இக்கேள்வியை ஆண்டவர் கேட்ட சந்தர்ப்பத் தைக் கவனிப்போம். ''சோர்ந்து போகாமல் ஜெபம்பண்ணவேண் டும்'' என்பதற்கு ஓர் உவமையை அவர் சொன்னார் (வச 1-8). நியா யம் தேடி ஒரு விதவை ஒரு நீதிபதியிடம் செல்லுகிறாள். நீதிபதி அவளது வேண்டலைக் கவனியாது இருக்கிறார். அவள் திரும்பத்



திரும்ப நீதிபதியிடம் சென்று முறையிடுகிறாள். கடவுளுக்குப் பயப் படாதவரும் மனிதரை மதியாதவருமான அந்த நீதிபதி தொந்தரவு தாங்க முடியாமல் அவளுக்கு நீதி கிடைக்க உதவுகிறார். அநீதியுள்ள நீதிபதியே திரும்பத் திரும்பத் தன்னிடம் ஒரு வேண்டல் வந்ததால் உதவியிருக்கும்போது, நீதியுள்ள தேவன் தமது சொந்த மக்களது இடைவிடா ஜெபத்தை அசட்டை செய்வாரோ என்று இயேசு கேட்டு விட்டு, ஆனாலும் ''மனுமகன் வரும்போது பூவுலகில் விசுவாசம் இருக்குமா?'' என்ற கேள்வியை எழுப்புகிறார். அநேகரது விசுவாசம் ஆட்டங்கண்டிருக்கிறது என்பது உண்மைதானே?

மேற்கூறிய மூன்று வசனப்பகுதிகளின் சுருக்கம்: (1) அக்கிரமம் பெருகும்; அன்பு குறையும்; நாமோ பரிசுத்தத்தில் வளரவேண்டும், அன்பில் பெருகவேண்டும். (2) பொல்லாப்பு கூடும்; ஏமாற்று வேலை அதிகரிக்கும்; தேவ பக்தியுள்ள அனைவருக்கும் துன்பம் பெருகும்; ஆனாலும் நாம் கற்று நிச்சயித்தத் திருச்சத்தியங்களில் உறுதியாயிருக்க வேண்டும். (3) ஜெபங்களுக்கு உடனுக்குடன் பதில் கிடையாததால் பலரது விசுவாசம் ஆடிப்போகும்; நாமோ நீடிய பொறுமையுள்ளவராகிய நமது தேவன் மீதுள்ள விசுவாசத்தைத் தளர்த்திவிடாது அவரை நாடிக்கொண்டேயிருக்கவேண்டும். மொத் தத்தில், இவ்விதச் சீர்கேடுகளும் சரிவுகளும் வேதனைகளுக்கு ''ஆரம்பம்'' மட்டுமே என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும் (மத் 24:8).

உலகின் நிலைமை மோசமாகிக்கொண்டேதான் போகும் என்று சொல்லும் அதே வேளையில், நாம் நமது மனதில் எதிர்மறைச் சிந் தைக்கும் (negativism), தோல்வி மனப்பான்மைக்கும் (defeatism), பாதகச் சிந்தைக்கும் (pessimism) இடம் கொடுத்து விடக்கூடாது. சூழ்நிலை எப்படியிருந்தாலும் ''கிறிஸ்துவுக்குள்ளான'' நமது வெற்றி நிலையானதே. ''கிறிஸ்துவுக்குள்'' வாழும் நமக்கு விசுவாசம் குன்றக் கூடாது. ''கிறிஸ்துவுக்குள்'' வாழும் நமக்கு அன்பு தணியக்கூடாது. ''கிறிஸ்துவுக்குள்'' வாழும் நமக்கு நீதிநெறியில் இறக்கம் கூடாது. ''கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும், எங்கும் நம்மை வெற்றிசிறக்கப் பண்ணும் தேவனுக்கு ஸ்தோத்திரம்!'' (2 கொரி 2:14). நம்மைச்

சுற்றியுள்ள மக்கள் நல்லவரோ தீயவரோ, இரட்சிக்கப்பட்டவர்களோ கெட்டுப்போகிறவர்களோ, நாம் நறுமணம் வீசிக்கொண்டேதானிருப்போம் (வச 15).

ஒரே மனிதனின் கீழ்ப்படியாமையினாலும் பாவத்தினாலும் உலகிற்குள் வந்துவிட்ட கவலை, கண்ணீர், கலக்கம் போன்ற யாவும் தனி நபர்களின் வாழ்க்கையிலும், இறுதிக்காலத்தின் இறுதிக்கட்டத்திற்குள் வர வர, கூடிக்கொண்டேதானிருக்கும். முப்பெரும் பக்தர்கள் இதனைக் கண்டுபிடித்தனர். ஒருவர் *யோபு:* ''பெண்ணிடம் பிறந்த மனிதன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்'' (யோபு 14:1). அடுத்தவர் *மோசே:* ''ஆண்டவரே, எங்கள் வாழ்காலம் எழுபது ஆண்டுகள்; பலம் அதிகமாயிருந்தால் எண்பது ஆண்டுகளாயிருந்தாலும், அதில் பெருமைக்குரியது துன்பமும் துயரமுமே; அது சீக்கிரம் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துவிடுகின்றோம்'' (சங் 90:10). மூன்றாம் நபர் *சாலொமோன்:* ''மனிதனது வாழ்நாளெல்லாம் அவனுக்குத் துன்பம்; வேலையில் தொந்தரவு; இரவிலும் அவனது மனதிற்கு அமைதியில்லை'' (பிர 2:23). மனித வாழ்வின் பொதுவான நிலை இதுதான் எனினும், உலகம் தரமுடியாத, உலகத்தாரால் புரியமுடியாத, தமது ''சமாதானத்தை'' இயேசு தம்மிடம் நம்பிக்கை கொள்வோருக்கு வாக்குப்பண்ணுகிறார் (யோ 14:27; பிலி 4:6,7). இதுதான் வாழ்க்கை, இதுதான் பாதை என்றால் எப்படித்தான் மகிழ்ச்சியாயிருக்கமுடியும் என்றெண்ணும்போது, தம்மை விசுவாசித்துப் பின்பற்றுவோர்க்கு இயேசு தமது ''சந்தோஷத்தை'' அருளிச்செய்கிறார் (யோ 15:11).

வாழ்வின் சோதனைகளையும் வேதனைகளையும் நாம் எப்படிக் கையாளுகிறோம் என்பதே நமது முதிர்ச்சிக்கு அளவுகோல். ஞானி சாலொமோனின் வார்த்தைகள்: நீதி 24:10, ''ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால் உன் பலம் குறுகியது.'' வெளிச்சத்தில் ஆண்டவர் உங்களிடம் சொல்லியவைகளை இருண்ட பாதையில் செல்லும்போது சந்தேகிக்காதீர்கள். தேவனுக்குக் கீழ்ப்படிந்தும், அவரது ஊழியரது ஆலோசனைகளைக் கேட்டும் நடந்தாலும், இருள் சூழ்ந்த பாதைகள் வழியாக நடக்க நேரிடலாம். சுரங்கப்பாதை நீண்டு கொண்டே போகலாம். இவ்விதச் சூழலிலும் நாம் செய்யவேண்டி



யது: ''கர்த்தருடைய நாமத்தை நம்பி, நமது தேவனைச் சார்ந்து கொள்ளவேண்டும்'' (ஏசா 50:10). இதை ஒருவர் ''இருட்டில் கற்கும் ஒழுங்கு'' (Discipline of Darkness) என்றழைக்கிறார். வெளிச்சமான பாதைகளில் நடக்கும்போது கற்கும் படிப்பினைகளை இருண்ட பாதைகளில் நடக்கும்போது பயிற்சிக்கவேண்டும். அப்பொழுதுதான் பிறர்க்கு இப்பாடங்களைக் கற்பிக்க அனுபவ ரீதியான பயிற்சி பெறுகிறோம்.

இவ்வத்தியாயத்தை முடிக்குமுன் திருத்துதல் உபதேசம் ஒன்று தரவிரும்புகிறேன். ''இராஜ்யத்தின் சுவிசேஷம்,'' ''இராஜ்யத்தின் வாழ்வு'' (Kingdom Gospel, Kingdom Life) போன்ற பதங்களை அடிக்கடி பயன்படுத்தி இராஜ்யத்தின் காரியங்களை அதிகம் வலியுறுத்தும் ஓர் உபதேசம் உண்டு. அவர்களது முழக்கம் என்னவென்றால், ''இன்றே, இங்கேயே, இறையரசு!'' (The Kingdom here and now!). இவ்வுபதேசம் முற்றிலும் சரி என்று சொல்லமுடியாது. ஏனெனில் இறையரசு அல்லது விண்ணரசு என்பதற்கு இன்றையப் பரிமாணமும் உண்டு, இனிவரும் நித்தியப் பரிமாணமும் உண்டு. ''தேவனுடைய இராஜ்யம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது'' (லூக் 17:21) என்ற இயேசுவின் வார்த்தைகளும், ''தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்பும் அல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாம்'' (ரோ 14:17) என்ற பவுலின் வார்த்தைகளும் இறையரசின் இன்றையப் பரிமாணத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. இது ஆவிக்குரியது (spiritual). இறையரசின் இனிவரும் நித்தியப் பரிமாணம் 1 கொரிந்தியர் 15:24-28இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எழுத்தின்படியானது (literal). ''உமது இராஜ்யம் வருவதாக'' என்பது முக்கியமாக இனிவரும் நித்திய இராஜ்யத்தையே குறிக்கும். இன்றே, இங்கேயே இறையரசு பூரணமாய் வந்துவிடுகிறது என்றால் நீதி வாசமாயிருக்கும் புதிய வானம், புதிய பூமி வர நாம் காத்திருக்க வேண்டியதில்லையே (2 பேது 3:13). இவையெல்லாம் தேவனது ஆதீனத்தில் உள்ளவை. ஏற்ற வேளையில் ஏற்ற விதமாய் அவர் காரியங்களை நடப்பிப்பார். நம்மைப் பொருத்தவரை, நாம் சோதோமில் அக்கிரமக்காரர் நடுவில் வாழ்ந்தாலும், நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக்கொண்டே போனாலும், நீதிமானாகிய

லோத்தைப்போல், இருதய வேதனையோடு, தேவ பக்தியைக் காத்துக்கொள்ளவேண்டும் (2 பேது 2:6-9). தேவன் நம்மை இரட்சித்துக் காத்துக்கொள்வார். (இறையரசின் வாழ்க்கை குறித்துக் கூடுதல் அறிய *''தீர்க்கதரிசி, ஆசாரியர், இராஜா''* எனும் எனது நூலின் 4ஆம் அத்தியாயத்தை வாசியுங்கள்.)

அநியாயம் செய்கிறவர்கள் இன்னும் அநியாயம் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவர்கள் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நாமோ சரிந்துகொண்டிருக்கும் உலகில் எதிர் நீச்சல் போட்டு நீதியின்மேல் நீதியை நடப்பிப்போம், பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம் அடைவோம்! (வெளி 22:11). எதிர் நீச்சல் போடும்போது களைப்பு ஏற்படத்தான் செய்யும்; ஆனாலும் தினமும் இறைப்பிரசன்னத்தில் காத்திருந்து நமது ஆன்மீகத் தசைநார்களை வலுப்படுத்திக்கொள்வோம் (ஏசா 40:29-31).





# கேள்வி 5

***''உன்னைச் சிறந்தவனாகும்படிச் செய்கிறவர் யார்? உன்னிடம் இருப்பவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது எது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் பெருமையடிக்கிறாய்?''***

**(1 கொரிந்தியர் 4:7)**

நான் பிறரைவிட நல்ல உடல் தோற்றம் உள்ளவனா? பிறரைவிட நன்கு படிக்கிறேனா? எனது அறிவும் ஞானமும் பிறரை மிஞ்சுகின்றனவா? எதையும் நான் பிறரைவிட நேர்த்தியாய்ச் செய்யமுடிகிறதா? பிறரைவிட நன்றாய்ப் பிரசங்கிக்கிறேனா? பிறரைவிட அதிகமாய் உழைக்கிறேனா? இவ்விதம் தனது மேன்மைகளை எவரும் அடுக்கிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் இருப்பினும் இவையெல்லாம் எனது சொந்தச் சரக்கு அல்ல, எல்லாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டவையே என்ற எண்ணம் நமது மனதில் நன்கு பதிந்திருக்கவேண்டும். இல்லையேல் அகந்தையால் அழிவோம். மேலே குறிப்பிட்டுள்ள கேள்வி தரும் சவால் இதுவே. இக்கேள்வியை அடுத்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய சத்தியங்கள் பலவுண்டு.

இரட்சிக்கப்படாதவர்களை இரட்சிக்கப்பட்டவர்கள் குறைவாய் எண்ணுவது சகஜம். இது தேவனுக்குப் பிரியமில்லாத காரியம். இவ்வித எண்ணத்தைத் திருத்துவதற்காகவே திருவசனம் இப்படிச் சொல்லுகிறது: 1 யோ 4:19, ''அவர் முந்தி (முதலாவது) நம்மிடம் அன்புகூர்ந்ததால் நாமும் அவரிடம் அன்புகூருகிறோம்.'' நாம் தேவனுக்கு எதிரிகளாயிருந்தோம். தெய்வபயமின்றி நமது விருப்பம்போல் வாழ்ந்துகொண்டிருந்தோம். ஆடுகளைப்போல் நமக்கு விருப்பமான வழிகளில் சென்றுகொண்டிருந்தோம். கீழ்ப்படியாமையின் ஆவி நம்மைப் பிடித்திருந்தது. இருட்டுப் பாவச் செயல்களில் தீவிரமாய் ஈடுபட்டிருந்தோம். இரக்கத்தில் செல்வராகிய தேவனோ தமது அன்

பின் கயிற்றை நம்மீது வீசி நம்மைத் தம்மிடமாய் இழுத்துக்கொண்டார். நம்மீது முதலாவது அவரே அன்பு செலுத்தினார்; அதற்குப் பிரதிபலிப்பாகவே நாமும் அவரிடம் அன்பு செலுத்துகிறோம். இப்படியிருக்கப் பெருமையடித்துக்கொள்ள இடம் எங்கே?

இச்சத்தியத்தைத் தமது சீடர் ஒரு நாளும் மறந்துவிடக்கூடாதென்ற நோக்குடன் ஆண்டவர் அவர்களிடம் சொன்னது: ''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்'' (யோ 15:16). ''நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்'' என்று சாதாரணமாய்ச் சொல்லிவிடாமல், அதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை'' என்று முதலாவது கூறுகிறார். இவ்விதம் ஆண்டவர் நம்மைத் தெரிந்துகொண்டது நேற்று அல்லது இன்று அவர் எடுத்த தீர்மானம் அல்ல. அவர் நம்மை உலகம் தோன்றுவதற்கு முன்னரே முன்குறித்துவிட்டார் (1 பேது 1:20). உலகம் தோன்றுவதற்கு முன்னரே நம்மைத் தெரிந்துகொண்டார் (எபே 1:4). இப்படியிருக்க பெருமையடிக்க நமக்கு என்ன நியாயமுண்டு, அருகதையுண்டு?

சுவிசேஷக் கூட்டங்களில் தனிநபர்கள் சொல்லும் பல சாட்சிகள் அபத்தம்! ''நான்'' பாவங்களை அறிக்கையிட்டேன். ''நான்'' பீடி, சிகரெட், கதைப்புத்தகங்களைத் தூக்கியெறிந்தேன். ''நான்'' மனந்திரும்பினேன். ''நான்'' யாவரோடும் ஒப்புரவானேன். ''நான்'' அபகரித்த பொருட்களைத் திருப்பிக் கொடுத்தேன். ''நான்'' கண்ணீர் விட்டு ஜெபித்தேன். போதுமா? இவற்றிற்கெல்லாம் கூலியா இரட்சிப்பு? இப்படிப்பட்டவர்களைத் திருத்துவதற்காகவே பவுல் இவ்விதம் எழுதினார்: எபே 2:8,9, ''கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானது ***அல்ல;*** இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமையடிக்காதபடி இது கிரியைகளினால் உண்டானது ***அல்ல.''*** நமது விசுவாசத்தைத் துவக்குபவரும் அவரே, முடிக்கிறவரும் அவரே. அவர் துவக்குவதை நாம் முடிக்கிறோம் என்று நினைத்துவிடக்கூடாது. இதைப் பவுலடியார் பிலிப்பிய விசுவாசிகளுக்குக் குறிப்பிட்டு எழுதினார்: ''உங்களில் நற்செயலைத் தொடங்கியவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் வரை முடிய நடத்திவருவார்'' (பிலி 1:5). இந்த நம்பிக்கையினாலேயே அந்த விசுவாசிகளை நினைக்கும்போதெல்லாம் அவர் தேவனை ஸ்தோத்திரித்தார் (வச 6).



நான் இப்படி எழுதும்போது ஒரு சிலர் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்கலாம்: இரட்சிக்கப்பட ''நான்'' மனந்திரும்பவேண்டாமா? இரட்சிக்கப்பட ''நான்'' விசுவாசிக்கவேண்டாமா? நாம் மனந்திரும்பவேண்டும்; ஆனால் நமக்கு மனந்திரும்புதலை ''அருளிச்செய்வது'' தேவனே (அப் 11:18). விசுவாசமும் நாம் தேவனிடமிருந்து ''பெற்றுக்கொள்வதுதான்'' (2 பேது 1:1). ''உனக்கு இருப்பவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் எல்லாமே உன்னிலேயே உருவானதுபோல் ஏன் பெருமையடிக்கிறாய்?'' (1 கொரி 4:7). குடித்து வெறித்திருந்த ஒருவனைக் காவலர்கள் தெருவில் இழுத்துக்கொண்டுபோனதைக் கண்ட ஜான் வெஸ்லி (1703-1791) தனது சகாக்களிடம் சொன்னது: ''தேவனது கிருபை மட்டும் இல்லாதிருந்தால் அதுதான் ஜான் வெஸ்லி!''

இச்சத்தியத்தைப் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் ஆசிரியர்களது புதிய கண்டுபிடிப்பு என்று நாம் நினைத்துவிடக்கூடாது. உலகிலுள்ள அத்தனை மக்களினங்களிலும் இஸ்ரவேலரைத் தேவன் தெரிந்துகொண்டார். இதனால் அவர்களுக்குத் தலைக்கர்வம் வந்துவிடக்கூடாதென்று மோசே அவர்களை எப்படி எச்சரித்தார் பாருங்கள்: ''அனைத்து மக்களினங்களிலும் நீங்கள் திரளானவர்கள் என்று கர்த்தர் உங்கள்மீது அன்புவைத்து உங்களைத் தெரிந்துகொள்ளவில்லை; நீங்கள் அனைத்து மக்களினங்களிலும் சொற்பமானவர்களாகவே இருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும் ... உங்களை மீட்டுக்கொண்டார்'' (உபா 7:7,8). என்னே சத்தியம்! தேவன் நம்மீது அன்புவைத்ததற்குக் காரணம் அவர் நம்மீது வைத்துள்ள அவரது அன்பே! இதை எழுதும்போதே என் விரல்கள் நடுங்குகின்றன!

*அன்பிதோ, அன்பிதோ, அன்பிதோ,*
*என்னை அணைத்தீர் அரசே அருளாலே!*

*நாறிக் கிடந்த என் நாற்றத்தை நீக்கியதும் கிருபை!*
*நாசமணுகாமல் பாதுகாத்தணைத்து*
*மந்தையில் சேர்த்துக்கொண்டீரே!*

*சுத்த ஜலத்தினால் சுத்திகரித்து என்னைத் தமக்காய்*
*மீறிப்போகும் எந்தன் சிந்தை அகற்றித் தம்*
*சித்தத்தைச் செய்யச் செய்தீரே!*

நாம் இருப்பதும் இயங்குவதும் தேவனது மட்டற்ற கிருபையினாலேயே என்ற இச்சத்தியத்திற்கு நிரூபணமாய்த் திகழ்ந்த இரு நபர்களை இங்குச் சந்திப்போம் —

□ ***தாவீது:*** தனது வாழ்க்கையின் துவக்கத்தில் சவுலரசனைப் பார்த்து அவர் சொன்னது: ''ராஜாவுக்கு மருமகனாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜீவன் எம்மாத்திரம்? இஸ்ரவேலில் எனது தகப்பனின் வம்சமும் எம்மாத்திரம்?'' (1 சாமு 18:18). வாழ்க்கையின் அல்லது ஊழியத்தின் துவக்கத்தில் இப்படிச் சொல்வது எளிது. ஆனால் படிப்படியாய் உயர்ந்து பிரபலமான பின்னர் இவ்விதம் அறிக்கையிடுவது எளிதல்ல. 2 சாமுவேல் 7ஆம் அத்தியாயம் 18ஆம் வசனத்தை நமது மனதில் ஆழமாய்ப் பதித்துக்கொள்ளவேண்டும்: ''அப்பொழுது தாவீது ராஜா உள்ளே நுழைந்து கர்த்தருடைய சமூகத்திலிருந்து: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?'' தாவீது தேவனுக்குமுன் தாழ்மையாய் ''உட்கார்ந்து'' இவ்வார்த்தைகளைச் சொன்னார் என்று ஆங்கில வேதாகமத்திலும், பொது மொழிபெயர்ப்பு வேதாகமத்திலும் இருக்கிறது. வாழ்க்கையில் நாம் உயர உயர, நமது ஊழியம் வளர வளர, நம்மில் எத்தனை பேருக்குத் தலைக்கனம் வந்துவிடுகிறது! திறமை எனும் வார்த்தையைக் கிருபை எனும் சொல்லுக்குப் பதிலாக்கிவிடுகிறோம். மக்களிடம், ''நாம் இருப்பது, செய்வது, எல்லாம் தேவ கிருபையினாலேயே'' என்று வாயளவில் சொல்லிக்கொண்டாலும், ''நமது திறமையே இதற்கெல்லாம் காரணம்'' என்று நமது மனதில் நினைத்துக்கொள்ளுகிறோம். இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் எல்லாவற்றையும் அறிவார். ''நான் தேவனுக்குமுன் மனத்தாழ்மையாய் நடக்கிறேனா?'' என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொள்வோம்.

□ ***ஆமோஸ்:*** ''நான் தீர்க்கதரிசியும் அல்ல, தீர்க்கதரிசியின் மகனும் அல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும் காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தேன். ஆனால் மந்தையின் பின்னால் போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து ... தீர்க்கதரிசனம் சொல்லு என்று உரைத்தார்'' (ஆமோஸ் 7:14,15).



இவை போன்ற வார்த்தைகளை நானும் எனது வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்துச் சொல்லமுடியும். தமிழ் இலக்கியத்திலோ ஆங்கில இலக்கியத்திலோ பட்டம் பெறாத என்னை அவருக்காய் எழுத ஆண்டவர் தெரிந்துகொண்டார். இறையியல் கல்லூரியில் அல்ல, பொறியியல் கல்லூரியில் பயின்ற என்னை ஆண்டவர் ஒரு திருமறைப் போதகனாய் மாற்றினார். பள்ளியில் பயின்ற நாட்களில் புது வகுப்புகளுக்குள் நுழையும்போது புதுப் பாடப் புத்தகம் எதுவும் வாங்க முடியாத ஏழ்மை; பழைய புத்தகங்களையே ஒட்டுபோட்டு அட்டை போட்டுப் படித்துத் தேறினேன். ஓர் ஆங்கில வேதாகமம் கிடைக்க எத்தனையோ ஆண்டுகள் காத்திருந்தேன். இன்று பல்லாயிரங்களுக்கு ஆவிக்குரிய புத்தகங்களும் ஆராய்ச்சி வேதாகமங்களும் கொடுத்து அவர்களை ஆசீர்வதிக்கிறேன். எனது வீட்டிற்கு முன்னால் இப்பொழுதும் இரண்டு ஹரிக்கேன் (hurricane) விளக்குகளை ஞாபகத்திற்காய்த் தொங்கவிட்டிருக்கிறேன். மின்வசதி இல்லாது மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில்தான் எனது தம்பியும் நானும் படித்தோம். ''நமது தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது'' என்ற வசனத்தை நான் அடிக்கடி சொல்லி அவர் பாதம் பணிகின்றேன் (சங் 136:23).

ஆன்மீகப் பயிற்சிகள் எதைக் குறித்தும் நாம் பெருமிதம் கொள்ளக்கூடாது. ஒரு சிலவற்றை இங்கு பார்ப்போம் —

□ நமது ***ஜெப வாழ்வைக்*** குறித்துப் பெருமிதம் கொள்ளக்கூடாது. ஜெபம் குறையும்போது உணர்வடைந்து அதைக் கூட்டவேண்டும். ஜெபத்தை அதிகரித்துவிட்டால் அது நம்மை மனமேட்டிமைக்குள் நடத்திவிடக்கூடாது. ''இவ்வளவு ஜெபித்திருக்கிறேன்'' என்ற எண்ணம் நம்மை ஆட்கொள்ளக்கூடாது. ஏன் தெரியுமா? ''நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குச் செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார்'' (எபே 3:20). நாம் வேண்டுவதைத் தேவன் தருகிறார்; அதற்கு மிஞ்சியும் தருகிறார். நாம் நினைப்பதை நாம் ஜெபமாக்குகிறோம்; அதற்கும் மிக அதிகமாகத் தேவன் தருகிறார். இங்கு பெருமையடிக்க இடமெங்கே? ஒரே மூச்சாக ஒரு நீண்ட வாக்கியமாகப் பவுல் ஏறெடுக்கும் ஜெபத்தை 14ஆம் வசனம்

முதல் 19ஆம் வசனம் வரை எழுதிவிட்டு 20ஆம் வசனத்தின் இச்சத்தியத்தை அவர் குறிப்பிடுகிறார். மட்டுமல்ல, சில காரியங் களுக்காக ஓரளவுக்குத்தான் நம்மால் ஜெபிக்க முடியும். குழப்பமான சூழ்நிலைகளில் தேவ சித்தம் அறிய முடியாமல் ஏதோ நமக்குத் தெரிந்தவற்றைத் தேவனுக்குமுன் கொட்டுவோம். இந்தப் பலவீனம் நம்மெல்லாருக்கும் உண்டு. இங்குதான் பரிசுத்த ஆவியானவர் நமக்குத் துணைபுரிகிறார். அவருக்குத் தேவ சித்தம் நன்கு தெரியும். அவரே தேவன்தானே! அதற்கேற்றபடி ஜெபிக்க நமக்குதவுவார். மட்டுமல்ல, சொல்வடிவம் கொடுக்கமுடியாத நமது ஜெபங்களைப் பெருமூச்சுகளோடு அவர் பிதாவாகிய தேவனிடம் எடுத்துச் செல் கிறார். இரு காரியங்களை இங்கு கவனியுங்கள்: ஆவியானவர் ஜெபத் தில் நமக்கு உதவுகிறார்; அவரே நமக்காய் ஜெபிக்கவும் செய்கிறார். இப்படியிருக்க, நமது ஜெபங்களைக் குறித்து நாம் பெருமையடிக்க முடியுமா?

□ ***கொடுத்தல்*** என்பது அடுத்த காரியம். நாம் ஆண்டவருக்கு உற்சாகமாய்க் கொடுக்கவேண்டும், தாராளமாய்க் கொடுக்கவேண் டும், தியாகமாய்க் கொடுக்கவேண்டும். ஆனால் எவ்வளவுதான் கொடுத்துவிட்டாலும், அதை நினைத்துப் பெருமைப்பட நாம் நமது மனதிற்கு இடம்கொடுத்துவிடக்கூடாது. தேவனுடைய ஆலயத் தைக் கட்டுவதற்குத் தாவீதும் அவரது மக்களும் ''மனப்பூர்வமாய், உத்தம இருதயத்தோடு, உற்சாகமாய்க்'' கர்த்தருக்குக் கொடுத்தார் கள் (1 நாளா 29:9). ஆலயக் கட்டுமானத்திற்காய்ச் சேகரித்தவை தவிர்த்து, தாவீது தனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளி யையும் கர்த்தருக்கு வாஞ்சையுடன் கொடுத்தார் (வச 3). முடிவில் அவர் செய்த அறிக்கைதான் முக்கியம்: ''இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திறன் உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் மக்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்தில் வாங்கி உமக்குக் கொடுத்தோம் ... இந்தப் பொருட்கள் எல்லாம் உமது கரத் திலிருந்து வந்தன; எல்லாம் உம்முடையது'' (வச 14,16). தேவ னுக்குக் கொடுக்கும் காணிக்கைகளைக் குறித்த நமது மனப்பான்மை இப்படியிருக்கிறதா? இதைத்தான் அப்போஸ்தலன் பவுல் ஒரு சவா லாய் நமக்கு முன்வைக்கிறார்: ''தனக்குப் பதில் கிடைக்கும்படி முந்திக் கர்த்தருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்?'' (ரோ 11:35).



□ பகுதி நேரமாகவோ முழு நேரமாகவோ பல விதங்களில் நாம் ***இறைப்பணியில்*** ஈடுபடுகிறோம். சிலர் நமது வசதிக்கேற்பப் பணி யாற்றுகிறோம்; வேறு சிலர் நமது வசதிகளைத் துறந்து பணியாற்று கிறோம். சிலர் பெரும்பாலானோரைப்போல சராசரியாய் ஊழியம் செய்கிறோம்; வேறு சிலர் தீவிரமாய்ச் செயல்படுகிறோம். எப்படி யிருந்தாலும் பெருமையடிக்க நமக்கு நியாயமே இல்லை. இதற்கான காரணத்தைத் தனது சாட்சியுடன் இதோ அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார்: ''நான் இருக்கிறது தேவ கிருபையினால் இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை வீணாயிருக்கவில்லை; அப்போஸ் தலர்கள் எல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆனா லும் நான் அல்ல, என்னுடன் இருக்கும் தேவ கிருபையே அப்படிச் செய்தது'' (1 கொரி 15:10). கிருபை! கிருபை! கிருபை!

*கிருபையிதே, தேவ கிருபையிதே,*
*தாங்கி நடத்தியதே;*
*இயேசுவிலே, பொன் நேசரிலே,*
*அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்!*

*எத்தனையோ பரிசுத்தர்கள் மறைந்தே*
*மகிமை சேர்ந்தனரே — பூரணமாய்*
*காத்தனரே கர்த்தர் எமை*
*கருணையினால் தூய சேவை செய்ய!*

ஜெபித்தல், கொடுத்தல், பணியாற்றுதல் என மூன்று பயிற்சி களைச் சுட்டிக்காட்டி, இவ்விதமான எந்தச் செயல்பாட்டிலும் நாம் பெருமிதம் கொள்ளக்கூடாது என்று பார்த்தோம். இவ்வித மனப் பான்மை கிறிஸ்தவ வாழ்வின் நுழைவு வாயிலாகிய இரட்சிப்பின் அனுபவத்திலிருந்தே நம்மைப் பற்றிக்கொள்ளவேண்டும். நமது இரட்சிப்பு நம்மால் உண்டானதல்ல, தேவனால் உண்டானது. இது நமது முயற்சிகளுக்குக் கிடைத்த கூலியோ, பரிசோ அல்ல; இது தேவனுடைய ஈவு; இது தேவனது அன்பளிப்பு (எபே 2:8,9). இரட் சிக்கப்பட்டதற்கு ஒரே காரணம் தேவனது அன்பு, இரக்கம், கிருபை, கருணை!

நாம் தியானித்துக்கொண்டிருக்கும் திருச்சத்தியத்தை நடை முறையில் எடுத்துக்காட்டுகளோடு விளக்கும் மூன்று வசனங்கள் —

**சகரியா 4:6,** ''பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல; எனது ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல் லுகிறார்.'' கட்டிட வேலை, யுத்தக்களம், இன்னும் இதுபோன்றவற் றிற்குப் பொருத்தமான வசனமிது.

1 **கொரிந்தியர் 3:7,** ''நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச் சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலேயே எல்லாம் ஆகும்.'' இது விவசாயத்துறைக்குப் பொருத்தமானது.

**ரோமர் 9:16,** ''விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயே ஆகும்.'' இது விளையாட்டுப் போட்டியைச் சார்ந்தது.

நமது வாழ்க்கையையும் பணியையும் யுத்தக்களம், கட்டிட வேலை, விவசாயம் மற்றும் விளையாட்டுப் போட்டி போன்றவற் றிற்கு ஒப்பிடலாம். எல்லாம் தேவ கிருபையினாலேயே என்பதுதான் இங்கு முடிவு. ரோமர் 11ஆம் அத்தியாயம் 36ஆம் வசனம் இவ் வத்தியாயத்தை இரத்தினமாய்ச் சுருக்கும்: ''அனைத்தும் அவராலும், அவர் மூலமாகவும், அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என் றென்றும் மகிமை உண்டாவதாக. ஆமென்!'' ரோமர் நிருபத்தை முடிக்க இன்னும் ஐந்து அத்தியாயங்கள் இருக்கும்போதே அப் போஸ்தலன் பவுல் ''ஆமென்'' சொல்லிவிடுகிறார்! ஆம், இதற்கு மிஞ்சின இறையியல் எதுவும் கிடையாது. ''தேவனால், தேவன் மூலம், தேவனுக்காய்!'' இதில் நாம் எங்கே வருகிறோம்? இங்கே மனிதன் பெருமையடிக்க வழியே இல்லை! இன்றைய நவீன இறை யியல் தத்துவங்கள் இங்குதான் நம்மைத் திசை திருப்புகின்றன. மனிதனை மையப்படுத்தும் போதனை எதுவும் தேவனால் உண்டான தல்ல. மனிதன் தன்னைத்தானே உயர்த்திக்கொள்ள அவனுக்குத் துராலோசனை தருவது தேவனுக்கும் மனுக்குலத்துக்கும் எதிரியான பிசாசுதான் (ஆதி 3:5).



# கேள்வி 6

***''அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாய் இராவிடில், யார் உங்களை நம்பி உங்களிடம் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்?''***

**(லூக்கா 16:11)**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேரடியாய்த் தமது சீடர்களுக்குக் கொடுத்த செய்தி இது (லூக் 16:1). அவர் அவர்களோடு பொரு ளாசை குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். கடவுளுக்கும் காசுக்கும் ஒரே நேரத்தில் ஊழியம் செய்யமுடியாது என்று அடித்துச் சொன்னார். சீடருக்கு அவர் பேசிக்கொண்டிருந்த இவ்வார்த்தைகள் சுற்றி நின்ற பரிசேயரது காதுகளிலும் விழுந்தன. அவர்களை இந்த இடத்தில் ''பொருளாசைக்காரர்'' என்று லூக்கா அழைக்கிறார் (வச 14). இப்படி இயேசு சொன்னதற்காக அவர்கள் அவரைக் கேலி செய்தனர். ''இவ னுக்குக் கையில் காசு இல்லாததால் இப்படிப் பிதற்றுகிறான்'' என்பது அவர்களது கேலிக் கூற்றுகளில் ஒன்றாயிருந்திருக்கலாம். இதே அத்தியாயத்தின் இறுதிப் பகுதியில் ஆண்டவர் லாசருவையும் செல் வந்தனையும் குறித்த கதையைக் கூறுகிறார் (வச 19-31). ''பணப் பைத்தியம் பிடித்தவனுக்குப் பரலோகப் பொக்கிஷங்கள் கிடைக் காது; தேவன் அவனை நம்பமுடியாது'' என்பதே ஆண்டவரது வார்த்தைகளின் மையக் கருத்து.

இவ்வுலக வாழ்விற்குப் பணம் அத்தியாவசியம். நமது அன்றா டகத் தேவைகளுக்காய் ஜெபிக்கவேண்டுமென்று ஆண்டவர் போதித்துள்ளார். நமக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகிய யாவும் தேவையென்று நமது பரம பிதா நன்கு அறிந்திருக்கிறார். நாம் அனு பவிப்பதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுப்பது தேவனே (1 தீமோ 6:17ஆ). ஆனால் நமது நம்பிக்

கையை அவர் நமக்களித்துள்ள செல்வத்தின்மீது நாம் வைத்து விடக்கூடாது என்று நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். ஆசீர்வாதங்கள் மீதல்ல, ஆசீர்வதிக்கிறவர்மீதே நமது கவனமும் நம்பிக்கையும் பதிக் கப்படவேண்டும். ஏனெனில், செல்வமானது ''நிலையற்றது,'' அத னைக் கொடுக்கும் தேவனோ ''நித்தியமானவர்'' (வச 17அ). இவ் வுலகத் தேவைகளுக்காய்த் தேவன் தந்துள்ள நன்மைகளே நமக்கு விக்கிரகங்கள் ஆகிவிடுமானால், நம்மை நம்பித் தேவன் விண்ணுலக ஆசிகளை வழங்கமாட்டார்.

சங்கீதக்காரனைப்போல் நாம் சாட்சி பகரமுடியுமா? ''அநேகமா யிரம் பொன் வெள்ளியைவிட நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்'' (சங் 119:72). ''மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிற வன் மகிழுகிறதுபோல நான் உமது வார்த்தையின்மீது மகிழுகிறேன்'' (வச 162). இதனை மிகைப்படுத்திய சாட்சி என்று நான் கூற மாட்டேன். இது சங்கீதக்காரனின் நிசமான அனுபவமாயிருந்தது. ஆயிரக்கணக்கில் தங்கக்கட்டிகளையும் வெள்ளிக்கட்டிகளையும் நாம் பார்த்திருக்கவே மாட்டோம். அந்த அளவிற்குச் செல்வம் கொழித் திருந்தாலும் சங்கீதக்காரன் அதில் மயங்கிவிடாமல் ஆண்டவரது வசனத்திலேயே மகிழ்ச்சி காண்கிறார். பணப் பைத்தியம் அல்ல, பைபிள் பைத்தியம்! எவ்வளவு முடியுமோ அவ்வளவு பணத்தைச் சம்பாதிக்க முயலுகிறோம்; திருமறையை வாசிக்கவும் தியானிக்கவும் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறோம்? முடிந்த வகையிலெல்லாம் பணத்தைச் சேமிக்கிறோம்; திருவசனத்தை இருதயத்தில் சேமித்து வைக்க, அதாவது மனனம் செய்ய, எவ்வளவு முயற்சி எடுக்கிறோம்? பன்றியைப்போல் கீழிருப்பவைகளையே பார்த்துக்கொண்டிருந்தால் மேலானவைகளின் ஆசீர்வாதத்தை எப்படி அனுபவிக்க முடியும்? (கொலோ 3:1-3).

''ஆவிக்குரிய'' சகல ஆசீர்வாதங்களினாலும் தேவன் நம்மை ஆசீர் வதித்திருக்கிறார் (எபே 1:3). நாமோ ''பொருளாதார'' ஆசிகளிலேயே ஆர்வம் காட்டுவதால் ஆன்மீகப் பார்வை இழக்கிறோம். பிரகாசமுள்ள மனக்கண்களை தேவன் நமக்குத் தரும்படி, எபேசுவிலுள்ள விசுவாசி களுக்காய்ப் பவுலடியார் ஜெபித்ததுபோல், நாமும் நமக்காய் ஜெபிக் கவேண்டும் (வச 17-19). அப்பொழுதுதான் தேவனது மகத் துவங்களை அறிந்துகொள்ள ''ஞானமும் தெளிவும்'' அளிக்கும் ஆவி நமக்குத் தந்தருளப்படும்; அப்பொழுதுதான் தேவன் நம்மை அழைத் துள்ளதால் நமக்கு உண்டாகும் ''நம்பிக்கை'' நமக்குப் புரியும்; அப்பொழுதுதான் பரிசுத்தவான்களிடம் தேவன் வைத்துள்ள ''செல் வம்'' இன்னதென்று நமக்குத் தெளிவு கிடைக்கும்; நம்மிடம் தேவன் எவ்வளவு மேன்மையான மகத்துவத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்த விரும்புகிறாரென்று அப்பொழுதுதான் நம்மால் அறிந்துகொள்ளமுடியும். எபேசியர் 1:17-19இலுள்ள ஜெபத்தை மனனம் செய்யுங்கள். இந்த ஜெபத்தை அடிக்கடி உங்களுக்காகவும் உடன் விசுவாசிகளுக்காகவும் ஏறெடுங்கள். ஒவ்வொரு முறை இந்த ஜெபத்தை நீங்கள் ஏறெடுக்கும்போதும் உன்னதங்களின் ஆசீர் வாதங்கள் புதிய புதிய கோணத்திலும் பரிமாணத்திலும் உங்களுக்கு விளங்கும்.

மார்த்தாளிடம் இயேசு சொல்லிய வார்த்தைகள் நமக்கு நன்றாகவே தெரியும். அதனை இங்கு நாம் நினைவுபடுத்துவது பொருத்தமா யிருக்கும். ''மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே. மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண் டாள்'' (லூக் 10:41,42). இயேசுவுக்கும் அவரோடு வந்திருந்தவர் களுக்கும் உணவு தயாரிப்பதில்தான் மார்த்தாள் ஈடுபட்டிருந் திருப்பாள். அவளும் இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து உபதேசம் கேட்கத் துவங்கியிருப்பாளென்றால் அன்று அத்தனைபேரும் உபவாசம்தான் இருக்கவேண்டும்! நமது அன்றாடகக் கடமைகளில் கிரமமாய் ஈடுபாடு கொள்வதை இயேசு இங்கு கடிந்துகொள்ள வில்லை. சமையலைத் துரிதமாக முடித்துவிட்டு, மிகவும் முக்கிய விருந்தாளியாகிய போதகரிடம் உரையாட மார்த்தாள் வந்திருக்கலாம்; அவளோ ''அநேகக் காரியங்களை'' இழுத்துப்போட்டுக்கொண்டாள். மூத்தவள்(?) என்ற நிலையில் மார்த்தாள் வீட்டுக்காரியங்களில் கரிசனை கொண்டதில் தவறில்லை. ஆனால் அவள் அநேகக் காரி யங்களைக் குறித்துக் ''கவலைப்பட்டுக் கலங்கினாள்'' என்கிறார் இயேசு. இங்கு ஆண்டவர் போதிக்க விரும்பியது என்னவென்றால்,

‘‘முக்கியம்’’ (important) என்ற காரியங்களைவிட ‘‘அவசியம்’’ (necessary) என்பதற்கு நாம் முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பதே. மற்றப்படி மார்த்தாளைக் குறைகூறுவது நியாயமல்ல. இயேசுவை வீட்டில் வரவேற்று ஏற்றுக்கொண்டது மார்த்தாள்தான் என்று வாசிக்கிறோம் (வச 38). பிரிய சகோதரிகளே, வீட்டலுவல் களுக்காய் நீங்கள் செலவழிக்கும் நேரம் எவ்வளவு? தேவ சமூகத்தில் அமர்ந்திருந்து திருவசனம் தியானிக்கும் நேரம் எவ்வளவு?

‘‘நான் தினமும் தவறாது பைபிளை வாசிக்கத்தான் செய்கிறேன். ஓரளவு நேரமெடுத்துத் தியானிக்கிறேன். ஆனால் எனக்குப் புதிய வெளிச்சமோ, மனதில் புதிய தெளிவோ, இதயத்தில் புத்துணர்வோ, ஆவியில் களிகூருதலோ, இப்படி ஒன்றுமே கிடைப்பதில்லை. எழுத் துக்களைத்தான் வாசிக்கிறேனே தவிர, ஆண்டவரது சத்தம் எனக் குள் ஒலிப்பதில்லை. கடமைக்காகத்தான் வேதத்தோடு நேரம் செல வழிக்கிறேன்.’’ விசுவாசிகள் பலரது கதை இதுதான். இவ்வித நிலைக் கான காரணம் நபருக்கு நபர் மாறும் என்றாலும், பெரும்பாலானோ ரைப் பொருத்தவரை இதற்கான பொதுவான காரணம் அவர்களது பொருளாதாரச் சிந்தைதான். இக்கருத்தை நமதாண்டவர் கூறிய விதைக்கிறவனின் உவமையிலிருந்து நான் பெறுகிறேன். ‘‘உலகக் கவலையும் செல்வத்தின் மயக்கமும்’’ திருவசனத்திற்குப் போட்டி யாய் வருகின்றன (மத் 13:22). உடலுக்கடுத்த ஆசீர்வாதங்களைத் தருபவர் தேவனே என்று முன்னரே குறிப்பிட்டோம். ஆனால், ‘‘காசே கடவுள், வயிறே தெய்வம்’’ என்ற நிலைக்கு வந்துவிட்டால் பைபிள் நமக்கு வெறும் புத்தகமாகத்தான் இருக்கும்; அது தேவனது வார்த்தை என்று நமக்குள் வேரூன்ற முடியாது.

சாதாரண விசுவாசிகளுக்கு மட்டுமல்ல, பிரசங்கிமாருக்கும் ஊழி யருக்கும் இதுதான் பெரிய பிரச்னை. ஊழியத்தின் துவக்க நாட்களில் அவர்களிடமிருந்து தேவனது செய்தி சூடாகக் கிடைக்கும். பண வசதி பெருகப் பெருகப் பிரசங்கம் இருக்கும், செய்தியோ இருக்காது. ‘‘பைபிளும் கையும்’’ என்பது போய் ‘‘பணமும் பையும்’’ என்றாகி விட்டால் நிலைமை இதுதான். அடுத்த துபாய் பயணம், அமெரிக்க விஜயம் என்றே உங்கள் மனதில் ஓடிக்கொண்டிருக்குமானால் பர லோகம் உங்களுக்காய் எப்படித் திறக்கும்? பண ஆசையினால் பிர



சங்கம் கலப்படமாய் மாறுவதை நாம் இந்நாட்களில் எங்கும் காண கிறோம். இச்சோதனைக்கு அன்றைய அப்போஸ்தலர் தங்களை விலக்கிக் காத்துக்கொண்டனர். இதோ பவுலடியாரின் சாட்சி: ‘‘அநே கரைப்போல நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப் புரவாகவும், தேவனால் அருளப்பட்ட விதமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்’’ (2 கொரி 2:17). மூலமொழியில் ‘‘கலப்படம்’’ என்பது ‘‘லாபத்திற்காகக் கலப்படம்’’ என்றிருக்கிறது. இதைக் குறித்து அப்போஸ்தலன் பேதுருவும் எச்சரித்திருக்கிறார்: ‘‘கள்ளப் போதகர்கள் பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்வார்கள்’’ (2 பேது 2:1-3). செல்வந்தருக்குக் கண்டிப்பான போதனைகள் கொடுக்காமல், அவர்களது பணத்தின்மீது மட்டுமே கவனம் கொண்டு, அவர்களைத் தங்களோடு ஒட்டி வைத்துக்கொள் ளும் பிரபல ஊழியர் பலர் இன்று இருக்கத்தானே செய்கிறார்கள்? உலகப் பொருளுக்கும் மெய்ப்பொருளுக்கும் இடையிலான போட்டி யில் வெற்றிபெறுவது எதுவோ? பெரும்பாலான பிரசங்கங்கள் வாய் நிறைய மணல் போலிருப்பதில் ஆச்சரியமில்லையே!

இப்படியெல்லாம் சொல்வதால், பிரசங்கிமாரிடம் பணம் நிறைய இருக்கக்கூடாதென்று நாம் சொல்லவில்லை. பணம் முக்கியம். எதற் கும் பணம் தேவை. ஆனால் பணத்தின்மீது பிரசங்கியாரின் மனம் வந்துவிட்டால், பரலோக வெளிப்பாடுகள் வருவது அவருக்குத் தடைபடும். பொதுவாக நாம் கவனிப்பது என்னவென்றால், பணக்கார ஊழியரைவிட ஏழை ஊழியரிடமே தேவனது நேரடிச் செய்திகள் காணப்படுகின்றன. பிரசங்கங்களின் ஒளிபரப்புத் திரையில் வசனக் குறிப்பு வருகிறதோ இல்லையோ, வங்கி விபரம் வந்துவிடுகிறது. செல்வந்தர்மீது இயேசு வெகுவாய்ச் சாடியதற்குக் காரணமுண்டு. பண ஆசைக்கு ஓர் ஊழியன் பலியானால், அதற்குப் பின்னர் அவன் சொல்வளம், ஞாபக சக்தி, நாடகப்பாணி போன்ற வற்றைக் கொண்டு மக்களைக் கவரும் வகையில் பிரசங்கிக்கலாம்; ஆனால் அவனைக் கேட்போரின் ஆன்மீகப்பசி தீராது.

உண்மையான தீர்க்கதரிசிகள் இன்று அபூர்வம். ஏன் தெரியுமா? திருமறையில் நாம் சந்திக்கும் உண்மையான தீர்க்கதரிசி யாரும்

செல்வந்தனாயிருந்ததாகத் தெரியவில்லை. பஞ்ச காலத்தில் தேவன் எலியாவை ஓர் ஊற்றண்டை அனுப்பிவைத்தார். கறித்துண்டைப் புறா கொண்டுவந்தால் ஆச்சரியமில்லை; மாம்சப்பட்சிணியாகிய காகம், அதுவும் உணவுப் பற்றாக்குறை தாண்டவமாடின காலத்தில், எப்படித்தான் அதைக் கொண்டுவந்து கொடுத்ததோ? ஏற்கனவே வறுமையில் வாடிக்கொண்டிருந்த ஒரு விதவையிடமே எலிசா அனுப் பப்பட்டார். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்கள் தங்களது பொருளாதாரத் தேவைகளுக்காய்ப் பெரும்பாலும் பிறரையே சார்ந்திருக்கவேண்டிய திருந்தது. திருமுழுக்கினன் யோவானது உடையும் எளிமை, உணவும் எளிமை. இயேசுவானவரது பொருளாதாரத் தேவைகள் அவ்வப் போது பிறராலேயே சந்திக்கப்பட்டன. அப்போஸ்தலரது வாழ்க்கை முறை நமக்குத் தெரிந்ததே. ஆனால் இவர்களெல்லாரிடமும் ''கர்த்த ருடைய வார்த்தை'' இருந்தது. அப்போஸ்தலரின் சாட்சி: ''நாங்கள் தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரைச் செல்வந்தர்களாக்கு கிறோம்'' (2 கொரி 6:10).

யோவான் கொடுத்துக்கொண்டிருந்த தண்ணீர் ஞானஸ்நானத் திற்குத் தப்பிய சகேயு தணல் ஞானஸ்நானம் கொடுப்பவரிடம் மாட்டிக்கொண்டான். ''இருப்பதில் பாதியை இல்லாதவருடன் பகிர்ந்துகொள்ளுங்கள்'' என்ற யோவானின் முழக்கம் சகேயுவின் நினைவுக்கு வந்துவிட்டது. யாரும் அவனிடம் ஒன்றும் சொல்லா மலேயே, ''ஆண்டவரே, நான் என் ஆஸ்தியில் பாதியை ஏழை களுக்குக் கொடுத்துவிடுகிறேன்'' என்று சரணடைந்தான். ''இன்று இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்துவிட்டது''என்றார் இயேசு. விசுவாசி களே, நமக்கும் இந்த இரட்சிப்பு வேண்டும். இதனை ''இரண்டாம் இரட்சிப்பு''என்பேன். தண்ணீர் ஞானஸ்நானத்தில் பாவத்திற்கு மரித்து அடக்கம்பண்ணப்படுகிறோம்; பரிசுத்த அக்கினி ஞானஸ் நானத்தில் பண ஆசையிலிருந்து விடுபடுகிறோம். எனவேதான் பெந்தெகொஸ்தேயன்று அபிஷேகம் பெற்ற விசுவாசிகள், யாரும் சொல்லாமல், தங்களது ''நிலபுலன்களையும் பிற உடைமைகளையும் விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்பப் பகிர்ந்தளித் தனர்'' (அப் 2:45). யார் உண்மையான பெந்தெகொஸ்தேகாரர் என்று இதில்தான் தெரியும்! கசக்கிறதா? பரவாயில்லை, விழுங்கிவிடுங் கள், சுகம் உண்டாகும்!



# கேள்வி 7

***''நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? நியாயத்தீர்ப்பு முதலாவது நம்மிடம் துவங்கினால் தேவனது சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு எப்படியிருக்கும்?''***

**(1 பேதுரு 4:18,17)**

அச்சுறுத்தலான இக்கேள்விகளை அப்போஸ்தலன் பேதுரு பாடுகளைக் குறித்துப் பேசும்போது கேட்கிறார். 12ஆம் வசனத்தில் ''உங்கள் நடுவில் பற்றி எரியும் அக்கினி'' என்கிறார். 13ஆம் வசனத் தில் ''கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகளாகிய நீங்கள்'' என்று குறிப்பிடுகிறார். 14ஆம் வசனத்தில் நிந்திக்கப்படுதலைப்பற்றிப் பேசுகிறார். 16ஆம் வசனத்தில் ''கிறிஸ்தவனாயிருப்பதால் பாடு படுதல்'' என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இவைகளையெல்லாம் சொல்லிவிட்டு மேற்கண்ட கேள்விகளைச் சவாலாய்க் கேட்கிறார். இந்தக் கேள்விகளைத் தியானிக்கும்போது தேவனுடைய பிள்ளை களாகிய நமக்கும் ஓர் எச்சரிப்பின் சத்தம் தொனிக்கிறது.

பிதாவாகிய தேவன் தமது செல்லக் குமாரனைப் பாவிகளின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். தங்களுக்கு விருப்பமானதையெல் லாம் அவருக்கு எதிராகச் செய்து அவரைத் துன்புறுத்தி வதைத்தனர். பாவிகளால் அவருக்கு ஏற்பட்ட ''விபரீதங்கள்'' என்று எபிரெயர் நிருப ஆக்கியோன் இதனைக் குறிப்பிடுகிறார் (எபி 12:3). நாமும் இவ்விதம் பாடுபடவேண்டியது வரும். அப்பொழுது நாம் இளைப் படைந்துவிடக்கூடாது; சோர்ந்துபோகக்கூடாது (வச 3). அவிசு வாசம், அவபக்தி எனும் பிரதான பாவத்திற்கு எதிரான போராட் டத்தில் இரத்தம் சிந்தவேண்டிய நிலையும் வரலாம் (வச 4). உன்னதங்களில் கிறிஸ்துவோடு அவரது பாக்கியங்களில் பங்கு பெறும் நாம் அவரது பாடுகளுக்கும் பங்காளிகளாகவேண்டும் (1 பேது 4:13,14).

இன்றையப் பாடுகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் அப்போஸ்தலன் பேதுரு உடனே நாளைய நியாயத்தீர்ப்பைக் குறிப்பிடுவதேன்? இதற்குப் பல விளக்கங்கள் கொடுக்கலாம். அவற்றில் ஒன்று: இன்று நமக்கு வரும் பாடுகள், வேதனைகள், உபத்திரவங்கள், நிந்தனைகள் போன்றவற்றை நாம் எப்படிக் கையாளுகிறோம், எப்படிச் சமாளிக்கிறோம் என்பதற்கு நாளைய நியாயத்தீர்ப்பின்போது நமக்குப் பலாபலன் கிடைக்கும். ''நியாயத்தீர்ப்பு தேவனது வீட்டில்தான் முதலாவது துவங்கும்'' என்கிறார் பேதுரு (1 பேது 4:17). இதுதான் நம்மை அழிப்பதற்காக அல்ல, பரிசோதித்துச் சுத்திகரிப்பதற்காகத் தேவனுடைய வீட்டார் நடுவில் பற்றியெரியும் அக்கினியாகும் (வச 12). பரிசோதனை நம்மைப் பரிசுத்தப்படுத்தும். எனவேதான் பக்தர்கள் இப்படிப் பாடினார்கள் —

*பரிசுத்த அக்கினி அனுப்பும் தேவா,*
*பரந்து ஜுவாலிக்கக் கொளுத்தும் தேவா!*
*இரக்கமாய் அக்கினித் தழலைக் கொண்டு*
*உருக்கமாய் உள்ளத்தைத் தொட்டருளும்!*

இதனைத் தீர்க்கன் மல்கியா எவ்விதம் முன்னுரைத்தார் பாருங்கள்: மல் 3:2,3, ''ஆண்டவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கை செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்.'' நமது ஆண்டவரது பாடுகள் அவருக்கு அக்கினி அனுபவம்தானே? இதைப்பற்றிய அவரது வார்த்தைகள்: ''பூவுலகின்மீது அக்கினியைப் போட வந்தேன்; அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன். ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு; அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்'' (லூக் 12:49,50).



''நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குகிறது'' என்பது இன்னொரு செய்தியையும் நமக்குத் தருகிறது. இறைமக்களாகிய நாம் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம் அடைய அழைக்கப்பட்டிருக்கிறோம். பரிசுத்தம் என்பதற்கு இருபக்கங்கள் உண்டு. ஒன்று, தேவன் நம்மைப் பரிசுத்தமாக்குகிறார். அடுத்தது, நாமும் நம்மை நாமே பரிசுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். சிலாக்கியங்களில் களிகூர்ந்து பொறுப்புகளில் கவலையீனமாயிருப்பது ஆன்மீக முதிர்ச்சி அல்ல. தேவன் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்; அவரே நம்மைப் பூரணப்படுத்தி மகிமைப்படுத்துவார் என்பவையெல்லாம் மாறாத இறைவாக்குகள். ''இப்படிப்பட்ட வாக்குகள் நமக்கு உண்டாயிருக்கிறபடியால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தெய்வ பயத்தோடு பூரணப்படுத்தக்கடவோம்'' (2 கொரி 7:1). அதாவது, அடிக்கடி நாம் நம்மைத் தேவனது பிரசன்னத்தில் தற்பரிசோதனை செய்துகொள்ளவேண்டும். ''கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்'' என்று அறிக்கையிட்ட பின்னர் தாவீது, ''தேவனே என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்'' என்று விண்ணப்பிக்கிறார் (சங் 139:1,23). நமது பாவங்கள் தேவனுக்குத் தெரியும்; ஆனால் அவைகள் நமக்குத் தெரியவேண்டுமே! அதற்காகத்தான் தற்பரிசோதனை.

எல்லா விதமான ஆன்மீகப் பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகளிலும் நம்மை நாமே சோதித்து அறியலாம். ஜெபிக்கும்போது தற்பரிசோதனை செய்யலாம்; திருவசனத் தியானத்தின்போது தற்பரிசோதனை செய்யலாம்; தேவனது பரிசுத்தத்தை நினைவுகூர்ந்து அவரை ஆராதிக்கும்போது தற்பரிசோதனை செய்யலாம். இன்னொரு முக்கியமான செயல்பாடாகிய அப்பம் பிட்குதலின்போது தற்பரிசோதனை செய்யலாம். இதைக் குறித்த பவுலின் வார்த்தைகள்: ''நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படமாட்டோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடி கர்த்தராலே கண்டிக்கப்பட்டுத் திருத்தப்படுகிறோம்'' (1 கொரி 11:31,32). ஆண்டவரிடம் நெருங்க நெருங்க நமது பாவங்கள் நமக்கு நன்கு தெரியும். இதுதானே பக்தன்

யோபுவின் அனுபவம்? ''என் காதினால் உம்மை குறித்துக் கேள்விப் பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்துத் தூளிலும் சாம்பலிலும் இருந்து மனம் வருந்துகிறேன்'' (யோபு 42:5,6). பாவங்களை அவ்வப்போது அறிக்கையிட்டு விட்டுவிடவேண்டும்; குப்பைக்கூளம்போல் அவை சேர்ந்து விடக்கூடாது. தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதிய வார்த்தைகள் மிகவும் கவனத்துக்குரியவை: ''சிலரது பாவங்கள் வெளிப்படையாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்; சிலரது பாவங்களோ அவர்களைப் பின்தொடரும்'' (1 தீமோ 5:24).

நாம் தியானித்துக்கொண்டிருக்கும் அப்போஸ்தலன் பேதுருவின் கேள்விகளிலிருந்து நாம் கண்டுகொள்ளும் இன்னொரு சத்தியம் என்னவென்றால், தேவனால் இருதிறத்தார் நியாயந்தீர்க்கப்படுவர் (1 பேது 4:17,18). ஒருவர் ''தேவனுடைய வீட்டார்,'' அடுத்தவர், ''தேவனது சுவிஷேத்திற்குக் கீழ்ப்படியாதவர்.'' அதாவது, ஒருவர் ''நீதிமான்கள்,'' அடுத்தவர், ''பக்தியில்லாதவர்களும் பாவிகளும்.'' இவ்விதம் இரு நியாயத்தீர்ப்புகள் குறித்துத் திருமறை பேசுகிறது. ஒன்று, ''கிறிஸ்துவின் நியாயாசனம்'' (Judgment Seat of Christ); அடுத்தது, ''பெரிய வெள்ளைச் சிங்காசனம்'' (Great White Throne Judgment). ''கிறிஸ்துவின் நியாயாசனம்'' என்பதைக் குறித்து 2 கொரிந்தியர் 5:10இலும், ''பெரிய வெள்ளைச் சிங்காசனம்'' குறித்து வெளிப்படுத்துதல் 20:11-15இலும் வாசிக்கிறோம். முதலாமது கிறிஸ்துவின் இரகசிய வருகைக்கும் அவரது வெளிப்படையான வருகைக்கும் இடையில் நடக்கும். அடுத்தது கிறிஸ்துவின் ஆயிரமாண்டு அரசாட்சியின் முடிவில் நடக்கும்.

கிறிஸ்துவின் நியாயாசனத் தீர்ப்பு என்பது தேவனது வீட்டாராகிய விசுவாசிகளுக்கு உரியது. இது பாவங்களுக்கான ஆக்கினைத்தீர்ப்பு அல்ல. ஏனெனில், நமக்குச் சமாதானம் உண்டுபண்ணும் ஆக்கினையை இயேசு சுமந்துவிட்டார்; நமது அக்கிரமங்களைத் தேவன் அவர்மீது சுமத்திவிட்டார் (ஏசா 53:5,6). கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர்களாய், ஆவியானவரால் ஊனியல்பின் செயல்பாடுகளை எதிர்த்து, வாழ்பவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு கிடையாது (ரோ 8:1).



எனவே கிறிஸ்துவின் நியாயாசனத் தீர்ப்பு என்பது இறைமக்களின் பாவங்களுக்கானது அல்ல, அவர்களது செயல்கள் மற்றும் பணிகளுக்கானது. இத்தீர்ப்பு வழங்குவது ''தண்டனை'' அல்ல, ''பலன்'' (2 கொரி 5:10). இங்குதான் ஆண்டவரிடமிருந்து கிரீடங்கள் பெறுவோம். கட்டுப்பாட்டுடன் கிறிஸ்தவ ஓட்டத்தை வெற்றிகரமாய் ஓடிமுடிப்போருக்கு ''அழிவில்லாத கிரீடம்'' கிடைக்கும் (1 கொரி 9: 24-27). தீவிர ஆத்துமாதாயகராய்த் திகழ்வோருக்கு ''மகிழ்ச்சியின் கிரீடம்'' கிடைக்கும் (1 தெச 2:19). திருச்சபையினரை நல்ல முன்மாதிரியுடன் கண்காணித்து மேய்ப்போருக்கு ''மகிமையின் வாடாத கிரீடம்'' கிடைக்கும் (1 பேது 5:3,4). இரத்தசாட்சிகளாய் இறப்போருக்கு ''ஜீவ கிரீடம்'' கிடைக்கும் (வெளி 2:10). கிறிஸ்துவின் மறுவருகையை ஆவலாய் எதிர்நோக்கி விழித்திருப்போருக்கு ''நீதியின் கிரீடம்'' கிடைக்கும் (2 தீமோ 4:8). இரட்சிப்பு என்பது செயல்களில்லாமல் கிருபையினால் பெறும் ''ஈவு'' (எபே 2:8,9). நாம் செய்யும் நற்செயல்களினால் கிடைப்பது ''பரிசு'' அல்லது ''பலன்'' (reward) (வச 10). என்னே சிலாக்கியம்! என்னே பொறுப்பு!

பெரிய வெள்ளைச் சிங்காசனத் தீர்ப்பு என்பது அவிசுவாசிகளுக்குரியது. அவர்கள் இயேசுவைத் தங்கள் பாவப் பரிகாரியாய் ஏற்றுக்கொள்ளாததால், ''சுவிசேஷத்திற்குக் கீழ்படியாததால்,'' அவர்களது ''முடிவு'' பயங்கரமாயிருக்கும் (1 பேது 4:17ஆ). அவர்களது பாவங்களுக்காய் அவர்கள் தண்டிக்கப்படுவர். ஜீவப் புத்தகத்தில் பெயர் எழுதப்படாத யாவரும் அக்கினிக் கடலில் தள்ளப்படுவர் (வெளி 20:11-15). என்னே பயங்கரம்!

கிறிஸ்து இயேசுவுக்குள் புதுப்படைப்புகளான நாம் எப்படி வாழுகிறோம், எப்படிச் செயலாற்றுகிறோம், எப்படிப் பணிபுரிகிறோம் என்றெல்லாம் மிகுந்த கவனமாயிருக்கவேண்டும். கிருபை, கிருபை என்று ஏனோதானோ என்று வாழ்ந்துவிடக்கூடாது. தேவனது கிருபையை வீணடித்துவிடக்கூடாது (2 கொரி 6:1). கிருபை, கிருபை என்று பாவத்தில் நீடிக்கக்கூடாது (ரோ 6:1). எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பதல்ல, எப்படி வாழ்கிறோம் என்பதே காரியம். எவ்வளவு ஊழியம் செய்கிறோம் என்பதல்ல, எப்படி ஊழியம் செய்கிறோம் என்பதே முக்கியம். அளவு அல்ல, தரமும் தன்மையுமே இறுதி

நாளில் பாராட்டு பெறும். இதைக் குறித்த அப்போஸ்தலன் பவுலின் வார்த்தைகளுக்கு விளக்கம் தேவையில்லை: ''ஒருவன் இயேசு கிறிஸ்துவாகிய அடித்தளத்தின்மீது தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளினால் கட்டினால், அவ னவனது வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதைத் தெரியப் பண்ணும்: ஏனெனில் அது அக்கினியினால் வெளிப்படுத்தப்படும். அவனவனது வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினி யானது பரிசோதிக்கும். அதின்மீது ஒருவன் கட்டியது உறுதியாய் நின்றால், அவன் கூலி பெறுவான். அவன் கட்டியது வெந்துபோ னால் அவனுக்கு இழப்புதான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியில் அகப்பட்டுத் தப்பியதுபோல் இருக்கும்'' (1 கொரி 3:11-15).

''மிகைப்படுத்தப்பட்ட கிருபை'' (hyper-grace) என்றொரு உப தேசம் இன்று கிறிஸ்தவத்தில் பிரபலமடைந்து வருகிறது. மனம் போல், கட்டுப்பாடின்றி வாழ விரும்பும் வாலிபர் நங்கையரை இவ் வுபதேசம் வெகுவாய்க் கவர்ந்து வருகிறது. இவ்வுபதேசத்தைப் பறைசாற்றும் பெருநகர்ச் சபைகளில் கூட்டம் பெருகிவருகிறது. நாம் ''கிரியைகளினால்'' அல்ல, ஆனால் ''கிரியைகளுக்காக'' இரட்சிக்கப் பட்டிருக்கிறோம் (எபே 2:9,10). இதுதான் விவிலியத்தின் சமநிலைப் போதனை. கிரியைகளை வலியுறுத்தாது கிருபையை மேம்படுத்து வதும், கிருபையைப் போற்றாது கிரியைகளை முக்கியத்துவப்படுத்து வதும் ஓரக்கொள்கைகள்தான். நாம் தேவனுடைய பிள்ளைகளாக் கப்பட்டிருக்கிறோம்; நமது அப்பாவின் பெயருக்கு இழுக்கு வராது நடந்துகொள்ளவேண்டும். நாம் கிறிஸ்துவின் ஊழியராக்கப்பட்டிருக் கிறோம்; கிறிஸ்துவுக்கு மகிமை சேர்க்கும் வகையில் பணியாற்ற வேண்டும். பொறுப்பை எண்ணாது சிலாக்கியத்திலேயே மகிழ்வது கிறிஸ்தவ வாழ்வைக் கனியற்றதாக்கும். சிலாக்கியத்தில் மகிழாது பொறுப்பையே எண்ணிக்கொண்டிருப்பது கிறிஸ்தவ வாழ்க்கை யைக் களிப்பற்றதாக்கும். இவையிரண்டும் நாணயத்தின் இரு பக்கங்கள்; பறவையின் இரு இறக்கைகள்.

1 பேதுரு 4:17,18இல் அப்போஸ்தலன் பேதுரு எழுப்பியுள்ள கேள்விகள் ஆண்டவரது கண்டிப்பைச் சுட்டிக்காட்டுவதற்காகவே.



தேவன் பாவிகளிடமும் கண்டிப்பாயிருக்கிறார்; பரிசுத்தவான்களிட மும் கண்டிப்பாயிருக்கிறார். இதனை நிரூபிக்கும் இரு திருவசனங்கள் இதோ: (1) பாவிகளைப்பற்றியது: ''தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் கோபம்கொள்ளுகிற தேவன். அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தமது வாளைக் கூர்மையாக்கு வார்'' (சங் 7:11,12). (2) பரிசுத்தவான்களைப்பற்றியது: ''விசுவாசத் தினால் நீதிமான் பிழைப்பான்; பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார் தேவன்'' (எபி 10:38). இருதிறத்தாரிடமும் தேவன் காட்டும் கண்டிப்பைக் குறிப்பிடும் ஒரு பழைய ஏற்பாட்டு வசனம்: நீதி 11:31, ''இதோ, நீதிமானுக்குப் பூமி யில் சரிக்கட்டப்படுமே; துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம்!''

தேவனது நியாயத்தீர்ப்பின் கடுமையைப் புரிந்துகொள்ளுதல் நமது மிஷனரிப்பணியின் தாகத்தை இன்னும் அதிகரிக்கும். இதுவே பவுலின் சாட்சி: ''நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நிற்கவேண்டும். ஆகையால் கர்த்தருக்குப் பயப்படுதல் இன்ன தென்று அறிந்து, மனிதருக்குப் புத்திசொல்லுகிறோம்: தேவனோடு ஒப்புரவாகுங்கள்'' (2 கொரி 5:10,11,20). இதனால்தான் இரட்சண்ய சேனையின் நிறுவனர் வில்லியம் பூத் (1829-1912) அவர்கள் அடிக்கடி சொன்னது: ''ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நரகத்தைக் குறித்த தரிசனம் இருக்கவேண்டும்!'' ''சுவிசேஷத்தைப் பிரசங்கிப் பதற்கான எனது கடமையில் நான் தவறுவதால் எவராவது மீள முடியாத அந்த எரிநரகத்திற்கு செல்லலாமா?'' என்ற கேள்வி ஒவ் வொரு கிறிஸ்தவனையும் தீவிர ஆத்துமாதாயகனாய் மாற்றும்!

*கரை ஏறி உமதண்டை நிற்கும்போது இரட்சகா,*
*உதவாமல் பலனற்று வெட்கப்பட்டுப் போவேனோ?*

*ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல் வெட்கத்தோடே ஆண்டவா,*
*வெறுங்கையனாக உம்மைக் கண்டுகொள்ளல் ஆகுமோ?*

*ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை வைத்திராமல் சோம்பலாய்க்*
*காலம் கழித்தோர் அந்நாளில் துக்கிப்பார் நிர்ப்பந்தராய்.*

# கேள்வி 8

***"ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடு இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?"***

**(நியாயாதிபதிகள் 6:13)**

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்துவந்ததால், கர்த்தர் அவர்களை ஏழு ஆண்டுகள் மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார் (நியா 6:1). இஸ்ரவேலரின் வயல் நிலங்களையும் கால்நடைகளையும் மீதியானியர் நாசமாக்கினர். மீதியானியரால் இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டனர். அவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிட்டபோது, ஒரு தீர்க்கதரிசியை அவர் அவர்களிடம் அனுப்பினார். இஸ்ரவேலரின் கீழ்ப்படியாமையினாலேயே இந்த நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டது என்று அந்தத் தீர்க்கதரிசி அவர்களுக்கு இடித்துரைத்தார். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு வயல்வெளியில் தரிசனமானார். அவர் கிதியோனைப் பார்த்து, ''பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடு இருக்கிறார்'' என்றார் (வச 12). உடனே தூதனானவரை நோக்கிக் கிதியோன் கேட்ட கேள்விதான் நாம் மேலே குறிப்பிட்டது (வச 13).

தூதனானவர் உடனே கிதியோனுக்குக் கூடுதல் பலம் அளிக்கவில்லை. அவர் தேவனது பிரசன்னத்தையே கிதியோனுக்கு நினைப்பூட்டினார். முதலாவது அவர் கிதியோனிடம் சொன்னது: கர்த்தர் உன்னோடு ''இருக்கிறார்'' (வச 12). அடுத்து அவர் சொன்னது: உனக்கு ''இருக்கிற'' இந்தப் பலத்தோடு போ (வச 14). மறுபடியும் அவனுக்குச் சொல்லப்பட்டது: நான் உன்னோடு ''இருப்பேன்'' (வச 16).

கிதியோனுக்கு எழுந்த கேள்வி நம்மெல்லாரது மனதிலும் அவ்வப்போது எழத்தான் செய்கிறது. கிறிஸ்தவ வாழ்வில் ஒரு சில ஆண்டுகளில் நாம் பிரச்னைகளை எதிர்கொள்ளவும், துன்பங்களைச் சகிக்கவும், தர்மசங்கடமான சூழல்களைச் சமாளிக்கவும் ஓரளவு பழகிக்கொள்ளுகிறோம். ஆனால் அடுத்தடுத்து வரும் சோதனைகளும் வேதனைகளும் முந்தியவற்றை மிஞ்சும்போது நமது விசுவாசம் ஆட்டம் காணத்தான் செய்கிறது. கிதியோன் வெளிப்படையாய்க் கேட்ட கேள்வியை நாமும் வார்த்தைகளால் கேட்காவிட்டாலும், இதயத்தின் ஆழத்தில் இவ்விதக் கேள்விகள் குமுறலை உண்டாக்கத்தான் செய்கின்றன. இவ்விதச் சமயங்களில்தான் பரிசுத்த ஆவியானவர் நிசமாகவே ஒரு ''தேற்றரவாளனாய்'' செயல்பட்டு நம்மோடிருக்கும் இறைப்பிரசன்னத்தை திரும்பத் திரும்ப நமக்கு நினைப்பூட்டி நம்மை ஊக்குவிக்கிறார். தூயாவியானவராகிய தேவன் ''என்றென்றும்'' நம்முடன் ''இருக்கிறார்'' (யோ 14:16). இறைமக்களுக்குத் தேவன் தம்மை ''இருக்கிறவராக இருக்கிறேன்'' என்ற பெயர் மூலமாகத்தானே வெளிப்படுத்தினார்! (யாத் 3:13,14). ''இருக்கிறேன்'' என்பவரே இஸ்ரவேல் மக்களிடம் மோசேயை அனுப்பினார்!

''இதுவரை சமாளித்தேன்; ஆனால் இப்பொழுது கிளம்பியுள்ள புயலை என்னால் சமாளிக்க முடியாது; எனக்குக் கூடுதல் பலம் தேவை'' என்று வாழ்வின் பல இக்கட்டான சூழல்களில் நாம் புலம்புவதுண்டு. பெரும்பாலான இவ்விதச் சமயங்களில் தேவன் நமக்குக் கூடுதல் வல்லமை தருவதில்லை. மாறாக, ஏற்கனவே அவர் நமக்குத் தந்துள்ள வல்லமையை நினைப்பூட்டுவார். அதைத்தான் கிதியோனிடம் கர்த்தர் சொன்னார்: உனக்கு ''இருக்கும்'' இந்தப் பலத்தோடு போ! இதை நாம் மறக்கும் வேளைகளில்தான் பலவீனம் நம்மை மேற்கொள்ளுகிறது. தயக்கம் நிறைந்த, தைரியம் குறைந்த, தீமோத்தேயுவுக்குப் பவுல் இதனைத்தான் ''நினைப்பூட்டினார்:'' 2 தீமோ 1:6,7, ''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்!'' எனவே நமக்கு வரும் எவ்விதப் பிரச்னைக்கும் முன்பாக நாம் தலைகுனியக்கூடாது; அதற்கு எதிராகத் தலைநிமிரவேண்டும் (வச 8).

கிறிஸ்தவ வாழ்க்கையே ஒரு விசுவாச நடைதான். இப்பூவுலகில், இப்பூவுடலில், நாம் எவ்வளவு பாடு அனுபவித்து, பாரம் சுமந்து வாழ்

கிறோம் என்பதைப்பற்றிக் கொரிந்தியக் கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதிக்கொண்டிருக்கும்போது, உன்னதமான ஒரு சத்தியத்தைக் குறிப்பிட்டார்: ''நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்'' (2 கொரி 5:1-6). நம்மோடுள்ள இறைப்பிரசன்னத்தை நமக்கு நிச்சயப்படுத்துவது ஆவியானவரே (வச 5). ''நடப்பது'' மட்டுமல்ல, ''பிழைப்பதும்'' விசுவாசத்தினாலேயே. விசுவாசத்தினால் நீதிமான் ''பிழைப்பான்'' எனும் கூற்று திருமறையில் நான்கு முறை வருவது காரணமின்றியல்ல (ஆப 2:4; ரோ 1:17; கலா 3:11; எபி 10:38). துவக்கம் முதல் முடிவு வரை, இடையில் எக்கட்டத்திலும், கிறிஸ்தவ வாழ்க்கை விசுவாசத்தினாலேயே. எனவேதான் நமதாண்டவர் விசுவாசத்தைத் ''துவக்குபவரும் முடிப்பவருமானவர்'' என்றழைக்கப்படுகிறார் (எபி 12:1). சிலுவை சகிப்பு என்ற கருத்தை அடுத்தே இவ்வசனம் உள்ளது என்பதைக் கவனிக்க (வச 2). விரும்புவதும் எதிர்பார்ப்பதும் நடக்கிறதோ நடக்கவில்லையோ நாம் உட்கார்ந்துவிடக்கூடாது; ஓடிக்கொண்டேயிருக்கவேண்டும் (வச 1). சாதகமான சூழலில் ஒடுவது எளிது; எதிர்க்காற்றில் ஒடுவது சிரமம்தான்; அங்குதான் ''பொறுமையோடு'' ஓடவேண்டும்!

விண்ணில் வீற்றிருக்கும் பிதாவாகிய தேவன் மற்றும் அவருக்கருகில் அமர்ந்திருக்கும் குமாரனாகிய தேவன் ஆகிய இருவரின் பிரசன்னத்தை இன்று நமக்கு அருளுபவர் ஆவியானவராகிய தேவனே என்பதை மறப்பதாலேயே பலர் துர்வுபதேசங்களுக்குப் பலியாகின்றனர். உணர்ச்சிகளின் அடிப்படையிலேயே பல பாடல் தலைவர்களும் பிரசங்கிமாரும் மக்களைக் கூட்டங்களில் நடத்துகின்றனர். ''தரிசித்து நடவாமல்'' என்று சொல்லும்போது, கிறிஸ்தவ வாழ்வு புலனறிவைச் சார்ந்ததல்ல என்பது தெளிவாகிறது (2 கொரி 5:6). இறைமக்கள் இயேசுவின் பெயரால் கூடும் எவ்வேளையிலும், எவ்விடத்திலும், அவர்கள் நடுவில் இயேசு ''இருக்கிறார்'' (மத் 18:20). அவர்கள் நடுவில் ''வருவேன்'' என்றல்ல, ''இருக்கிறேன்'' என்றே இயேசு வாக்களித்தார்!

தேவன் நம்மோடிருந்தால் அற்புதங்கள் நடந்துகொண்டேயிருக்கும் என்றெண்ணுவது தவறு. குழந்தை இயேசுவைப் பாதுகாப்பதற்குத் தேவன் அற்புதங்களை நிகழ்த்தவில்லையே! அக்குழந்தையின் பெயரே, ''தேவன் நம்மோடிருக்கிறார்'' எனப் பொருள்படும் ''இம்மானுவேல்'' என்பதுதானே? அப்படியிருக்க, கொலைகாரன் ஏரோதுக்குத் தப்புவிக்க எகிப்துக்கு ''ஓடிப்போவானேன்?'' (மத் 2:13). இரவோடு இரவாகப் பிள்ளையையும் மரியாளையும் கூட்டிக்கொண்டு ஒடவேண்டுமா? இருக்கிற இடத்திலேயே பிள்ளையைக் காப்பாற்ற தேவனால் முடியாதா? வாளேந்திவரும் சேவகரின் கைகளைத் தேவன் சூம்பிப்போகச் செய்யலாமே? சரி, ஏரோது செத்தான். தூதன்தான் யோசேப்பை இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பிப்போகச் சொன்னான் (வச 19-21). அங்கே ஏரோதின் மகன் அரியணையில் அமர்ந்திருக்கிறான்; யோசேப்பிற்கு அங்குச் செல்ல பயம். அவரைக் கலிலேயா நாட்டிற்குச் சென்றுவிடும்படி இப்பொழுது எச்சரித்தது ''தூதன்'' அல்ல, ''தேவன்!'' (வச 22,23). புரியவில்லையே! பிள்ளை இருக்கும் வீட்டை வளைத்து பிள்ளையைக் கொல்ல வருவோரைக் குருடாக்கிவிட தேவனால் முடியாதா? ''கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் ... இருள் அவரது சத்துருக்களைப் பின்தொடரும்'' என்ற வாக்கு என்னவானது? (நாகூம் 1:7,8). இங்குதான் நாம் கற்கவேண்டிய முக்கியமானதொரு சத்தியம் வெளிப்படுகிறது. ''தேவன் அற்புதங்களின் தேவன்தான்; அவர் மாறாதவர்தான்; ஆனாலும் அவர் எப்பொழுதுமே அற்புதங்கள் செய்துவிடுவதில்லை!'' உடனடியாய் அற்புதங்கள் நிகழ்த்தித் தமது மக்களை விடுவித்துவிடுவதைவிட, இருட்டான சூழல்களிலும் அவர்களது விசுவாசத்தைப் பலப்படுத்துவதிலேயே தேவனுக்கு ஆர்வம் அதிகம். சுகமளிப்பு ஊழியர் பலர் இச்சத்தியத்தை மக்கள் திரள்களுக்கு மறைக்கின்றனர். ஒரு சிலருக்கு மட்டும் நடக்கும் அற்புதங்களைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி வாசகர் மனதில் தவறான உபதேசங்களைப் புகுத்துகின்றனர். கவனம்!

ஆண்டவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தார். இதோ அவரை நோக்கி எய்யப்பட்டதோர் அம்பு: ''தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்லி, தேவன்மீது நம்பிக்கையாய் இருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்

சிக்கட்டும்'' (மத் 27:43). இயேசுவானவரது ஊழியத்தின் துவக்கக் கட்டத்தில், ''இவர் எனது நேச குமாரன்; இவரில் பிரியமாயிருக் கிறேன்'' என்று வானிலிருந்து சத்தம் (3:17). இப்பொழுதோ ஒரே நிசப்தம்! அந்தகாரம்! (27:45). ''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்ற நேச குமாரனின் கதறலுக்கும் பதில் இல்லை (வச 46). அற்புதங்கள் நிகழ்ந்துவிட்டால் தேவன் பிரியமா யிருக்கிறார்; அற்புதங்கள் நிகழாவிட்டால் அவர் பிரியமாயில்லை; இப்படியெல்லாம் நினைப்பது திருவிவிலியத்திற்கு இசைவான இறையியலுக்கு ஒவ்வாது. வெளிச்சத்தில் நடக்க விசுவாசம் தேவை யில்லை; இருட்டில்தான் விசுவாசம் பலப்படும்.

சங்கீதக்காரனின் அனுபவங்கள் பல நமதாண்டவரின் வாழ்வில் தீர்க்கதரிசனங்களாய் நிறைவேறின. இது விவிலியத்தின் விந்தை களில் ஒன்று. தாவீதின் புலம்பலைக் கவனியுங்கள்: ''உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடம் சொல்லுகிறபடியால், இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று ... உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள் நாள்தோறும் என்னோடே சொல்லி, என்னை நிந்திப்பது என் எலும்புகளை உருவக்குத்துகிறதுபோல் இருக்கிறது'' (சங் 42:3,10). இவ்விதக் கண்ணீரின் அனுபவமும், உருவக் குத்தும் அனுபவமும் எப்பொழுதோ அல்ல, ''நாள்தோறும்'' தாவீதின் அனுபவமாயிருந்தது. அது ''இரவும் பகலும்,'' சாப்பிடும் வேளைகளிலும், அவருக்கு வேதனையளித்துக்கொண்டிருந்தது. தாவீதின் இவ்விதப் புலம்பலுக்குத் தேவனிடமிருந்து பதில் வந்து விட்டதா? இல்லை! மாறாக, அவர் தனக்குள்ளே சொல்லிக்கொண் டது: ''என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங் குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் ***இன்னும்*** துதிப்பேன்'' (வச 11). இதுவே நமக்கு ராஜபாதை! இதுவே நம்மைப் பாதுகாக்கும் ராஜ பாளையம்!

தேவன் பல சமயங்களில் தம்மை ''மறைக்கலாம்;'' ஆனால் ஒரு போதும் ''மறைந்துபோக'' மாட்டார் (God may hide Himself, but never absents Himself!) இதை விளக்கும் இரு வசனப் பகுதிகளைப் பார்ப் போம். 1 தீமோ 6:16, ''சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவர்.''



1 இரா 8:12, ''காரிருளில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன் னார்.'' ஒருவரும் நெருங்கக்கூடாத பேரொளி என்பது ஒரு பக்கம்; ஒன்றும் பார்க்க முடியாத காரிருள் என்பது அடுத்த பக்கம். இவை யிரண்டும் முரண்பாடாய்த் தோன்றினாலும் இவை முரண்பட்டவை அல்ல. இரண்டுமே நமக்குப் பயனற்றதுபோல் தெரிகிறது. அப் படியல்ல. எப்படித் தம்மை வெளிப்படுத்தவேண்டுமென்று தேவன் அறிவார். இதுதான் அவரது ஏகாதிபத்தியம். ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்பிரகாரத்தில் சூரியவொளியும், உட்பிரகாரத்தில் விளக்கொளி யும் இருந்தன; மகா பரிசுத்த ஸ்தலத்திலோ ஒளியே கிடையாது. அது தான் காரிருள். அங்கு கண்களைத் திறந்திருந்தாலும் விசுவாசித்துத் தான் நடக்கவேண்டும். நெருங்க முடியாத பேரொளிக்குமுன் கண் களைத் திறக்கமுடியாது; கண்களை மூடிக்கொண்டு அங்கும் விசு வாசித்துத்தான் நடக்கவேண்டும்!

நமது வாழ்க்கைப் பாதையில், அல்லது ஊழியப் பாதையில், அடைக்கப்பட்ட கதவுகளருகே வந்ததும் நாம் தேவனது பிரசன் னத்தை அல்லது நடத்துதலைச் சந்தேகிக்கிறோம். வாசல்கள் திறந்துவிட்டால் தேவனது அற்புத வல்லமையின் வெளிப்பாடு என் றும், வாசல்கள் அடைபட்டுவிட்டால் அவரது அற்புதப் பிரசன்னம் இல்லாதுபோயிற்று என்றும் நாம் நினைப்பது சிறுபிள்ளைத்தனம். வாசல்களைத் திறப்பவரும் தேவனே; அவற்றை அடைப்பவரும் தேவனே (வெளி 3:7). திறக்கப்பட்ட கதவுகளும் அடைக்கப்பட்ட கதவுகளும் தேவனது வல்லமையையும் நடத்துதலையுமே நமக்கு வெளிப்படுத்துகின்றன. சுவிசேஷத்தைச் சுமந்துகொண்டு ஆசியா விற்குச் செல்ல முயன்றபோது அப்போஸ்தலரைத் தடுத்தது பிசாசு அல்ல, ஆவியானவரே. அப்படியே பித்தினியாவுக்கு நற்செய்தி அறி விக்கச் செல்ல முயன்றபோது, அவர்களைத் தடுத்தது பிசாசு அல்ல, ஆவியானவரே (அப் 16:6,7). தமது ஊழியரை மக்கெதோனியா விற்குக் கொண்டுவர தேவன் கையாண்ட முறைதான் அது (வச 9,10). இரண்டு இடங்களுக்குக் கதவடைத்த, ஆவியானவர் ஒரு பெண்மணியின் இதயக் கதவைத் திறந்தார் (வச 14). இவளே ஐரோப்பாவில் அப்போஸ்தலருக்குக் கிடைத்த முதற்கனி. இவளது வம்சாவழியிலிருந்தே ஐரோப்பிய மிஷனரிகள் இந்தியாவிற்கு

வந்து நமது கண்களைத் திறந்தனர். அல்லேலூயா! இச்சத்தியத்தைப் புரியாமல் எத்தனை முறை நாம் ஊழியச் சாட்சிகளின்போது, ''பிசாசு கதவடைத்தான், பிசாசு தடுத்து நிறுத்தினான்'' என்று பிசாசை மகிமைப்படுத்துகிறோம்! (இச்சத்தியத்தை இன்னும் விபரமாய்ப் புரிந்து கொள்ள ''இறைநடத்துதலின் மறுபக்கம்'' என்ற 45ஆம் அத்தியாயத்தை *''பைபிள் முத்துக்கள்''* எனும் எனது புத்தகத்தில் படியுங்கள்.)

மோசேயும் எலியாவும் பிரமாண்டமான அற்புதங்கள் நிகழ்த்தினர். ஏசாயாவோ, எரேமியாவோ, தானியேலோ, இவர்களைப் போன்றவர்களோ அற்புதங்கள் செய்ததாக நாம் திருமறையில் வாசிப்பதில்லை. ''எலியாவின் ஆவியும் பலமும்'' நிறைந்தவனாய் வந்தத் திருமுழுக்கினன் யோவானும் அற்புதம் ஒன்றும் செய்யவில்லை (யோ 10:41). ''தேவன் எங்களோடிருந்தால் எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்த அற்புதங்கள் எங்கே?'' என்ற கிதியோனின் கேள்விக்கு இடமெங்கே? அற்புதம் நடந்தாலும் நடக்காவிட்டாலும் தேவன் தேவன்தான். அவர் தமது மக்களுடன் இருக்கவே இருக்கிறார் (தானி 3:17,18). இப்படிச் சொல்வதால் நமது விசுவாசம் குன்றாது; அது வளரும். இப்படிச் சொல்வதால் அற்புதங்கள் குறையாது; அவை கூடும். ''அற்புதம்'' என்பதைத் தாண்டி ''அற்புதர்'' எனக் குதூகலிக்கிறோம்.

ஆன்மீக வாழ்விலும் பணியிலும் எல்லாக் காரியங்களிலும் உடனுக்குடன், முழுமையாக, வெற்றி கிட்டிவிடாது. போர் நீடிக்கத்தான் செய்யும். கானானுக்குள் நுழைந்தவுடன் முழு வெற்றி இஸ்ரவேலருக்குக் கிடைத்துவிடவில்லை. வேண்டுமென்றே கர்த்தர் சில மக்களினங்களை அங்கு விட்டுவைத்தார். இதற்கான காரணங்களை நியாயாதிபதிகள் 3:1-3இல் வாசிக்கிறோம்: ''கானான் தேசத்தில் நடந்த சகல யுத்தங்களையும் அறியாதிருந்த இஸ்ரவேலராகிய அனைவரையும் (i) ***சோதிப்பதற்காகவும்,*** இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரும் அதற்குமுன் யுத்தம் செய்ய அறியாதிருந்தவர்களும் அவைகளை அறியும்படிப் (ii) ***பழக்குவிப்பதற்காகவும்,*** கர்த்தர் விட்டுவைத்த மக்களினங்கள்.''

நண்பரே, அன்று கிதியோன் கேட்ட உங்களது இன்றையக் கேள்விகளுக்குப் பதில் கிடைத்துவிட்டதா?



# கேள்வி 9

***''தேவன் இதைச் செய்கிறதில்லை என்றால், வேறு யார் இதைச் செய்கிறார்?''***
***''கர்த்தருடைய கரம் இதைச் செய்தது என்று இவையெல்லாவற்றிலும் அறியாதவன் யார்?''***

**(யோபு 9:24; 12:9)**

பைபிளிலேயே ஒன்றுக்கொன்று வித்தியாசமான விளக்கங்கள் மிக அதிகமாய்க் கொடுக்கப்பட்டிருப்பது யோபுவின் புத்தகத்திற்குத்தான். 66 புத்தகங்களில் வேறு எந்தப் புத்தகத்தையும்விட அதிகமான விளக்கவுரைகள் எழுதப்பட்டிருப்பதும் இப்புத்தகத்திற்குத்தான். இது தான் வேதாகமத்தின் மிகப் பழமையான புத்தகம் என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள கருத்து. இப்புத்தகத்தில் நிறைய கேள்விகள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் நாம் எடுத்துக்கொண்ட இவ்விரு கேள்விகள் இப்புத்தகத்தின் மையக் கருத்தைத் தழுவியவை.

யோபுவைத் தாக்கியது சாத்தான்தான் என்பது தெளிவு. அவனுக்கு வந்த இழப்புகளும் இன்னல்களும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. வேதாகமக் கதாபாத்திரங்களில் இந்த அளவு பாடுகளை அனுபவித்த வேறொரு நபர், இயேசுவைத் தவிர, யாருமில்லை. யோபுவை அடித்து நொறுக்கியது சாத்தான்தான் எனினும், இப்படிச் செய்வதற்குச் சாத்தானுக்கு அனுமதி தந்தது தேவன்தான். சாத்தானைப் பார்த்துக் கர்த்தர் சொன்னது: ''இதோ, அவனுக்கு உள்ளவை யாவும் உன் கையில் இருக்கிறது ... இதோ, அவன் உன் கையில் இருக்கிறான்'' (1:12;2:6). அதிகாரப் பூர்வமாக இந்த அனுமதியைப் பெற்றுக்கொண்டுதான் கர்த்தருடைய சந்நிதியை விட்டுச் சாத்தான் புறப்பட்டுப் போனான் (1:12;2:7). இப்படியிருக்க, ''கர்த்தர்'' கொடுத்தார், ''கர்த்தர்'' எடுத்தார் என்று யோபு சொல்லுவதெப்படி?

(1:21) யோபுவின் கூற்று சரிதானா? எனது குருவி மூளையின்படி, நான் ''யோபு சொன்னது சரியல்ல; கர்த்தர்மீது அவர் எப்படி இவ் விதம் பழியைப் போடமுடியும்?'' என்று சொல்லியிருப்பேன். ஆனால், யோபு சொன்னது முற்றிலும் சரியே என்று திருவசனமே கூறுகிறது. அடுத்த வசனத்தைப் பாருங்கள்: ''இவை எல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவுமில்லை; தேவனைப்பற்றிக் குறை சொல்லவு மில்லை'' (வச 22).

அடுத்து, யோபுவின் சரிதையில் அவரது மனைவியைச் சந்திக் கிறோம். யோபு தனது பிள்ளைகளை இழந்தார்; வேலைக்காரரை இழந்தார்; கால்நடைகளை இழந்தார்; வீட்டை இழந்தார். இதுவும் போதாதென்று அவர் தனது உடல் ஆரோக்கியத்தையும் இழந்தார். அது வெறும் இரத்த அழுத்தமோ, சர்க்கரை வியாதியோ கிடையாது. உடல் முழுவதும் கொப்பளங்கள்! ''உச்சந்தலை தொடங்கி உள்ளங் கால் வரை'' என்றுதான் பொதுவாகச் சொல்லுவோம். யோபுவுக்கோ ''உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை வரை'' கொப்பளங்கள் என்று வாசிக்கிறோம் (2:7). அதாவது, அவரால் நிற்கக்கூட முடியாது! எனவேதான் அவர் ஓர் ஓட்டை எடுத்துத் தன்னைச் சுறண்டிக் கொண்டு சாம்பலில் ''உட்கார்ந்தார்'' என்று வாசிக்கிறோம் (வச 8). மலஜலாதிக்குக்கூட எழுந்துபோகமுடியாத நிலை! கொடூரம்! ''நீர் இருந்து பயனென்ன? இறந்துவிடும்! கடவுள், கடவுள் என்றிருந்து கண்டதென்ன?'' என்கிறார் யோபுவின் மனைவி. யோபுவின் பரி தாபக் காட்சியைப் பார்க்கும் எவரும் கிட்டத்தட்ட இப்படித்தான் பேசு வார்கள். சகோதரி யோபுவின் தத்துவமே பெரும்பாலான இன்றையக் கிறிஸ்தவர்களின் விசுவாசம். ஆசீர்வாதம் என்றால் துதிப்போம், குதிப்போம்; இழப்பு, இறப்பு என்றாகிவிட்டால் முறுமுறுப்புதான். தனது அருமை மனைவிக்கு யோபு கொடுத்த பதில்: ''நீ பைத்தியக் காரி பேசுவதுபோல் பேசுகிறாய்; தேவனது கையில் நன்மை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ?'' (2:10). தான் அனுபவித் துக்கொண்டிருக்கும் தீமை தேவனது கையிலிருந்து வந்தது என்று யோபு சொன்னது சரியா? நமது குறைந்த அறிவின்படி நாம் என்ன பதில் சொல்வோமோ? ஆனால் திருவசனம் சொல்வதென்ன? ''இவை எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவம் செய்ய



வில்லை.'' இந்தச் சோகமான நாடகத்தின் முடிவிலும் யோபுவின் நண்பரிடம் தேவன் சொன்னது: ''என் தாசன் யோபு பேசியதுபோல் நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை'' (42:7). யோபுவுக்கல்லவா D.D. பட்டங்களை அடுக்கவேண்டும்? Divinity (தெய்வீகம்) பற்றிய அறிவில் இவரல்லவோ Doctor (முனைவர்)?

யோபுவின்மீது தேவனுக்கிருந்த நம்பிக்கை அசாதாரணமானது. சாத்தானிடம் அவர் யோபுவைக் குறித்து எவ்விதம் சவால் விடுகிறார் பாருங்கள்: ''என் தாசனாகிய யோபுவின்மீது கவனம் வைத்தாயோ? உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல் பூவுலகில் ஒருவனும் இல்லை!'' (1:8). இரண்டு யானைகள் சண்டை போட்டுக்கொண் டால் கீழிருக்கும் புல்தரைதான் நசுங்கி நாசமாகும். யோபுவின் சரிதையில் நடந்தது இதுதான். தேவனும் சாத்தானும் யுத்தத்தில் இறங்குகின்றனர். யோபுவின் உடலே யுத்தக்களமாகிறது!

தமது சீடரை ஆண்டவர் அனுப்பிவைக்கும்போது சொன்ன காரியங்களில் பெரும்பாலானவை தவறாகவே புரிந்துகொள்ளப்பட் டுள்ளன. அவரது பணி ஆணையுரை ஒரு முழு அத்தியாயமாய் 42 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது (மத் 10:1-42). இதில் 28 முதல் 31 வரையுள்ள வசனங்களைக் கவனியுங்கள். ''உங்கள் தலை மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது; ஆதலால் பயப்படாதிருங் கள்'' என்கிறார் (வச 30,31). இது நமது உடலுக்கும் உயிருக்கும் ஓர் ஆபத்தும் வராது என்ற உத்திரவாதம் அல்ல. ''உடலை மக்களால் கொல்லமுடியும்; ஆத்துமாவை நரகில் அழிக்கமுடியாது'' என்பதே அவரது உறுதிமொழி (வச 28). யாரும் நம்மைத் தொடமுடியாது என்றால் இரத்தசாட்சிகளின் மரணம் விசுவாசக் குறைச்சலினா லேயா? விசுவாசத்தில் வல்லவனாக, ஆவியில் நிறைந்தவனாகத் தான் ஸ்தேவான் கல்லெறியப்பட்டுச் செத்தான். இங்குதான் நமது இறையியல் அறிவில் திருத்தம் தேவைப்படுகிறது. இங்குதான் பவுலின் வெற்றி முழக்கம் அர்த்தம் பெறுகிறது: ''கிறிஸ்து எனக்கு வாழ்வு; சாவு எனக்கு இலாபம்!'' (பிலி 1:21). சாராள் நவரோஜி அக்காவுடன் சேர்ந்து பாடுவோம் —

*என்னை மறவா இயேசு நாதா,*
*உந்தன் தயவால் என்னை நடத்தும்.*

*திக்கற்றோராய்க் கைவிடேனே,*
*கலங்கிடீரே, என்றதாலே ஸ்தோத்திரம்.*
*நீர் அறியா யாதும் நேரிடா;*
*என் தலை முடியும் எண்ணினீரே!*

நம்மையும் நமக்கடுத்த யாவையும் கடவுளது கரத்தில் முழுவது மாய் ஒப்படைக்கவேண்டும் எனும் சத்தியம் இங்குதான் தெளி வாகிறது. திருப்பணியில் தன்னை முழுவதுமாய் ஈடுபடுத்திக் கொண்டதால் தனக்கு வரும் பாடுகளைக் குறித்துப் பவுல் அவ்வப் போது தனது நிருபங்களில் எழுதுகிறார். இப்படி அவர் எழுதுவது மக்களது பரிதாபத்தைப் பெறுவதற்காக அல்ல, அவர்களுக்குச் சவால் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்காகவே. தனது சீடன் தீமோத்தேயுவுக்கு அவர் எழுதிய சில வரிகள்: ''சுவிசேஷத்திற்கு நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறவினத்தாருக்குப் போதகனாகவும் நியமிக்கப்பட்டேன். இதன்பொருட்டு நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆனாலும் நான் வெட்கப்படுவ தில்லை; ஏனெனில் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்; நான் அவரிடம் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரை காத்துக்கொள்ள வல்லவராய் இருக்கிறார் என்று நிச்சயித்துமிருக் கிறேன்'' (2 தீமோ 1:11,12). உயர்வோ தாழ்வோ, நன்மையோ தீமையோ, வளமோ வறுமையோ, வாழ்வோ மாள்வோ எது எப்படி யிருந்தாலும் நான் என் தேவனது கரங்களில் இருக்கிறேன். அவர் அறியாது, அவர் அனுமதியாது, எதுவும் எனக்கு நிகழ்வதில்லை. இதுவே எனது நிச்சயம்'' — இறைமக்கள் மற்றும் இறைப்பணியாளர் ஒவ்வொருவரது அறிக்கையும் இப்படித்தானிருக்கவேண்டும்.

நிச்சயமற்ற சூழல்கள் வழியே நீங்கள் கடந்துபோகும்போது உங்களைத் திசை திருப்பக்கூடிய பொய்த் தீர்க்கதரிசனங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். யோபுவின் அனுபவத்தைக் கவனி யுங்கள்: யோபு 23:8-10, ''நான் முன்னே போனாலும் அவர் அங்கு



இல்லை; நான் பின்னே போனாலும் அவரைக் காணமுடியவில்லை. இடது பக்கத்தில் அவர் செயல்பட்டும் அவரைப் பார்க்கமுடியவில்லை; வலது பக்கத்திலும் நான் அவரைக் காணாதபடி ஒளித்திருக்கிறார். ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்த பின்னர் நான் பொன்னாக விளங்குவேன்.'' எதுவுமே புரிய வில்லை; எதுவுமே தெரியவில்லை; எதுவுமே செய்யமுடியவில்லை — இவ்விதச் சூழலில் நாம் செய்யக்கூடியது, செய்யவேண்டியது, ஒன்றே. ''நான் அறியேன், அவர் அறிவார், அது போதும்'' என்ற அறிக்கையுடன் அமரிக்கையாய் வாழ்க்கையையும் பணியையும் தொடரவேண்டும், அவ்வளவுதான். யோபுவின் இருட்டான கட்டத் தில் அவருக்கு ஆதரவாய் இருந்தது தேவனது ''அடிச்சுவடுகள்,'' அவரது ''நெறி,'' அவரது ''உதடுகள்,'' மற்றும் அவரது ''வார்த்தை கள்.'' அனுதின ஆகாரத்தைவிட ஆண்டவரது வார்த்தைகள் அவ ருக்குத் தெம்பளித்தன (வச 11,12). வாழ்க்கையின் புயல்கள் நமது படகின் பாய்மரத்தைத் தேவனை நோக்கியே திருப்பட்டும்!

தேவனது சிட்சையைக் குறித்தும் இங்கு தியானிக்கவேண்டும். ''சிட்சை'' என்பதற்குத் ''திருத்துவதற்கான தண்டனை'' என்று பொருள். இறைமக்கள் எவரும் தேவனது சிட்சைக்குத் தப்பமுடியாது. எபிரெய நிருப ஆக்கியோன் தன்னை ஒரு அப்பாவாக உருவகப் படுத்திக்கொண்டு இவ்விதம் எழுதுகிறார்: ''என் மகனே, கர்த்தரு டைய சிட்சையை அற்பமாக எண்ணாதே; அவரால் கடிந்துகொள்ளப் படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடம் அன்பாயிருக் கிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்'' (எபி 12:5,6). சிட்சையை நாம் கவனி யாமலும் விடக்கூடாது; அதனால் தைரியமிழந்து உட்கார்ந்துவிடவும் கூடாது. கர்த்தர் நம்மைச் சிட்சிப்பது தகப்பன் என்ற முறையில் நம்மீதுள்ள அன்பை வெளிக்காட்டவும், நம்மை இன்னும் அவருடன் நெருக்கமாய்ச் சேர்த்துக்கொள்ளவும்தான். ''எந்த மகனையும்'' தண் டிக்கிறார். தேவன் நம்மைச் சிட்சிக்காதிருந்தால் நாம் ''வேசிப் பிள்ளைகள்'' என்றாகிவிடுவோமாம் (வச 8). இந்தச் சத்தியத்தை கிறிஸ்தவத்தில் நாம் இன்று வெகுவாய் ''மறந்து''விட்டோம் (வச 6ஆ). சிட்சை என்பது அசுத்தமானவர்களைப் பரிசுத்தமானவர்களாக

மாற்றுவதற்காக அல்ல. அதைச் செய்வது கிறிஸ்துவின் இரத்தம். பரிசுத்தமானவர்களை இன்னும் பரிசுத்தமடையச் செய்து, அவர்களைக் ''கர்த்தருடைய பரிசுத்தத்தில்'' பங்கேற்க வைப்பதே சிட்சைகளின் முடிவான நோக்கம் (வச 10). இதைத்தானே நாம் யோபுவின் சரிதையில் காண்கிறோம்? துவக்கத்தில் தேவனாலேயே ''உத்தமன், சன்மார்க்கன்'' என்ற சான்று பெற்ற அவர் இன்னல்கள், இழப்புகள், இக்கட்டுகள் வழியாய்ச் சென்று வெளிவரும்போது கொடுத்த சாட்சி என்ன? ''கர்த்தாவே, என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது; ஆகையால் நான் என்னை அருவருத்து, தூசியிலும் சாம்பலிலும் இருந்து மனந்திரும்புகிறேன்'' (யோபு 1:8;42:5,6). நாம் தியானித்துக்கொண்டிருக்கும் கேள்வி: ''தேவன் இதைச் செய்கிறதில்லை என்றால் வேறு யார் இதைச் செய்கிறார்?'' (9:24).

நம்மோடுள்ள தேவனது இவ்வித இடைபாடுகள் அவரைப் பல்வேறு கோணங்களில் சித்தரிக்கின்றன. அவர் ''குயவன்,'' நாம் ''களிமண்'' (எரே 18:6). சரியான பானையாக, சட்டியாக, நாம் உருவெடுக்கும்வரை திரும்பத் திரும்பக் களிமண்ணைப் பிசைந்து வனைந்து கொண்டிருப்பார்! அடுத்து, அவர் ''புடமிடுகிறவர்,'' நாம் ''வெள்ளி'' (ஏசா 48:10). உபத்திரவத்தின் குகையில்தான் அவர் நம்மைத் தெரிந்துகொண்டாராம். வெள்ளியிலிருந்து களிம்பு நீங்கும்வரை தட்டான் அதனைச் சுத்தப்படுத்திக்கொண்டேயிருப்பான். இதையெல்லாம் ஆண்டவர், ''என்னிமித்தம், என்னிமித்தமே'' செய்வதாகச் சொல்லுகிறார் (வச 11). நம்மைப் பரிசுத்தப்படுத்துவது எதற்காக என்று தெரியுமா? அவரது நாமத்திற்காக! அவரது புகழ்ச்சிக்காக! அவரது பரிசுத்தத்திற்காக! அவரது மகிமைக்காக! (வச 9,11). உபத்திரவங்கள் என்னையும் பரிசுத்தமாக்குகின்றன, அவரையும் மகிமைப்படுத்துகின்றன என அறிவது எவ்வளவு மேன்மை! மூன்றாவதாக, ஆண்டவர் ஒரு ''தோட்டக்காரனாகவும்'' நாம் ''திராட்சைச் செடிகளாகவும்'' உருவகப்படுத்தப்படுதலைப் பார்க்கிறோம் (யோ 15:1,2). கிளை நறுக்குவது செடியை நாசப்படுத்த அல்ல, இன்னும் அதிகம் கனிகொடுக்கச் செய்ய. களிமண்ணைத் திரும்பத்



திரும்பப் பிசைவதும், வெள்ளியைத் திரும்பத் திரும்ப நெருப்பில் போடுவதும், கிளை நறுக்குவதும் வேதனையான அனுபவங்கள்தான். ஆனால் இவற்றின் நோக்கமே நமது மனதை ஆட்கொள்ள வேண்டும்.

இப்படியெல்லாம் இருக்கிறபடியால்தான், நாம் நமது பாடுகளுக்காய் எடுத்தவுடன் பிசாசைக் குற்றம் சாட்டக்கூடாது. ஒருவன் பாடுபட்டால் அவன் ''ஜெபம்'' பண்ணட்டும் என்று அதனால்தான் வேதம் நமக்குப் போதிக்கிறது (யாக் 5:13). அதாவது, பாடுகளின் வழியே கடந்துபோகும்போது குயவனாகிய, தட்டானாகிய, தோட்டக்காரராகிய தேவனிடமே செல்லவேண்டும். பாடுகளைப் பயன்படுத்தி நம்மைக் கொல்லவும் அழிக்கவும் பிசாசு தனக்குச் சாதகமாய்ப் பயன்படுத்த முயன்றாலும், ஆண்டவர் நமக்கிருக்கும் ஜீவனைப் பரிபூரணப்படுத்த அவற்றைப் பயன்படுத்துவார் (யோ 10:9,10). யோசேப்பு தனது சகோதரரிடம் கூறிய வார்த்தைகளையே முடிவில் நாம் பிசாசை நோக்கிக் கூறலாம்: ''நீ எனக்குத் தீமை செய்ய நினைத்தாய்; தேவனோ அதை நன்மையாக முடியப் பண்ணினார்'' (ஆதி 50:20).



# கேள்வி 10

***"கர்த்தர் உன்னை இரட்சிக்காதிருந்தால்
நான் எதிலிருந்து எடுத்து உன்னை இரட்சிக்கலாம்?
களஞ்சியத்திலிருந்தா, ஆலையிலிருந்தா?"***

**(2 இராஜாக்கள் 6:27)**

சமாரியாவில் கொடிய பஞ்சம் உண்டாயிற்று. ஒரு கழுதைத் தலை எண்பது வெள்ளிக்காசுக்கும், புறாக்களுக்குப் போடுகிற கால் படி பயிறு ஐந்து வெள்ளிக்காசுக்கும் விற்கப்பட்டன என்றால் பாருங்களேன்! இஸ்ரவேலரின் அரசன் ஒரு நாள் நகர மதில்மீது நடந்து கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு மாது அவரைப் பார்த்து, ''ராஜாவாகிய என் ஆண்டவனே, என்னை இரட்சியும் (காப்பாற்றும்)'' என்று கூக்குரலிட்டாள். அவளது கூப்பிடுதலுக்குப் பதிலாகத்தான் மேற்குறிப்பிட்ட கேள்வியை இராஜா கேட்டார் (2 இரா 6:25-27).

இராஜா கேட்ட இக்கேள்வி நமக்குக் கற்றுத் தரும் தலைசிறந்த படிப்பினை என்னவென்றால், சிறிய தேவையோ, பெரிய தேவையோ, எதற்கென்றாலும் யாவற்றிற்கும் ஊற்றும் காரணருமாகிய தேவனையே சார்ந்திருக்கவேண்டும். ''என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது'' என்ற இயேசுவின் வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்திக்கொள்வோம் (யோ 15:5). இது ஓர் எளிய கூற்றாகத் தெரிந்தாலும், பலசாலிகளும் திறமைசாலிகளும் இதை ஒப்புக்கொண்டு ஏற்பது சுலபமல்ல. நம்மால் முடியாது என்ற கட்டத்தில் தான் நாம் ஆண்டவரிடம் ஓடுகிறோம். ஆனால் எல்லாக் காரியங்களுக்கும், எல்லாக் காலங்களிலும் நாம் அவரைச் சார்ந்து வாழ்வதே அவரது பரிபூரண சித்தம். ஏழு வேண்டல்களை உள்ளடக்கிய கர்த்தருடைய ஜெபத்தின் தாற்பரியம் இதுவே. அது உடலுக்குரிய தேவையாக இருக்கட்டும், அல்லது ஆன்மீகத் தேவையாக இருக்கட்டும், எல்லாவற்றிற்கும் ''பரமண்டலங்களிலிருக்கும் பிதாவையே''



நாடவேண்டும். தினசரி உணவும், தினசரிச் சோதனைகளும் இந்த ஜெபத்தில் இடம்பெறுகின்றன. எதுவுமே விதிவிலக்கல்ல. சிறுசிறு காரியங்களுக்கும் தேவனைச் சார்ந்திருக்கப் பழகுகிறவர்கள்தான் பெரிய காரியங்களில் பதறமாட்டார்கள். வாழ்க்கையில் சில பகுதிகளை இங்கு எடுத்துக்காட்டுகளாய் எடுத்துக்கொண்டு எவ்விதம் அவற்றில் தேவன்மீது சார்ந்திருக்கவேண்டும் எனப் பார்ப்போம் —

(1) முதலாவது வருவது ***குடும்பம்***. இன்று பிரச்னைகளில்லாத குடும்பங்களைப் பார்ப்பது அரிதாகிவிட்டது. ''வீட்டுக்குவீடு வாசற்படி'' என்பதுதான் உண்மை. இறுதிக்காலத்தின் அடையாளங்களில் ஒன்று குடும்பச் சீர்குலைவு ஆகும் (மல் 4:6). கணவன் மனைவியிடையே பிரச்னை. பெற்றோர் பிள்ளைகளிடையே பிரச்னை. உடன் பிறந்தோர் மற்றும் உறவினரிடையே பிரச்னை. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இன்றையக் கலாச்சாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஒரு காரணமாக நாம் காட்டலாம். ஆனால் தேவன் மீதுள்ள சார்பில் குறைவு ஏற்படுவதே குடும்பச் சிக்கல்களுக்குப் பிரதானமான காரணம். இதுதான் நம்மெல்லாருக்கும் தெரிந்த சங்கீதம் 127இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது: ''கர்த்தர் வீட்டைக் கட்டாவிடில் அதைக் கட்டுகிறவர்களின் முயற்சி வீண் ... இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்; கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்'' (வச 1,4). அடுத்துவரும் 128ஆம் சங்கீதத்தில் மனைவி, பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் குறித்தும் எழுதப்பட்டிருக்கிறது (வச 3,6). கர்த்தர்மீது சார்ந்திருந்து அவரது வழிகளை மதித்து அவற்றில் நடப்பதே குடும்ப ஆசீர்வாதத்தின் இரகசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (127:1; 128:1,4). அன்றாடகச் சமையல் வேலை மற்றும் சாப்பாட்டுக் காரியங்களும் இதில் உள்ளடங்கும் (127:3; 128:3). நமது திறமை, பொருளாதார வசதி, சமுதாயத்தில் அந்தஸ்து போன்றவை விரும்பப்படத்தக்கவை எனினும் குடும்பச் சமாதானமும் குடும்ப ஆசீர்வாதமும் இவைகளால் வந்துவிடாது. கர்த்தர்மீது சார்ந்தே ஆகவேண்டும். ''குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரையில்லாத வீடு'' என்ற முதுமொழியை மறக்காதிருப்போம்.

(2) அடுத்துவருவது நமது ***வேலைத்தலம்***. உயர் அதிகாரிகளின் பாரபட்சத்தினால் பாதிக்கப்படும் இறைமக்கள் அநேகர். ''கிறிஸ்த

வனாயிருப்பதினாலேயே'' இழைக்கப்படும் தீங்குகள் ஏராளம். இவ்விதச் சூழலிலும் தேவனையே நோக்கவேண்டுமெனப் போதிக்கப்பட்டிருக்கிறோம்: ''ஒருவன் கிறிஸ்தவனாய் இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதின் பொருட்டுத் தேவனை மகிமைப்படுத்தட்டும்'' (1 பேது 4:16). தேவனுடைய பிள்ளைகளுக்கு நியாயமாக வரவேண்டிய வேலையுயர்வைக்கூட அகம்பாவமுள்ள அதிகாரிகள் தடைசெய்வர். இங்கு நாம் நினைவிற்கொள்ளவேண்டிய சத்தியம்: ''கிழக்கிலும் மேற்கிலும் வனாந்திரத் திசையிலுமிருந்து ஜெயம் (promotion) வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார்'' (சங் 75:6,7). வித்தைகள் பண்ணிக் குறுக்குவழியில் மேலே வருவதற்கு இறைமக்கள் முயலக் கூடாது. இது தேவனுக்குப் பிரியமில்லாத காரியம்.

பார்வோனுக்கு அப்பம் தயாரிப்பவனும் பானம் பரிமாறுபவனும் செய்த குற்றத்தினால் யோசேப்பு இருந்த சிறையிலேயே அடைக்கப்பட்டனர் (ஆதி 40:1-3). ஓரிரவு இவ்விருவரும் வெவ்வேறு சொப்பனங்கள் கண்டனர். பானம் பரிமாறுபவனது சொப்பனம் அவனது விடுதலையையும் மீண்டும் பதவியேற்பையும் குறிக்குமென யோசேப்பு அர்த்தம் சொன்னார். அத்துடன் யோசேப்பு சொன்னது: ''நீ வாழ்வடைந்திருக்கும்போது என்னை நினைத்து, என்மீது தயவு வைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும்'' (வச 14). ஆனால் பானம் பரிமாறுபவன் யோசேப்பை நினையாமல் ஈராண்டுகள் மறந்துவிட்டான் (வச 23). பின்னர் நடந்ததை நாமறிவோம். தேவனே யோசேப்பின் விடுதலை மற்றும் பதவியுயர்வுக்கான சூழலை உருவாக்கினார். பிரியமானவரே, பாரபட்சத்தினாலும் துவேஷத்தினாலும் வேலைத்தலத்தில் நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம். கர்த்தர் கரத்தில் அதனை ஒப்படைத்துவிட்டு அமர்ந்திருங்கள். ஏற்ற வேளையில் ஏற்ற விதமாய் அவர் உங்களை உயர்த்துவார். தேவனே நம்மை வைத்திருக்கும் இடத்திலிருந்து யாரும் நம்மை இறக்க முடியாது; தேவன் நமக்கென்று நியமிக்காத இடத்திற்கு யாரும் நம்மைத் தூக்கவும் முடியாது. அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பலமாயிருக்கும்.

(3) நமக்கு வரும் ***போராட்டங்களிலும்*** நாம் முழுமையாகத் தேவனைச் சார்ந்திருக்கவேண்டும். இதோ, கர்த்தருடைய வார்த்தை:



''தனது படைப் பெருக்கத்தால் வெற்றி பெறும் அரசருமில்லை; தன் வலிமையின் மிகுதியால் உயிர் தப்பிய வீரருமில்லை. வெற்றி பெறப் போர்க்குதிரையை நம்புவது வீண்; மிகுந்த வலுவுள்ளதாயினும் அது விடுவிக்காது. தமக்கு அஞ்சி நடப்போரையும் தமது பேரன்புக்காகக் காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார்'' (சங் 33:16-18). இங்குதான் ராஜாவாகிய ஆசா தவறினார். அவர் கர்த்தரைச் சார்ந்திருந்தபோது அவரது எதிரிகளைக் கர்த்தர் அவரிடம் சரணடையைச் செய்தார். ஆனால், கர்த்தரை அவர் சார்ந்துகொள்ளாமல் சீரியா ராஜாவைச் சார்ந்தபோதோ அவர் தோல்வியைத் தழுவினார் (2 நாளா 16:7,8). அப்பொழுதுதான் தீர்க்கன் ஒருவன் ஆசாவிடம் சொன்னது: ''தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களுக்குத் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, கர்த்தருடைய கண்கள் பூவுலகெங்கும் உலாவிக்கொண்டிருக்கின்றன; இந்தக் காரியத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதல் உமக்கு யுத்தங்கள் நேரிடும்'' (வச 9). நமது கண்கள் கர்த்தரை நோக்கியிருந்தால்தான் அவரது கண்கள் நம்மை நோக்கியிருக்கும் (சங் 33:16-19). கிழக்கேயும் மேற்கேயும் பார்க்காமல் நமது கண்கள் மேல்நோக்கியிருந்தால்தான் ''விண்ணையும் மண்ணையும் படைத்த கர்த்தரிடமிருந்து நமக்கு ஒத்தாசை வரும்'' (சங் 121:1,2). கயத்தாரைச் சேர்ந்த ஐயாத்துரை பாகவதரது காலத்தால் அழியாத கீர்த்தனை (17) நினைவுக்கு வருகிறது —

*கண்களை ஏறெடுப்பேன் — மாமேரு நேராய் என்*
*கண்களை ஏறெடுப்பேன்.*

*விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்*
*தெண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும்.*

(4) நாம் சந்திக்கும் ***இக்கட்டான சூழல்கள்*** நம்மை உருவாக்கும் அல்லது உருவழிக்கும். நாம் எப்படி அவற்றைக் கையாளுகிறோம் என்பதைப் பொருத்தே விளைவு இருக்கும். சுமுகமான சூழல்களில் ஆண்டவர்மீது சார்ந்திருப்பது இலகு, இயல்பு. ஆனால் நிலைமை நம்மைத் தடுமாறவைக்கும்போது நமது மனது அங்குமிங்கும் அலசடிபடுகிறது. அவ்விதச் சூழல்களில்தான் நாம் எகிப்துக்குத் திரும்பி

விடுகிறோம். இதோ, எகிப்தைக் குறித்த ஓர் எச்சரிக்கை: ''நெரிந்த நாணலாகிய அந்த எகிப்தை நம்புகிறாய்; அதின்மீது ஒருவன் சாய்ந்தால் அது அவன் உள்ளங்கையில் பட்டுருவிப்போகும்; எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னை நம்புகிற யாவருக்கும் அப்படியே இருப்பான்'' (ஏசா 36:6). உள்ளங்கையில் நாணல் குத்தும்போதும் வலிக்கும்; உள்ளங்கையிலிருந்து அதனைப் பிடுங்கும்போதும் வலிக்கும். எகிப்தும் வேண்டும், கானானும் வேண்டும் என்பதே அநேக விசுவாசிகளின் நிலை. கானானுக்குப் போகவேண்டுமானால் எகிப்தை விடவேண்டும். அக்கரைக்குப் போகவேண்டுமானால் நல்ல படகு மட்டும் இருந்தால் போதாது, இக்கரையை விடவேண்டும். இக்கட்டான சூழல்களில் இரண்டுங்கெட்ட நிலை வேண்டாம். தேவன் மட்டுமே இக்கட்டுகளிலிருந்து விடுவிப்பார், அல்லது இக்கட்டுகளிலும் பாதுகாப்பார்.

(5) தாவீதுக்குத் தொல்லைகள் எதிரிகளிடமிருந்து மட்டுமல்ல, ***நெருக்கமானவர்களிடமிருந்தும்*** வந்தன. ஆனால் அவர் வெற்றியின் இரகசியத்தை அறிந்துகொண்டவராய்ப் புத்திமானாய் நடந்துகொண்டார். அவரது நம்பிக்கை ''தேவன்மேல்'' இருந்தது மட்டுமல்ல, ''தேவன் மேலேயே'' இருந்தது. அவரது சங்கீதங்களை இன்னொரு முறை வாசித்துப் பாருங்கள். இக்கருத்து மேலோங்கி நிற்பதைக் காண்பீர்கள். ''உம்மை நம்பியிருக்கிறேன் .... உம்மையே நம்பியிருக்கிறேன்'' என்று தாவீது அடிக்கடி தேவனிடம் அறிக்கையிட்டார். நாம் ஆண்டவரை நெருங்க நெருங்க, ஆன்மீக வாழ்வில் வளர வளர, நமது காரியங்களில் மானிடச் சார்பு குறைந்துகொண்டே வரவேண்டும். மனிதத் தாங்கிகளாய் நமக்கு ஆதரவாய் இருப்பவர்களைக்கூடச் சில வேளைகளில் தேவன் நமக்குத் தூரப்படுத்துவார். மீகா 7:5,6, ''சிநேகிதனை விசுவாசிக்க வேண்டாம்; வழிகாட்டியை நம்ப வேண்டாம்; உன் மடியிலே படுத்துக்கொள்ளுகிறவளுக்கு முன்பாக உன் வாயைத் திறவாமல் எச்சரிக்கையாயிரு ... மகன் ... தகப்பன் ... மகள் ... தாய் ... மருமகள் ... மாமியார் ... மனிதனுடைய சத்துருக்கள் அவன் வீட்டாரே.'' குடும்பத்தாரை நம்பக் கூடாது என்பது இங்கு பொருளல்ல. இவர்கள் எல்லாரையும்விடக் கர்த்தர்மீது, இரட்சிப்பின் தேவன்மீது, சார்ந்திருக்கவேண்டுமென்பதே வலியுறுத்தப்படுகிறது



என்பது அடுத்த வசனமாகிய 8ஆம் வசனத்திலிருந்து தெளிவாகிறது. நூறு சதவீதம் உண்மையுள்ள தேவனோடு ஒப்பிடுகையில் எந்த மனிதனும் பொய்யன்தானே? (ரோ 3:4)

(6) ***பொருளாதாரச் சிந்தையே*** தலையோங்கி நிற்கும் இவ்வுலகில் தேவனைச் சார்ந்து வாழ்வது என்பது ஒரு சவால்தான். இந்த அளவு இல்லையென்றாலும் இதேவிதப் போக்கு மனிதச் சரித்திரத்தின் ஆரம்பக் காலங்களிலேயே இருக்கத்தான் செய்தது. எனவேதான் பொருளாசைக்கு எதிரான உபதேசம் நீதிமொழிகளில் அதிகம் காணப்படுகிறது. ஆண்டவராகிய இயேசுவும் இதற்கு எதிராகப் பலமுறை போதித்தார். தம்மீது நம்பிக்கை வைக்காது தனது வருமானத்திலேயே அகமகிழ்ந்துகொண்டிருந்தவனைத் தேவன் ''முட்டாளே'' என்றழைத்தார். ''நிலையற்ற'' செல்வத்தை நம்பாது ''நித்தியமான'' தேவன்மீது நம்பிக்கையாயிருக்கச் செல்வந்தருக்குக் கட்டளையிடும்படித் தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதினார் (1 தீமோ 6:17). பிரிய மானவர்களே, எதிர்காலத்தைக் குறித்த நமது நம்பிக்கை வங்கியிலுள்ள வைப்புத் தொகைமீது இருக்கிறதா, நாளையத்தினத்தைத் தமது கரத்தில் வைத்திருக்கும் வல்லவர்மீது இருக்கிறதா?

மேற்குறிப்பிட்ட ஆறு காரியங்கள் மட்டுமல்ல, நம்மையடுத்த பிற காரியங்களிலும் தேவனையே சார்ந்திருக்க நாமே முன்வந்து தீர்மானம் எடுக்காவிடில், நாம் எதிர்நோக்கியிருக்கும் வாசல்களை ஒருவரும் திறக்கமுடியாதபடி அவரே அடைத்துவிடுவார். சாவி அவர் கையில்தான்! (வெளி 3:7). பிரசங்க ஆயத்தம் எவ்வளவுதான் செய்திருந்தாலும், ஒவ்வொரு முறை பிரசங்கப்பீடத்தில் ஏறுமுன்பும், தம்பி எசேக்கியாவின் பாடலை என்னையறியாமலே பாடிவிடுவேன் —

*உம்மால் அன்றி என்னால் ஆகும்*
*என்று சொல்ல ஒன்றும் இல்லை;*
*கொடியானது என்றும் தனியே*
*கனி தராது என்று சொன்னீரே!*
*செடியே, உம்மில் நிலைத்திருந்து நான்*
*கனிகள் தந்து என் வாழ்வை முடிப்பேன்.*

# கேள்வி 11

***''உடல் முழுவதும் கண்ணானால் காது எங்கே?***
***அது முழுவதும் காதானால் மோப்பம் எங்கே?***
***அவையெல்லாம் ஒரே உறுப்பாயிருந்தால் உடல் எங்கே?''***

**(1 கொரிந்தியர் 12:17,19)**

கொரிந்து சபையில் நிறைவுகளும் பல, குறைவுகளும் பல. எடுத்துக்காட்டாக, அங்குள்ள விசுவாசிகள் உபதேசத்திலும் அறிவிலும் மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாய் இருந்தனர் (1 கொரி 1:5). அப்படியே அங்கு ஆன்மீக வரங்கள் அத்தனையும் செயல்பாட்டிலிருந்தன (வச 7). ஆனாலும் இந்த வரங்களைப் பயன்படுத்துவதில் அங்குச் சில குளறுபடிகள் இருந்தன. அவற்றைச் சரிசெய்யவே அப்போஸ்தலன் பவுல் அவர்களுக்கெழுதிய முதல் நிருபத்தின் 12ஆம், 13ஆம், 14ஆம் அத்தியாயங்கள். தனது திருத்துதல் உபதேசத்திற்கு அடிப்படையாகத் திருச்சபையைக் கிறிஸ்துவின் திருவுடலுக்குப் பவுல் ஒப்பிடுகிறார். ''உடல் ஒன்று, உறுப்புகள் அநேகம்; உறுப்புகள் அநேகம், உடல் ஒன்று'' என்ற கருத்தினை முன்வைத்துத் திருச்சபையின் அத்தியாவசியத் தேவையாகிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறார் (1 கொரி 12:20). ஒரு சில கவர்ச்சிகர வரங்களிலேயே கொரிந்து சபையினர் அளவுக்கு மீறிய ஆர்வம் காட்டியதால் அங்கு ஏற்பட்ட குழப்பங்களைச் சரி செய்ய முயன்ற வேளையில்தான், ''உடல் முழுவதும் கண் என்றால் காது எங்கே?'' என்ற இக்கேள்வியைப் பவுல் கேட்டார் (வச 17).

இன்றும் நமது திருச்சபைகளின் கூடுகைகளிலும் ஊழியங்களிலும் ''திருச்சபை ஓர் உடல்'' எனும் தத்துவம் நடைமுறையில் போதுமான அளவு புரியப்படவில்லை என்பதே உண்மை. ஒரு சில வரங்கள் மற்றும் ஊழிய வகைகளில் மட்டுமே பெரும்பாலானோர் ஆர்வம் காட்டி ஈடுபாடு கொள்வதால் ஒருவர் செய்வதையே



அடுத்தவரும் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. எல்லாரும் எல்லாவற்றையும் செய்ய முயலுவது திருச்சபையில் பேரிழப்பையே உண்டாக்கும். கவர்ச்சிகரமானவை பின்னால் போவது மனித இயல்பு. ஆனால் ஆன்மீகக் காரியங்களில் இது நன்றன்று. ''எதற்கு இன்று கிராக்கி?'' என்ற அடிப்படையில் அல்ல, ''எது எனது அழைப்பு?'' என்ற தெளிவுடன்தான் ஊழியங்களில் ஊழியர்கள் தெரிந்தெடுப்பு செய்யவேண்டும். சில எடுத்துக்காட்டுகளைக் கீழே தருகிறேன் —

எல்லாரும் பத்திரிகை ஊழியம் செய்ய வேண்டுமென்பது கட்டாயமல்ல. எழுதும் கிருபையும் இலக்கியத் திறனும் உள்ளவர்களே பிரசுரிப்பு ஊழியங்களில் ஈடுபடவேண்டும். எல்லாரும் தங்கள் செய்திகளை ஒளிபரப்ப அவசியமில்லை. தங்களது சபை அல்லது சங்கம் அல்லது குழுவுக்கு மட்டுமே என்று தேவனிடமிருந்து பெறப்படும் செய்திகள் முழுவுலகிற்கும் அறிவிக்கப்படவேண்டிய அவசியமில்லை. நான்கு மிஷனரிகளை எங்காவது அனுப்பினால்தான் காணிக்கை நிறைய வரும் என்று இச்செயல்பாட்டில் இறங்கினவர்கள் எத்தனை பேர் தெரியுமா? அப்படியே வேதாகம மொழியாக்கப் பணி எல்லாருக்கும் உரியதல்ல. அதற்குத் தேவையான அர்ப்பணிப்பும் தியாகமும் தனி. அமெரிக்காவிலிருந்து பணம் வருகிறது என்று எல்லாரும் அனாதை இல்லங்களையும் வேதாகமப் பள்ளிகளையும் நிறுவவேண்டியதில்லை. இந்தியாவில் பரவியுள்ள இந்தத் தொற்றுநோயினால் அனாதை இல்லங்களுக்குப் போதுமான அனாதைப் பிள்ளைகள் கிடையாது; வேதாகமக் கல்லூரிகளுக்குப் போதுமான மாணவர் கிடையாது. இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஒவ்வொருவரும் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்பிலும் நிலையிலும் உறுதியாயிருந்து அதில் திருப்தியடையவேண்டும் (1 கொரி 7:20). அதுவே ''தேவனுக்குமுன்'' பிரியமாயிருக்கும் (வச 24). விசுவாசிகள் யாவரும் நற்செய்தியைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் ஆத்துமாதாயகராய்த் திகழவேண்டும்; ஆனால் ''சிலரையே'' ஆண்டவர் சுவிசேஷகராய் அழைத்துள்ளார். விசுவாசிகள் யாவரும் பிறர்க்குப் பக்திவிருத்தியும், தேறுதலும், ஆறுதலும் உண்டாக அகத்

தூண்டலுடன் திருவார்த்தைகளைத் தீர்க்கதரிசனமாக அறிவிக்க முடியும்; ஆனால் ''சிலரையே'' ஆண்டவர் தீர்க்கதரிசிகளாக அழைத் துள்ளார். விசுவாசிகள் யாவரும் கர்த்தரிடம் வருபவர்களுக்குச் சீடத் துவப் பாடங்களைப் போதித்து அவர்கள் ஆன்மீக வாழ்வில் வளர உதவலாம்; ஆனால் ''சிலரையே'' ஆண்டவர் மேய்ப்பராகவும் போத கராகவும் அழைத்துள்ளார் (எபே 4:13). அடிப்படையில் எனது தனிப்பட்ட அழைப்பு ''திருமறைப் போதகர்'' என்பதே. நான் ஆத் துமாதாயம் செய்கிறேன்; ஆனால் நான் ''சுவிசேஷகன்'' என்ற அழைப்பு பெறவில்லை. எனது ஊழியக்காலத் துவக்க முதலே சுவிசேஷக் கூட்டங்களில் பேசுவதற்கான அழைப்புகளைப் பெரும் பாலும் நான் ஏற்கவில்லை. விசுவாசிகளுக்குப் பக்திவிருத்தி உண் டாக்கும் நோக்குடன் ஒழுங்குபடுத்தப்படும் வேதப் போதனை நிகழ்ச் சிகளுக்கான அழைப்புகளையே விரும்பி ஏற்றுவருகிறேன். இவ் விதத் தெளிவுடன் பணியாற்றினால் நமது கனிகள் நிலைத்திருக்கும். எனது போதனைகள் மூலம் வளர்ந்தவர்கள் உலகெங்கும் கனி நிறைந்த ஊழியம் செய்துவருகிறார்கள். இதனால் இறையரசு வளர் கிறது, என் சந்தோஷம் நிறைவடைகிறது.

எனது சாட்சியாக இன்னொரு காரியத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். திருமறையைப் போதிப்பது தேவன் எனக்குத் தந் துள்ள ''அழைப்பு;'' ஓர் எழுப்புதல் மற்றும் மிஷனரி இயக்கத்தை 33 ஆண்டுகள் தலைமை தாங்கி நடத்தியது அவர் எனக்குத் தந் திருந்த ''பொறுப்பு.'' இயக்கத்திலிருந்து 2003இல் ஒய்வு பெற்றபின் எனது அடிப்படை அழைப்பாகிய போதகப்பணியைத் தொடர்கி றேன். இன்னும் எழுத்து வடிவம் பெறாத எனது செய்திகள், பிரசங் கங்கள், போதனைகளைக் குறித்து ஆண்டவர் என்னைப் பாரப் படுத்தியபடி, பிரசங்க அழைப்புகள் ஏற்பதை வெகுவாய்க் குறைத் துக்கொண்டு, நிதானமாய் உட்கார்ந்து எழுதுவதில் ஒவ்வொரு நாளும் பல மணிநேரங்கள் செலவிடுகிறேன். அப்போஸ்தலன் பவு லுக்குக் கட்டாய ஓய்வு கொடுத்து ஆண்டவர் அடிக்கடி சிறைக்கு அனுப்பியிராவிடில் புதிய ஏற்பாட்டின் பல நிருபங்களை அவர் நமக்கு எழுதித் தந்திருக்கமாட்டார்!



புறவினத்தாருக்கு முதலாவது சுவிசேஷத்தைச் சுமந்துசென்றது பேதுரு எனினும், அவர் பிரதானமாக யூதருக்கே அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டார். இதைக் குறித்துக் கலாத்தியருக்குப் பவுல் எழுதிய வரிகள் கூர்ந்து கவனிக்கப்படவேண்டியவை: கலா 2:7-9, ''விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படிப் பேதுருவைப் பலப்படுத்தினவர் புறவினத்தாருக்கு அப்போஸ்தல னாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினார்.'' இது அவரவர்க்கு ''அளிக்கப்பட்ட கிருபை'' என்கிறார் (வச 9). தேவனது இவ்வித அழைப்புக்குள்ளும் தெரிந்துகொள்ளுதலுக்குள்ளும் மனரம்மிய மாய்ச் செயல்படும்போதுதான் ஊழியர்கள் மற்றும் ஊழியங்களுக் கிடையே ''அந்நியோந்நிய ஐக்கியம்'' இருக்கும் (வச 9ஆ). ஊழிய வரம்பும், ஊழிய எல்லையும் மீறப்படுவதாலேயே ஊழியர் பலர் ஒருவருக்கொருவர் எதிர்ப்போட்டியாளராக மாறுகின்றனர். நட்பு தேய்ந்து கசப்பு வளர்கிறது.

சுவிசேஷகர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்களையே (அதா வது, யூதர்களையே) குறிவைக்கின்றனர். கிறிஸ்தவக் காணிக்கை களில் 95 சதவீதம் கிறிஸ்தவர்களுக்காகவே செலவிடப்படுகிறது. அப்பப்பா, தமிழில் மட்டும் எத்தனைக் கிறிஸ்தவ ஒளிபரப்பு நிகழ்ச்சி கள்! பணம் பெருத்த ஊழியர் எத்தனைபேர் பெரும்பாலான இந்தியர் பேசும் இந்தி மொழியில் நற்செய்தியை ஒளிபரப்புகின்றனர்? ஒரிசா, பீஹார் போன்ற பின்தங்கிய மாநிலங்களுக்குத்தானே நமக்கு வரும் காணிக்கைகளில் பெரும்பகுதி செலவழிக்கப்பட வேண்டும்? வானொலி நிகழ்ச்சிகள் மட்டுமிருந்த காலத்தில் ஒரியா மொழியில் கிறிஸ்தவ நிகழ்ச்சியொன்றை 1976இல் முதல் முதல் ஒலிபரப்பியது ஆசீர்வாத இளைஞர் இயக்கமே. இதுவல்லவா தரிசனம்?

கூட்டம் நடத்தத் தூத்துக்குடிக்கு லோத்து சென்றால் பரமக்குடிக்கு அல்லவா கூட்டம் நடத்த ஆபிரகாம் போய்விடவேண்டும்? நாகர் கோவிலுக்கு லோத்து சென்றால் நாகப்பட்டினத்திற்கு அல்லவா ஆபிரகாம் போய்விடவேண்டும்? திருச்சிக்கு லோத்து சென்றால் திருவண்ணாமலைக்கு அல்லவா ஆபிரகாம் செல்லவேண்டும்? அது தானே ஆபிரகாம் நமக்குக் காட்டும் முன்மாதிரி? (ஆதி 13:9). அது

தானே பவுல் நமக்குக் காட்டும் முன்மாதிரி? (ரோ 15:20,21). திரும்பத் திரும்ப நாசரேத்துக்கும், நாகர்கோவிலுக்கும் போவது பவுலுக்குத் தடைபட்டது இதனால்தானே? (வச 22). நமது கதை? அதே நகரம், அதே கூட்டம், அதே பிரசங்கம், அதே ஜெபம், அதே தந்திரம்! *இரங்குமே, என் இயேசுவே!*

நமது உடலின் உறுப்புகள் எவ்விதம் இசைவாய்ச் செயல்படு கின்றனவோ அப்படியே திருச்சபையின் அங்கத்தினர்களும் செய லாற்றவேண்டுமென்று அப்போஸ்தலன் பவுல் தந்துள்ள ஒப்புமை இணையற்றது. இது அவருக்குக் கிடைத்த தனித்துவ வெளிப்பாடு. திருச்சபையின் உறுப்பினர்களாக நாம் எவ்விதம் இணைந்து, ஒத்துழைத்துச் செயல்படவேண்டும் என்பதற்குப் பழைய ஏற்பாட் டில் ஓர் எடுத்துக்காட்டு உண்டு: ஏசா 41:6,7, ‘‘ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசை செய்து, ‘திடன்கொள்’ என்று சகோதரனுக்குச் சகோதரன் சொல்லுகிறான். சித்திரவேலைக்காரன் தட்டானையும், சுத்தியாலே மெல்லிய தகடு தட்டுகிறவன் அடைகல்லின்மேல் அடிக்கிறவனை யும் உற்சாகப்படுத்தி, ‘இசைக்கிறதற்கான பக்குவம்’ என்று சொல்லி, அது அசையாதபடி அவன் ஆணிகளால் அதை இறுக்குகிறான்.’’ இவ் விதம் செயல்படும்போதுதான் நாம் இறையரசிற்காய் அசாதாரண மானவற்றைச் சாதிக்கமுடியும் (வச 15). இன்று ஊழியர்கள் ஒரு வருக்கொருவர் உதவியாய் இருப்பதற்குப் பதிலாக உபத்திரவமாய் மாறிவிடுகின்றனர். யோவாபும் அபிசாயும் சகோதரர். யுத்தக்களத்தில் இறங்கும்போது அபிசாயிடம் யோவாப் கூறிய வார்த்தைகளைக் கவனியுங்கள்: 2 சாமு 10:11,12, ‘‘சீரியர் கை ஒங்குகிறதாயிருந்தால் நீ எனக்கு உதவி செய்யவேண்டும்; அம்மோனியர் கை ஓங்குகிறதா யிருந்தால் நான் உனக்கு உதவிசெய்ய வருவேன். தைரியமாயிரு! நமது மக்களுக்காகவும் நமது தேவனுடைய பட்டணங்களுக்காகவும் வீறுகொண்டு போரிடுவோம்!’’ நாம் பிசாசுக்கு எதிராகப் போர் தொடுப்பதற்குப் பதிலாக அடுத்த ஊழியனுக்கு எதிராக அல்லவா போர்க்கொடி தூக்குகிறோம்,? ‘‘ஒரே சரீரம்’’ என்று அறிக்கையிடு கிறோம்; நாம் எதிர்க்கவேண்டியது ‘‘ஒரே சத்துரு’’ என்று அறி வோமா?



என்றுமில்லாத அளவு கிறிஸ்தவத்திற்கு எதிரான சக்திகள் இன்று இந்தியாவில் தலைதூக்கியுள்ளன. கிறிஸ்தவத்தை எதிர்ப்பதில் பலரும் ஒன்றுகூடியிருக்கின்றனர்; கிறிஸ்துவை அறிவிப்பதில் நாம் ஒன்றுபட்டிருக்கிறோமா? சாத்தான் பிரிந்திருக்கவில்லையே, சபைதானே பிரிந்திருக்கிறது? (மாற் 3:23-26). இந்தியாவில் மட்டு மல்ல, உலகின் பல பாகங்களிலும் துன்புறுத்தலுக்குத் திருச்சபை ஆளாகியிருக்கிறது. ஓர் உறுப்பு பாடுபட்டால் பிற உறுப்புகள் அதனு டன் பாடுபடவேண்டுமே? (1 கொரி 12:26). எபிரெயர் நிருப ஆக்கி யோனின் அழைப்பு: எபி 13:3, ‘‘கட்டப்பட்டிருக்கிறவர்களுடன் நீங்களும் கட்டப்பட்டிருக்கிறவர்கள்போல அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்; நீங்களும் உடலில் இருப்பவர்கள் என்று அறிந்து, தீங்கு அனுபவிக்கிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்.’’ திருச்சபை மேய்ப்பர்களே, துன்புறுத்தப்படும் சபையைப் பற்றியும், துன்புறுத்தப்படுதலுக்கான ஆயத்தம்பற்றியும், இரத்தசாட்சி மரணம் குறித்தும் ஐம்பத்திரண்டு ஞாயிறு பிரசங்கங்களில் எத்தனை முறை பேசுகிறீர்கள்? ஒவ்வொரு வாரமும் கிறிஸ்தவர்களுக்கெதிராக நடக் கும் அட்டூழியங்களை அந்தந்த ஞாயிறன்று உங்கள் சபையாருக்கு அறிவித்து அவர்களை ஜெபத்தில் நடத்துகிறீர்களா? (அப் 4:23-31). இதற்கெல்லாம் நேரமில்லையெனில், ஒரு காசு பெறாத காணிக்கை வரவு செலவு அறிக்கை வாசிப்பதை நிறுத்துங்கள். என்மீது கோபம் வருகிறதா? வழக்காடுவோம், வாருங்கள்!



# கேள்வி 12

***“நீர் பாவம் செய்தால் அதினால் தேவனுக்கு என்ன நஷ்டம்? உமது மீறுதல்கள் மிகுதியானாலும் அதினால் அவருக்கு என்ன சேதம்? நீர் நீதிமானாய் இருந்தால் அதினால் அவருக்கு என்ன கிடைக்கும்? அல்லது அவர் உமது கையில் என்ன லாபம் பெறுவார்?”***

**(யோபு 35:6,7)**

யோபுவின் சரிதையில் அவருக்கும் அவரது நண்பர்களுக்கும் இடையிலான உரையாடல்களில் தத்துவமும் ஆன்மீகமும் நிறைந்து காணப்படுகின்றன. ஒரு சில குறிப்புகளைத் தவிரப் பெரும்பாலானவை திருமறையின் பொதுவான உபதேசத்திற்கு ஏற்றவையே. மேற்கண்ட கேள்வியை யோபுவின் நான்காம் நண்பனாகிய எலிகூ கேட்டார். முதல் மூன்று நண்பர் பேசியவை எலிகூவுக்குத் திருப்தியாயில்லை. ஆனாலும் அவர்கள் இவரைவிட மூத்தவர்களானதால் இவர் இதுவரை அமைதியாயிருந்தார். சில சமயங்களில் முதியவர்களுக்குப் புரியாதவை இளைஞர்களுக்குப் புரிந்துவிடும். அதே வேளையில், எலிகூவுக்குத் தெரிந்த இக்கருத்து முந்திய மூவருக்கும் அறவே தெரியாதது என்றும் சொல்வதற்கில்லை. முதல் மூவரில் ஒருவராகிய எலிப்பாஸ் என்பவர் முன்னதாகவே இதேவிதக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்: ‘‘ஒரு மனிதன் விவேகியாயிருந்து, தனக்குத்தான் பயனுள்ளவனாய் இருப்பதால் தேவனுக்குப் பயனுண்டாக்குவானோ? நீர் நீதிமானாய் இருப்பதினால் சர்வ வல்லவருக்கு நன்மை உண்டாகுமோ? நீர் உமது வழிகளை உத்தமமாக்குகிறது அவருக்கு ஆதாயமாய் இருக்குமோ?’’ (22:2,3).

இக்கேள்விகள் அதிமுக்கியமான திருமறைச் சத்தியம் ஒன்றினை நமக்குப் புலப்படுத்துகின்றன. அதாவது, தேவனானவர் நிறைவில் நிறைவானவர், முழுமையில் முழுமையானவர், பூரணத்தில்



பூரணமானவர்! (God is absolutely absolute, completely complete, perfectly perfect!). அவரோடு நாம் எதையும் கூட்டத் தேவையுமில்லை, கூட்டவும் முடியாது. அவரிலிருந்து நாம் எதையும் கழிக்கவும் முடியாது. குறைவே இல்லாத அவர் தம்மில்தாமே நிறைவானவர். அவரால் தனித்தே, யாரும் இல்லாமலே, யாரும் உதவாமலே, நிறைவாயிருக்கமுடியும். எனவேதான் அவர் தமது பெயரை, ‘‘இருக்கிறவராகவே இருக்கிறவர்’’ என்று மோசேக்கு வெளிப்படுத்தினார் (யாத் 3:14). இதைத்தான் தேவனது தன்னிறைவு (self- sufficiency), அவரது தனிச்சுதந்திரம் (independence) மற்றும் அவரது தனித்திருப்பு (solitariness) என்றழைக்கிறோம். தேவனைப்பற்றிய இந்த அறிவே அறிவு என்பேன். ஏனெனில், இதுதான் அவரை மையமாய்க் கொண்ட விசுவாசம்; அவரை மையமாய்க் கொண்ட இறையியல்; அவரை மையமாய்க் கொண்ட கிறிஸ்தவ வாழ்வு. இதனைத் தெளிவுபடுத்த சில எடுத்துக்காட்டுகளை இங்கு கவனிப்போம் —

(1) முதலாவது, ***பரிசுத்த வாழ்க்கை.*** எலிகூவும் எலிப்பாசும் கேட்ட கேள்விகள் பரிசுத்த வாழ்வை அடுத்தவையே. நாம் பரிசுத்தமாய் நடப்பது தேவனுக்குப் பிரியம்; அது அவருக்கு லாபம் அல்ல. வேறுவிதமாய் நாம் நினைத்தால் அது தேவனுக்கு அவதூறு. நமது நீதியெல்லாம் அவருக்குமுன் அழுக்கான கிழிந்த துணியாயிருக்கிறது. நமது மனதைவிட்டு ஒருபோதும் அகலக்கூடாததொரு திருவசனம்: ஏசா 64:6, ‘‘நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல் இருக்கிறோம்; எங்களுடைய நீதிகள் எல்லாம் அழுக்கான கந்தை போல் இருக்கின்றன; நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகின்றன.’’ நாம் ‘‘அனைவரும்’’ தீட்டானவர்கள்; நமது நீதிகள் ‘‘எல்லாம்’’ அழுக்கானவை; நாம் ‘‘அனைவரும்’’ இலைகள்போல் உதிருகிறோம்!

தேவனிடம் வரும்போது நாம் உடுத்தியிருந்த அழுக்கான உடையை அவர் நமக்குத் துவைத்துத் தரவில்லை! அந்த உடை அழுக்கானது மட்டுமல்ல, கிழிந்தது. அது குப்பைத் தொட்டிக்குத்தான் உரியது. ஆண்டவர் நமக்கு ஒரு புதிய ஆடை கொடுத்துவிட்டார்.

அதுதான் ''இரட்சிப்பின் வஸ்திரம்'' என்பது; அதுதான் ''நீதியின் சால்வை'' என்பது! (ஏசா 61:10). இப்பொழுது நமது பூரிப்பும் மகிழ்ச்சியும் நமது செயலாற்றல்மீது அல்ல, ''கர்த்தருக்குள்!'' இப் பொழுது நமது களிகூருதல் நமது ஆன்மீகத்தின்மீது அல்ல, ''தேவ னுக்குள்!'' இது ஒரு கொண்டாட்டம். இது ஒரு திருமண வைபவம் போன்றது. எனவேதான் இவ்வசனத்தில் ''மணமகனின் ஆபரணங் கள்'' மற்றும் ''மணமகளின் நகைகளினால்'' உண்டாகும் ''அலங் காரம்'' மற்றும் ''சிங்காரம்'' ஒப்புமையாய்க் கூறப்பட்டுள்ளன. பூப் பூத்துக் குலுங்கும் ஒரு பிருந்தாவனத்திற்குள் நுழைந்தது போன்ற அனுபவமாம் இது. இங்கு முளைப்பது ''நீதி,'' காய்ப்பது ''துதி'' (வச 11). இச்சத்தியம் விளங்காததால்தான் இரட்சிக்கப்பட்டும் பலரது வாழ்க்கையில் ஆட்டமும் இல்லை, பாட்டமும் இல்லை, வெறும் வாட்டம்தான்! (No singing, but only sighing!)

தீர்க்கன் ஏசாயா உரைத்ததிலிருந்து நாம் அறியும் இச்சத்தியத்தை நாம் கூடுதலாகப் புரிந்துகொள்ள அப்போஸ்தலன் பவுல் நம்மை இன்னும் ஓரடி முன்னெடுத்துச் செல்கிறார். ஆண்டவர் நம்மைத் தமது நீதியின் ஆடையினால் உடுத்துவிப்பது மட்டுமல்லாது, அவரே நமக்கு ''நீதி'' என்றாகிவிடுகிறார். ''கிறிஸ்து இயேசுவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்பும் ஆனார்'' (1 கொரி 1:31). தேவன் ஏன் இப்படிச் செய்தார் என்று முந்திய வசனம் விளக்கு கிறது: ''மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டுவதற்கேதுவாக ...'' (வச 30). ''நான் அந்தப் பாவம் செய்வ தில்லை, இந்தப் பாவம் செய்வதில்லை, தேவனுக்குமுன் நீதியுள்ள வன்'' என்று எவரும் தம்பட்டம் அடிக்க இங்கு இடமேயில்லை. சுயநீதியை ''அழுக்கான கந்தை'' என்று தள்ளிவிடுகிறார் ஏசாயா; அதனைக் ''குப்பை'' என்று எறிந்துவிடுகிறார் பவுல் (ஏசா 64:6; பிலி 3:9,11). பாவத்தைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணராகிய யேகோவா தேவன் அவரிடம் சரணடைந்த பாவியாகிய என்னை இன்று அவரது பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் வழியாகவே பார்க்கிறார். தேவன் என்னைப் பார்க்கும்போதெல்லாம் அவரது குமாரனின் நீதியும் பரிசுத்தமுமே அவரது கண்களில் படுகின்றன!



நமது பாவங்களை தேவனிடம் அறிக்கையிடும்போது அவரது குமாரனது இரத்தத்தால் கழுவப்படுகிறோம். இதிலும்கூட நாம் நமது பாவ அறிக்கையின்மீது சார்ந்துவிடக்கூடாது. நாம் பாவங்களை மெய்யாய் அறிக்கையிடவேண்டும்; திட்டமாய் மனந்திரும்பவேண் டும். ஆனால் மன்னிக்கப்படுதலின் அல்லது கழுவப்படுதலின் தரமானது நமது மனந்திரும்புதலின் ஆழத்தைப் பொருத்ததல்ல. இதைக் குறித்துத் தேவன் சொல்லுவதைக் கவனியுங்கள்: ஏசா 43:25, ''நான், நானே உன் மீறுதல்களை என் பொருட்டே குலைத்துப் போடு கிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்.'' ''நான் ... நானே ... என் பொருட்டே ...'' என்ற தேவனுடைய வார்த்தைகளை மனதிலிருத்திக்கொள்ளுங்கள். நம்மால் அவருக்கு எதுவும் கூடு வதோ குறைவதோ கிடையாது; அவரால்தான் நமது பாவம் துடைத் தழிக்கப்படுகிறது, நமது பரிசுத்தம் வளர்கிறது.

(2) தேவனுக்கு நம்மால் எதையும் கூட்டவும் முடியாது, அவரிட மிருந்து எதையும் குறைக்கவும் முடியாது என்பதை நாம் உணர வேண்டிய அடுத்த பகுதி நமது ***தொழுகை, ஆராதனை.*** தேவனைத் துதிப்பதிலும், ஆராதிப்பதிலும், தொழுதுகொள்வதிலும் இன்று திருச்சபையெங்கும் காணப்படும் புத்தார்வத்திற்காய் நான் தேவ னைத் துதிக்கிறேன். இறுதிக்காலத்தில் இறைமக்கள் பெற்றனுப விக்கவிருக்கும் புத்துயிரின் ஒரு வெளிப்பாடுதான் இது என்று நம்பு கிறேன். ஆனாலும் ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது: நாம் துதிப் பதும் ஆராதிப்பதும் அவரைப் புகழவும், அவரை உயர்த்தவும், அவரை மகிமைப்படுத்தவுமே. அதனால் அவருக்கு எதுவும் கூடிவிடாது. இதனை மார்ஸ் மேடையிலிருந்து அப்போஸ்தலன் பவுல் முழங் கினார்: அப் 17:25, ''தேவனானவர் தமக்கு ஏதோவொன்று தேவை யானதுபோல, மனிதர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதில்லை.'' இது ஏன் என்று இதற்கு முந்திய வசனத்திலும் இந்த வசனத் துவக் கத்திலும் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகிறார்: உலகையும் அதி லுள்ள ''யாவையும்'' உண்டாக்கியவர் தேவனே! விண்ணுக்கும் மண் ணுக்கும் ஆண்டவர் அவரே! ''எல்லாருக்கும்'' உயிரையும் சுவாசத்

தையும் கொடுப்பவர் அவரே! எல்லாருக்கும் ''எல்லாவற்றையும்'' கொடுப்பவர் அவரே! பிரியமானவரே, அப்போஸ்தலனின் விவாதம் உங்களுக்குப் புரிகிறதா?

இதனால்தான் தாவீது தேவனிடம் இப்படி வேண்டினார்: ''ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உமது புகழை அறிவிக்கும்'' (சங் 51:15). இச்சங்கீதத்தில் ''அப்பொழுது'' என்ற சொல்லைத் தாவீது எட்டு முறை பயன்படுத்துகிறார் (வச 7,8,13,14,15,19). அதாவது, தேவனை ஆராதிக்க நம்மை உந்துபவரும் நமக்கு உதவுபவரும் அவரே. நமது ஆராதனையெல்லாம் அவரது உந்துதலுக்கான பிரதிபலிப்புச் செயல்தான். மற்றொரு சங்கீதத்தில் தாவீது அறிக்கையிட்டது: என் நாவில் புதுப் பாட்டை ''அவர்'' தந்தார்; அதுவே நான் அவரைத் துதிக்க உதவுகிறது (சங் 40:3).

*எந்தன் நாவில் புதுப்பாட்டு*
*எந்தன் இயேசு தருகிறார்!*
*ஆனந்தம் கொள்ளுவேன், அவரை நான் பாடுவேன்,*
*உயிருள்ள நாள் வரையில் — அல்லேலூயா!*

ஆண்டவரை நாம் துதிக்காவிட்டால் அவர் வறண்டு வாடிவிடுவார் என்றும் நாம் நினைத்துவிடக்கூடாது. குருத்தோலை ஞாயிறன்று ஆண்டவர் எருசலேமில் வெற்றிப் பவனி சென்றபோது சீடர் திரள், ''கர்த்தருடைய நாமத்தினால் வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; பரலோகில் சமாதானமும் உன்னதத்தில் மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடு தேவனைப் புகழ்ந்தார்கள்'' (லூக் 19:37,38). இவ்விதத் துதியொலி பிடிக்காத சில பரிசேயர் ஆண்டவரைப் பார்த்து, ''போதகரே, உமது சீடரை அதட்டும்'' என்றனர் (வச 39). அதற்கு இயேசு கொடுத்த பதில்: ''இவர்கள் அமைதியாயிருந்தால் கற்களே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (வச 40). ஆம், பிரியமானவர்களே, நாம் தேவனை ஆராதித்துத் தொழுதுகொள்ளாவிடில் பரலோகில் அவரது புகழோ மகிமையோ குறைந்து போகாது. கற்களை ஆபிரகாமின் பிள்ளைகளாக்கி அவர்களைத் துதிக்கவைப்பது அவருக்குப் பெரிய காரியமல்ல!



(3) அடுத்து வருவது நாம் தேவனுக்குச் செலுத்தும் ***காணிக்கைகள்.*** இப்பூவுலகில் இருந்த காலத்தில் இயேசுவானவர் ஏழ்மையாயிருந்ததுபோல் தேவன் ஓர் ஏழை என்று நாம் நினைத்துவிடக் கூடாது. தற்காலிகமாக, நமக்காக, இயேசு எடுத்த கோலமே ஏழ்மை. இன்று நாம் தேவனுக்குக் கொடுக்கும் எதுவும் அவருக்கோ அவரது கஜானாவுக்கோ எதையும் கூட்டிவிடுவதில்லை. இதைக் குறித்துப் பவுல் விடும் சவால்: ''தனக்குப் பதில் (உபகாரம்) கிடைக்கும்படி முதலாவது கர்த்தருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்?'' (ரோ 11:35). அன்று யோபுவிடம் கர்த்தர் கேட்ட கேள்வியும் இதுதானே? யோபு 41:11, ''தனக்குப் பதில் கொடுக்கப்படும்படி, முந்தி எனக்குக் கொடுத்தவன் யார்? வானத்தின் கீழுள்ளவை எல்லாம் என்னுடையவை.''

தங்களது பலிகளினாலும் காணிக்கைகளினாலும் தேவனிடம் சமரசம்பண்ணிக்கொள்ளலாம் என்ற தவறான கருத்து இஸ்ரவேலரிடையே நிலவிவந்தது. சிலை வணக்கத்தாராகிய புறவினத்தாரிடமிருந்துதான் அவர்கள் இவ்வித மட்டரகமான யூகத்திற்குள் வந்திருப்பர். அவர்களைத் திருத்த தேவன் கூறியது: ''என் ஜனமே, கேள், நான் பேசுவேன்; நானே தேவன் ... அனைத்து மிருகங்களும் பறவைகளும் என்னுடையவை ... நான் பசியாய் இருந்தால் உனக்குச் சொல்லமாட்டேன்; பூவுலகும் அதின் நிறைவும் என்னுடையவையே'' (சங் 50:7-12). நமது காணிக்கைகள் ஆண்டவரைச் சமாதானப்படுத்தி அமைதிப்படுத்தும் (appease) என்று லஞ்சம் கொடுப்பதில் கைதேர்ந்த இந்தியராகிய நாம் கனவிலும் நினைத்துவிடக்கூடாது. அவ்வித எண்ணம் அபத்தம்.

நம்மிடம் இருப்பது ஒன்றும் நம்முடையவை அல்லவே. தேவனுக்குக் காணிக்கை கொடுக்கும் போதெல்லாம் நமது மனதில் தலையோங்கி நிற்க வேண்டியது தாவீதரசனின் அறிக்கையே: ''எங்கள் தேவனே, இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திறன் உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் மக்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்தில் வாங்கி உமக்குக் கொடுத்தோம் ... இந்தப் பொருட்களெல்லாம் உமது கரத்திலிருந்து வந்தன; எல்லாம் உம்முடையது'' (1 நாளா 29:14,16). இப்படியிருக்கிறபடியால்,

தேவன் ஒருபோதும் எந்த மனிதனுக்கும் கடன்பட்டவரல்ல! நமது காணிக்கைகள் பரலோக வங்கியின் இருப்புத் தொகையைக் கூட்டுவதில்லை. காணிக்கையோ தானதர்மமோ பரலோகில் ''நமக்குத்தான்'' பொக்கிஷங்களைச் சேர்க்கும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள் ''உங்களுக்கு ... உங்களுக்கு ...'' (மத் 6:19-21).

**(4)** நாம் தேவனுக்கு லாபம் உண்டாக்கவோ நஷ்டம் ஏற்படுத்தவோ முடியாது என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு: நாம் அவருக்குச் செய்யும் ***சேவை.*** தேவனைச் சேவிப்பது நாம் அவருக்குச் செய்யும் தயவோ உபகாரமோ அல்ல; அது நமக்குக் கிடைத்த பாக்கியம், சிலாக்கியம். அவரது நாமத்திற்காக நாம் மேற்கொள்ளும் பணிகளைக் குறித்து நாம் ஒருபோதும் பெருமிதம் அடையக்கூடாது. தகுதியற்ற நம்மீது அன்புகூர்ந்த அவருக்கு, நீசரான நம்மை இரட்சித்த அவருக்கு, அருகதையற்ற நம்மைத் தமது பிள்ளைகளாக்கிய அவருக்கு, நாம் எதைச் செய்தாலும் அது ஈடாகாது. இதைக் குறிப்பிட்டு நமது மனதைத் திருத்தும் ஒரு வசனப் பகுதி: ஏசா 66:1,2, ''விண்ணகம் எனது சிங்காசனம், மண்ணகம் எனது கால்மணை; அவ்வாறிருக்க, எத்தகைய கோவிலை நீங்கள் எனக்காகக் கட்டவிருக்கிறீர்கள்? எத்தகைய இடத்தில் நான் தங்கியிருப்பேன்? இவை அனைத்தையும் என் கைகளே உண்டாக்கின; இவை யாவும் என்னால் உருவாகின, என்கிறார் ஆண்டவர்; ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு எனது வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்.'' பரிசுத்த நடுக்கம் நம்மை விட்டு நீங்கும்போது நாம் நிலைதவறித் தடுமாறுவோம்.

ஆண்டவராகிய இயேசு இதே கருத்தை வேறொரு எடுத்துக்காட்டின் மூலம் விளக்கினார். நமது வேலைக்காரன் ஒருவன் வயலை உழுதுவிட்டு அல்லது மந்தையை மேய்த்துவிட்டு வீடு திரும்புகிறான். அவன் களைப்பாயிருப்பதால், ''நீ முதலாவது சாப்பிடு'' என்று சொல்வோமா? இல்லை. மாறாக, ''எனக்குச் சமைத்துக்கொடு; நான் சாப்பிட்டபின் நீ சாப்பிடலாம்'' என்றுதானே சொல்லுவோம்? நாம் சொன்ன வேலைகளையெல்லாம் அவன் முடித்துவிட்டதால் அவனுக்கு உபசாரம் செய்வோமோ? இல்லையே! இதைச் சொன்ன



பின் ஆண்டவர் தமது சீடரிடம் கூறியது: ''அப்படியே நீங்களும் உங்களுக்குக் பணிக்கப்பட்ட யாவையும் செய்தபின்பு: நாங்கள் பயனற்ற பணியாளர்கள்; செய்யவேண்டிய கடமையைத்தான் செய்தோம் என்று சொல்லுங்கள்'' (லூக் 17:7-10).

இப்படியெல்லாம் சொல்லுவதால், ஆண்டவர் நமது ஜெபங்களை அவமதிக்கிறார் என்று பொருளா? இல்லை, நமது ஜெபங்கள் அவருக்குமுன் தூபவர்க்கமாய் எழும்புகின்றன. அவர் நமது காணிக்கைகளை அலட்சியப்படுத்துகிறாரா? இல்லை, அதை அவர் சுகந்த வாசனையாய் முகர்கிறார். அவர் நமது துதி ஸ்தோத்திரங்களை அற்பமாய் எண்ணுகிறாரா? இல்லை, நமது துதிகளின் நடுவில் அவர் வாசம்பண்ணுகிறார். நாம் அவருக்குச் செய்யும் ஊழியத்தை அவர் அனாவசியமாய்க் கருதுகிறாரா? இல்லை, நமது ஊழியத்தின் கனி அவருக்குப் பிரியமான பலி (ரோ 15:15). இவ்வத்தியாயம் நமக்கு வலியுறுத்தும் சத்தியம் என்னவெனில், நாம் செய்யும் எதுவும் தேவனோடு ஒன்றையும் கூட்டாது என்பதே. ''சகலமும் அவராலும், அவர் மூலமாகவும், அவருக்காகவும் இருக்கிறது'' (ரோ 11:36).

இதனால்தான், அவரது உபதேசம் கடினமானதென்று ''அநேகர்'' அவருடன் நடவாமல் பின்வாங்கியபோது, அவர் சற்றும் பதட்டமடையாமல் தமக்கு நெருக்கமாயிருந்த பன்னிருவரைப் பார்த்து, ''நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?'' என்று கேட்டார்! யோ 6:66,67). அவர் ''கூல்''ஆக இருந்தார்.

# கேள்வி 13

*''பாதாளமும் படுகுழியுமே கர்த்தரின் பார்வைக்குத் திறந்திருக்க, மனிதரின் இருதயம் அவரது பார்வைக்கு மறைவாய் இருக்குமோ?''*

**(நீதிமொழிகள் 15:11)**

நம்மைச் சிந்திக்க வைக்கவும் நமக்குச் சவாலிடவும் திருமறையிலிருந்து நம்மை நோக்கிவரும் கேள்விகளுக்காய்த் தேவனைத் துதிப்போம். நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து நாம் தெரிந்தெடுத்துள்ள மேற்கண்ட கேள்வி தேவனுக்குமுன் நாம் திறந்த மனதுடனும் நொறுங்கிய உள்ளத்தோடும் நடக்க வழிவகுக்கும்.

மூன்று காரியங்களைக் குறித்து நாம் கவனமாய் இருக்க வேண்டும் —

1. நான் எப்படியிருக்கிறேன் என்று மக்கள் நினைக்கின்றனர்?
2. நான் எப்படியிருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன்?
3. நான் எப்படியிருக்கிறேன் என்று தேவன் அறிந்திருக்கிறார்?

என்னைக் குறித்து மக்கள் நினைப்பது மற்றும் என்னைக் குறித்து நான் நினைப்பது ஆகிய இரண்டையும்விட என்னைக் குறித்து தேவன் அறிந்திருப்பதே அதிமுக்கியம்.

''இருதயம்'' எனும் வார்த்தையை இன்று (23 ஏப்ரல் 2018) அதிகம் நினைக்கிறேன். 22 ஆண்டுகட்கு முன்னர் இதே நாளில் வேலூரிலுள்ள CMC மருத்துவமனையில் எனக்கு இருதய அறுவை சிகிச்சை நடைபெற்றது. இந்தச் சிகிச்சைக்கு முந்திய ஆண்டுகளை விட இதற்குப் பின்னால் வந்த ஆண்டுகளில் தேவன் என்னைக் கொண்டு செய்த காரியங்கள் அதிகம். ஆம், இருதயம் சீர்ப்படுத்தப் பட்டால் எல்லாம் சரியாகும், மேன்மையாகும்!



நமது இருதயங்களைத் தேவன் அறிந்திருக்கிறார் என்ற அறிவே நமது நடக்கையை அதிகமாய்ப் பாதிக்கும் விசையாகும். எவ்வளவு சீக்கிரம் இச்சத்தியத்தை உள்ளத்தின் ஆழத்தில் பதித்துக்கொள்ளுகிறோமோ அந்த அளவிற்கு நமது ஆன்மீக வாழ்வு செழிக்கும். இச்சத்தியத்தின் முக்கியத்துவத்தை அறிந்த தாவீதரசன் தனது மகன் சாலொமோனிடம் கூறிய வார்த்தைகள்: ''என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவித்திடு; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றென்றைக்கும் கைவிடுவார்'' (1 நாளா 28:9). ஆலயத்தைக் கட்டும் பொறுப்பைச் சாலொமோனிடம் ஒப்படைக்கும்போது தாவீது சொன்ன வார்த்தைகள் இவை. இறைப்பணிக்கு இன்றியமையாதவை இரண்டு: ஒன்று, ''உத்தம இருதயம்,'' அடுத்தது ''உற்சாக மனது.'' எவ்வளவு கவனமாகத் தாவீது ''உத்தம இருதயத்தை'' முதலாவதாகவும், ''உற்சாக மனதை'' அடுத்ததாகவுமே குறிப்பிடுகிறார் பாருங்கள்! இன்று ''உத்தம இருதயம்'' என்பதைவிட ''உற்சாக மனது'' என்பதே ஊழியங்களில் ஊக்குவிக்கப்படுகிறது. ஊழியங்களின் ''அளவு'' (size) பெருகினாலும் ''தரம்'' (sort) உயராதிருப்பதற்குக் காரணம் இதுவே. உத்தமமற்ற உற்சாகத்தைவிட உற்சாகமற்ற உத்தமமே மேல். எனது நண்பர் பொன்ராஜ் ஐசக் அண்ணன் அவர்கள் இயற்றிய ஒரு பாடலிலிருந்து ஒரு கவி என் நினைவுக்கு வருகிறது —

*இரண்டு நாளாகமம் பதினாறு ஒன்பதிலே*
*இருதய உத்தமன் தேடுகின்றீரே;*
*தந்தோம் எம்மை வல்லமை விளங்கவே,*
*தருவீர் உத்தம இருதயம் எமக்கே,*
*தருவீர் தமது வல்லமை உடனே.*

தீர்க்கன் எரேமியா மூலம் தேவனே தம்மைக் குறித்துச் சொல்லியுள்ள வார்த்தைகளைச் சாதாரணமாய் எடுத்துக்கொள்ளக்கூடாது: எரே 17:9,10, ''எல்லாவற்றையும்விட இருதயமே திருக்குள்ளதும்

மகா கேடுள்ளதுமாயிருக்கிறது; அதை அறியக்கூடியவன் யார்? கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும் அவனவன் வழிகளுக்கும் செயல்களின் விளைவுகளுக்கும் ஏற்றபடிக் கொடுப்பதற்காக, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளுணர்வுகளைச் சோதித்து அறி கிறவருமாயிருக்கிறேன்.'' நமது ''செயல்களை'' மட்டுமல்ல, நமது ''வழிகளையும்'' கர்த்தர் அறிந்திருக்கிறார். அதாவது, நாம் என்ன செய்கிறோம் என்பதைவிட எப்படி நடக்கிறோம் என்பதே அவரது கவனத்தை அதிகம் ஈர்க்கும். இருதயத்தை மட்டுமல்ல, உள்ளுணர்வு களையும் (உள்ளிந்திரியங்களையும்) சோதித்து அறிகிறாராம். செயலுக்கு முந்தியது சொல்; சொல்லுக்கு முந்தியது சிந்தனை; சிந்தனைக்கும் முந்தியது? அது என்னவென்று சொல்ல என்னிடம் வார்த்தை இல்லை. ஆனால் ஒன்று புரிகிறது. அதென்னவெனில், எனது உள்ளத்தில் இருப்பதைப்பற்றி எனக்கே தெரியாதவற்றையும் என் தேவன் அறிவார்! ''உள்ளிந்திரியம்'' என்பது ஆங்கில வேதா கமத்தில் ''மனது'' (mind) என்றும், மூல மொழியில் ''சிறுநீரகம்'' (kidney) என்றும் இருக்கிறது. நமது மூளை, இருதயம், சிறுநீரகம் ஆகிய மூன்றும் நமது உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத உள்ளுறுப்புகள், பாருங்கள்!

நமது சகமனிதர் நமக்கு எவ்வளவு நெருக்கமானவர்களாக இருந் தாலும் நமது சொற்கள் மற்றும் செயல்கள் மட்டுமே அவர்களுக்குத் தெரியும். நம்மோடு கூடவே இருப்பவர்களும் நமது சிந்தனைகளை ஓரளவு யூகிக்கத்தான் முடியும். தேவனைப் பொருத்தமட்டில், நமது நாவில் சொல் பிறக்குமுன்பே, யாவும் அவருக்குத் தெரியும். உலகி லுள்ள எல்லா மனிதரையும் குறித்த எல்லாக் காரியங்களையும் அறிந் தவர் அவர் ஒருவரே. இதுதான் அவரது சர்வ ஞானம் (Omniscience) என்பது. ''அவரது பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; அனைத்தும் அவரது கண்களுக்குமுன் நிர்வாணமாயும் வெளிப்படை யாயும் இருக்கின்றது.'' (எபி 4:13). இதனைச் சொல்லிவிட்டு இந் நிருப ஆக்கியோன் நம்மை எச்சரிப்பது: ''அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.'' இதை நாம் மறந்துவிட்டால் நமக்கு ஐயோ! ஏசா 29:15 ''தங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைக்கும்படி மறைவிடங்களில் ஒளித்து, தங்கள் செயல்களை இருட்டில் நடப்



பித்து, நம்மைக் காண்கிறவர் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்ப வர்களுக்கு ஐயோ!'' யோபு 34:21,22, ''தேவனுடைய கண்கள் மனித ருடைய வழிகளை நோக்கியிருக்கின்றன ... அக்கிரமக்காரர் ஒளித்துக் கொள்ளக்கூடிய அந்தகாரமும் இல்லை, மரண இருளும் இல்லை.'' எரே 23:24, ''எவனாவது தன்னை நான் காணாதபடி மறைவிடங் களில் ஒளித்துக்கொள்ளமுடியுமோ என்று கர்த்தர் கேட்கிறார்.'' திருச்சபைக்கு வெளியேயிருப்போரைவிடத் திருச்சபையினர் இச்சத்தியத்தை எப்பொழுதும் நினைவிற்கொள்ளவேண்டும். வெளி 2:23, ''நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய் கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்.'' திருச்சபை யின் தலைவராகிய இயேசு வெளிப்படுத்தலிலுள்ள ஏழு சபை களுக்கும் சொன்னது: ''நான் உன் செயல்களை அறிந்திருக்கிறேன்'' (வெளி 2:2,9,13,19;3:1,8,15).

தேவன் நமது இருதயங்களைச் சுத்தமாக்குகிறார் என்பது ஒரு பக்கம் (அப் 15:9). அவரிடம் மனந்திரும்பி அவரது குமாரனை விசுவாசிக்கும்போது இது நடைபெறுகிறது. பரிசுத்தத்தின் மறுபக்கம் நாம் நமது இருதயத்தைச் சுத்தப்படுத்திக்கொண்டேயிருக்க வேண்டும். இது இடையறாது நாம் மேற்கொள்ளவேண்டிய ஆன்மீகப் பயிற்சி. இது ஓர் ஆசீர்வாதமான அனுபவமென்று இயேசுவானவர் தமது மலைப்பிரசங்கத்தில் சுட்டிக்காட்டினார்: ''இருதயத்தில் சுத்த முள்ளவர்கள் பாக்கியவான்கள்'' (மத் 5:8). சுத்தமுள்ளவர்கள் என்று பொதுவாய்ச் சொல்லாமல் ''இருதயத்தில்'' சுத்தமுள்ளவர்கள் என்று அவர் குறிப்பாய்ச் சொன்னதைக் கவனியுங்கள். நமது வாழ்வின் அத்தனை காரியங்களும் இருதயச் சுத்தத்தைப் பொருத்ததே. எனவே தான் நீதிமொழிகளில் இப்படி வாசிக்கிறோம்: ''எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்; அதிலிருந்து ஜீவ ஊற்று புறப் படும்'' (நீதி 4:23). *திருவிவிலியம்* என்ற பொது மொழியாக்கம் இவ் வசனத்தை இன்னும் நேர்த்தியாய்த் தருகிறது: ''விழிப்பாயிருந்து உன் இதயத்தைக் காவல்செய்; ஏனெனில், அதினின்று பிறப்பவை உன் வாழ்க்கையின் போக்கை நிர்ணயிக்கும்.''

இருதயத்தைச் சுத்தமாய்க் காத்துக்கொள்ளுதலின் அவசியத்தை நமதாண்டவர் வேறு விதமாய்ச் சொல்லியுள்ளார்: மாற்கு 7:21-23, ‘‘மனிதருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்.’’ தீய காரியங்கள் இருதயத்திற்குள் நுழைந்து நம்மைத் தீட்டுப்படுத்துவதில்லை; தீய காரியங்கள் இருதயத்திற்குள்ளிருந்து வெளிப்பட்டு நம்மைத் தீட்டுப்படுத்தும் (வச 23). மனிதன் கெடுவது வெளியேயிருந்து உள்ளே நுழைபவற்றால் அல்ல, உள்ளேயிருந்து வெளியே வருபவற்றாலேயே. நமது எண்ணத்தில் ஏற்படவேண்டிய ஒரு தலைகீழ் மாற்றம் இது!

நமது இருதயத்திலிருந்துதான் தீய காரியங்கள் வெளிவருகின்றன என்பதால்தான் ஆண்டவர் அந்தக் கல்லான இருதயத்தை எடுத்துப் போட்டுச் சதையான இருதயத்தை நமக்குத் தருகிறார் (எசேக் 11:19). அதாவது கடினமான இருதயத்திற்குப் பதிலாகக் கனிவான இருதயத்தை நமக்குள் பொருத்துகிறார். மட்டுமல்ல, அந்த இருதயத்தை இயக்குவதற்குப் ‘‘புதிய ஆவியைக்’’ கொடுக்கிறார். அவரது பிரமாணங்களை ஒரு கரும்பலகையில் எழுதி நமக்குமுன் தொங்கவிடுவதற்குப் பதிலாக அவற்றை அவர் தந்துள்ள மென்மையான இருதயத்திலேயே எழுதிவிடுகிறார் (எரே 31:33). தேவனானவரும், ஆவியானவரும் நமக்குள் குடிவந்துவிடுகின்றனர் (எரே 31:33ஆ; எசேக் 11:19ஆ). இது போதுமான அளவு வார்த்தைகளால் விவரிக்க முடியாத விந்தை மாற்றம். இது பழுதுபார்ப்பு அறுவை சிகிச்சை அல்ல, மாற்று அறுவை சிகிச்சை! இதுதான் பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்குமுள்ள அடிப்படை வேறுபாடு (எபி 8:8-12). ‘‘இதைச் செய், இதைச் செய்யாதே’’ என்று வெளியிலிருந்து கட்டளைகளை மட்டும் பிறப்பிப்பவராக இல்லாமல், நமக்குள்ளேயே குடியிருந்து, தமது கட்டளைகளை நமக்கு உள்ளுணர்த்தி, அவற்றிற்குக் கீழ்ப்படிய நமக்கு உதவவும் செய்கிறார் தேவன். ‘‘ஒருவனும் தனது அயலானுக்கும் சகோதரனுக்கும் போதிக்க



வேண்டியதில்லை; நான் அவர்களுக்குள் வாசம் செய்வதால் அவர்களே நேரடியாக என்னை அறிந்துகொள்வார்கள்’’ என்று தேவன் சொல்லுவதின் அர்த்தம் இதுதான் (வச 11). இப்படிச் சொல்லுவதால் நமக்குத் திருமறையை யாரும் போதிக்கவேண்டியதில்லை என்று பொருளல்ல. வேதப் போதகர்கள் வேதத்தை நமக்குப் போதிக்க வேண்டும்; ஆனால் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக் கூடாது என்று உடனுக்குடன், அந்தந்தச் சூழ்நிலைகளில், நமக்குச் சொல்லித் தருவது நமக்குள் வாசமாயிருக்கும் ஆவியானவரே. ஆவியின் சத்தம் கேட்டு நடப்பதுதான் இடதுபுறம் வலதுபுறம் சாயாது நம்மைக் காத்துக்கொள்ளும் (ஏசா 30:21).

தேவனுக்கு முன்பாக வெட்டவெளிச்சமாயிருக்கும் நமது இருதயத்தைச் சுத்தமாய்க் காத்துக்கொள்ளச் சில நடைமுறை ஆலோசனைகள் தருகிறேன் —

**(1)** உங்களை அடிக்கடி தற்பரிசோதனை செய்துகொள்ளுங்கள். இது தினமும் வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்வது போன்றது. அரசன் என்ற வகையில் தாவீதுக்கு எத்தனையோ அலுவல்கள் இருந்தும் அவர் இந்த ஆன்மீகப் பயிற்சிக்கு நேரம் ஒதுக்கினார் என்பதைச் சங்கீதம் 139 விவரிக்கிறது. இதற்குப் பின்னணியாய் அமைந்தது அவருக்கிருந்த ‘‘தேவன் அறிவார்’’ என்ற உணர்வே: ‘‘கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறக்கு முன்பே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முன்புறத்திலும் பின்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும் எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது ... உமக்கு மறைவாக இருளும் இருட்டாக்காது; இரவும் பகலைப்போல் வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் ஒன்றுதான்’’ (சங் 139:1-12). எத்தனையோ வசனங்களை நமது வீட்டுச் சுவர்களில் தொங்கவிடுகிறோம். காலண்டர்களை எத்தனையோ வசனங்கள்

அலங்கரிக்கின்றன. அவையெல்லாவற்றையும்விட வீட்டிற்குப் பொருத்தமான வசனப்பகுதி மேற்குறிப்பிடப்பட்டதே! இந்த அறிவு மட்டும் நம்மை ஆட்கொள்ளுமானால் ...! இந்த அறிவுடன்தான் 23ஆம் 24ஆம் வசனங்களில் தற்பரிசோதனை ஜெபத்தைத் தாவீது ஏறெடுக்கிறார்: ''தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.''

உணர்த்தப்படும்போது உடனுக்குடன் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுங்கள் (எபி 9:14). நமது மனச்சாட்சியை எப்பொழுதும் கூர்மையாய்க் காத்துக்கொள்ளவேண்டியது நமது பொறுப்பு. நாம் செய்வதொன்று தவறு என்று நமது மனச்சாட்சிக்குத் தெரியுமானால், நமது மனச்சாட்சிக்கும் பெரியவரான தேவனுக்குமுன் அது பாவம் தான். சுத்த மனச்சாட்சியைக் காத்துக்கொண்டால் அவருக்குமுன் தைரியமாய் நடக்கலாம்; நமது வழிகளில் அவர் பிரியப்படுவார்; நமது ஜெபங்களுக்குத் தடை ஏற்படாது (1 யோ 3:20-22).

**(2)** பரிசுத்தத்திற்கு எப்பொழுதும் இரு பக்கங்கள் உண்டு. ஒன்று, இருதயத்திலிருந்து அசுத்தமானவை அகற்றப்படவேண்டும்; அடுத்தது, இருதயத்தைச் சுத்தமானவற்றால் நிரப்பவேண்டும். சுத்தமானவை எவை என்பதை பிலிப்பியர் 4:8 வரிசைப்படுத்துகிறது: ''உண்மையானவை, கண்ணியமானவை, நேர்மையானவை, தூய்மையானவை, விரும்பத்தக்கவை, பாராட்டுதற்குரியவை, நற்பண்புடையவை, போற்றுதற்குரியவை.'' இந்த எட்டுக் காரியங்களாலேயே நமது மனது நிரப்பப்படுமானால் சமாதானத்தின் தேவன் நம்மை எவ்வித அலைக்கழிப்புமின்றி, அமரிக்கையாய்க் காத்துக்கொள்வார் (வச 9). இத்தனை நற்குணங்களையும் இவ்வுலகில் ஒருங்கே உள்ளடக்கியிருக்கும் ஒன்றேயொன்று பைபிள் மட்டுமே. இது வடிகட்டி போல் செயல்படும் (எபி 4:12).

''தீயோனிடமிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்'' என்று ஜெபிக்க இயேசு நமக்குக் கற்றுத் தந்துள்ளார் (மத் 6:13). ''தீயவனிடமிருந்து அவர்களைக் காத்துக்கொள்ளும்'' என்று பிதாவிடம் தாமும் நமக்காய் வேண்டினார் (யோ 17:15). நம்மைச் சுற்றித் திரியும் பிசாசை நாம் தடுத்து நிறுத்தமுடியாது; ஆனால் அவன் நமக்குள்ளே நுழைவதைத் தடுக்கலாம். பண ஆசைக்கு நேராக யூதாசைப் பிசாசு நெடுகவே தூண்டிக்கொண்டிருந்தான். அவனது சோதனைகளுக்கு இடங்கொடுத்து சீடர் குழுவின் பணப்பையிலிருந்து அவ்வப்போது சில்லறை எடுத்துவந்த யூதாசுக்குள் ஒரு நாள் பிசாசு நுழைந்தே விட்டான் (யோ 12:6; 13:2). விழிப்பாயிருங்கள்!



ஒரு ஜெபப் பாடலுடன் இவ்வத்தியாயத்தை நிறைவு செய்வோம் —

*தீய மனதை மாற்ற வாரும்*
*தூய ஆவியே,*
*கன நேய மேவியே.*

*தீமை செய்ய நாடுதென்றன் திருக்கு நெஞ்சமே,*
*மருள் தீர்க்கும் தஞ்சமே.*

*புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே,*
*அதைப் புகழ்ந்து காக்கவே.*

*வேத வசனப் பாலின்மீது தேட்டம் உன்னவே,*
*மிகு தெளிவு துன்னவே.*

— வின்பிரட் போதகர், சென்னை
(கீர்த்தனை 121)

# கேள்வி 14

***''தேவன் எவன்மீது இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மீது இரக்கமாயிருக்கிறார்; எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார். இப்படியானால், அவர் இன்னும் ஏன் குற்றப்படுத்துகிறார்?''***

**(ரோமர் 9:18,19)**

இப்புத்தகத்திலுள்ள கேள்விகளிலெல்லாம் விளக்க அதிகக் கடினமானது இக்கேள்விதான் என்று நம்புகிறேன். இக்கேள்விக்கான சரியான விடையைக் கண்டுபிடிப்பது நமது விசுவாசத்திற்கு ஊன்றுகோலாய் அமையும். அதே வேளையில் இக்கேள்வி தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுமானால் நமது விசுவாசமே ஆடிவிட வாய்ப்புண்டு. இக்கேள்வியின் முக்கியத்துவம் இவ்வத்தியாயத்தை நீங்கள் வாசிக்கும்போது விளங்கும்.

இக்கேள்வி காணப்படும் ரோமர் 9ஆம் அத்தியாயத்தைத் திரும்பத் திரும்ப வாசிக்கும்போது இவ்வத்தியாயத்தின் மையப் பொருள் தெளிவாகும். அது என்னவென்றால், ''தேவனது ஏகாதிபத்தியம் vs. மனிதனது பொறுப்பு'' (God's Sovereignty vs. Man's responsibility). இவ்விரண்டும் ஒரே நாணயத்தின் இருபக்கங்கள்; ஒரே பறவையின் இரு இறக்கைகள்; ரயில் ஓடும் இரு தண்டவாளங்கள். நாணயத்தின் ஒரு பக்கத்தில் அச்சு இல்லையேல் அது செல்லாது. ஓர் இறக்கை ஒடிந்துவிட்டால் பறவையால் பறக்கமுடியாது. ஒரு தண்டவாளத்தில் ரயில் ஓடமுடியாது.

நாம் தியானத்திற்காய் எடுத்துக்கொண்ட கேள்வியைக் கேட்க, உண்மையைச் சொன்னால், நமக்கு உரிமை கிடையாது. எனவேதான் அடுத்த வசனத்திலேயே அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு ஒரு



சவால் விடுகிறார்: ''மனிதா, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்க நீ யார்?'' (ரோ 9:20). இச்சவாலை வலுப்படுத்த இரு ஒப்புமைகளை அப்போஸ்தலன் முன்வைக்கிறார்: ''படைப்பும் படைத்தவரும்,'' ''களிமண்ணும் குயவனும்.'' படைத்தவரைப் படைப்பு கேள்வி கேட்க முடியாது. குயவனைக் களிமண் கேள்வி கேட்க முடியாது. இவ்வத்தியாயத்தில் நாம் எடுத்துக்கொண்ட கேள்வியைத் தியானிக்கும்போது படைத்தவருக்குமுன் படைப்பாகிய நான், குயவனுக்கு முன் களிமண்ணாகிய நான், என்ற பயபக்தியான உணர்வு நமது மனதில் மேலோங்கி நிற்கவேண்டும்.

இறையியல் உலகில் ஒன்றுக்கொன்று வேறுபடும் இரு சிந்தனைகள் நெடுகவே ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒன்று, கால்வின் (Calvin) என்பவரின் தர்க்க அடிப்படையிலானது; அடுத்தது, ஆர்மீனியஸ் (Armenias) என்பவரது தர்க்க அடிப்படையிலானது. கால்வின் கொள்கையானது தேவனது ஏகாதிபத்தியத்தை அதிகம் வலியுறுத்துகிறது; ஆர்மீனியன் கொள்கையானது மனிதனது பொறுப்பை அதிகம் வலியுறுத்துகிறது. எனது புரிதலின்படி, இவ்வத்தியாயத்தின் துவக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ளபடி, இவ்விரு தத்துவங்களும் ஒரே நாணயத்தின் இருபக்கங்கள்தான். ஒன்று அடுத்ததை நிறைவாக்குகிறது (One complements the other.) இதை உறுதிப்படுத்தும் திருவசனங்களில் முக்கியமானதொன்று பிலிப்பியர் 2ஆம் அத்தியாயத்தில் உண்டு. வச 13, ''தேவனே தமது தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.'' இது கால்வின் வலியுறுத்தும் ''தேவனது ஏகாதிபத்தியம்.'' அடுத்தது, வச 12, ''அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.'' இது ஆர்மீனியன் வலியுறுத்தும் ''மனிதனின் பொறுப்பு.'' எவ்வளவு கச்சிதமாய்ப் பவுல் அப்போஸ்தலன் இவ்விரண்டையும் ஒன்றையொன்று நிறைவாக்கும் கருத்துக்களாய் ஒன்றிணைக்கிறார் பாருங்கள்! தேவனது ஏகாதிபத்தியத்தைக் குறிப்பது எனது வலது கை என்று எடுத்துக்கொண்டால், மனிதனின் பொறுப்பு என்பதை எனது இடது கை குறிக்கும். இரு கைகளையும் சேர்த்து எம்பெருமானை நான் நமஸ்கரிக்கணும், கும்பிடணும்! இவ்விரண்டும் இவ்விதம் சம

நிலைப்படுத்தப்படாவிடில், ஆன்மீகச் சிந்தனையிலும் நடைமுறை வாழ்க்கையிலும் தேவையற்ற சரிவுகள் ஏற்படும்.

ரோமர் 9ஆம் அத்தியாயத்தின் இந்த மையக் கருத்தை விளக்க அப்போஸ்தலன் பவுல் இரு எடுத்துக்காட்டுகளைக் கையாளுகிறார்: (1) யாக்கோபும் ஏசாவும் (வச 10-14), (2) மோசேயும் பார்வோனும் (வச 15-18). இவற்றைச் சற்று விரிவாகப் பார்ப்போம் —

**(1)** ''யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்று எழுதியிருக்கிறது'' (ரோ 9:13). இதை வாசித்தவுடன் நமது மனதில் பல கேள்விகள் எழுகின்றன. தேவனிடம் அநீதி உண்டோ? தேவனிடம் பாரபட்சம் உண்டோ? (வச 14). ''அப்படிக் கேட்கக் கூடாது'' என்று திருமறை நமக்கு அறிவுறுத்தினாலும் இது நமக்கு விளங்காத புதிரன்றோ? எபிரெயர் நிருப ஆக்கியோன் இதற்கொரு விளக்கம் தருகிறார்: எபி 12:16, ''ஒரு வேளைச் சாப்பாட்டிற்காகத் தனது தலைப்பேற்றுரிமையை விற்றுப்போட்ட ஏசாவைப்போல் சீர்கெட்டவனாக இராதபடி எச்சரிக்கையாயிருங்கள்.'' இச்சம்பவத்தை நாம் நினைவுபடுத்துவோம். ஏசா ஒரு வனவாசியாகவும், யாக்கோபு ஒரு கூடாரவாசியாகவும் இருந்தனர். ஒரு நாள் ஏசா வெளியிலிருந்து வந்தபோது யாக்கோபு கூழ் சமைத்துக்கொண்டிருந்தான் (ஆதி 25:27,29). மிகவும் களைப்படைந்திருந்த அண்ணன் ஏசா தம்பி யாக்கோபிடம் கொஞ்சம் கூழ் தரும்படிக் கேட்டான். தந்திரசாலியான யாக்கோபு இக்கட்டத்தில் ஏசாவுடன் ஒரு பேரம் பேசினான். ''உன் தலைப்பேற்றுரிமையை எனக்கு விற்றுவிடு'' என்று கேட்ட யாக்கோபின் வலையில் ஏசா விழுந்தான். இச்சம்பவத்தின் முடிவு வரி முக்கியமானது: ''இப்படி ஏசா தனது தலைப்பேற்றுரிமையை அலட்சியம் பண்ணினான்'' (வச 34).

ஏசாவின் செயல் தேவனது பார்வையில் கொடூரமானது. அந்தச் சந்ததியில்தான் மேசியா வரவிருந்தார். ஒருவேளை சாப்பாட்டிற்காய் ஏசா தனது தலைப்பேற்றுரிமையை அலட்சியப்படுத்தி விற்றுப்போட்டதை மேசியாவைப் புறக்கணித்த செயலாய்த் தேவன் தமது முன்னறிவின்படிக் கணிக்கிறார். முக்காலத்தையும் அறிந்த தேவனுக்கு எதிர்பாராத நிகழ்வு (surprise) என்று எதுவும் இருக்க முடியாது.



அவர் ஆதிமுதல் அந்தத்தை அறிந்தவர். உடனடித் தேவைக்கு ஏசா பலியாகி முடிவான ஆசீர்வாதத்தை இழந்தான். பாவங்களிலெல்லாம் பாவம் மேசியாவைப் புறக்கணிப்பதே. பொய் பேசிவிட்டான், திருடிவிட்டான் என்பதற்காக அல்ல, கிறிஸ்துவை ஏற்க மறுத்துவிட்டான் என்பதற்காகவே எவனும் பரலோகத்தை இழப்பான், நரகத்தில் தள்ளப்படுவான். இதைத்தான் ''மரணத்துக்கேதுவான பாவம்'' என்று அப்போஸ்தலன் யோவான் அழைக்கிறார் (1 யோ 5:16,17). ''அநீதியெல்லாம் பாவம்தான்; ஆனாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமும் உண்டு'' என்கிறார் அவர். இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுப்பவனை மன்னிக்கும்படி நாம் ஜெபிக்கமுடியாது! (வச 16). அப்படியே, விசுவாசியான சகோதரன் ஒருவன் மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கும் சத்தியமுள்ளவராகிய இயேசு கிறிஸ்துவை விட்டு விலகி விக்கிரகங்களைச் சேவிக்கச் சென்றுவிட்டால் அது மரணத்துக்கேதுவான பாவம்; அவனை மன்னிக்கும்படி நாம் ஜெபிக்கமுடியாது, அவனது மனந்திரும்புதலுக்காய் ஜெபிக்கலாம் (வச 20,21).

''யாக்கோபைச் சிநேகித்தேன்'' என்று ஆண்டவர் சொல்லுவதால் அவனுக்கு அவர் இளக்காரம் கொடுத்து மனம்போல் நடக்கவிட்டார் என்று பொருள்படாது. யாக்கோபின் சரிதையை நாம் வாசிக்கும்போது அவனுடன் தேவன் எவ்வளவு கண்டிப்பாய்ச் செயல்பட்டார் என்பது புரியும். ஏமாற்றியவன் எத்தனை பேரால் ஏமாற்றப்பட்டான்! எத்தனை தடவை ஏமாற்றப்பட்டான்! எத்தனை காரியங்களில் ஏமாற்றப்பட்டான்! அவன் சுயபலத்தைச் சார்ந்திருக்க முடியாதபடி முடிவில் தேவன் அவனை முடமாக்கிப் பின்னரே முடிசூட்டினார்! (ஆதி 32:24-32). இப்பொழுது சொல்லுங்கள், தேவன் அநீதியுள்ளவரா, பாரபட்சமுள்ளவரா?

**(2)** அப்போஸ்தலன் நமக்குமுன் வைக்கும் அடுத்த எடுத்துக்காட்டு, மோசேயும் பார்வோனும். தேவன் மோசேயைப் பார்த்துச் சொன்னது: ''எவன்மீது இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மீது இரக்கமாயிருப்பேன்; எவன்மீது உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மீது உருக்கமாயிருப்பேன்'' (ரோ 9:15).

பார்வோனைப் பார்த்து அவர் சொன்னது: ''எனது வல்லமையை உன்னிடம் காண்பிக்கவும் எனது நாமம் பூவுலகு எங்கும் பிரசித்தப்படவும் உன்னை நிலைநிறுத்தினேன்'' (வச 17). மோசேயிடம் தேவன் தமது இரக்கத்தையும் உருக்கத்தையும் குறித்துப் பேசினார்; பார்வோனிடமோ தமது வல்லமையைக் குறித்துப் பேசினார். இவ்விதம் தீர்மானிப்பது தேவனுக்கே உரித்தான உரிமை. தேவன் தமது மகிமையைத் தனக்குக் காண்பிக்கும்படி மோசே தேவனிடம் வேண்டிய போதுதான் இவ்வார்த்தைகளைத் தேவன் சொன்னார் (யாத் 33:18,19). ''இரக்கம், உருக்கம்'' என்று பவுல் பயன்படுத்திய சொற்கள் யாத்திராகமத்தில் ''கிருபை'' என்றிருக்கின்றன. தேவனது கண்களில் மோசேக்குக் கிருபை கிடைத்தது (வச 12,13). ஆனாலும் மோசேயின் அவிசுவாசத்தையும் கீழ்ப்படியாமையையும் தேவன் கவனியாதுவிடவில்லை. நாற்பது ஆண்டுகள் எவ்வளவோ பாடுகளின் நடுவிலும் இறைமக்களை நடத்திவந்த மோசேக்குக் கானானுக்குள் செல்லும் அனுமதி மறுக்கப்பட்டது (எண் 20:12; உபா 32:50-52). ''கிருபை, இரக்கம், உருக்கம்'' என்றெல்லாம் வாக்குப் பண்ணிய தேவன் தமது ''நீதி நியாயத்தைக்'' கைவிடவில்லை என்பதைக் கவனியுங்கள்!

தமது வல்லமையை விளங்கப்பண்ணுவதற்காகவே தேவன் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார் (யாத் 4:21). இதனாலேயே அடையாளங்களும் அற்புதங்களும் எகிப்தில் மிகுதியாய்த் தேவனால் நடப்பிக்கப்பட்டன (7:3). இஸ்ரவேலின் தேவனே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவதற்காகவே தேவன் இவ்விதம் செயல்பட்டார் (14:4). பார்வோனின் இருதயத்தை மட்டுமல்ல, எகிப்தியரின் இருதயங்களையும் தேவன் கடினப்படுத்தினார் (வச 17) அதின் ஒரே நோக்கம் என்னவென்று தேவன் தெளிவாகக் கூறுகிறார்: ''நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள்'' (வச 18). சுவிசேஷத்திற்கு எதிர்ப்புகள் கூடக்கூட அது தேவனது அற்புத வல்லமை இன்னும் கூடுதலாய் வெளிப்படுவதற்கு ஏதுவுண்டாக்கும் என்பதை ஆதிச்சபையினரைப்போல் நாம் புரிந்துகொள்ளவேண்டும். எதிர்ப்பு கூடும்போது ஜெபம் கூடவேண்டும்; ஜெபம் கூடும்போது அருள் மாரி கூடும்; அருள்மாரி கூடும்போது அற்புதங்கள் கூடும் (அப் 4:18-31).



எகிப்திலிருந்து இஸ்ரவேலரது புறப்பாடு பிந்திக்கொண்டே போனதால்தான் மோசேயும் ஆரோனும் அத்தனைப் பெரிய அற்புதங்களை அங்கு நிகழ்த்த முடிந்தது. மோசேயும் ஆரோனும் பார்வோனைச் சந்தித்த முதல் நாளிலேயே கானான் யாத்திரை துவங்கியிருக்குமானால் உயிருள்ள தேவனது வல்லமையை எகிப்தியர் கண்டிருக்க மாட்டார்கள்! லாசரு வியாதிப்பட்டிருக்கிறான் என்று கேள்விப்பட்டவுடன் அவ்விடத்திற்கு இயேசு விரைந்திருப்பாரானால் ''சுகமளிப்பு'' அற்புதம்தானே நடந்திருக்கும்? நான்கு நாட்கள் பிந்திச் சென்றதால்தானே ''உயிர்ப்பிப்பு'' எனும் அற்புதம் நிகழ்ந்தது? இதன் காரணத்தை எவ்வளவு துல்லியமாக ஆண்டவர் தமது சீடருக்குச் சொல்லுகிறார் பாருங்கள்: ''நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் பொருட்டுச் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடம் போவோம் வாருங்கள்'' (யோ 11:15).

எவனுடைய இருதயத்தை இளகச் செய்யவேண்டும், எவனுடைய இருதயத்தை இறுகச் செய்யவேண்டும் என்பது தேவனது ஏகாதிபத்தியச் செயல். எவன்மீது தமது கிருபையைப் பொழியவேண்டும், எவனுக்கு வல்லமையைக் காட்டவேண்டும் என்பது தேவனது தீர்மானம். ''தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்க நீ யார்?'' என்பதே முடிவான கேள்வி (ரோ 9:20). மனிதரைத் தேவன் இருவகையினராய்ப் பிரிக்கிறார்: ''கிருபா பாத்திரங்கள், கோபாக்கினைப் பாத்திரங்கள்'' (Vessels of mercy, Vessels of wrath) (வச 23). இவர்களில் எவர்மீது, எப்படி, எப்பொழுது தேவனது ''கோபம்,'' அல்லது ''வல்லமை,'' அல்லது ''மகிமை,'' அல்லது ''சாந்தம்,'' அல்லது ''பொறுமை'' வெளிப்படவேண்டுமென்று நிர்ணயிப்பது அவரது செயலே. ''ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்'' (வச 16).

அப்படியானால், ''நாம் செய்யவேண்டியது ஒன்றுமேயில்லையா?'' என்ற கேள்வி எழலாம். எது, எப்படி, எப்பொழுது, எவர் மூலம் நடக்கவேண்டுமென்று தேவன் ஏற்கனவே தீர்மானித்துவிட்டாரென்றால் எனது பொறுப்பு என்ன? இங்குதான், தேவனது ''முன்

குறித்தல்'' (foreordination) என்ற சத்தியத்திற்குச் சிறிது விளக்கம் தேவைப்படுகிறது. தேவனது ''அழைப்பு'' என்பது யாவருக்கும் உரியது, யாவருக்கும் சமமானது. பழைய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவன் தந்த அழைப்பு: ''ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் ***எல் லாரும்*** தண்ணீர்களருகே வாருங்கள் ... உங்கள் செவியைச் சாய்த்து என்னிடம் வாருங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்'' (ஏசா 55:1-3). புதிய ஏற்பாட்டின் துவக்கத்தில் குமாரனாகிய கிறிஸ்து தந்த அழைப்பு: ''வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் ***எல்லாரும்*** என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத் 11:28-30). திருமறையின் இறுதிப்பக்கத்தில் ஆவி யானவராகிய தேவன் தரும் அழைப்பு: ''தாகமாயிருக்கிறவன் வரட் டும்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளட்டும்'' (வெளி 22:17). இவ்விதம், ''எல்லாரும்'' அழைக்கப் படுகிறார்கள். ஆனால் ஒரு சிலரே இந்த அழைப்பினை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். அவர்களைத் ''தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்'' என்று தேவன் அழைக்கிறார். ''அழைக்கப்பட்டவர்கள் அநேகர்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்'' என்பதின் பொருள் இது தான். இவ்வாசகத்தை நமதாண்டவர் அடுத்தடுத்து இருமுறை சொன்னது குறிப்பிடத்தக்கது (மத் 20:16; 22:14). ஆதிமுதல் அந்தத்தை அறிந்த சர்வ ஞானியாகிய தேவனுக்கு யார் யார் தமது அழைப்பை ஏற்பர் என்று தெரியாதா, என்ன? இந்த முன்னறிதலின் படி (foreknowledge) அவர் ஆற்றும் செயலைத்தான் முன்குறித்தல் (foreordination) என்கிறோம் (ரோ 8:30).

ரோமர் 9:18,19இல் எழுப்பப்பட்ட கேள்விக்கு, இன்று நமக் கிருக்கும் ''குறைந்த அறிவில்'' இதற்குமேல் விளக்கம் தருவது அரிது (1 கொரி 13:9,10). ''தேவனிடம் பாரபட்சம் இல்லை'' என்பது மட்டும் நிச்சயம் (அப் 10:34,35). ''தேவனது உதவியின்றி என்னால் ஒன்றும் செய்யமுடியாது; எனது ஈடுபாடின்றித் தேவன் ஒன்றையும் செய்யமாட்டார்'' என்று கூறி, தேவனது ஏகாதிபத்தியத்தையும் மனி தனது பொறுப்பையும் ஒருங்கிணைத்து, இவ்வத்தியாயத்தைப் பரிசுத்த நடுக்கத்துடன் நிறைவு செய்கிறேன். (I cannot do anything without God; He will not do anything without me!).



# கேள்வி 15

***''தமது சொந்தக் குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடு மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பாரோ?''***

**(ரோமர் 8:32)**

ஒரு சில ஊழியராக நாங்கள் இளம் மாணவர்களுக்கு வேதபாடம் நடத்திக்கொண்டிருந்தபோது ஒரு மாணவன் எழுந்து கேட்ட கேள்வி: ''கடவுள் நம்மை அளவுகடந்து நேசித்திருக்கும்போது அவரே நம்மை இரட்சிக்க வந்திருக்கலாமே, ஏன் தமது மகனை அனுப்பிவைத்தார்?'' உடனே பதில் சொல்லமுடியாமல் இக்கேள்வி எங்களைத் திணற வைத்தது. ''இடைவேளைக்குப் பின்னர் பதில் சொல்லுகிறோம்'' என்று அம்மாணவனிடம் சமாளித்துவிட்டு, நாங்கள் இக்கேள்வியை விவாதித்தோம். அப்பொழுது ஒருவருக்குத் தோன்றியது: ''நாம் நம் மைவிட நமது பிள்ளைகளைத்தானே அதிகம் நேசிக்கிறோம்?'' இதனை அம்மாணவனிடம் சொன்னபோது அவன் திருப்தியடைந் தான். ஆம், நண்பரே, தமது மகனைவிடத் தமக்கு அருமையானது தேவனுக்கு எவரும், எதுவும், கிடையாது. அவரையே நமக்காய்த் தந்துவிட்ட அவர் வேறெதையும் தந்தருளத் தயங்குவாரோ?

சுவிசேஷத்தை இரத்தினச் சுருக்கமாய்க் கூறும் வசனமாகிய யோவான் 3:16 நமக்கு மனப்பாடமாய்த் தெரியும். இவ்வசனத்திற்குள் நாற்பரிமாண இறையன்பு வெளிப்படுகிறது. ''தேவன் தமது ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார்'' — இது உன்னத தேவனது அன் பின் *ஆழம்*. ''விசுவாசிக்கிறவன் எவனோ ...'' — இது அவரது அன் பின் *நீளம்*. ''அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடை யும்படி ...'' இது அவரது அன்பின் *உயரம்*. ''இவ்வளவாய் உலகில் அன்புகூர்ந்தார்''— இது அவரது அன்பின் *அகலம்*. இந்த நாற்பரி

மாண அன்பைப் புரிந்துகொள்ள வாழ்காலம் போதாது. இந்த அன்பை ருசித்தவர்களுடன் சேர்ந்து தியானிக்கும்போது இது ஓரளவு புரியும் (எபே 3:18).

தேவனுக்கு இயேசு ''ஒரே பேறான'' (begotten) குமாரன் மட்டு மல்ல, அவரது ''நேச'' (beloved) குமாரன், அவருக்குப் ''பிரியமான'' குமாரன். இந்த மகிமையான சாட்சியை இரு சந்தர்ப்பங்களில் பிதா வானவர் கூறியதாக வாசிக்கிறோம். ஒன்று, அவர் யோர்தானில் திரு முழுக்கு பெற்று கரையேறியபோது (மத் 3:17); அடுத்தது, அவர் மலையில் மறுரூபமானபோது (17:5). தம்மையே வெறுமையாக்கிய தேவ குமாரன் மறுரூப மலையில் பிதாவானவரிடமிருந்து ''கனத் தையும் மகிமையையும்'' பெற்றபோது வந்த சாட்சியிது (2 பேது 1:17). பிதாவானவரின் இந்தச் சாட்சியானது பேதுரு, யாக்கோபு, யோவானை எவ்வளவாய்ப் பரவசப்படுத்தியது என்று பேதுரு எழுது வதைக் கவனியுங்கள்: ''நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவரது மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்ல மையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்'' (வச 16). முதல் வருகையின்போது நிகழ்ந்த இச்சம்பவம் இரண்டாம் வருகையின்போது வெளிப்படவிருக்கும் மகிமையையும் வல்லமை யையும் எதிர்நோக்கச் செய்தது! தமது சொந்தக் குமாரனைத் தேவன் எவ்வளவாய் நேசித்தார் என்ற உண்மையை மறுரூப மலைக் காட்சி அப்போஸ்தலரது இருதயங்களில் ஆணித்தரமாய்ப் பதித்தது. மக னையே தியாகம் செய்துவிட்ட பிதாவானவர் வேறெந்த ஆசீர்வாதத் தையும் நமக்கருளத் தயங்கமாட்டார் என்ற இவ்வுன்னத சத்தியத்தை அப்போஸ்தலர் தங்கள் நிருபங்களில் வாசகருக்கு அடிக்கடி நினைப் பூட்டியுள்ளனர்.

நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் எதுவும் கிறிஸ்து வினாலும், கிறிஸ்துவின் மூலமாகவுமே. கிறிஸ்துவின்மூலம் நமக்குக் கிடைக்கும் சுதந்தரிப்புகளை அதிகம் சுட்டிக்காட்டும் புதிய ஏற் பாட்டுப் புத்தகம் எபேசியர் நிருபமாகும். அந்நிருபத்தின் துவக்க வரிகளிலேயே அப்போஸ்தலன் பவுல் குறிப்பிட்டுள்ளதைக் கவனி



யுங்கள்: ''நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவ னுக்கு ஸ்தோத்திரம்; அவர் ***கிறிஸ்துவுக்குள்*** உன்னதங்களில் ஆவிக் குரிய ***சகல*** ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபே 1:3). நமது மனந்திரும்புதல் முதல் கிறிஸ்துவின் மறுவருகை வரை நமக்கு அருளப்படும் ஆசிகளை ஒவ்வொன்றாய் வரிசைப் படுத்தி அவையனைத்தும் எவ்விதம் கிறிஸ்துவின் மூலமாகவே, அல்லது கிறிஸ்துவுக்குள்ளாகவே, நமக்குக் கிட்டுகின்றது என்று பார்ப்போம் —

■ ''மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும்'' கிறிஸ்துவின் பெய ராலேயே நமக்கருளப்படுகின்றன (லூக் 24:47). இது உயிர்த் தெழுந்த ஆண்டவரே சொல்லியது. செய்த குற்றங்களுக்காய் மனம் வருந்துவதோ, மன்னிப்பு கோருவதோ எல்லா மதங்களிலும் உண்டு. ஆனால் பாவத்திற்காய் மாண்ட இயேசு ஒருவரே பாவ மன்னிப்பை அருளமுடியும். ஏனென்றால் பாவத்திற்காய்ப் பாவிமீது வரவிருந்த தண்டனையை அவரே ஏற்றுக்கொண்டு பிராயச்சித்த பலியானார். இயேசுவுக்கு வெளியே பாவ மன்னிப்பு கிடையாது.

■ பாவ மன்னிப்பு மட்டுமல்ல, நீதிமானாக்கப்படுதலும் கிறிஸ்து வின் மூலமாகவே. நீதிமானாக்கப்படுதல் என்றால் பாவ மன்னிப்பு பெற்ற பாவியைப் பாவமே செய்யாதவன்போல் நியாயப்படுத்துதல் ஆகும். இது விந்தையிலும் விந்தை. தேவனைத் திருப்திப்படுத்து வதற்கு ஏற்ற நீதி அல்லது தூய்மை நம்மிடம் கிடையாது. ஆனால் இயேசுவை விசுவாசிக்கும்போது என்ன நிகழ்கிறதென்று பாருங்கள்: ரோ 3:22, ''அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் பலிக்கும் தேவ நீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் அது பலிக் கும்; வித்தியாசமே இல்லை.'' அதாவது கிறிஸ்துவாகிய நீதியின் ஆடையால் நாம் உடுத்தப்படுகிறோம். கிறிஸ்துவே நமது ''நீதி'' என்றாகிவிடுகிறார் (1 கொரி 1:31).

■ இவ்விதம் கிறிஸ்துவினால் நியாயப்படுத்தப்பட்டு, அவரா லேயே நீதியினால் உடுத்தப்படுவதால் கிடைக்கும் எண்ணிறந்த நன்மைகளில் முக்கியமான இரண்டு: சந்தோஷம், சமாதானம். மனுக்குலம் அனைத்தும் நாடும் இவ்விரு அரிய ஆசிகளை முழுமை

யாக அருளுவது இறைமகனாகிய இயேசுவே. எனவேதான் நமக்கு வாக்குப்பண்ணும் இந்த ஆசிகளை ''எனது'' சந்தோஷம் மற்றும் ''எனது'' சமாதானம் என்றழைக்கிறார் (யோ 15:11;14:27). இவற்றைக் குறித்த அவரது வார்த்தைகள்: ''எனது சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கவும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கவும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.'' சந்தோஷம் நிறைவாயிருந்தால் போதாது, அது நிலைத்திருக்கவேண்டும். தாம் அனுபவிக்கும் சந்தோஷத்தாலேயே இதனை அவர் சாதகமாக்குகிறார். அடுத்து, சமாதானம்: ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்; எனது சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுப்பதுபோல் நான் உங்களுக்குக் கொடுப்பதில்லை; உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருக்கட்டும்.'' கிறிஸ்து தரும் சமாதானம் கலக்கத்தையும் பயத்தையும் நீக்கும்.

■ பிறந்த பிள்ளையிடம் முதல் எதிர்பார்ப்பு அதன் அழுகை என்பதுபோல், மறுபிறப்படைந்த ஒவ்வொருவரின் முதல் அடையாளம் ஜெபமே. சவுலின் மனமாற்றத்திற்கு அடையாளமாய் அனனியாவிடம் கர்த்தர் குறிப்பிட்டுச் சொன்னது: ''அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்'' (அப் 9:11). நமது ஜெபங்களைத் தேவன் ஏற்றுக்கொள்வதற்கு ஒரே காரணமானவர் அவரது திருக்குமாரனே. எனவேதான் ''என் நாமத்தில்'' ஜெபியுங்கள் என்று இயேசு கற்பித்தார். ''இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம்'' என்று அப்போஸ்தலர் சாட்சிபகர்ந்தனர். தமது மூலம் தேவனிடம் சேருகிறவர்களுக்காகவே இயேசு வேண்டுதல் செய்கிறார் (எபி 7:25).

■ பிதாவிடம் கேட்டு நமக்குப் பரிசுத்த ஆவியை வாங்கித் தருபவர் இயேசுவே (அப் 2:33). எனவேதான் அன்று எருசலேமில் கூடி வந்திருந்த பண்டிகைக் கூட்டத்தினரிடம் அவர் கூவிச் சொன்னது: ''ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடம் வந்து பருகட்டும். வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடம் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளிலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்'' (யோ 7:37,38). அவரை விசுவாசிப்போர் பெறவிருக்கும் பரிசுத்த ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார் என்று அடுத்த வசனம் விளக்கு



கிறது (வச 39). இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு அடிபணிந்து திருமுழுக்கு பெற்றால் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பெந்தெகொஸ்தே நாளன்று ஆவலோடு வினவி முன்வந்தோருக்குப் பேதுரு அறிவுறுத்தினார் (அப் 2:38). ஆம், சுற்றிச் சுற்றி அனைத்து ஆசீர்வாதங்களும் இறைமகன் இயேசு மூலமாகவே!

■ தேவனுடைய பிள்ளைகளாகி அவரது குடும்பத்தில் அங்கத்தினராவதைவிடப் பெரிய சிலாக்கியம் வேறெது? (1 யோ 3:1). இந்தப் பேறு நமக்குக் கிடைத்தது எப்படி? ''இயேசுவின்'' நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் ''அவரை'' ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேரோ அத்தனைபேரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு ''உரிமை'' கொடுத்தார் (யோ 1:12). எனவேதான் இயேசுவின் ''தந்தை'' நமக்கும் தந்தையாகிறார்; நாம் இயேசுவின் ''சகோதரர்'' ஆகிறோம். உயிர்த்த ஆண்டவர் மகதலேனா மரியாளிடம் உதிர்த்த வார்த்தைகள் இவையன்றோ? (யோ 20:17). செல்வந்தர் செல்வந்தரோடும், படித்தவர் படித்தவர்களோடும், உயர் மட்டத்தோர் உயர் மட்டத்தோரோடுமே தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள விழைவர்; தாழ்ந்தவர்களோடு ஒட்டிக்கொள்ள விரும்பார். ஆனால் பாவமறியாத தேவ குமாரன் படுபாவிகளாகிய நம்மைச் ''சகோதரர்'' என்றழைக்க வெட்கப்படாதிருக்கிறார்! (எபி 2:11).

■ இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டோரடங்கிய கூட்டமாகிய திருச்சபையை அவர் தமக்கு மணமகளாய்த் தெரிந்துகொண்டு அதனுடன் நித்திய உடன்பாடு செய்துகொண்டிருக்கிறார் (2 கொரி 11:2). இதுவும் போதாதென்று, நித்திய நகரில் அவரோடு அவரது ஆசனத்திலேயே அமருவோமாம். இதோ அவர் தரும் வாக்கு: வெளி 3:21, ''நான் வெற்றி பெற்று என் பிதாவின் சிங்காசனத்தில் அவரோடு உட்கார்ந்ததுபோல, வெற்றி பெறுபவன் எவனோ அவனும் என்னோடு உட்காரும்படி ***அருள்*** செய்வேன்!'' ஆம், இயேசுவே ஆசீர்வாதங்களிலெல்லாம் ஆசீர்வாதம்! கிறிஸ்து நமக்கிருந்தால் யாவும் நமக்கிருக்கிறது என்று பொருள்!

உயிர்த்தெழுந்த ஆண்டவர் விண்ணேகுமுன் தமது சீடருக்குமுன் காட்டிய பாவனை அனைத்து ஆசீர்வாதங்களையும் உள்ளடக்குகிறது: லூக் 24:50,51, ''பின்பு அவர் பெத்தானியா வரை அவர்களை அழைத்துக்கொண்டுபோய், தமது கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்!'' ஆசீர்வதிக்கும் உயர்த்தப்பட்ட கைகளோடேயே உன்னதத்திற்குச் சென்றார் அவர்! ''கிறிஸ்துவுக்குள்'' உன்னதங்களில் நமக்குண்டாகும் அனைத்து ஆசீர்வாதங்களின் துவக்கம் இதுவே (எபே 1:3).

கிறிஸ்துவைத் திருவிவிலியம் மையமாய்க் கொண்டுள்ளது. பஞ் சாகமங்களில் ''பஸ்கா ஆட்டுக்குட்டியாய்'' அவர் தோன்றுகிறார். யோசுவாவிலும் நியாயாதிபதிகளிலும் அவரை நாம் நமது ''இரட்சிப் பின் அதிபதியாய்க்'' காண்கிறோம். சங்கீதங்களில் அவர் ''பாடுபடும் மேசியாவாக'' வெளிப்படுகிறார். தீர்க்கதரிசனப் புத்தகங்களில் அவர் ''சமாதானப் பிரபுவாக'' முன்னறிவிக்கப்படுகிறார். மத்தேயுவில் ''யூதருக்கு அரசர்'' எனவும், மாற்குவில் ''யேகோவாவின் பணி யாளர்'' எனவும், லூக்காவில் அவர் ''மனுமகன்'' என்றும், யோவா னில் அவர் ''இறைமகன்'' என்றும் காட்சியளிக்கிறார். நடபடிகள் புத்தகத்தில் அவரை ''அறுப்பின் ஆண்டவராகவும்,'' நிருபங்களில் அவரைத் ''திருச்சபையின் ஆண்டவராகவும்,'' வெளிப்படுத்தலில் அவரை ''நாடுகளின் ஆண்டவராகவும்'' சந்திக்கிறோம். மையம் இல்லாது வட்டமா? இறைமகன் இல்லாது இறைநூலா?

பைபிள் முழுவதும் தீர்க்கதரிசனங்களால் நிறைந்துள்ளது. இயேசுவின் முதல் வருகை குறித்து 100 தீர்க்கதரிசனங்களும், அவரது இரண்டாம் வருகை குறித்து 300 தீர்க்கதரிசனங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. எனவேதான், ''இயேசுவைப்பற்றிய சாட்சியே தீர்க்கதரிசனத்தின் ஆவியாய் (சாராம்சமாய்) இருக்கிறது'' என வேதத் தின் இறுதிப் புத்தகத்தில் வாசிக்கிறோம் (வெளி 19:10).

பிரியமானவர்களே, நாம் இன்று வாழ்வது பரிசுத்த ஆவியான வரின் யுகத்தில். அவருக்கு நமக்கடுத்த அனைத்துக் காரியங்களிலும் முதலிடம் கொடுக்கவேண்டும். அதே வேளையில் ''கிறிஸ்தற்ற



பெந்தெகொஸ்தே'' (Christless Pentecost) குறித்தும் எச்சரிக்கை யாயிருக்கவேண்டும். ஏனெனில், கிறிஸ்துவையே பரிசுத்த ஆவி யானவர் மையப்படுத்தி முன்னிறுத்துவார். இதைக் குறித்த இயேசு வின் திட்டவட்டமான வார்த்தைகளைக் கவனியுங்கள்: யோ 16: 13-15, ''சத்திய ஆவியாகிய அவர் சொந்தமாய்ப் பேசாமல் ... ***என்னு டையதில்*** எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் ***என்னை*** மகிமைப் படுத்துவார். பிதாவினுடையவை யாவும் ***என்னுடையவை;*** அதி னால் அவர் ***என்னுடையதில்*** எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்.'' கிறிஸ்து சொன்னவற்றையே பரிசுத்த ஆவியானவர் நமக்கு நினைவு படுத்துவார் (14:26). வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள ஏழு சபை களுக்கு கிறிஸ்து எழுதிய கடிதங்களையே ஆவியானவர் சபை யினரின் காதுகளில் ஒலித்தார் (வெளி 2:1,8,12, ...). நாம் ஆவியான வரது வல்லமையால் நிரப்பப்படுவது ஆவியானவருக்கு அல்ல, இயேசுவானவருக்குச் சாட்சியாயிருக்கவே (அப் 1:8). நகைக்கடை யிலிருந்து திரும்பியவுடன் நகைப்பெட்டிகளுக்கே சண்டையிடு வோரைப்போல் நாம் ஆகிவிடக்கூடாது! ஆசீர்வாதங்கள் மீதல்ல, ஆசீர்வதிக்கிறவர் மீதே நமது கவனம் முழுவதும் பதிக்கப்படவேண் டும். கிறிஸ்துவின் முதன்மைத்துவத்தை ஒதுக்குமளவு நாம் ஆவி யானவரின் வல்லமையை வலியுறுத்திவிட்டால் அது பேராபத்து!

இந்தச் சத்தியத்தின் அடிப்படையில்தான் அருப்புக்கோட்டை யைச் சேர்ந்த யே. ஞானமணி அவர்கள் காலத்தால் அழியாத கீழ்க்கண்ட கீர்த்தனையை இயற்றினார்கள் —

*எல்லாம் இயேசுவே, எனக்கெல்லாம் இயேசுவே,*
*தொல்லைமிகு மிவ்வுலகில் துணை இயேசுவே!*

*ஆயனும் சகாயனும் நேயனும் உபாயனும்*
*நாயனும் எனக்கன்பான ஞான மணவாளனும் —*

ஆர்மோனியம் வாசிக்கப் பழகும் கிறிஸ்தவர்கள் முதலில் வாசிக்கக் கற்பது இக்கீர்த்தனையே!

# கேள்வி 16

***''மரணத்துக்கேதுவான, ஒழிந்துபோகும் மகிமையுடைய, அந்த ஊழியம் அவ்வித மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?''***

**(2 கொரிந்தியர் 3:7,8)**

பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாட்டின் அடிப்படையில் அப்போஸ்தலன் பவுல் இக்கேள்வியை எழுப்புகிறார். இந்த வசனப்பகுதியில் இரு உடன்படிக்கைகளுக்கும் இடையிலுள்ள அடிப்படையான இரு வேறுபாடுகளை அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகிறார். (1) பழைய உடன்படிக்கை ''ஆக்கினைத் தீர்ப்பு'' கொடுக்கும் ஊழியம்; புதிய உடன்படிக்கை '' நீதியைக்'' கொடுக்கும் ஊழியம் (வச 9). (2) பழைய உடன்படிக்கையின் ஊழியம் ''ஒழிந்துபோவது,'' அதாவது ''தற்காலிகமானது;'' புதிய உடன்படிக்கையின் ஊழியம் ''நிலைத்திருப்பது,'' அதாவது ''நிரந்தரமானது'' (வச 11). ''பழைய ஏற்பாட்டின்'' முக்காடு ''கிறிஸ்துவின்'' மூலமாகவே புதிய உடன்படிக்கையின்கீழ் நீக்கப்படுகிறது என்கிறார் பவுல் (வச 14). புதிய உடன்படிக்கை மேலானது என்பதே இங்கு மையக் கருத்து.

பழைய உடன்படிக்கை என்றால் திருமறையின் பழைய ஏற்பாட்டுப் பகுதியிலுள்ள 39 புத்தகங்களையே குறிக்கும் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்படியே, புதிய உடன்படிக்கை என்றால் திருமறையின் புதிய ஏற்பாட்டுப் பகுதியிலுள்ள 27 புத்தகங்களையே குறிக்கும் என்றும் பொருள்படாது. பழைய உடன்படிக்கை என்றால் பழைய ஏற்பாடு எனும் வேதப் பகுதியில் விளக்கப்பட்டுள்ள பழைய உடன்பாடு ஆகும். அப்படியே, புதிய உடன்படிக்கை என்றால் புதிய



ஏற்பாடு எனும் வேதப்பகுதியில் விளக்கப்பட்டுள்ள புதிய உடன்பாடு ஆகும். பழைய ஏற்பாடு என்ற புத்தகத் தொகுப்பும் புதிய ஏற்பாடு என்ற புத்தகத் தொகுப்பும் சேர்ந்ததே திருவார்த்தை. அதைத்தான் பைபிள் அல்லது திருமறை அல்லது வேதாகமம் அல்லது திருவிவிலியம் என்றழைக்கிறோம்.

இரு உடன்படிக்கைகளுக்கும் இடையிலுள்ள அடிப்படை வேறுபாட்டினை நாம் புரிந்துகொள்ளத் தவறினால் தேவையற்ற உபதேசக் கோளாறுகளுக்கு ஆளாவோம். பழைய உடன்படிக்கை நம்மைத் தீர்ப்புணர்வுக்குள் (condemnation) கொண்டுவரும். அது ஒரு உஷ்ணமானி (thermometer) போன்றது. நமக்கு எவ்வளவு காய்ச்சல் இருக்கிறதென்று அது காட்டும்; ஆனால் அது காய்ச்சலைக் குணமாக்க முடியாது. அது கட்டிடம் கட்டுவோர் பயன்படுத்தும் தூக்குநூல் (plumbline) போன்றது. சுவர் எவ்வளவு கோணலாயிருக்கிறதென்று அது காட்டும்; ஆனால் அது சுவரைச் செங்குத்தாக்க முடியாது. புதிய உடன்படிக்கையோ நம்மை நீதிமான்கள் (justification) ஆக்கும். பழைய உடன்படிக்கை இல்லாது பாவவுணர்வு கிடையாது; புதிய உடன்படிக்கை இல்லாது நாம் நியாயப்படுத்தப்பட்டு நீதிமான்களாக முடியாது. இந்த அடிப்படை வேறுபாட்டினை மனதிற்கொண்டவர்களாய், புதிய உடன்படிக்கையின் கீழ் நமக்குக் கிட்டும் முக்கியமான ஆசிகளை இங்கு வரிசைப்படுத்துவோம் —

**(1)** நியாயப்பிரமாணக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே தேவனுக்குமுன் நாம் நீதிமான்கள் என்றெண்ணப்படுவோம் என்பது பழைய ஏற்பாட்டின் நியதி. இதனைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டும் திருவசனம், உபாகமம் 6:25, ''நமது தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமூகத்தில் இந்த ***எல்லாக்*** கட்டளைகளின்படியும் செய்யக் கவனமாயிருந்தால் நமக்கு நீதியாயிருக்கும்.'' ஒரேயொரு கட்டளையை மீறினாலும் நியாயப்பிரமாணம் முழுவதையும் மீறிவிட்டோம் என்றே பொருள் (யாக் 2:10). இந்த நியதியின்படி எவருமே தேற முடியாது! ஆனால் புதிய உடன்படிக்கையிலோ ''நியாயப்பிரமாணம் இல்லாமல்'' தேவ நீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது (ரோ 3:21). இலவசமாய்த் தேவனது ''கிருபை

யினால்'' கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறோம் (வச 24). ''விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்'' என்பதின் பொருள் இதுவே. இவ்வாசகம் திருமறையில் நான்கு இடங்களில் வருகிறது (ஆப 2:4; ரோ 1:17; கலா 3:11; எபி 10:38). இதைப் புரிந்துகொண்டபோதுதான் மார்ட்டின் லூத்தர் 16ஆம் நூற்றாண்டில் வீறுகொண்டெழுந்தார். இச்சீர்திருத்தம் நிகழாதிருந்தால் நாம் இன்று மரியாளின் சிலையைக் கும்பிட்டுக்கொண்டும், பொம்மைகளை முத்தமிட்டுக்கொண்டும் இருப்போம்.

நாம் இரட்சிக்கப்படுவது நமது ''நற்செயல்களினால்'' அல்ல; தேவனுடைய ''கிருபையினால்.'' நாம் நீதிமான்களாக்கப்படுவது நமது ''முயற்சியினால்'' அல்ல; கிறிஸ்துவின்மீது வைக்கும் ''விசுவாசத்தினால்'' (எபே 2:8,9). நமது கிறிஸ்தவ வாழ்க்கை தேவனுக்குப் பிரியமானதாய் இருக்கவேண்டுமானால் அது துவக்கம் முதல் முடிவு வரை விசுவாசம், விசுவாசம் என்றே இருக்கவேண்டும் (எபி 11:6அ). எனவேதான் நமது இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவானவர் நமது விசுவாசத்தைத் துவக்குபவரும் முடிப்பவருமாய் இருக்கிறார் (12:1). அவர் துவக்கியதைப் பிசாசு முடிக்க முடியாது. காரணமில்லாமலா இறைமக்களுக்கு ''விசுவாசிகள்'' என்ற பெயர் வந்தது?

(2) பழைய உடன்படிக்கையில் ஒரு சிலரே ஆசாரியராய் இருக்கும்படி அழைக்கப்பட்டு அபிஷேகிக்கப்பட்டனர். புதிய உடன்படிக்கையிலோ கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரும் தேவனுக்கு முன் ஆசாரியர்கள்தான். இரு செயல்பாடுகளுக்காய் நாம் ஆசாரியர்களாக்கப்பட்டிருக்கிறோம்: ஒன்று, தேவனைத் ''துதிக்க;'' அடுத்தது, தேவனது ''தூதறிவிக்க'' (1 பேது 2:5,9). (To praise God and to proclaim His mercies). புதிய ஏற்பாட்டுத் திருச்சபையில் ஆசாரியர், ஆசாரியல்லாதோர் என இரு வகுப்பினர் கிடையாது. சீர்திருத்தக் காலங்களில் வலியுறுத்தப்பட்ட ''அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம்'' (Priesthood of all believers) எனும் உபதேசம் இன்று பெயரளவில்தான் இருப்பது பெரும் துக்கம். இன்னொரு சீர்திருத்தம் வராவிட்டால் சபையின் இருண்ட காலம் (Dark Ages) அரைகுறை வெளிச்சத்தில் நீடிக்கும்.



பழைய ஏற்பாட்டில் மனிதருக்கும் தேவனுக்குமிடையில் நடுவராய் ஆசாரியன் நின்றார். இன்று நமக்கும் தேவனுக்குமிடையில் நடுவராயிருப்பது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து இயேசு ஒருவரே (1 தீமோ 2:5). தேவனுக்கும் மனிதருக்குமிடையில் நடுவராய் மரியன்னையை வைத்து ரோமன் கத்தோலிக்கர் வழிபடுகின்றனர். புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள் தேவ ஊழியர்களைத் தங்களுக்கு நடுவர்களாய் வைத்துக் காலங்கழிக்கின்றனர். கிறிஸ்துவை நம்மிடம் கொண்டுவந்த மரியாளோ, கிறிஸ்துவிடம் நம்மைக் கொண்டுவந்த ஊழியரோ நடுவர் நிலையை எடுக்கக்கூடாது; அது விக்கிரகாராதனை. நமது விண்ணப்பங்களுக்காய்ப் பிதாவிடம் பரிந்துபேசுபவர் கிறிஸ்து (ரோ 8:34). ஊழியர் எவரும் தேவனிடம் நமக்காய்ச் சிபாரிசு பண்ணமுடியாது. பழைய ஏற்பாட்டில் ஒரு சிலர்மீது மட்டும் வந்திறங்கி அவர்களைப் பொறுப்புகளுக்காய் அபிஷேகித்த ஆவியானவர் இன்றோ குமாரர், குமாரத்திகள், வாலிபர், முதியோர், வேலைக்காரர்கள், வேலைக்காரிகள் போன்ற மாம்சமான ''யாவர்மீதும்'' ஊற்றப்படுகிறார் (அப் 2:17,18). இந்த வேறுபாட்டினை நாம் புரிந்துகொள்ளாவிடில் புதிய உடன்படிக்கையின் காலத்திலும் பழைய உடன்படிக்கையின்படியான வாழ்க்கையையே வாழ்ந்துகொண்டிருப்போம்.

(3) பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்குமுள்ள வேறுபாடுகளில் இன்றையக் கிறிஸ்தவ உலகு கவனிக்கத் தவறிய இன்னொரு காரியமுண்டு. பழைய உடன்படிக்கையின் காலத்தில் தேவன் தொழுகை மற்றும் பலி போன்றவற்றிக்கென்று சிறப்பாக சில இடங்களைப் (places) புனிதப்படுத்தினார். எடுத்துக்காட்டாக, உபாகமம் 12:5,13ஐப் பாருங்கள்: ''உங்கள் தேவனாகிய கர்த்தர் ... தெரிந்துகொள்ளும் இடமாகிய அவரது வாசஸ்தலத்தையே நாடி அங்கே போய்'' பலிகளைச் செலுத்துங்கள்; ''கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தாதபடி எச்சரிக்கையாயிரு.'' இந்த வழக்கத்தைத்தான் யூதரும் அரை யூதரான சமாரியரும் பின்பற்றிவந்தனர். எனவேதான் அன்று கிணற்றருகே அந்தச் சமாரியப் பெண்மணி ஆண்டவர் இயேசுவிடம் இப்படிச் சொன்னாள்:

''எங்கள் மூதாதையர் இந்த மலையில் தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்களோ எருசலேமிலிருக்கிற தலத்தில் தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே'' (யோ 4:20). அதற்கு இயேசு கொடுத்த பதில் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வரவிருந்த மாற்றத்தை உள்ளடக்கியிருந்தது: ''பெண்ணே, நான் சொல்லுவதை நம்பு: நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மட்டுமல்ல, ***எங்கும்*** பிதாவைத் தொழுதுகொள்ளும் ***காலம்*** வருகிறது ... அது இப்பொழுதே வந்திருக்கிறது'' (வச 21,22). பிரியமானவர்களே, புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நமக்குப் புண்ணியத்தலம் என்றோ புனிதத்தலம் என்றோ ஒன்றும் கிடையாது. இயேசுவின் பெயரால் இரண்டு மூன்று பேர் ''எங்கு'' கூடினாலும் ''அங்கு'' அவர்கள் ''நடுவில்'' அவர் இருக்கிறார் (மத் 18:20). எவ்வளவு அலங்காரமாய்க் கட்டப்பட்டாலும், எத்தனை தடவை பிரதிஷ்டை செய்யப்பட்டாலும், எந்தக் கட்டிடத்திலும் தேவன் தங்கியிருப்பதில்லை (அப் 7:47,48). அவர் ஒரு திடப்பொருள் (substance) அல்ல; அவர் ஆவியாய் (Spirit) இருக்கிறார் (யோ 4:24).

சிலுவையில் இயேசு தமது உயிரை விட்டபோது தேவாலயத்தின் தொங்குதிரை மேலிருந்து கீழாகக் கிழிந்தது (மத் 27:50,51). இயேசு மரித்தவுடன் நடந்த முதல் காரியம் இதுதான் என்பது தெரியுமா? அதன் பொருளென்ன? இன்று வெளிப்பிரகாரம் (Outer Court), உட்பிரகாரம் (Inner Court), மகா பரிசுத்த ஸ்தலம் (Innermost Court / Most Holy Place) என்று இடங்களைப் பிரிக்கமுடியாது. கிறிஸ்தவ ஆலயங்களில் புனிதப் பீடம் (altar) என்று அமைப்பதெல்லாம் திருமறைக்குப் புறம்பானது. திரைச்சீலை கீழிருந்து கிழிக்கப்பட்டால் அது மனிதனின் செயல்; அது மேலிருந்து கிழிக்கப்பட்டது தேவனது செயல். அதைத் திரும்பத் தைக்காதீர்கள்! இன்று தேவன் தமது மக்கள் கூடும்போது அவர்கள் ''நடுவில்'' இருக்கிறார் (மத் 18:20). கூடியிருந்த சீடர் ''நடுவில்'' இயேசு வந்து நின்று சமாதானம் கூறினார் (யோ 20:19,26). பிடிவாதம், முரட்டுக்குணம் ஆகியவற்றையெல்லாம் விட்டுவிட்டுப் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு இணக்கம் காட்டுங்கள். உயிரற்ற கற்களில் பணத்தைக் கொட்டாமல், உயிருள்ள கற்களாகிய இறைமக்களையே தேவாலயமாய்க் கட்டி



யெழுப்பும் காரியங்களில் தீவிரம் காட்டுங்கள் (எபே 2:21,22; 1 பேது 2:4,5). என்மீது கோபப்படாதீர்கள்; வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். ஆண்டவர் மறுரூபமடைந்த மலையைப் பேதுரு புனிதத்தலமாய்க் கணித்திருப்பார். எனவேதான் இயேசுவுக்கும் விண்ணக விருந்தாளிகளுக்கும் அங்கு கூடாரங்கள் போட அனுமதி கேட்டார். அது மறுக்கப்பட்டது, நிராகரிக்கப்பட்டது என்பதை நினைவிற்கொள்க (மத் 17:1-6).

**(4)** பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்குமுள்ள இன்னொரு வேறுபாடு நமக்கு வாக்களிக்கப்படும் ஆசீர்வாதங்களை அடுத்தது. பழைய ஏற்பாட்டில் பெரும்பாலும் பொருளாதார மற்றும் உடலுக்கடுத்த ஆசீர்வாதங்களே வாக்களிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, உபாகமம் 28:1-14ஐ வாசித்துப்பாருங்கள்: ''நிலம், ஆடுமாடுகள், கூடை, மாவு, களஞ்சியம், வேலை, மழை, கடன் ...'' ஆபிரகாமைத் தேவன் எவ்வளவாய் ஆசீர்வதித்திருக்கிறாரென்று அவரது ஊழியக்காரன் லாபானிடம் குறிப்பிட்டுச் சொன்ன காரியங்கள்: ''சீமான், ஆடுமாடுகள், வெள்ளி, பொன், வேலைக்காரர், ஒட்டகங்கள், கழுதைகள்!'' (ஆதி 24:34,35). புதிய ஏற்பாடு வலியுறுத்துவதோ ''ஆவிக்குரிய'' ஆசீர்வாதங்கள் (எபே 1:3). ''பாவ மன்னிப்பு, மீட்பு, சமாதானம், ஆவியானவரது கனிகள், வரங்கள், பிரகாசமுள்ள மனக்கண்கள், நிதானிப்பு, சாட்சிபகிர்வதில் வல்லமை, பரிசுத்தம், விசுவாசம், கிருபை, சகோதர சிநேகம், நித்திய ஜீவன்'' இப்படிப்பட்டவையே. இன்று பொருளாதார வளமை என்றால் ஆசீர்வாதம் என்றும், ஏழ்மை என்றால் சாபம் என்றும் சொல்லிவிட முடியாது. அப்போஸ்தலன் யாக்கோபு நம்மிடம் கேட்பது: ''என் பிரிய சகோதரரே, கேளுங்கள்: தேவன் இவ்வுலகில் தரித்திரரை விசுவாசத்தில் தனவான்களாய்த் தெரிந்துகொள்ளவில்லையா?'' (யாக் 2:5). பொருளாதார ஆசீர்வாதங்களை முன்னிலைப்படுத்தும் பிரசங்கிமாரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். வயிறே அவர்களுக்குத் தெய்வம் (பிலி 3:17-20). அவர்கள் இயேசுவுக்கு அல்ல, இயேசுவின் ''சிலுவைக்குப்'' பகைவர்! இயேசுவின் பெயரைத்தான் சொல்லுவார்கள்; ஆனால் அவர்கள் பிரசங்கிப்பது சிலுவையற்ற செய்தியாதலால் அது ''வேறே சுவிசேஷம்!''

இவ்வத்தியாயத்தின் முதல் பத்தியில் பழைய புதிய உடன்படிக் கைகளுக்கிடையிலுள்ள இரு அடிப்படை வேறுபாடுகள் நாம் தியா னித்துக்கொண்டிருக்கும் வசனப்பகுதியாகிய 2 கொரிந்தியர் 3:7-11இலிருந்து சுட்டிக்காட்டப்பட்டன. இரண்டாம் வேறுபாடு என்னவென்றால், பழையது தற்காலிகமானது, புதியதோ நிரந்தர மானது (வச 11). பழைய ஏற்பாடு முழுவதும் வரவிருந்த கிறிஸ்து வுக்கான ஆயத்தக்காலமே. பழைய ஏற்பாட்டில் இருந்தது ‘‘நிழல்’’ (shadow); புதிய ஏற்பாட்டில் வந்ததோ ‘‘நிசம்’’ (substance). நிசமான வராகிய கிறிஸ்துவிடம் வந்து அவரை ருசிபார்த்தபின்னரும் நிழலான நியாயப்பிரமாணக் கொள்கைக்குள் திரும்பிக்கொண்டிருந்த கலாத் திய நாட்டு விசுவாசிகளைத் திருத்தப் பவுலடியார் கொடுத்த விளக் கத்தைக் கவனியுங்கள்: கலா 3:24,25, ‘‘நாம் விசுவாசத்தினால் நீதி மான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்து விடம் வழிநடத்தும் உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்கள் அல்லவே.’’ ‘‘உபாத்தி’’ என்றால் பள்ளிக்கு உபாத்தியாயரிடம் சிறுவர் சிறுமியரைக் கூட்டிவரும் ‘‘வழித்துணை’’ என்று பொருள். பள்ளிக்குள் வந்தபின்னர் சிறுவர் சிறுமியரோடு வகுப்பில் அந்த வழித்துணை உட்காரமாட்டார்!

இப்பொழுது நமது மனதில் ஒரு நியாயமான கேள்வி எழுகிறது. அப்படியானால் இன்று நியாயப்பிரமாணம் என்ற திருச்சட்டங்கள் நமக்குத் தேவையில்லையா? நியாயப்பிரமாணத்தை இரண்டாய்ப் பிரிக்கவேண்டும். ஒன்று, ஆச்சாரங்களுக்கடுத்தவை (ceremonial); அடுத்தது, நீதிநெறிக்கடுத்தவை (moral). பண்டிகைகள், பலிகள், ஓய்வுநாட்கள், விருத்தசேதனம் போன்ற ஆச்சாரங்கள் அகற்றப்பட் டாயிற்று (கொலோ 2:16,17). ஆனால் நீதிநெறிகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பகையுணர்வே இன்று கொலையாம்; இச்சை யான பார்வையே இன்று விபசாரமாம் (மத் 5:21-22, 27-28).

ரோமர் நிருபத்தையும் கலாத்தியர் நிருபத்தையும் அடிக்கடி வாசித்துத் தியானியுங்கள். இடித்துப்போடப்பட்ட சுவர்களை மறு படியும் கட்டாதிருங்கள் (கலா 2:18), கிறிஸ்து தந்துள்ள விடுத லையை விட்டுவிட்டு அடிமைத்தன நுகத்திற்குள் மறுபடியும் சென்றுவிடாதிருங்கள் (5:1). மோசேயின் நுகம் ‘‘பாரமானது,’’ இயேசுவின் நுகமோ ‘‘மெதுவானது,’’ அவரது சுமை ‘‘இலகுவானது’’ (மத் 11:28,29; யோ 1:17). இந்த உபதேசத்தை நடைமுறையில் காட்டவே நமதாண்டவர் அடிக்கடி ஓய்வுநாட்களில் பிணியாளி களைக் குணமாக்கினார். ‘‘ஓய்வுநாளுக்காக மனிதனல்ல, மனித னுக்காகவே ஓய்வுநாள்’’ என்று போதித்தார் (மாற் 2:27).



நாம் தியானித்துக்கொண்டிருக்கும் கேள்வி அடங்கியுள்ள பகுதி யில் (2 கொரி 3) அப்போஸ்தலன் சொல்லியுள்ள வார்த்தைகளோடு இவ்வத்தியாயத்தை நிறைவுசெய்கிறேன்: ‘‘நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கை உடையவர்களாதலால் மிகவும் தாராளமாய்ப் பேசு கிறோம்’’ (வச 12).



# கேள்வி 17

## *''என்னுடையதை என் விருப்பப்படிச் செய்ய எனக்கு அதிகாரம் இல்லையா? நான் தயாளனாயிருப்பதால் நீ பொறாமைப்படலாமா?''*

**(மத்தேயு 20:15)**

திராட்சைத் தோட்ட உரிமையாளர் ஒருவர் வேலைக்குக் கூலியாட்களை அமர்த்த அதிகாலையில் புறப்படுகிறார். முழுநாள் வேலைக்கு நூறு ரூபாய் என்று பேசி கூலியமர்த்துகிறார். அடுத்து 9 மணிக்கு கடைத்தெருவுக்குச் சென்று சும்மா நிற்கும் சிலரைக் கண்டு, நியாயமான கூலி தருவதாகச் சொல்லித் தோட்டத்திற்கு அனுப்புகிறார். மதியம் 12 மணியளவிலும், பிற்பகல் 3 மணியளவிலும் அவ்விதமே சிலரைக் கூலிக்கு அமர்த்துகிறார். பகல் முழுவதும் சும்மா நின்று கொண்டிருந்த இன்னும் சிலரை மாலை 5 மணிக்கும் வேலைக்கு அமர்த்துகிறார். மாலை மயங்கும் வேளையில் பிந்தி வந்தவர் தொடங்கி முந்தி வந்தவர் வரைக்கும் ஒரே கூலி கொடுக்கக் தனது கணக்குப்பிள்ளையிடம் சொல்லுகிறார். இதில் ஏமாற்றமடைந்த முதல் வரிசை கூலிக்காரர், ''மாலை 5 மணிக்கு வந்தவனுக்கும் காலை 6 மணி முதல் கொளுத்தும் வெயிலில் வேலை செய்த எங்களுக்கும் ஒரே கூலியா?'' என்று உரிமையாளரிடம் வினவுகிறார். அதற்கு அவர் கொடுத்த பதில்தான் நாம் தியானத்திற்கு எடுத்துக் கொண்ட கேள்வி (மத் 20:15). முதலில் வேலைக்கு வந்தவர்கள் கேட்ட கேள்வியும் நியாயமானது; தோட்ட உரிமைக்காரர் கொடுத்த பதிலும் சரியானது. இதனை விளங்கிக்கொள்ள நாம் திருமறையை இவ்வத்தியாயத்தில் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

''தேவனது ஏகாதிபத்தியத்தின்படித் தயாளம்'' (Generosity according to the Sovereignty of God) என்பதே இங்கு நாம் கற்றுக் கொள்ளவேண்டிய உபதேசம். இதனை நாம் விளங்கிக்கொள்ளாவிடில் பிறரோடு தேவன் இடைபடும் விதம் குறித்துத் தேவையில்



லாத கேள்விகளுக்கும் தடுமாற்றங்களுக்கும் ஆளாவோம். தேவனது இம்முக்கியக் குணாதிசயத்தைப் புரிந்துகொள்ள நான்கு எடுத்துக் காட்டுகளைத் திருமறையில் கவனிப்போம்—

(1) தனது பன்னிரு குமாரரில் யோசேப்புமீது யாக்கோபு தனிப் பாசம் வைத்திருந்தார். யோசேப்பின் சகோதரர்க்கு யாக்கோபின் இவ்வித மனப்பான்மை சற்றும் பிடிக்காததால் யோசேப்பின்மீது பொறாமையும் பகையுணர்வும் கொண்டனர் (ஆதி 37:4,11). யோசேப்பை யாக்கோபு அதிகமாய் நேசித்தது ஒரு குருட்டுத்தனமான செயல் அல்ல. யாக்கோபிடம் தீர்க்கதரிசனக் கண்ணோட்டம் (prophetic insight) இருந்தது என்றே நான் சொல்வேன். அவரது குமாரரைக் குறித்த வெகு நீண்ட தீர்க்கதரிசனக் கூற்றை ஆதியாகமம் 49ஆம் அத்தியாயத்தில் வாசிக்கிறோம். அதில் ஐந்து வசனங்கள் யோசேப்பிற்காய்ச் சொல்லப்பட்டவை (வச 22-26). அவன்மீது கூறப்பட்ட அத்தனை ஆசீர்வாதங்களும் தேவனை மையப்படுத்தியிருந்ததைக் கவனியுங்கள்: ''வல்லவரின் கரங்களால் ... தகப்பனுடைய தேவனால் ... சர்வ வல்லவரால்'' (வச 24,25). தேவன் அவனை ஆசீர்வதிக்கச் சித்தம் கொண்டது அவனைப் பிறர்க்கு ஆசீர்வாதமாக்கவே. ''கனி தரும் செடி'' என்றால் அதுதானே பொருள்? அதுவும் மதிற் சுவற்றின்மேல் படர்ந்தால் பிறரும் பழம் பறிக்கலாமல்லவா? (வச 22).

ஆதி முதல் அந்தத்தை அறிந்த தேவன் ஒவ்வொருவரும் எவ்விதம் தமது திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுவார் என்பதற்கேற்ப அவர்கள் வாழ்க்கையை நடத்திச் செல்வார். ''கனிமரத்திற்குத் தான் கல்'' என்பதுபோல், ''வில்வீரர் யோசேப்பைப் பகைத்தார்கள்; ஆனாலும் வல்லவரின் கரங்களால் அவனது புயங்கள் பலத்தன'' (ஆதி 49:23,24). இதே கருத்தினைத் திருச்சபையின் முதலாம் இரத்தசாட்சியாகிய ஸ்தேவான் தனது இறுதியுரையில் குறிப்பிட்டார்: அப் 7:9,10,'' கோத்திரப் பிதாக்கள் பொறாமை கொண்டு யோசேப்பை விற்றுப்போட்டார்கள். தேவனோ அவனுடனிருந்து, எல்லா உபத்திரவங்களிலிருந்தும் அவனை விடுவித்து ... அவனுக்குக் கிருபையும் ஞானமும் அருளினார்.''

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி: ''என்னைவிட நல்லவர், என்னைவிடப் புனிதர் எத்தனையோ பேர் இவ்வுலகில் இருக்கையில் என்னை ஏன் தேவன் தெரிந்துகொண்டார்?'' எனது கல்லூரி வாழ்க்கையின் முதல் ஆண்டிலேயே (1962) தேவன் என்னை இரட்சித்துவிட்டார். 40பேர் இருந்த அந்த வகுப்பில் அன்று 4 பேரையே ஆண்டவர் இரட்சித்தார்; அதில் நானும் ஒருவனா? பதில் காணமுடியாது எமில் அண்ணனது பாடல் பாடுகிறேன் —

*என்னையா தேடினீர், ஐயா இயேசு நாதா?*
*உம்மை மறந்த ஓர் துரோகி நான்;*
*என்னையா தேடினீர், ஐயா இயேசு நாதா?*
*அடிமை உமக்கே இனி நான்!*
*உம்மைப்போல் யாருண்டு, எந்தன் இயேசு நாதா,*
*இந்தப் பார்தலத்தில் உம்மைப்போல் யாருண்டு?*

ஆண்டவரது சிறப்பான தெரிந்தெடுப்பு நமக்குக் கூடுதல் பொறுப்புணர்வைத்தான் தரவேண்டுமே தவிரத் தலைக்கனத்தைக் கூட்டிவிடக்கூடாது. எனவேதான் கீழ்க்கண்ட இயேசுவின் கூற்றும் யோவானின் கூற்றும் ஒருபோதும் நமது மனதைவிட்டு அகலக் கூடாது. இயேசு: ''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை; நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்'' (யோ 15:16). யோவான்: ''அவர் முந்தி நம்மிடம் அன்புகூர்ந்ததால் நாமும் அவரிடம் அன்புகூருகி றோம்'' (1 யோ 4:19). இதனைத் தெளிவாய்ப் புரிந்துகொண்டதால் தான் அப்போஸ்தலன் பவுல் தாழ்மையுடன் இவ்விதம் அறிக்கை யிட்டார்: ''பாவிகளில் பிரதான பாவி நான்'' (1 தீமோ 1:15). ''பவு லாகிய நானே இரட்சிக்கப்பட்டால் எவரும் இரட்சிக்கப்படமுடியும்'' என்பதையே அவர் சொல்லாமல் சொல்லுகிறார் (வச 16). வாலிபர் நங்கையருக்கான நற்செய்தி முகாம்களில் இக்கூற்றில் எனது பெயரை வைத்துப் பலமுறை சாட்சிபகர்ந்திருக்கிறேன்.

(2) மக்கள்மீது தேவன் காட்டும் தயாள குணத்தைப் புரிந்து கொள்ளமுடியாது நாம் அவர்கள்மீது பொறாமையும் எரிச்சலும் கொள்ளுவது எவ்வளவு தவறு என்பதைச் சுட்டிக்காட்டும் நிகழ்வு



ஒன்று யோவான் 8ஆம் அத்தியாயத்தில் உண்டு. ஒலிவ மலையில் இரவு ஜெபம் முடித்துவிட்டுக் காலையில் தேவாலயத்தில் இயேசு உபதேசம்பண்ணிக்கொண்டிருக்கையில் விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை இயேசுவுக்குமுன் வேதபாரகரும் பரிசேயரும் கொண்டுநிறுத்தினர். நியாயப்பிரமா ணத்தின்படி அவளைக் கல்லெறிந்து கொல்லட்டுமா என்று இயேசு விடம் கேட்டனர். அடுத்து நடந்தவற்றை நாமறிவோம் (யோ 8:1-11). ''இனிச் சிவப்பு விளக்குப் பகுதிக்குப் போகாதே; உலகின் மெய்யான ஒளியாகிய என்னைப் பின்பற்று'' என்று இயேசு அவ ளுக்குச் சொல்லி, மன்னித்து, அனுப்பிவைத்தார்.

நம்மில் அநேகரும் மேற்குறிப்பிட்ட இந்த வேதபாரகர், பரிசே யரைப் போலவே இருக்கிறோம். பழைய ஏற்பாட்டில் நாம் சந்திக்கும் தானியேல் ஒரு தேவ மனிதன். தேவனுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் சுத்த மனச்சாட்சியுடன் வாழ்ந்தவர் அவர் (தானி 6:22). இப்படிப்பட்ட பரிசுத்தவான் கர்த்தரை நோக்கி ஜெபிக்கும்போது ''மக்கள்'' பாவம் செய்தார்கள் என்று சொல்லாமல் ''நாங்கள்'' பாவம் செய்தோம், ''நாங்கள்'' அக்கிரமக்காரராய் இருந்தோம், ''நாங்கள்'' துன்மார்க்கமாய் நடந்தோம், ''நாங்கள்'' கலகம்பண்ணினோம், ''நாங் கள்'' உமது கற்பனைகளை விட்டு அகன்றுபோனோம் என அறிக்கை யிட்டார் (9:4,5). ''நாங்கள் அநீதிக்காரர், நீர் ஒருவரே நீதியுள்ளவர்'' என்கிறார் (வச 7). இந்த ஜெபத்தின் உச்சக் கட்டம், இதோ, தேவ னைப்பற்றிய அவரது அறிவு: ''எங்கள் தேவனாகிய ஆண்டவரிடம் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு'' (வச 10). இதைப்போன்ற தொரு அறிக்கையைத் திருப்பாடகன் நமக்குச் சவாலாய் முன்வைக் கிறார்: ''கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான்? ஆண்டவரே, உமக்குப் பயப்படும்படி உம்மிடம் மன்னிப்பு உண்டு'' (சங் 130:3,4).

தேவனது தயாள குணத்தைப் புரிந்துகொள்ளாத இரு நபர்களைக் கவனிப்போம். ஒருவர், நாட்டுவெறி பிடித்த, ஒருதலை விருப்புள்ள, தீர்க்கன் யோனா. நினிவே நகர்வாசிகள் மனந்திரும்பிவிட்டது அவருக்கு ''மிகுந்த விசனத்தையும் கடுங்கோபத்தையும்'' உண்டாக்

கியதாம்! (யோனா 4:1). கர்த்தரிடம் அவர் எப்படி முறையிடுகிறார், பாருங்கள்: ''ஆ கர்த்தாவே, நான் என் நாட்டில் இருக்கும்போதே இதைச் சொல்லவில்லையா? இதனால்தான் நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும், மனவுருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனம்வருந்துகிறவருமான தேவன் என்று அறிவேன்'' (வச 2). தனி நபர்கள் அல்லது குழுக்கள் மீதுள்ள நமது விருப்பு வெறுப்பு அவர்கள்மீதுள்ள தேவன்பைப் போற்ற முடியாதபடி எவ்வளவாய் நமது கண்களைக் குருடாக்கிவிடுகிறது! பிறர்மீதுள்ள ஆண்டவரது பரிதவிப்பை நாம் உணரமுடியாதது என்னே அவலநிலை! (வச 11). ஆத்துமாக்களைவிட ஆமணக்குதான் நமக்குப் பெரிதாகிவிடுகிறது!

அப்போஸ்தலன் பேதுருவின் கதையும் இதுதான். ''என் சகோதரனுக்கு எத்தனை முறை மன்னிக்கவேண்டும்?'' என்ற அவரது கேள்விக்குப் பதில் கொடுக்கும் வகையில் ஆண்டவர் கடன்பட்ட இருவரின் உவமையைச் சொன்னார். ஒரு சவாலுடன் இவ்வுவமை முடிவடைகிறது: ''நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ?'' (மத் 18:21-33). ஒவ்வொரு நாளும் புதிய கிருபையையும் முடிவிலா இரக்கங்களையும் ஆண்டவரிடம் பெற்றனுபவிக்கும் நாம் பிறர்மீது தேவனது தயாள குணம் வெளிப்பட மண்டியிடவேண்டாமா? அப்படி வெளிப்படும்போது அதில் மகிழவேண்டாமா? நாம் நிர்மூலமாகாது காக்கப்படுவதுபோல் நமது சகோதர சகோதரிகளும் காக்கப்பட மன்றாடவேண்டாமா? (புல 3:22,23).

**(3)** தேவனது கனிவான இதயத்தையும் மனிதனது கல்லான மனதையும் சுட்டிக்காட்டும் ஒரு சம்பவம் லூக்கா 7ஆம் அத்தியாயத்தில் உண்டு. பரிசேயரில் ஒருவனது அழைப்பின்பேரில் ஆண்டவர் அவனது வீட்டிற்கு விருந்துண்ணச் செல்கிறார். அப்பொழுது ''பாவியாகிய ஒரு பெண்மணி'' இயேசுவின் பாதங்களைத் தனது கண்ணீரால் நனைத்து, தனது கூந்தலினால் துடைத்து, அவற்றை முத்தம்செய்து, பரிமளதைலம் பூசினாள் (வச 37,38). இதில் வெறுப்படைந்த அந்தப் பரிசேயன், ''இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுவது ஒரு பாவி என்றறிந்திருப்பாரே'' என்றான் (வச 39).



உடனே இயேசு அவன் எதையெல்லாம் செய்யத் தவறினானோ அவற்றையும், அவற்றிற்கு அதிகமாகவும், அவள் செய்துவிட்டாள் என்று அவனுக்குப் பதிலளித்தார். தண்ணீர்கூட கிடைக்கப்பெறாத பாதங்களுக்கு அவளது கண்ணீர் கிடைத்தது! முடிவாக இயேசு சொன்னது: ''கொஞ்சம் மன்னிக்கப்பட்டவன் கொஞ்சம் அன்பாயிருப்பான்; நிறைய மன்னிக்கப்பட்ட இவளோ அதிகம் அன்பாயிருப்பாள்'' (வச 47). விருந்துண்ண அமர்ந்திருந்த அனைவரையும்விட அவள் பெரிய பாவியல்ல; ஆனால் அவர்கள் அனைவரையும்விட அவள் தனது பாவங்களை அதிகம் உணர்ந்தாள்!

பிரியமானவர்களே, பரலோகில் மூன்று அதிர்ச்சிகள் எனக்குக் காத்திருக்கும் என எண்ணுகிறேன்: ''நான் எதிர்பார்த்த அநேகர் அங்கிருக்கமாட்டார்; நான் எதிர்பாராத அநேகர் அங்கிருப்பர்; நான் அங்கு இருப்பேன்!'' எனவேதான் இயேசு இவ்விதம் சொன்னார்: ''வரிக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே இறையரசில் நுழைகிறார்கள்'' (மத் 21:31). ''ஆண்டவரே, கல்லான எனது இருதயத்தை எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை எனக்குத் தாரும்; அப்பொழுதுதான் உமது தயாளத்தின் அரிச்சுவடி எனக்குப் புரியும்!''

**(4)** தொன்று தொட்டு நாம் இளையவனையே ''கெட்ட குமாரன்'' என்று அழைத்துவந்திருக்கிறோம். ஆனால் திருமறை அவனை அப்படி அழைக்கவில்லை (லூக் 15:11-32). என்னைப் பொருத்தவரை மூத்தவனையே கெட்ட குமாரன் என்பேன். ஏனெனில் ஒரு கதையின் முடிவுதான் முக்கியம். இக்கதையின் முடிவில் இளையவன் வீட்டிற்கு உள்ளே, மூத்தவன் வீட்டிற்கு வெளியே! இன்று திருச்சபையில் பின்மாற்றக்காரர்கள் நிறையவுண்டு என்பது உண்மை; ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் திரும்பிவர முடியாததற்குக் காரணம் உள்ளேயே இருக்கும் மூத்த குமாரர்கள்தான். அவர்களுக்குத் தந்தையுள்ளம் கிடையாது. அவர்கள் ''கற்பனைகளை'' மீறாதிருந்தும், தீவிரமாய்ச் ''சேவையில்'' ஈடுபட்டிருந்தும், தேவனது தயாளத்தைப் புரிந்துகொள்ளாத சுயநீதிக்காரர் (வச 29). அவர்களுக்கு எப்பொழுதும் ''ஆட்டுக்குட்டியா'' ''கன்றுக்குட்டியா'' என்ற ஒப்புமைப் பேச்சுதான் (வச 29,30). பின்மாற்றக்காரரைத் திரும்பக் கொண்டுவரவேண்டுமானால் ''சாந்த சொரூபியாகிய'' தேவனைப்

போன்ற கனிவிரக்கம் நமக்கிருக்கவேண்டும் (கலா 6:1). பாவங்களை மன்னித்து மறக்கும் ''தயாளரான'' தேவனது சிந்தை நமக்கிருக்கவேண்டும் (யாக் 5:20).

பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள் எவ்வளவாய்ப் பாடனுபவித்தனர்! ஆனாலும் நம்மையல்லாமல் அவர்கள் பூரணராகாதபடி மேன்மையான, நன்மையான, ஒன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தாரே! அவர்களுக்கு நிறைவேறாத திருவாக்கு நமக்கல்லவோ நிறைவேறிற்று? (எபி 11:39,40). இதனால் அவர்கள் நம்மீது பொறாமை கொள்ளுகிறார்களோ? இல்லவே இல்லை; மாறாக, களத்தில் ஓடிக்கொண்டிருக்கும் நம்மைக் கைதட்டி உற்சாகப்படுத்தத் திரளாய்க் கூடிநிற்கிறார்களே! (12:1அ). ''முந்தினோர் பிந்தினோராயும் பிந்தினோர் முந்தினோராயும் இருப்பர்'' என்பதற்குப் பொருள் இதுதானோ?

நம் ஒவ்வொருவருக்கும் வரும் மூன்று அழைப்புகளை ஒரு சவாலாக இங்கு குறிப்பிட்டு இவ்வத்தியாயத்தை முடிக்க விரும்புகிறேன் —

(i) தேவனது ஏகாதிபத்தியத்தைப் புரிந்துகொள்வோம். பிந்தி வந்த இளையவரான இயேசு தன்னைவிட அதிகம்பேருக்குத் திருமுழுக்கு கொடுக்கிறார் எனக் கேள்விப்பட்ட யோவான் சொன்னது: ''விண்ணகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டால் தவிர அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்'' (யோ 3:26,27).

(ii) வளர்ந்து முதிர்ச்சியடைவோம். முந்தி அப்போஸ்தலரான பேதுரு பிந்தி அப்போஸ்தலரான பவுலை மெச்சினார் (2 பேது 3:15,16). இங்கு பேதுரு சுட்டிக்காட்டுவது கர்த்தரது ''நீடிய பொறுமை.'' தம்மை மறுதலித்த பேதுருவிடமும், தமது மக்களைக் கொன்று குவித்த பவுலிடமும் தேவன் பொறுமையாயிருந்தார்!

(iii) பூரணம் நோக்கி நடைபோடுவோம். தீயோர்மீதும் நல்லோர் மீதும் தமது சூரியனைத் தேவன் உதிக்கப்பண்ணுகிறார்; நீதியுள்ளோர்மீதும் அநீதியுள்ளோர்மீதும் மழையைப் பொழிகிறார். இது வல்லவோ ''பூரண சற்குணம்?'' (மத் 5:45,48).



# கேள்வி 18

***''நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன் நிற்கவிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளி என்று தீர்க்கிறதென்ன? உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன?''***

**(ரோமர் 14:10)**

உணவு வகைகளைக் குறித்த காரியங்களை விபரமாய் விளக்கும் ரோமர் 14ஆம் அத்தியாயத்தில் அப்போஸ்தலன் பவுல் இக்கேள்வியை எழுப்புகிறார், உணவு வகைகளில் எவையெல்லாம் சுத்தமானவை, எவையெல்லாம் அசுத்தமானவை என்று பழைய உடன்படிக்கையின்கீழ் சட்டதிட்டங்கள் இருந்தன. புதிய உடன்பாட்டின்படி இந்த வேறுபாடு நீக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டு உபதேசம் என்னவென்றால்: ''தேவன் படைத்தது எல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஒன்றும் தள்ளப்படவேண்டியதல்ல. அது இறைவார்த்தையினாலும் இறைவேண்டலினாலும் பரிசுத்தமாக்கப்படும்'' (1 தீமோ 4:4,5). பரலோகத் தரிசனம் மூலம் அப்போஸ்தலன் பேதுருவுக்குத் தேவன் சொல்ல விரும்பிய காரியங்களில் இதுவும் ஒன்று (அப் 10:11-15). ஆனாலும் யூதராயிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களும் புறவினத்தாராயிருந்து அவரை ஏற்றுக்கொண்டவர்களும் சேர்ந்திருந்த புதிய ஏற்பாட்டுச் சபைகளில் ஆகாரத்தைக் குறித்த கருத்து வேறுபாடுகள் நிலவிக்கொண்டுதானிருந்தன. சைவ உணவுக்காரர் அசைவ உணவுக்காரரையும், அல்லது இவர்கள் அவர்களையும் குற்றம் சாட்டி வந்த சூழலிலேயே அப்போஸ்தலன் பவுல் ரோமர் 14:10இலுள்ள கேள்வியைக் கேட்டார். இவ்விதக் கேள்வியின்மூலம் நாம் அறிந்துகொள்ளவேண்டிய திருச்சத்தியங்களை இவ்வத்தியாயத்தில் படிப்போம்.

‘‘பிறரை நியாயந்தீர்த்தல்’’ என்பதே இக்கேள்விச் சூழமைவின் மையக்கருத்து. இப்பொருளைக் குறித்துக் கிறிஸ்து இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் எச்சரித்ததைவிட எதுவும் கடுமையாயிருக்க முடியாது: மத் 7:1-5, ‘‘நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடி மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப் படுவீர்கள் ... நீ உன் கண்ணிலிருக்கும் மரக்கட்டையை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கும் மரத்தூளைப் பார்க்கிறதென்ன? ... வெளிவேடக்காரனே, முதலில் உன் கண்ணிலுள்ள மரக்கட் டையை எடுத்தெறி; பின்பு உன் சகோதரன் கண்ணிலுள்ள மரத் தூளை எடுக்க உனக்குத் தெளிவாய்க் கண் தெரியும்.’’ ஆண்டவர் ஏன் இப்படிச் சொன்னார் தெரியுமா? நம்மில் 100 சதவீதம் நல்ல வரும் எவருமில்லை; 100 சதவீதம் தீயவரும் எவருமில்லை. எல்லாரிலும் நல்லதும் தீயதும் கலந்தே இருக்கின்றன. சதவீதத்தில் தான் முன்பின் இருக்கும்! நடைமுறை எழுத்தாளர் அப்போஸ்தலன் யாக்கோபு இதனை அழகாய் எழுதினார்: யாக் 3:2, ‘‘நாம் எல்லாரும் அநேகக் காரியங்களில் தவறுகிறோம்.’’ நாம் ‘‘எல்லாரும்’’ தவறு கிறோம், ‘‘அநேகக்’’ காரியங்களில் தவறுகிறோம், நம்மில் மிகவும் சிறந்தோரிடமும் தீயவை உண்டு; நம்மில் மிகவும் தீயோரிடமும் நல்லவை உண்டு. இச்சத்தியம் நமது நரம்பு நாளங்களுக்குள் சென் றுவிட்டால் சபையும் சமுதாயமும் எவ்வளவு நறுமணம் வீசும்!

பிறர்க்கு நாம் அளிக்கும் தீர்ப்பு முழுக்க முழுக்கச் சரியானதாகவும் நியாயமானதாகவும் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் தேவனது கண்ணோட்டமும் நமது கண்ணோட்டமும் வேறுவேறு. இறைமகனா கிய இயேசு ஒருவரே முழுக்க முழுக்கத் திருத்தந்தையின் சித்தத் திற்குச் சற்றும் பிசகாமல் வாழ்ந்தார். இதைக் குறித்து அவரே கொடுத்துள்ள சாட்சியைக் கவனியுங்கள்: யோ 5:27,30, ‘‘நான் சொந்தமாய் ஒன்றும் செய்கிறதில்லை; நான் (பிதாவிடமிருந்து) கேட்டபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குப் பிரியமானதை நான் தேடாமல், என்னை அனுப்பிய பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுவதால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.’’ இன்னும் இதை அவர்



பின்னர் விவரித்துக் கூறுவதைக் கவனியுங்கள்: 8:15-17, ‘‘நீங்கள் மனித இயல்பின்படி நியாயந்தீர்க்கிறீர்கள்; நான் ஒருவனையும் (அப்படி) நியாயந்தீர்ப்பதில்லை. நான் நியாயந்தீர்த்தால் என் தீர்ப்பு சத்தியத்தின்படி இருக்கும்; ஏனெனில், நான் தனித்திருக்கவில்லை; நானும் என்னை அனுப்பிய பிதாவுமாக இருக்கிறோம். இருவரது சாட்சி உண்மை என்று உங்கள் நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக் கிறதே!’’ நம்மில் யார்தான் இவ்விதம் சாட்சிகூற முடியும்?

சரியான தீர்ப்பு கொடுக்கக்கூடியது தேவன் ஒருவரே எனும் இச்சத்தியம் நமது இருதயப் பலகையில் அச்சுபோல் பதிந்துவிடட் டும். பெத்ஷிமேசின் மனிதர் கர்த்தருடைய பெட்டிக்குள் பார்த்ததால் அவர்களில் ஐம்பதினாயிரத்து எழுபதுபேரைக் கர்த்தர் அடித்தார். இவ்வளவு பெரிய நியாயத்தீர்ப்பு தங்கள்மீது வந்தபோது அவர்கள் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள்: ‘‘இந்தப் பரிசுத்தமான தேவ னாகிய கர்த்தருக்குமுன் நிற்கக்கூடியவன் யார்?’’ (1 சாமு 6:19,20). எவரையும் நியாயந்தீர்க்க நாம் துடிக்கும்போது நம்மை இந்த வார்த் தைகள்தான் தடுத்துநிறுத்த வேண்டும். இக்கருத்தின் அடிப்படை யில் தாவீது ஏறெடுத்த விண்ணப்பம்: ‘‘கர்த்தாவே, உயிருள்ள ஒரு வனும் உமக்குமுன் நீதிமான் அல்ல என்பதினால் அடியேனை நியா யந்தீர்க்க முற்படாதேயும்’’ (சங் 143:2).

120 முதல் 134 வரையுள்ள சங்கீதங்கள் ‘‘ஆரோகண சங்கீதங் கள்’’ என்றழைக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் ‘‘Songs of Ascents’’ எனப்படும் இச்சங்கீதங்களைச் ‘‘சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்கள்’’ என்றழைப்பது சரியாயிருக்கும். இந்தப் பதினான்கு பாடல்களில் ஒன்றாகிய 130ஆம் சங்கீதத்தில் கூறப்பட்ட வார்த் தைகள் நம்மைப் பரிசுத்த நடுக்கத்திற்குள் கொண்டுசெல்கின்றன: ‘‘கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே? உமக்குப் பயப்படும்படி உம்மிடம் மன்னிப்பு உண்டு’’ (வச 3,4). இவ்வித உணர்வை நாம் நமது இருதயத்தில் எப்பொழுதும் தக்கவைத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் பிறரை நியாயந்தீர்க்க நாம் துணியமாட்டோம்.

பிறரை நியாயந்தீர்ப்பதில் அவிசுவாசிகளைவிட விசுவாசிகள்தான் கூடுதல் ஆர்வம் காட்டுகின்றனர். இதற்கொரு முக்கிய காரணம் இனிவரும் நியாயத்தீர்ப்பைக்குறித்த தவறான புரிதலே. அவிசுவாசிகளை மட்டும்தான் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். அப்படியல்லவே அல்ல. நாம் தியானித்துக்கொண்டிருக்கும் தலைப்புக் கேள்வியை நன்கு கவனியுங்கள் (ரோ 14:10). ரோமர் நிருபம் ரோம் நகரிலுள்ள ''தேவப்பிரியருக்கும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுக்குமே'' எழுதப்பட்டது (ரோ 1:2). அவர்களுக்கு எழுதும்போதுதான் ''நாம் எல்லாரும்'' கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன் நிற்போம் எனப் பவுல் குறிப்பிடுகிறார். இறைமக்களுக்குத்தான் முதலாவது நியாயத்தீர்ப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அது ''தேவனது வீட்டிலேயே'' துவங்கும் (1 பேது 4:17ஆ). திருமறையின் பல பகுதிகளில் இது சொல்லப்பட்டுள்ளது. சங் 50:4-6, ''தேவன் ***தமது மக்களை*** நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூவுலகையும் கூப்பிடுவார். பலியினால் என்னுடன் உடன்படிக்கை பண்ணிய எனது ***பரிசுத்தவான்களை*** என்னிடம் கூட்டுங்கள் என்பார் ... தேவனே நியாயாதிபதி.'' எபி 10:30,31, ''கர்த்தர் ***தமது மக்களை*** நியாயந்தீர்ப்பார் ... ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்குமே.''

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை ஒட்டிய இறுதிக்கால நிகழ்வுகளில் இரு நியாயத்தீர்ப்புகள் உண்டு. முதலாவது, விசுவாசிகளுக்கு; அடுத்து, அவிசுவாசிகளுக்கு. விசுவாசிகளுக்குரிய நியாயத்தீர்ப்பைக் குறித்து 2 கொரிந்தியர் 5:9-11இல் வாசிக்கிறோம்: ''நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன் நின்றாக வேண்டும். ஆகையால் கர்த்தருக்குப் பயப்படத்தக்கது எதுவென்று அறிந்து மனிதருக்குப் புத்தி சொல்லுகிறோம்; தேவனுக்குமுன் வெளிப்படையாயிருக்கிறோம்.'' இறைமக்களுக்கு வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை மனதிற்கொண்டு அப்போஸ்தலர் இரு காரியங்களைச் செய்கிறார்கள்: (i) ''தேவனுக்குப் பிரியமானவர்களாயிருக்க'' நாடுகிறார்கள்; (ii) ''சுத்த மனச்சாட்சியுடன்'' மனிதருக்குப் புத்தி



சொல்லுகிறார்கள்; இந்த நியாயத்தீர்ப்பு ''மோட்சமா, நரகமா'' என்று தீர்மானிக்க அல்ல. ஜீவப்புத்தகத்தில் ஏற்கனவே பெயரெழுதப்பட்டவர்களது செயல்பாடுகளுக்கான ''பலன்கள்'' அல்லது ''பரிசுகள்'' (rewards) நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுவதற்காகவே (வச 10).

விசுவாசிகளுக்கான இந்த நியாயத்தீர்ப்பைக் குறித்துக் கொரிந்து சபையினருக்கு எழுதிய முதல் நிருபத்தில் பவுல் இன்னும் விளக்கியுள்ளார் (1 கொரி 3:12-15). திருச்சபைக்கும் திருச்சபையினருக்கும் ஏற்கனவே ''கிறிஸ்து'' என்னும் ஒரே ''அடித்தளம்'' போடப்பட்டாயிற்று. வேறொரு அடித்தளத்திற்கு இங்கு பேச்சே கிடையாது. அந்த அடித்தளத்தின்மீது நாம் கட்டுவதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை மற்றும் கிறிஸ்தவப் பணி என்பது. இந்த மேற்கட்டிடத்திற்குப் பயன்படுத்தப்படும் கட்டிடப் பொருட்கள்தான் நெருப்பினால் பரிசோதிக்கப்படும். பொன், வெள்ளி போன்றவை இன்னும் மெருகேறும்; மரம், புல் போன்றவையோ சாம்பலாகிவிடும். பொன், வெள்ளி போன்ற உயர் தரப் பொருட்களால் தங்கள் வாழ்க்கையையும் பணியையும் கட்டியெழுப்பியவர்கள் அதற்குரிய ''கூலி'' (அதாவது, பரிசு அல்லது பலன்) பெறுவார்கள். மற்றவர்களுக்கு இவ்விதப் பலன் எதுவும் கிடைக்காது. இரட்சிப்பு என்பது ஓர் ''ஈவு'' (gift); அது ''கூலி'' (wages) அல்லது ''பலன்'' (reward) அல்லாததாலும், அசையா அடித்தளமாகிய கிறிஸ்துவின்மீது அவர்கள் நிற்பதாலும் அவர்கள் தங்களது இரட்சிப்பை இழக்கமாட்டார் (வச 14,15). கிறிஸ்துவாகிய அடித்தளத்தை எந்த நெருப்பும் பாதிக்காது. கிறிஸ்துவின் நியாயாசனத்தைப்பற்றிய எண்ணமே சீரான வாழ்க்கை வாழவும், தரமான ஊழியம் செய்யவும் நமக்கு வினையூக்கியாய் (catalyst) இருக்க வேண்டும். இவ்வித நியாயத்தீர்ப்பை எதிர்நோக்கியிருக்கும் நாம் பிறரை இன்று நியாயந்தீர்ப்பானேன்?

அடுத்த நியாயத்தீர்ப்பு அவிசுவாசிகளுக்குரியது. இது வெளிப்படுத்தல் 20:11இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ''பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு'' (Great White Throne Judgment) எனப்படும். இங்குதான் ''புத்தகங்களும் ஜீவப்புத்தகமும்'' திறக்கப்படும் (வச 12). இந்தப் புத்தகங்களில் எழுதப்பட்டிருப்பவை

களின் அடிப்படையிலேயே இங்கு நியாயத்தீர்ப்பு நடக்கும். ஜீவப் புத்தகத்தில் பெயர் எழுதப்படாத அனைவரும் அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள் (வச 15). தாவீதின் சங்கீதங்கள் ஒன்றில் இது முன்னறிவிக்கப்பட்டுள்ளது: சங் 9:17, ''துன்மார்க்கரும் தேவனை மறக்கும் எல்லா இனத்தவரும் நரகத்தில் தள்ளப்படுவார்கள்.'' ஏற்கனவே இந்த வெள்ளைச் சிங்காசனமானது அவிசுவாசிகளுக்கே என்று நியமிக்கப்பட்டிருக்கும்போது அங்கு நியாயந்தீர்க்க என்ன இருக்கிறது என்ற கேள்வி எழலாம். தண்டனையிலும் அளவுகள் (degrees) உண்டு. தமது இரண்டாம் வருகை குறித்துப் பேசிக்கொண்டிருந்த ஆண்டவர் கூறிய வார்த்தைகள் இதோ: லூக் 12:47,48, ''தனது தலைவனுடைய விருப்பத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய விருப்பத்தின்படிச் செய்யாமலும் இருக்கும் வேலைக்காரன் ***அநேக அடிகள்*** அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, ***ஒரு சில அடிகள்*** அடிக்கப்படுவான்.''

விசுவாசிகளுக்குரிய நியாயத்தீர்ப்பாகிய ''கிறிஸ்துவின் நியாயாசனம்'' (Judgment Seat of Christ) (2 கொரி 5:10) என்பது கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது சபை எடுத்துக்கொள்ளப்படுவதை அடுத்தும், அவிசுவாசிகளுக்குரிய நியாயத்தீர்ப்பாகிய ''பெரிய வெள்ளைச் சிங்காசனம்'' (வெளி 20:11) என்பது கிறிஸ்துவின் பகிரங்க வருகையை அடுத்துள்ள ஆயிரமாண்டு அரசாட்சிக்குப் பின்னரும் நடைபெறும் என்று பொதுவாக விளங்கிக்கொள்ளப்படுகிறது. இதில் கருத்து வேறுபாடுகள் நிறையவுண்டு. எது எப்படி இருந்தாலும், எப்பொழுது நிகழ்ந்தாலும், விசுவாசிகளுக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு; அவிசுவாசிகளுக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு. நியாயத்தீர்ப்பு என்பது தேவனது வேலையாதலால் அதனை இன்று நாம் நமது கையில் எடுக்காதிருப்பதே ஞானம்.

பிறரை நியாயந்தீர்ப்பதில் நாம் ஆர்வம் காட்டுவதற்கான முக்கிய காரணம் நாம் நம்மை நாமே நியாயந்தீர்த்துக்கொள்ளத் தவறுவதே. தற்பரிசோதனை செய்து நமது செயல்பாடுகளில் எது சரி, எது தவறு என்று நாமே அறிந்துகொள்வது நெடுகவே ஒரு பக்தி முயற்சியாக



நமது வாழ்வில் தொடரவேண்டும். கர்த்தரின் பந்தியில் சேர வரும் போதெல்லாம் இதனைச் செய்யும்படி அப்போஸ்தலன் பவுல் வலியுறுத்துகிறார். 1 கொரி 11:31, ''நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படமாட்டோம்.'' தேவன் நம்மைச் சிட்சிப்பதின் (திருத்துவதற்காய்த் தண்டிப்பதின்) காரணங்களைப் புரிந்துகொள்ள இது ஏற்ற வேளையாய் அமையும் (வச 32). தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதிய வார்த்தைகளும் இதே அர்த்தமுடையவை 1 தீமோ 5:24, ''சிலரது பாவங்கள் வெளிப்படையாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்; சிலரது பாவங்கள் அவர்களைப் பின் தொடரும்.''

தீர்க்கன் ஏசாயா பெற்ற சுத்திகரிப்பின் அனுபவம் நமக்கு ஓர் எடுத்துக்காட்டாய் நடைமுறைப் படிப்பினை தருகிறது. அவரது புத்தகத்தின் 5ஆம் அத்தியாயத்தில் அவர் ஆறு முறை மக்களைப் பார்த்து ''ஐயோ'' என்று கூறுகிறார் (ஏசா 5:8,11,19,20,21,23). 6ஆம் அத்தியாயத்திலோ தனக்கே ''ஐயோ'' என்று கதறுகிறார் (6:5). தனது உதடுகள் அசுத்தம் என்று அறிக்கையிட்ட பின்னரே மக்களது உதடுகளும் அசுத்தம் என்கிறார் (வச 5). அவரது உதடுகள்தான் முதலாவது சுத்திகரிக்கப்படுகின்றன (வச 6,7). அதற்குப்பின்னரே அசுத்த உதடுகளுள்ள மக்களிடம் தூதறிவிக்க அனுப்பப்படுகிறார் (வச 8,9). நமது கண்ணிலுள்ள மரக்கட்டையைத் தூக்கியெறியுமுன் பிறரது கண்ணிலுள்ள மரத்தூளை நாம் பார்க்கவே முடியாது என்று இயேசு சொன்னது இச்சத்தியத்தை வலியுறுத்தவே (மத் 7:1-5).

அப்படியானால், ஒரு கேள்வி: நமது உடன் சகோதர சகோதரிகளின் குற்றங்களைச் சுட்டிக்காட்டக்கூடாதா? அவற்றைப் பார்த்தும் பாராமல் இருந்துவிடவேண்டுமா? பிரியமானவர்களே, ''நியாயத்தீர்ப்பு'' (judgment) என்பது ஒன்று; ''நிதானிப்பு'' (discernment) என்பது வேறு. ''ஆன்மீகச் சிந்தையுள்ளவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்'' (1 கொரி 2:15). திருவுபதேசத்தில் ஏற்படும் திசை மாற்றங்களைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். ஆனால் அது பொருள் சார்ந்ததாய் (objective) இருக்கவேண்டுமே தவிர ஆள் சார்ந்ததாய் (subjective) இருக்கக்கூடாது. தவறுகிற சகோதரனைத்

திருத்துவது உதவும் மனப்பான்மையுடன் செய்யப்படவேண்டும் (கலா 6:1; 2 தீமோ 2:25,26; யாக் 5:19,20). எவரையும் தீர்த்துக் கட்டுவது நமக்குத் தேவையற்ற செயல். நமக்கும் ஒரு நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது என்ற எண்ணம் நமது மனதைவிட்டு ஒருபோதும் அகலக்கூடாது (ரோ 14:10).

முடிவாக, இன்னொரு கருத்து: எந்த நபரையும் குறித்து, உள்ளும் புறம்பும், முழுக்க முழுக்க அறிந்தவர் தேவன் ஒருவரே (சங் 139:1-6). எவரையும் மனிதன் பார்க்கிற விதமாய்த் தேவன் பார்ப்பதில்லை (1 சாமு 16:7). இவ்விதம் எந்தக் கோணத்தில் பார்த்தாலும், நாம் பிறரை நியாயந்தீர்ப்பது நியாயமல்ல.





# கேள்வி 19

***“யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாது, புறவினத்தார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறவினத்தாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம்பண்ணலாம்?”***

**(கலாத்தியர் 2:14ஆ)**

பேதுருவைப் பார்த்துப் பவுல் விட்ட சவால்தான் இக்கேள்வி. அந்தியோகியாவுக்கு வந்த பேதுரு யாக்கோபிடமிருந்து சிலர் வருமுன் புறவினத்தாருடன் சாப்பிட்டார். அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனம் உள்ளவர்களுக்குப் பயந்து, அவர் விலகி நின்றுகொண்டார். மற்ற யூதரும் அவரைப்போல நடித்தனர். இந்த நடிப்பிற்குப் பர்னபாவும் பலியானார். இதை நேரடியாகப் பார்த்துக்கொண்டிருந்த பவுல் நேருக்குநேர் பேதுருவை எதிர்த்தார். பேதுருவின் மாய்மாலத்தைப் பவுல் ஒரு பெரும் குற்றமெனக் கருதினார். எனவே இக்கேள்வியை அவர்மீது வீசினார். இன்றையச் சூழலில் கேட்கப்பட வேண்டுமானால் இக்கேள்வி எப்படியிருக்கும் தெரியுமா? ‘‘கிறிஸ்தவனாகிய நீ கிறிஸ்தவரல்லாதவர்போல் நடக்கும்போது, கிறிஸ்தவர்போல் நடக்கவேண்டுமெனக் கிறிஸ்தவரல்லாதோரை நீ எப்படிக் கட்டாயப்படுத்தலாம்?’’ நம்மில் ஒவ்வொருவரையும் ஆழமாய்ச் சிந்திக்க வைக்கும் கேள்வியிது.

இந்தியாவில் 80 சதவீதத்தினர் இந்துக்கள்; 4 சதவீதத்தினர்தான் கிறிஸ்தவர்கள். யூதரல்லாதோரை விவிலியம் பிறவினத்தார் (புறஜாதிகள்) என்றழைப்பதைப்போலக் கிறிஸ்தவரல்லாதோரை நாம் பிறமதத்தினர் என்றழைக்கலாம். பிறமதத்தினரைக் குறித்துத் திட்டவட்டமாகப் பவுலடியார் நமக்கு எழுதியுள்ளதைக் கவனியுங்கள்: எபே 4:17, ‘‘கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி

எச்சரிப்பது என்னவென்றால், மற்றப் புறவினத்தார் தங்கள் வீணான சிந்தையில் நடக்கிறதுபோல் நீங்கள் இனி நடவாதிருங்கள்.'' இவ்வளவு தெளிவான எச்சரிப்பு கிறிஸ்தவர்களாகிய நமக்கிருந்தும் திருமறைக்கு ஒவ்வாத பிறமதத்தினரின் பழக்கவழக்கங்கள், சடங் காச்சாரங்கள், பாரம்பரியங்களின்படியே நடக்கிறோம். ''ஊரோடு ஒத்து வாழ்'' என்றால் யாவரோடும் சமாதானமாய் வாழவேண்டும் என்றுதான் பொருளேயன்றி சமரசம்பண்ணி வாழவேண்டும் என்று பொருளல்ல. எத்தனையோ காரியங்களில் நாம் நமது விசுவாசத்தை விற்றுவிட்டோம், விட்டுவிட்டோம். அவற்றில் சிலவற்றைக் கவனிப் போம் —

■ பொருளாதார ஆசிகளை நாடியலைவது கிறிஸ்துவின் சீடருக்கு அழகல்ல. இதைக் குறித்த இயேசுவின் வார்த்தைகளை மலைப்பிர சங்கத்தில் காணுங்கள்: மத் 6:31-33, ''என்ன சாப்பிடுவோம், என்ன குடிப்போம், என்ன உடுத்துவோம் என்று கவலைப்படாதிருங்கள். இவையெல்லாம் ***அஞ்ஞானிகள்*** நாடித் தேடுகிறார்கள்; இவையெல் லாம் உங்களுக்குத் தேவை என்று உங்கள் விண்தந்தை அறிந்திருக் கிறார். முதலாவது இறையரசையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் தேடுங்கள்; அப்பொழுது இவையெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.'' இங்கு ''அஞ்ஞானிகள்'' என்று குறிப்பிடுவது உயிருள்ள தேவனை அறியாத பிறமதத்தினரையே. பிறமதங்களில் பணத் தேவதை என்றெல்லாம் உண்டு. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்குத்தான் இறைவன் ''பரம பிதா.'' இறைவனோடு இந்த உறவை வேறெந்த வழியிலும் பெற முடியாது. என் அப்பா விற்குத் தெரியாத எனது தேவையா என்றுதானே பிள்ளை நினைக்க வேண்டும்? இங்கு ''கவலை'' (anxiety) என்பது சந்தேகம், பதட்டம் போன்றவற்றைக் குறிக்கும். சிந்தித்தல், திட்டமிடுதல் போன்றவற் றிற்கு எதிராக இங்கு ஆண்டவர் பேசவில்லை. ''அனுதின ஆகாரத் திற்காய்'' ஆண்டவரை வேண்டிவிட்டு, ''ஆமென்'' என்று சொல்லி அமரிக்கையாயிருக்கவேண்டும் (6:11,13). இல்லையேல், ''காசே தான் கடவுளடா'' என்ற அஞ்ஞானக் கொள்கை நம்மைத் தொற்றி விடும். பொருளாசையை ''விக்கிரகாராதனை'' என்றழைக்கிறது திருமறை (கொலோ 3:5; எபே 5:5).



■ எபேசு நகரிலிருந்த திருச்சபையினர் புறவினத்தாராயிருந்து கிறிஸ்துவிடம் வந்தவர்கள் (எபே 3:1). அவர்களுக்கு எச்சரிப்பாய்ப் பவுல் எழுதியது: ***''புறவினத்தார்*** தங்கள் புத்தியில் இருளடைந்து, தங்கள் இருதயக் கடினத்தினால், தங்களில் இருக்கும் அறியாமை யினால், தேவன் தரும் வாழ்வுக்கு அந்நியராயிருந்து, உணர்வில்லா தவர்களாய், எல்லாவித அசுத்தங்களையும் ஆவலுடன் நடப்பிக்கும் படித் தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ இவ்விதம் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை.'' எகிப்திலுள்ள தேவர்கள், தேவதைகளைப்பற்றி மோசேக்குத் தெரி யும். நதிக்கு ஒரு தெய்வம், பிள்ளைப்பேற்றுக்கு ஒரு தெய்வம், இப் படி அவர்களுக்கு எத்தனையோ தெய்வங்கள் இருந்தன. அவை களுக்கும் பரிசுத்தத்திற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. இதை மனதில் வைத்துதான் மோசேயும் இஸ்ரவேலரும் கர்த்தருக்கு இவ் விதம் புகழ்பாடினர்: யாத் 15:11, ''கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமான உமக்கு ஒப்பானவர் யார்?'' பூக்களாலான அலங்காரத்தினாலோ, நகைகளி னாலான அலங்காரத்தினாலோ, விளக்குகளின் அலங்காரத்தினாலோ அல்ல, ''பரிசுத்த அலங்காரத்துடன்தான்'' யேகோவா தேவனைத் தொழுதுகொள்ளவேண்டும் (1 நாளா 16:29; சங் 29:2; 96:9).

■ இந்தியாவைப் பொருத்தவரை, சட்டங்களை மதிப்பதைவிட அவற்றை மீறுவதுதான் வாடிக்கை. இதோ, கிறிஸ்தவர்களுக்கு வரும் ஓர் அழைப்பு: ***''புறவினத்தார்*** உங்களை அக்கிரமக்காரர் என்று விரோ தமாய்ப் பேசும் காரியத்தில், அவர்கள் உங்கள் நற்செயல்களைப் பார்த்து, அவற்றின் பொருட்டு சந்திப்பின் நாளில் தேவனை மகி மைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள் நன்னடத்தை உள்ளவர் களாய் நடந்துகொள்ளுங்கள் ... நீங்கள் மனிதருடைய (அரசின்) கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் பொருட்டுக் கீழ்ப்படியுங்கள்'' (1 பேது 2:12,13). மற்றவர்கள் வரி ஏய்க்கலாம்; கிறிஸ்தவர்கள் கள்ளக் கணக்கு எழுதக்கூடாது. மற்றவர்கள் குறுக்கு வழியில் சம்பாதிக்க லாம்; கிறிஸ்தவர்கள் நேர்மையில் தவறக்கூடாது. தேர்வுகளில் மற்ற மாணவர் திருட்டுத்தனம் செய்யலாம்; கிறிஸ்தவ மாணவர் அவ்வித

மட்டரகச் செயல்களில் ஈடுபடக்கூடாது. ஆட்சியிலிருக்கும் கட்சியைப் பொருத்து அதின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிவது மற்றவர்களின் போக்காயிருக்கலாம்; கிறிஸ்தவர்களோ, எந்தக் கட்சிக்கு வாக்களித்திருந்தாலும், அரசின் அதிகாரங்களை அவமதிக்கக்கூடாது (ரோ 13:1,2).

■ அதிகாரப் போட்டி, அதிகாரத் துர்ப்பிரயோகம் போன்றவையெல்லாம் திருமறைப் போதனைக்கு மாறானவை. இந்தக் காரியத்திலும் நாம் புறவினத்தாரிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடாது என்று இயேசு போதித்தார். ஒருமுறை அவரது சீடர் நடுவில் தங்களில் எவன் பெரியவன் என்ற வாக்குவாதம் உண்டாயிற்று (லூக் 22:24). அவர்களது மனப்பான்மையை முற்றிலும் மாற்றவேண்டுமென்று அவர் அவர்களிடம் கூறியது: ***''புறவினத்தாரின்*** அரசர்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்துகிறவர்களும் சேவை புரிவோர் எனப்படுகின்றனர். உங்களுக்குள் அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணியாளைப் போலவும் இருக்கட்டும்'' (வச 25,26). இன்றைய நமது திருச்சபைகளிலும் திருச்சங்கங்களிலும் கையாளப்படும் ஆளுகை மற்றும் நிர்வாக முறைகள் பிறமதத்தினரிடமிருந்தே காப்பியடிக்கப்பட்டவை. கேவலம்! இறையரசுத் தத்துவங்களை நாம் நமது அமைப்புகளில் கடைப்பிடித்தால்தானே நமது கோட்பாடுகள் என்னவென்று பிறமதத்தினருக்குத் தெரியும். அவர்களை நம்மைப்போல் மாற்றுவதற்கான தாக்கம் ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவர்களது தரத்திற்கு நாம் இறங்குகிறோமே! தலைமைத்துவத்தைக் குறித்துப் பைபிளுக்கு மிஞ்சிய புத்தகமா? அரசியல் களமாய்த் திருச்சபை மாறிவிட்டதற்காய்த் தேவனுக்குமுன் மண்டியிட்டுப் புலம்புவோம்!

■ கிறிஸ்தவர்களாகிய நமது வார்த்தைகள் வேறு, நமது நடக்கை வேறு. மலைப்பிரசங்கத்தை அடிக்கடி விரும்பிப் படித்துவந்த நமது தேசத் தந்தை மஹாத்மா காந்தியிடம், ''நீங்கள் ஏன் கிறிஸ்தவராகக் கூடாது?'' என்று கேட்கப்பட்டதாம். அவர் கொடுத்த பதில்: ''என்று ஒரு கிறிஸ்தவனைச் சந்திக்கிறேனோ அன்று கிறிஸ்தவனாவேன்!'' இதோ, அப்போஸ்தலன் பவுல் சாட்டையோடு நம்மிடம் வருகிறார்:



ரோ 2:21-24, ''மற்றவனுக்குப் போதிக்கும் நீ உனக்குத்தானே போதியாமல் இருக்கலாமா? களவு செய்யக்கூடாது என்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விபசாரம் செய்யக்கூடாது என்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் (ஆலயச் சொத்துக்களைக்) கொள்ளையிடலாமா? ... எழுதியிருக்கிறபடி, தேவனுடைய பெயர் ***புறவினத்தாருக்குள்*** உங்கள் மூலம் தூற்றப்படுகிறதே!'' இதற்கு விளக்கம் தேவையா என்ன? கிறிஸ்தவம் இந்தியாவிற்குள் வந்து 2000 ஆண்டுகளுக்குக் கூடுதலாகியும் இந்தியரிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தாததற்கு நாமே காரணம். தொலைந்துபோன ஓர் ஆட்டைத் தேடிச் செல்வதும் முக்கியம்; சீர்கெட்டுக் கிடக்கும் தொண்ணூற்றொன்பது ஆடுகளைச் சீர்திருத்துவதும் அவசியம். நோய்வாய்ப்பட்டுள்ள சபை செத்துக்கொண்டிருக்கும் உலகைக் காப்பாற்றமுடியாது! (A sick Church cannot save a dying world!).

■ பிறமதத்தினரிடமிருந்து இந்தியக் கிறிஸ்தவர்கள் கற்றுக்கொண்ட பழக்கவழக்கங்கள் கொஞ்சநஞ்சமல்ல. நான் இங்குக் கலாச்சாரம் குறித்துப் பேசவில்லை. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு மொழிக்கும் அதற்கே உரிய கலாச்சாரம் என்று உண்டு. அதனை நாம் மதித்து நடக்கவேண்டும். ஆனால் கலாச்சாரமோ, பாரம்பரியமோ, பழக்கவழக்கமோ அது திருவசனத்தின், குறிப்பாகப் புதிய ஏற்பாட்டின், உபதேசத்திற்கு முரண்பட்டதாயிருக்குமானால் ஈவிரக்கமின்றி அதனைத் தூர எறிந்துவிடவேண்டும். திருவசனத்திலேயே திருமனம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இன்று நம்மைத் திருவசனத்தின்படி நடத்த அனுப்பப்பட்டிருக்கும் தூயாவியானவரைத் துக்கப்படுத்தக்கூடாது.

நாள் பார்ப்பது தவறு (கலா 4:10,11). ஒரே நாளில் எத்தனைக் கிறிஸ்தவத் திருமணங்கள்! திருமணத் தேதியை மாற்றிவைக்கச் சொல்லுவதற்குச் சபையின் ஆயர்களுக்குச் சத்துவம் இல்லையா? அவர்கள் பல் விழுந்த கிழட்டுச் சிங்கங்களா? ஏழு நாளும் ''நல்லது'' என்றுதானே படைப்பில் தேவன் கண்டார்? ஒவ்வொரு நாளும் கர்த்தர் உண்டுபண்ணிய நாள்தானே? வீடு கட்டும்போது வாஸ்து

பார்ப்பது, புதுமனைப் புகுவிழாவின்போது பால் காய்ச்சுவது, முகூர்த்தக்கால் நடுவது, இவை போன்றவையெல்லாம் அஞ்ஞானப் பழக்கங்கள். நாட்டின் சட்டமே ரொக்கம் கொடுக்கல் வாங்கலுக்கு எதிராய் இருக்கும்போது, தென் தமிழகக் கிறிஸ்தவர்கள் இன்னும் மணமகன்களை மாட்டுச் சந்தையில் விற்பதேன்? பிறந்த வீட்டை விட்டு வரும் மணமகளுக்குத்தானே உசிதங்கள் கொடுக்கப்பட வேண்டும்? (ஆதி 24:53). இப்படிச் சொல்லிக்கொண்டே போக லாம். கிறிஸ்தவமே, நீ விட்டு வந்த சகதிக்குள் மறுபடி போகாதே, நீ கக்கினதைத் தின்னாதே! (2 பேது 2:22). நூற்றாண்டுகள் கொண் டாடும் கிறிஸ்தவர்களையே மாற்ற முடியாவிட்டால் கிறிஸ்தவரல் லாதோர் எப்படி மாறுவர்?

நம்மீது பிறவினத்தார் அல்ல, அவர்கள்மீதே நாம் தாக்கம் ஏற் படுத்தவேண்டும். பாழுலகிலிருந்து திருச்சபை கற்கக்கூடாது; திருச் சபையிலிருந்தே பாழுலகு கற்கவேண்டும். திருச்சபைதானே உல கிற்கு உப்பு, உலகிற்கு வெளிச்சம்? உவர்ப்பற்றுப்போனோமே! ஒளி மங்கிப் போனோமே! (மத் 5:13-16). உலகைவிட்டு நாம் ஒதுங்கி வாழக்கூடாது, பிரிந்து வாழவேண்டும் (Not seclusion but separa-tion). எகிப்திலிருந்து இஸ்ரவேலர் விடுதலை பெற்றுப் புறப்பட்ட போது அவர்களோடு ‘‘பல்வேறு இனத்தவராகிய அந்நிய மக்க ளும்’’ ஒட்டிக்கொண்டு வெளியேறினார்கள் (எண் 11:4). பார் வோனின் கொடுங்கோலாட்சியைத் தாங்க முடியாததும், இஸ்ரவேல ரின் தேவனது அற்புத வல்லமையைக் கண்கூடாகக் கண்டதும், அவர்களும் எகிப்தைவிட்டு வெளிவந்ததற்கு ஒரு காரணமாயிருந்தி ருக்கலாம். இதனைச் சாதகமாய்ப் பயன்படுத்தி, மெய்யான தேவனை அறியவும் அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும் இஸ்ரவேலர் அவர்களை நடத்துவதற்குத் தவறினார்கள். மாறாக, அவர்களது இச் சைகளுக்கு இஸ்ரவேலரும் உடந்தையானார்கள். விளைவென்ன? ஒருநாள் ‘‘தேனிட்ட பணியாரம்’’ போல் ருசித்த மன்னா இன்று ருசி யற்ற ‘‘ஒலிவ எண்ணெய்’’ போலாயிற்று (யாத் 16:31; எண் 11:8). இன்றைக்கு நம்மில் அநேகருக்குத் திருமறைத் தியானம் சுவாரஸ் யமற்றுப் போனதற்குத் காரணம் இதுவன்றோ? (சங் 1:1,2; எரே 15:16,17).



நமது ஊர், நமது மாவட்டம், நமது மாநிலம், நமது நாடு, இவை யெல்லாம் எப்படியிருந்தாலென்ன? அது சாம்பார் சாதமாயிருக்கட் டும், தயிர்ச் சாதமாயிருக்கட்டும் அல்லது பிரியாணியாகவே இருக் கட்டுமே! உப்புதானே அதை ருசியாக்கும்? நம்மைச் சுற்றிக் கட்டி டங்கள் உயரட்டும், கடைகள் பெருகட்டும், அறிவியல் வித்தைகள் நிறையட்டும்; எப்படியானாலும் அங்கு ஒளி இல்லையேல் பயன்? எகிப்து எப்படியிருந்தாலென்ன? அதை மாற்றுவதும் அதற்கு ஆசீர் வாதமாகுவதும் யோசேப்புதானே? எகிப்தின் தூய்மையற்ற செயல் பாடுகள் அவனைக் கவராது. மேலாடை போனாலும் பரவாயில்லை யென்று விட்டுவிட்டு ஓடிவிடுவான் (ஆதி 39:7-12). பாபிலோனில் சிலை வணக்கம் பெருகியிருந்தாலென்ன? சிலை வணக்கத்திற்குச் சாதகமாகவே அரசு செயல்பட்டாலென்ன? சிலை வணக்கக் கலாச் சாரத்தை மக்கள்மீது திணிக்க அரசு மேற்கொள்ளும் தந்திரங்கள் எப்படியும் இருக்கட்டுமே! தானியேல் அடங்கிய நால்வரணி அதற்கு இணங்கவும் பலியாகவும் மறுத்துத் துணிந்து நின்றனரே! நெருப் பென்ன? சிங்கமென்ன? (தானி 3:17,18; 6:7-10). ஓரினச் சேர்க்கை, ஓரினத் திருமணம் போன்றவையெல்லாம் இன்றுதான் தோன்றியவையா? இல்லை, சோதோம், கொமோராவில் இல்லாதப் பாலியல் அத்துமீறல்களா? அங்கும் ‘‘லோத்து என்னும் நீதிமான்’’ தன்னைக் காத்துக்கொண்டானே! (2 பேது 2:6-8). கிறிஸ்தவ நாடு எனப்படும் அமெரிக்காவிலேயே இவையெல்லாம் மலிந்திருக்கின் றனவே! இந்தியாவில் கிறிஸ்தவனாய் வாழ்வதைவிட அமெரிக்கா வில் கிறிஸ்தவனாய் வாழ்வது கடினம் தெரியுமா? எங்கிருந்தாலும் வாழ்க — கிறிஸ்துவுக்காய் — உப்பாய், ஒளியாய்!

■ பிறமதத்தினரிடமிருந்து கிறிஸ்தவர்களாகிய நாம் கற்றுக் கொண்ட இன்னொரு கேவலமான காரியம் ஜாதி வெறி. பனை யேறினாலென்ன, தென்னையேறினாலென்ன? பதநீரும் வேண்டும், இளநீரும் வேண்டும்தானே? அப்பப்பா, நாய் வாலை நிமிர்த்தினா லும் நாசரேத்தையும் நாகர்கோவிலையும் மாற்றமுடியாது போலும்! ஆலயக் கட்டிடங்களிலும் வீட்டுக் கதவுகளிலும் எத்தனைச் சிலு வைச் சின்னங்களை வைக்கிறோம்! யூதரையும் கிரேக்கரையும் ஒன்றி ணைத்தது சிலுவைதானே? கிறிஸ்து இயேசுவுக்குள் ‘‘யூதனென்று

மில்லை, கிரேக்கனென்றுமில்லை'' எனும் வாசகம் திருமறையில் மும்முறை வருகிறது (ரோ 10:12; கலா 3:28; கொலோ 3:11). கிறிஸ் தவத்திலும் தலைவிரித்தாடிய இனவெறியைக் கண்டதாலேயே டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கிறிஸ்தவத்தில் சேராது புத்த மதத் தைத் தழுவினார். மாணவர், மாணவியர் நடுவில் பணியாற்றும் நற் செய்தி இயக்கங்கள் சந்திக்கும் பெரும் பிரச்னை என்ன தெரியுமா? பிற மதங்களிலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, படித்துப் பட்டம் பெற்று வெளிவரும் வாலிபர் நங்கையருக்குக் கிறிஸ்தவச் சமுதாயத்தில் வாழ்க்கைத்துணை கிடைப்பதில்லை. மனுக்குலம் அனைத்தையும் தேவன் ''ஒரே இரத்தத்தினால்தானே'' தோன்றப்பண் ணினார்! (அப் 17:26). ஜாதி வெறியர்களே, உங்கள் அறுவை சிகிச் சைக்கு இரத்தம் தேவைப்படும்போது ''எனது ஜாதி இரத்தம்'' வேண்டுமென்றா கேட்கிறீர்கள்? இரத்தம் கலந்தபின் சுத்தம்(?) எங்கே?

யூதர் தங்களை உயர் குலத்தவர் என்றும், புறவினத்தாரை நாய்கள் என்றும் நினைத்துக்கொண்டிருந்தனர். யூதனைவிட்டு இந்தப் பெருமை நதிக்கரையிலும் போகாது, நரகத்திலும் போகாது (மத் 3:9; லூக் 16: 23,24). எனவேதான் தமது ஊழியக்காலத்தில் ஆண்டவ ராகிய இயேசு வேண்டுமென்றே யூதரல்லாதோரை உயர்த்திப் பேசினார். யூதரால் புறக்கணிக்கப்பட்ட சமாரியர் கிராமத்திலுள்ள ஒரு மாதுவுடன் தயக்கமின்றி உரையாடினார்(யோ 4:9). திருவார்த்தை மீது நூற்றுக்கதிபதிக்கிருந்த விசுவாசத்தைக் கண்டபோது, ''இஸ்ர வேலிலும் இவ்வித விசுவாசத்தைக் காணோமே'' என்று வியந்தார் (மத் 8:10). எரிகோ செல்லும் சாலையில் குற்றுயிராய்க் கிடந்த வனுக்கு உதவாத யூதக்குல ஆசாரியனையும் லேவியனையும் பின் தள்ளி மனிதநேயத்துடன் உதவிய சமாரியனை முன்னிறுத்தினார். அச்சம்பவமே ''நல்ல சமாரியன்'' கதை என்றழைக்கப்படுகிறது (லூக் 10:30-34). இயேசுவிடம் அற்புத சுகம் பெற்ற தொழுநோயாளிகள் பத்துப்பேரில் யூதரல்லாத ஒருவனே நன்றி செலுத்தத் திரும்பி வந்த போது, ''தேவனை மகிமைப்படுத்த இந்த அந்நியனே தவிர மற் றொருவனும் திரும்பிவரக்காணோமே'' என்று சொல்லி மனம் வருந் தினார் (17:15-18). இஸ்ரவேலருக்குள் எத்தனையோ விதவைகள்



இருந்தும் சீதோன் நாட்டு விதவையொருத்தியிடமே தீர்க்கன் எலியா பராமரிப்பு பெற அனுப்பப்பட்டார் என்றார் இயேசு (4:25,26). இஸ்ர வேலருக்குள் எத்தனையோ தொழுநோயாளிகள் தீர்க்கன் எலிசா காலத்திலிருந்தும் சீரியா நாட்டானாகிய நாகமான் தவிர வேறு யாரும் குணமாக்கப்படவில்லை என்றார் (வச 27). இப்படியெல்லாம் அடுத் தடுத்து இயேசு சொன்னது சும்மாவா? திருச்சபையின் தலைவராகிய இயேசுவானவர் வலியுறுத்திய இச்சத்தியம் நமது சூழ்நிலைக்கேற்ப இன்றையப் பிரசங்கப்பீடங்களிலிருந்து முழங்கப்படாததேன்? கடைசியில் இயேசுவின் சிலுவையைச் சுமந்ததும் வெள்ளைத்தோல் யூதன் அல்ல, ஒரு கருப்பு நிறத்தவன்தான்! (மாற் 15:21).

முடிவாக, ஓர் ஆலோசனை. பிறமதத்தினரை நண்பராக்கிக் கொள்ளுங்கள். அவர்களது வைபவங்களில் கலந்துகொள்ளுங்கள். ''சமூக நட்பு'' (Social Friendship) எனும் வட்டத்திலிருந்து ''ஆன்மீக ஐக்கியம்'' (Spiritual Fellowship) எனும் நெருக்கவுறவுக்குள் கொண்டு வருவது எளிது. ''யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி யூதருக்கு யூதனைப் போலவும் ... யூதரல்லாதோரை ஆதாயப்படுத்திக்கொள் ளும்படி அவர்களுக்கு யூதரல்லாதவனைப் போலவும் ஆனேன் ... எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாம் ஆனேன்'' என்ற பவுலின் கோட்பாடுதான் நடைமுறையில் நாம் பின்பற்றவேண்டியது (1 கொரி 9:20,21). இயேசுவானவர் பரிசுத்த வான்களுக்கும் நண்பராயிருந்தார்; பாவிகளுக்கும் நண்பராயிருந்தார் (யோ 15:15; லூக் 7:34). ஆனால் கறைபடாதபடித் தம்மைக் காத்துக் கொண்டார் (எபி 7:26).

# கேள்வி 20

***“தேவன் அடைத்தால்***
***அவரைத் தடைபண்ணுகிறவன் யார்?’’***

**(யோபு 11:10)**

திருமறையின் மிகப் பழைமையான புத்தகம் என்று கருதப்படும் யோபு புத்தகத்தில் ஏராளம் கேள்விகள் உண்டு. சில கேள்விகளுக் குத்தான் இப்புத்தகத்திலிருந்தே விடை காணமுடியும். மற்றவை நம்மைச் சிந்திக்க வைத்துத் திருமறையின் பிற புத்தகங்களுக்கு நமது கவனத்தைத் திருப்புகின்றன. ‘‘பாடுகள்’’ என்று வரும்போது எவரும் அதற்கு விதிவிலக்கல்ல என்பதால் இப்புத்தகம் நமக்குத் தரும் நடை முறைப் படிப்பினைகள் ஏராளம். இயேசுவுக்கு அடுத்து யோபுவைப் போல் பாடுபட்டது எவருமில்லை என்பதாலேயே ‘‘இயேசுவின் பொறுமை’’ மற்றும் ‘‘யோபுவின் பொறுமை’’ என்று விவிலியத்தில் வாசிக்கிறோம். (வெளி 1:9; யாக் 5:11). ‘‘ஆண்டவரே, எனக்குப் பொறுமையைத் தாரும்; அதை இப்பொழுதே தாரும்’’ என்ற நம் மனைவரின் சிறுபிள்ளைத்தன ஜெபமே பிரச்னை!

‘‘தேவன் அடைத்தால் அவரைத் தடைபண்ணுகிறவன் யார்?’’ என்ற கேள்வி தேவனது எட்ட முடியாத ‘‘ஞானம்’’ மற்றும் அவரது அளவிடமுடியாத ‘‘வல்லமை’’ ஆகியவை குறிப்பிடப்பட்ட சூழ மைவிலேயே கேட்கப்படுகிறது. தேவன் ‘‘சர்வ ஞானி’’ மற்றும் ‘‘சர்வ வல்லவர்’’ என்று யோபு 11:7இல் அழைக்கப்படுகிறார். அவரது ‘‘ஞானம்’’ இங்கு முக்கியப்படுத்தப்படுகிறது (வச 6அ). ‘‘அது வான ளவு உயர்ந்தது’’ — இது தேவ ஞானத்தின் *உயரம்.* ‘‘அது பாதாளத் திலும் ஆழமானது’’— இது தேவ ஞானத்தின் *ஆழம்.* ‘‘அது பூமியைவிட நீளமானது’’ — இது தேவ ஞானத்தின் *நீளம்.* ‘‘அது கடலைவிட அகலமானது’’— இது தேவ ஞானத்தின் *அகலம்* (வச



8,9). நாம் பொதுவாகத் தேவனது ‘‘அன்பின்’’ நாற்பரிமாணம் குறித்துப் பேசுவோம். இது ‘‘அறிவுக்கெட்டாத அன்பு’’ எனப்படு கிறது (எபே 3:18,19). நாம் தியானிக்கும் பகுதியில் தேவனது ஞானம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தேவனது நாற்பரிமாண ஞானம் (4-dimensional Wisdom of God). எனலாம். இதுவும் நமது ‘‘அறிவுக்கெட்டாத ஞானம்’’ என்றே சொல்லவேண்டும். இதைக் குறித்து தேவனே சொல்லுவது: ‘‘என் நினைவுகள் உங்கள் நினைவு கள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல. நிலப்பரப்பை விட வானங்கள் எப்படி உயர்ந்திருக்கின்றனவோ, அப்படியே உங்கள் வழிகளைவிட என் வழிகளும், உங்கள் நினைவுகளைவிட என் நினைவுகளும் உயர்ந்திருக்கின்றன’’ (ஏசா 55:8,9). மாறாத இவ் வுண்மையை மனதிலிருத்திக்கொண்டு இவ்வத்தியாயத்தின் தியானத்தைத் தொடருவோம்.

‘‘அடைப்பு’’ என்பதை ‘‘உள்ளடைப்பு’’ அல்லது ‘‘சிறையடைப்பு’’ என்று விளங்கிக்கொள்ளலாம். அதாவது, நாம் விரும்பியதைச் செய்யமுடியாத நிலை. இந்த உள்ளடைப்புக்குக் காரணம் ஒரு வியா தியாயிருக்கலாம், ஓர் இழப்பாயிருக்கலாம், ஒரு தோல்வியாயிருக் கலாம், ஆருயிர் நண்பரால் அல்லது உடன் ஊழியரால் கைவிடப் பட்ட நிலையாயிருக்கலாம், பொய்க் குற்றச்சாட்டுகளாயிருக்கலாம், இழைக்கப்பட்ட அநீதியாயிருக்கலாம், குடும்பச் சிக்கலாயிருக் கலாம், அடைபட்ட கதவுகளாயிருக்கலாம், இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். சக மனிதரால் அல்லது சத்துருவான பிசாசி னால் இக்காரியங்கள் நிகழ்ந்திருக்கலாம். ஆனால் தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில் அவரது அறிவும் அனுமதியுமின்றி ஒன்றும் நிகழாது.

உள்ளடைப்பின் அனுபவங்கள் வழியாய்த் தேவன் நம்மை அழைத்துச் செல்வதேன்? சிலரது எடுத்துக்காட்டுகளின் மூலம் இதற்கான விடையை ஓரளவாவது தெரிந்துகொள்ள முயல்வோம்—

■ பழைய ஏற்பாட்டில் இதற்கு ஒரு முக்கியமான எடுத்துக்காட் டாக யோசேப்பைக் குறிப்பிடலாம். வீட்டில் செல்லப்பிள்ளையாகக் கொஞ்சி வளர்க்கப்பட்ட அவன் தனது சகோதரர்களால் பொறாமை

யினால் காட்டிலுள்ள குழியில் தூக்கியெறியப்பட்டான். பின்னர் எகிப்துக்குப் பயணமாய்ப் போய்க்கொண்டிருந்த இஸ்மவேலரிடம் இருபது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். அடுத்து அவன் பார்வோனின் பிரதான அதிபதியாகிய போத்திபாரிடம் விற்கப்பட்டான். அவன் ஓர் அடிமையாக இருந்தாலும் கர்த்தர் அவனோடு இருக்கிறார் என்பதைக் கண்ட போத்திபார் யோசேப்பிடம் தனது காரியங்கள் எல்லாவற்றையும் ஒப்புவித்து அவனைத் தனது விசாரணைக்காரனாக்கினான். யோசேப்பு அங்கிருந்தபடியால் போத்திபாரின் வீட்டிலும் வெளியிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது.

இப்பொழுதுதான் குழியிலிருந்து தூக்கப்பட்டு உயர் பதவிக்கு வந்திருந்த யோசேப்புக்கு அடுத்த சோதனை காத்திருந்தது. போத்திப்பாரின் மனைவியின் இழுப்புக்கு அவன் இணங்காததால், பொய்க் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டான் (ஆதி 37,39). சிறைச்சாலையிலும் சிறையதிகாரியின் கண்களில் யோசேப்புக்குத் தேவன் தயவு கிடைக்கச் செய்தார். அங்கும் அவன் சிறைக்கைதிகளுக்குத் தலைவனானான். ஒரு சில ஆண்டுகள் யோசேப்புக்குச் சிறையடைப்பின் அனுபவம். இங்குதான் திருவசனம் அவனில் ஆழமாய்ச் செயல்பட்டது. திருப்பாடகன் இதைக் குறித்து எழுதும் வார்த்தைகள்: சங் 105:17-20, ''யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டான். அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினர்; அவன் கழுத்தில் இரும்புப்பட்டையை மாட்டினர். கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவரது வசனம் அவனைப் புடமிட்டது.'' விலங்கு! இரும்புப்பட்டை! சிறையடைப்பு! முடிவில் அவன் வீட்டுக்கும் நாட்டுக்கும் ஆசீர்வாதமானான். மனிதர் உங்களுக்குத் தீங்கு நினைக்கலாம்; ''தேவனோ'' அதை நன்மையாய் மாறப்பண்ணுவார் (ஆதி 50:20). இதற்கிடையில் அவன் சிறையிலிருக்கும்போது பார்வோனிடம் தனக்காய்ச் சிபாரிசு செய்யும்படி ஓர் உடன் சிறைவாசி மூலம் முயன்றது தோல்வியடைந்தது (40:14,23). ஆம், தேவன் அடைப்பாரானால் தேவன்தான் திறந்துவிட முடியும்!

■ அடுத்து நாம் திருமுழுக்கினன் யோவானது அனுபவத்தைப் பார்ப்போம். நாசரேத்து ஜெபாலயத்தில் ஏசாயா தீர்க்கதரிசனத்திலிருந்து இயேசு வாசித்த வரிகள்: ''கர்த்தருடைய ஆவியானவர் என்



மீதிருக்கிறார் ... சிறைப்பட்டவர்களை விடுதலையாக்க ... கர்த்தரது விடுதலையின் ஆண்டை முழங்க ... என்னை அனுப்பினார்'' (லூக் 4:17-20; ஏசா 61:1-3). சிறையிலடைக்கப்பட்ட யோவானுக்கு இவ் வார்த்தைகள் நினைவுக்கு வந்திருக்கும். மேசியாவாக, அபிஷேகம் பண்ணப்பட்டவராக, இயேசு வருவது அவிழ்க்கத்தானே, அடைக்க அல்லவே என்ற கேள்வி யோவானின் இருதயத்தைக் கசக்கிப் பிழிந்திருக்கும். அவருக்கு ஒரே குழப்பமாயிருந்திருக்கும். வனாந்திரத்தில் எத்தனை ஆண்டுகளைத் தனிமையில் கழித்தாரே (லூக் 1:80). தீர்க்கதரிசிகளிலெல்லாம் பெரிய தீர்க்கதரிசி என்பதல்லவா அவரைக் குறித்த சாட்சி? (7:28). ஆனாலும் கலங்கிவிட்டாரே! இடறலடையுமளவு அவரது விசுவாசம் ஆடிவிட்டதே! (7:23).

யோவானுக்கு இந்த அடைப்பின் அனுபவம் ஏனோ? விளங்கிக்கொள்ள முயலுவோம். திருக்குரலாய் யோவான் வந்தார்; திருவார்த்தையாய் இயேசு வந்தார். ஒருவர் பேசும்போது அவரது சத்தம்தான் நமது காதுகளில் முதலாவது விழுகிறது. பின்னர் அது அமர்ந்துவிடும். சொல்லப்பட்ட வார்த்தைகளோ இதயத்தில் நிற்கும். திருவார்த்தை வந்தபின்னர் திருக்குரலின் வேலை முடிந்துவிடுகிறது. யோவானது எரிந்து பிரகாசிக்கும் பணி கொஞ்சக் காலத்திற்குத்தான் (யோ 5:35). ஒரே விதமாகவே தேவன் எப்பொழுதும் நம்மைப் பயன்படுத்துவார் என்று எதிர்பார்க்கக்கூடாது. ஒரு நோக்கமில்லாது தேவன் நம்மை அடைக்கமாட்டார். தொடர் ஓட்டத்தில் (relay race) ஒரே நபரே துவக்கமுதல் முடிவுவரை ஓடமாட்டார். ஓட்டக்களத்தில் அவரது பகுதியில் அவர் ஓடி முடிந்ததும் விலகிக்கொள்ளவேண்டும். திருப்பணியிலும் இப்படியே. ஒரு காலத்தில் தேவன் நம்மைப் பகட்டொளியில் பல்லாயிரங்களுக்குப் பயன்படுத்தலாம். பின்னர் இருட்டறையில் வைத்து ஒரு சிலருக்கே ஆலோசகராகப் பயன்படுத்தலாம். ''எரிந்து பிரகாசிக்கும் ஒளி'' என்றால் எரியும்போது கரையும் மெழுகுவர்த்தி போலத்தான் (யோ 5:35). யோவானது அடைப்பில் எனக்குப் புரிவது இதுதான்.

■ அப்போஸ்தலன் பவுலின் வாழ்க்கையிலும் அடைப்புகளைத் தேவன் அனுமதித்தார். எத்தனை முறை அவர் சிறைக்குச் செல்ல வேண்டியதாயிற்று! சிறையடைப்பே இல்லாதிருந்தால் அவர் இன்

னும் சில புதிய இடங்களுக்கு நற்செய்தியைக் கொண்டு சென்றிருப்பாரே! சர்வஞானியாகிய தேவன் இவையெல்லாவற்றிலும் பல உன்னத நோக்கங்கள் கொண்டிருந்தார். தனக்கு நேரிட்டவை எல்லாம் ''சுவிசேஷம் பிரபலமாவதற்கு ஏதுவாயிற்று'' என்று வெற்றி முழக்கமிடுகிறார் பவுல் (பிலி 1:12). அதனால் அரண்மனையிலுள்ள அத்தனை பேருக்கும் நற்செய்தி தெரியலாயிற்று (வச 13). தான் முரசொலித்த செய்திக்காகவே ஒரு மனிதன் சிறையனுபவிக்கிறார் என்று கேள்விப்பட்ட யாவருக்கும் அச்செய்தி என்னவென்று அறிய ஆவல் கூடிற்று! மட்டுமல்ல, ''நமது குழுத் தலைவனை அடைத்துவிட்டார்களே; இப்பொழுது நாம் சும்மா இருக்கக்கூடாது'' என்று ''சகோதரரில் அநேகர் கர்த்தருக்குள் தைரியமடைந்து பயமின்றித் திருவசனத்தைச் சொல்ல அதிகமாய்த் துணிந்தனர்'' (வச 14). ஒரு பவுலை அடைத்தார்கள்; எத்தனை பவுல்கள் எழுந்துவிட்டனர்!

எப்பொழுது பார்த்தாலும் பயணித்துக்கொண்டேயிருந்த பவுலடியாரை ஆண்டவர் அடிக்கடி சிறைக்கு அனுப்பாதிருந்தால் திருச்சபைக்கு இத்தனை நிருபங்கள் கிடைத்திருக்காது! எபேசியர், பிலிப்பியர், கொலோசேயர், 2 தீமோத்தேயு, பிலேமோன் ஆகிய நிருபங்கள் சிறையிலிருந்து பவுலடியாரால் எழுதப்பட்டவை. எப்பொழுது பார்த்தாலும் கூட்டம், கூட்டம் என்று அலைவதினால்தானே அநேக ஊழியருக்கு உட்கார்ந்து எழுத நேரம் கிடைப்பதில்லை! எத்தனை பெரிய ஊழியரது உன்னதத் தியானக் கருத்துக்கள் அடுத்த தலைமுறைகளுக்குக் கிடைக்காமல்போயின! மட்டுமல்ல, கட்டாய ஓய்வு கொடுக்கவும் பவுலைத் தேவன் சிறையிலடைத்தார்! சுவர் இருந்தால்தானே சித்திரம்? தனது இறுதிக் கடிதத்தில் பவுல் எழுதியது: ''இச்சுவிசேஷத்தின் பொருட்டு நான் குற்றவாளிபோல் கட்டப்பட்டுத் துன்புறுகிறேன்; தேவ வசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை'' (2 தீமோ 2:9). சிறைவாசகத்தின்போது புத்தகங்களை வாசிக்கவும் பவுலுக்கு நிறைய நேரம் கிடைத்தது (4:13). வாங்கியும் வாசிக்கப்படாத எத்தனை புத்தகங்கள் நமது அலமாரிகளில் தூங்குகின்றன!

■ நெல்லை மாவட்டத்திலுள்ள டோனாவூரில் நட்சத்திரக்கூட்டம் (Star Fellowship) என்று அமைத்து நடத்திய ஏமி கார்மைக்கல் (1861-1951) அம்மையாரைக் கிறிஸ்தவ உலகு நன்கறியும். கோவில்



களுக்குக் கட்டாயப்படுத்திப் பெற்றோரிடமிருந்து பிடுங்கிச்செல்லப்பட்ட இளம் பெண்பிள்ளைகளைக் காப்பாற்றி ஆதரவளிக்கும் பணியில் அவர்கள் தீவிரமாய் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். இருண்ட பழக்கங்கள் நிறைந்துள்ள அப்பகுதியில் அம்மா அவர்கள் ஒரு நட்சத்திரமாகவே ஜொலித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் கீழே விழுந்ததால் ஏற்பட்ட எலும்பு முறிவினால் சாகும்வரை ஏறத்தாழ 20 ஆண்டுகளை அவர்கள் படுக்கையிலேயே செலவழிக்க வேண்டியதாயிற்று. அது அவர்களுக்கு ஓர் அடைப்பின் அனுபவம் தான். ஏன்? எனக்கா? இதுபோன்ற கேள்விகள் அம்மாவின் மனதில் எழாமலா இருந்திருக்கும்? படுக்கையிலிருந்த இக்காலக்கட்டத்தில் தான் அவர்கள் காலம் போற்றும் பல பாடல்களும் செய்யுள்களும் எழுதித் தேவாதி தேவனை மகிமைப்படுத்தினார்கள். நம்மைப் பழங்களாய் மக்களுக்குப் பரிமாறுவது தேவனது பொதுவான முறை. சில சமயங்களில் அவர்களுக்குப் பழச்சாறு கொடுக்க அவர் விரும்பும் போது நாம் பிழியப்படத்தானே வேண்டும்?

தமது சித்தத்தின்படித் தேவன் நம்மை அடைப்பு அனுபவத்திற்குள் நடத்திச்செல்லும்போதும் அவர் நம்மைக் கைவிடுவதில்லை. தேவன் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்று சத்துருக்கள் மகிழலாம் (சங் 71:11). ஆனால் அடைக்கப்பட்டிருக்கும் வேளையில் தேவன் நமக்குள் நடத்துபவை ஆச்சரியமானவை. அவர் நமக்குக் கூடுதல் பாடங்கள் படித்துத் தருகிறார். இதைத் தெளிவாய் எடுத்துரைக்கும் திருவசனப்பகுதி இதோ: ஏசா 30:20,21, ''ஆண்டவர் உங்களுக்குத் துன்பத்தின் அப்பத்தையும், உபத்திரவத்தின் தண்ணீரையும் கொடுத்தாலும், உன் ***போதகர்கள்*** இனி ஒருபோதும் மறைந்திருக்கமாட்டார்கள்; உன் கண்கள் உன் ***போதகர்களைக்*** காணும்; நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும் இடதுபுறமாய்ச் சாயும்போதும், வழி இதுவே, இதில் நடந்திடுங்கள் என்று உங்களுக்குப் பின்னால் சொல்லும் ***வார்த்தையை*** உங்கள் காதுகள் கேட்கும்.'' அடைப்பின்போது தேவனது புதிய வெளிப்பாடுகள், திருமறைப் பகுதிகளுக்குப் புதிய விளக்கங்கள் போன்றவற்றைத் துணையாளராகிய தூயாவியானவர் தந்துகொண்டிருப்பார். ''துன்பத்தின் அப்பம்'' என்றால் சாப்பிடும்போது சாப்பாட்டில் விழும் கண்ணீர் என்றுதானே எடுத்துக் கொள்ளவேண்டும்? யோசேப்பைப் புடமிட்ட திருவசனம் நம்மை

யும் புடமிடும். இக்கட்டான காலத்திலும் நமக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்துப் பாதுகாக்கத் தேவன் சில ஒபதியாக்களை வைத்திருப்பார் (1 இரா 18:3,4). இருட்டான வேளைகளில், *''கர்த்தரையே நம்பி ஜீவிப்போம்''* எனப் பாடி மகிழ்வோம் (ஏசா 50:10).

பல்வேறு விதமான அடைப்புகளுக்குள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் தமது தாசர்களோடு கிறிஸ்து தம்மை அடையாளப் படுத்திக்கொள்வார். ''நான் வியாதியாயிருந்தேன் ... நான் காவலிலிருந்தேன்'' (மத் 25:36). நமக்கு அவர் கொடுக்கும் பெயர், ''மிகவும் சிறியவராகிய என் சகோதரர்'' (வச 40). பிரியமானவர்களே, அடைப்பிலிருப்போரை அவமதியாது, அவதூறுபண்ணாது, ''கட்டப்பட்டிப் போரோடு நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல் அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் உடலோடிருக்கிறவர்கள் என்று அறிந்து, தீங்கு அனுபவிக்கிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்'' (எபி 13:3). இறுதிநாள் தீர்ப்பின்போது இவையெல்லாம் நமக்குமுன் வரும் (மத் 25:31-33).

இவ்வத்தியாயத்தின் துவக்கத்தில் தேவனது ''சர்வ ஞானம்,'' அவரது ''சர்வ வல்லமை'' ஆகிய இரு குணாதிசயங்களைக் குறிப்பிட்டோம். ஆம், நாம் அடைப்பின் அனுபவங்களுக்குள் அனுப்பப் படும்போது தேவனது ஞானம் ஓங்கி நிற்கிறது; நாம் விடுதலை பெறும்போது அவரது வல்லமை ஓங்கிச் செயல்படுகிறது. விடுதலை வராவிட்டால் அது ''மேலான உயிர்த்தெழுதலுக்கான'' ஆயத்தம் (எபி 11:35).

எனது வாழ்க்கையிலும் ஊழியப் பாதையிலும் எத்தனையோ அடைப்பின் அனுபவங்களைக் கடந்து வந்திருக்கிறேன். இதனை வாசிக்கும் உங்களது அனுபவமும் இதுவாகவே இருக்கலாம். இவ்வித வேளைகளில் நாம் புத்துயிரடைய சகோதரி சாராள் நவரோஜி அவர்களுடன் சேர்ந்து பாடுவோம் —

*தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை,*
*ஆற்றிடுதே உந்தன் சமூகமே;*
*பெலத்தின் மேல் பெலனடைந்து நான் சேருவேன்,*
*பேரின்ப சீயோனில் வாழ்ந்திடவே.*



# கேள்வி 21

## *''உப்பு உவர்ப்பற்றுப்போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்?''*

**(மத்தேயு 5:13)**

எளிய எடுத்துக்காட்டுகளைக் கொண்டு உயரிய உபதேசங்களைக் கொடுப்பதில் இயேசுவுக்கு நிகர் யார்? சாதா மக்கள் அவரை ஆவலாய்க் கேட்டதற்கு இதுவே முக்கிய காரணம். அவரே சரித்திரத்தில் நிகரற்ற போதகர். அவரிடமிருந்து நாம் போதனைகளை மட்டுமல்ல, போதனா முறைகளையும் கற்றுக்கொள்ளவேண்டும். அனுதினமும் நாம் பயன்படுத்தும் ''உப்பு'' என்பதனை எடுத்துக்காட்டாய்க் கொண்டு எவ்வளவு பெரிய சவாலை அவர் நம்முன் வைக்கிறார் பாருங்கள்! உவர்ப்பற்ற உப்பு என்பது பின்மாற்றமடைந்த வாழ்க்கையைக் குறிக்கும். அது எவ்வளவு பயங்கரமானது என்பதை வலியுறுத்த அவர் கூறுவது: ''உப்பு உவர்ப்பற்றுப்போனால் அதை வெளியேதான் கொட்டவேண்டும்; நடைபாதைக்குத்தான் மணல்போல் அது பயன்படும்.'' பதார்த்தங்களுக்கு ருசியாயிருக்கவேண்டியது பாதங்களுக்குத் தூசியாகிறது! பின்மாற்றம் அல்லது பின்வாங்குதல் குறித்துத் திருமறை போதிப்பவற்றை இவ்வத்தியாயத்தில் தியானிப்போம். பின்மாற்றத்தில் பல்வகை உண்டு. அவற்றில் மூன்றினை இங்கு கவனிப்போம் —

(1) முதலாவது, திருச்சபை அல்லது ஒரு ஜெபக்குழுவை அடுத்தது. சிலர் திருச்சபைக்குள்ளேயே பின்வாங்கியிருப்பர்; வேறு சிலர் பின்மாற்றமடைந்து வெளியே சென்றுவிடுவர். பின்மாற்றமடைந்து சபைக்குள்ளேயே இருப்பவர்கள்தான் பின்வாங்கி வெளியேறியவர்களைவிட அதிகம். இதனைக் கெட்ட குமாரன் கதையிலிருந்து விளக்கலாம். இளைய குமாரன் வீட்டைவிட்டு வெளியேறிப் பின்வாங்கி

னான்; அல்லது பின்வாங்கி வெளியேறினான். மூத்தவனோ வீட்டிற்குள்ளேயேயிருந்து பின்வாங்கினான். பின்வாங்கி வெளியே றினவனைத்தான் நாம் கெட்ட குமாரன் என்கிறோம். ஆனால் இக் கதையின் முடிவில் நாம் காண்பதென்ன? இளையவன் உள்ளே, மூத்தவன் வெளியே! இப்பொழுது சொல்லுங்கள், கெட்ட குமாரன் இளையவனா, மூத்தவனா?

தந்தை-மகன் பாசவுறவுக்கு மூத்தவன் அந்நியனானான். அவனி டமிருந்தது ஒரு வேலைக்காரனின் மனப்பான்மையே. தந்தையைப் பார்த்து, ''இத்தனை ஆண்டுகளாய் உமக்குச் ***சேவை*** செய்தேனே'' என்கிறான் (லூக் 15:29). அவன் ஒரு பிரமாணக் கொள்கைக்காரன். தந்தையைப் பார்த்து, ''ஒருபோதும் உமது ***கட்டளையை*** மீற வில்லையே'' என்கிறான். பிரியமானவர்களே, நாம் ''விரும்புவதால்'' தேவனைச் சேவிக்கிறோமா, அல்லது சேவை செய்ய ''வேண்டி யிருப்பதால்'' அவரைச் சேவிக்கிறோமா? விண்தந்தையின் கட்டளை என்பதால் அல்ல, அவர்மீதுள்ள ''பாசமே'' அவரது சொல் தட்டாது நடக்க நம்மை உந்தவேண்டும். முதலில் வருவது ''அன்பு;'' அதின் வெளிப்பாடே ''கீழ்ப்படிதல்'' (1 யோ 5:2,3). இதில் மாற்றம் ஏற்படு வதே பின்மாற்றத்தின் துவக்கம். சுயநீதிக்காரரின் பின்மாற்றம் அவர்களுக்கே தெரியாது.

தந்தையுள்ளம் கொண்டவர்கள் திருச்சபையில் குறைவதாலேயே பின்மாற்றக்காரர் பலர் திரும்பிவரத் தயங்குகின்றனர். இவர்கள் கும் பிடுவது சட்டதிட்டங்களைத்தான். சபை மேய்ப்பருக்குத் தலைவலி இவர்கள்தான். பின்மாற்றமடைந்தோரை ஈர்ப்பது ''சாந்தமுள்ள ஆவி, பொறுமை, அன்பு'' ஆகியவையே (கலா 6:1; 2 தீமோ 2:25; யாக் 5:20). இந்தக் கதையில் தகப்பன் பாரபட்சமாய் நடந்துகொள்ள வில்லை. திரும்பி வந்த மகனை ''தழுவியணைத்தார்'' (லூக் 15:20); உள்ளே வர மறுத்த மூத்தவனை ''வருந்தியழைத்தார்'' (வச 28). இருவருக்காகவும் தகப்பன் வெளியே வந்தார்! மூத்த குமாரனின் மனப்பான்மையைக் களைந்தெறிவோம். அப்பொழுதுதான் தந்தை யானவரின் ''சந்தோஷத்திலும் மகிழ்ச்சியிலும்'' பங்கேற்க முடியும் (வச 32). சபைக்குள்ளேயே இருந்துகொண்டு பின்மாறுகிறவர்களை



அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்பான நிலையில் உள்ள வர்கள் எனலாம். திருச்சபையின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாயிருப்பவர்கள் இவர்களே.

(2) அடுத்த வகைப் பின்மாற்றம் செய்யத் தகாதவை மற்றும் செய்யத் தவறியவை எனும் பாவங்களின் அடிப்படையிலானது. (Sins of Commission and Sins of Omission). செய்யத் தகாதவை களைச் செய்வதினால் ஏற்படும் பின்மாற்றம் வெளிப்படையாய்த் தெரிந்துவிடும். செய்யத் தவறியவைகளினால் ஏற்படும் பின்மாற்றம் கவனிக்கப்படாது விடப்படும். உலகைப் பொருத்தவரையில் செய் யத் தகாதவையின் அடிப்படையிலேயே நல்லவர் அல்லது தீயவர் என மக்கள் கணிக்கப்படுவர். ஆனால் தேவனுடைய பார்வையில் இரண்டுமே ஒன்றுதான். ஆங்கிலிக்கன் திருச்சபையில் பயன்படுத் தப்படும் பொதுவான ஜெபப் புத்தகத்தில் பாவ அறிக்கை இப்படி யிருக்கிறது: ''நாங்கள் செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் செய்யத் தகாதவைகளைச் செய்துவந்தோம்; எங்களுக்குச் சுகமே இல்லை!'' செய்யத் தவறியவை என்பதையும் செய்யத் தகாதவை என்பது போலவே தேவன் பார்க்கிறாரென்பதற்கு இதோ சில எடுத்துக்காட்டுகள் —

□ சீமோனின் வீட்டில் இயேசு பந்தியிருக்கிறார் (லூக் 7). பெயர் கெட்ட பெண்ணொருத்தி திடீரென்று உள்ளே வந்து இயேசுவின் பாதங்களை முத்தம் செய்கிறாள். தனது கண்ணீரால் அவற்றைக் கழுவித் தனது கூந்தலினால் துடைக்கிறாள். விலையுயர்ந்த வாச னைத் தைலத்தை அவர்மீது ஊற்றுகிறாள். இதைக் கண்டு ஆத்திர மடைந்த சீமோனிடம் இயேசு அவர் செய்யத் தவறியவற்றையே சுட்டிக் காட்டினார்: ''நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை; என்னை முத்தம் செய்யவில்லை; தலையில் எண்ணெய் பூசவில்லை.'' முடிவாக அவர் சொன்னது: செய்யத் தகாதவை எனும் அவளது ''அநேக பாவங்கள்'' அவளுக்கு மன்னிக்கப்பட்டன; செய்யத் தவறி யவை எனும் உனது பாவங்களுக்காய் நீ மனந்திரும்ப மாட்டாயா? பிரியமானவரே, உங்களையும் என்னையும் நோக்கிவரும் இயேசுவின் கேள்வி இதுவே!

□ செல்வந்தனான ஒரு மனிதன் இருந்தான் (லூக் 16). அவன் ஒரு குறைவுமின்றி வாழ்ந்துகொண்டிருந்தான். அவனது வீட்டு வாயிலருகே உடம்பெல்லாம் புண்களாயிருந்த லாசரு என்ற தரித்திரன் கிடந்தான். லாசரு முதலாவது இறந்தான்; அடுத்து அச்செல்வந்தனும் இறந்தான். லாசருவை தேவதூதர் தூக்கிக்கொண்டுபோய் ஆபிரகாமின் மடியில் விட்டனர். செல்வந்தனுக்குத்தான் பெரிய அடக்க ஆராதனை (வச 22). அவனோ அக்கினிக் கடலாகிய பாதாளம் சென்றான். உதவிக்காய் ஆபிரகாமைப் பார்த்துக் கெஞ்சிய செல்வந்தனுக்கு யாவும் மறுக்கப்பட்டது. அச்செல்வந்தனின் பாவம்தான் என்ன? திருடினானா? கொலை செய்தானா? விபசாரம் பண்ணினானா? இப்படி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. செய்யத் தவறியவை என்பவையே அவனது பாவங்கள். லாசருவுக்கு அவன் தனது மாளிகையின் பின்புறத்தில் சிறிய வீடு ஒன்று கட்டிக்கொடுக்கத் தவறினான்; அவனுக்கு மருத்துவ உதவி செய்யத் தவறினான்; அவனுக்கு ஓர் எளிய உணவாவது கொடுத்துப் பராமரிக்கத் தவறினான்; ரொட்டித் துண்டுக்கு அவனோடு போட்டிபோட்ட தனது நாய்களைக் கட்டத் தவறினான். இதற்காய் நரகமா? தேவனது பார்வை வேறு, நமது பார்வை வேறு!

□ மனுமகன் இயேசு திரும்பி வரும்போது இராஜாவாய்ச் சிங்காசனத்தில் மகிமையாய் அமர்ந்திருப்பார் (மத் 25). மக்களனைவரும் ஆடுகள்போல் அவர்முன் நிற்கின்றனர். செம்மறியாடுகளை வலது பக்கம் அனுப்புகிறார்; வெள்ளாடுகளை இடது பக்கம் அனுப்புகிறார். வலது பக்கம் இருப்பவர்களை ''ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, வாருங்கள்'' என்று வரவேற்கிறார். இடது பக்கம் இருப்பவர்களை ''சபிக்கப்பட்டவர்களே, அகன்றுபோங்கள்'' என்று துரத்துகிறார். இவ்வசனப் பகுதியை வாசிக்கவே பயமாயிருக்கிறது. செய்யத் தவறியவை (Sins of Omission) எனும் பாவங்களுக்காவே தண்டனை வழங்கப்படுகிறது (வச 42,43). நன்மை செய்தவர்களுக்கு நித்திய ஜீவன்; நன்மை செய்யத் தவறியவர்களுக்கு நித்திய ஆக்கினை (வச 46). இந்த வசனங்களுக்குப் பல்வேறு வியாக்கியானங்கள் கொடுக்கப்படுகின்றன. எப்படியிருப்பினும், செய்யத் தவறியவை எனும் பாவங்களைத் தேவன் எவ்வளவாய்த் தண்டிக்கிறார் என்பதை மறுக்க முடியாது.



**(3)** மூன்றாம் வகைப் பின்மாற்றம் உபதேசத்தை அடுத்தது. இதிலும் இருவகை உண்டு. ஒன்று, உபதேசத்தில் பிழை ஏற்படுதல் (doctrinal error); அடுத்தது, விசுவாசத்தையே மறுதலித்தல் (denial of faith). முதல் வகையிலிருந்து திரும்பி வருதல் எளிது; அடுத்ததிலிருந்து திரும்பி வருதல் பொதுவாகச் சாத்தியமல்ல. இதைக் குறித்த திருமறைப் போதனையைக் கவனிப்போம் —

(அ) பிழையான உபதேசங்களில் மாட்டிக்கொள்பவர்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டும். ''சத்தியத்தை அறியும்படித் தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளிச்செய்யவேண்டும்'' என்று கிருபாசனத்திற்குமுன் அவர்களுக்காக மன்றாடவேண்டும் (2 தீமோ 2:25). அவர்கள் சிக்கியிருக்கும் பிசாசின் ''கண்ணியிலிருந்து'' விடுபடவேண்டும். இதனை ''மயக்கம் தெளிதல்'' என்று பவுலடியார் குறிப்பிடுகிறார் (வச 26). இதற்காய்த் திருத்துதல் உபதேசம் (Corrective teaching) அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். ஆன்மீக வாழ்வின் துவக்கமாகிய ''மனந்திரும்புதல்'' முதல் இவ்வுலக வாழ்வின் இறுதியாகிய ''மரணம்'' வரையுள்ள 20 முக்கியத் தலைப்புகளில் தலா 10 திருத்துதல் பாடங்களை நான் உபதேசித்துள்ளேன். இவ்விதம் 200 திருத்துதல் பாடங்களின் தொகுப்பு ஒலி-ஒளித்தட்டுகளிலும், புத்தக வடிவிலும் உண்டு. விபரங்களுக்கு எழுதுங்கள். கேட்டு, வாசித்துப் பயனடையுங்கள்; மயக்கம் மற்றும் கண்ணியிலிருந்து பிறரை விடுவியுங்கள் (பக்கம் 223). இது ஓர் உன்னதப்பணி என அப்போஸ்தலன் யாக்கோபு நம்மை ஊக்குவிக்கிறார்: யாக் 5:19,20, ''சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம்போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்திலிருந்து பாவியைத் திருப்புகிறவன் ஓர் ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவான் என்று அறியட்டும்.''

(ஆ) பொதுவாக மீண்டுவர முடியாத பின்மாற்றத்தைக் குறித்த வேதப் பகுதி, எபிரெயர் 6:4-6, ''ஒரு தடவை பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தைகளையும், இனி வரும் உலகத்தின்

வல்லமையை ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறதால், மனந்திரும்புதலுக்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.'' உபதேசப் பிழையில் மாட்டிக்கொண்டவர்களுக்காய் ஜெபிக்கலாம். ஆனால் விசுவாசத்தையே மறுதலித்துக் கிறிஸ்துவைப் புறக்கணிப்பவர்கள் மன்னிக்கப்படும்படி ஜெபிக்க முடியாது. ஏனெனில் அது ''மரணத்துக்கேதுவான பாவம்'' என்றாகிவிடுகிறது (1 யோ 5:16,17). அநீதியெல்லாம் பாவம் என்றாலும் விக்கிரகங்கள் பின்னால் போகுமளவு விசுவாசத் துரோகம் ஏற்பட்டால் அதற்கு நிவாரணம் கிடையாது (வச 21). தனது தலைப்பேற்றுரிமையை ஏசா அலட்சியம்பண்ணியபோது அந்த வழித்தோன்றலாகிய மேசியாவையே புறக்கணித்தான். எனவேதான் அதற்குப் பின்னர் மனம் வருந்தியும் இழந்ததைப் பெற முடியவில்லை (எபி 12:16,17). இப்படிப்பட்டவர்கள் திரும்பி வருவதோ, இப்படிப்பட்டவர்களைத் திரும்பக் கொண்டுவருவதோ ''மனிதரால் கூடாததுதான்; ஆனால் தேவனால் எல்லாம் கூடும்'' (லூக் 18: 24-27). இயேசுவை மும்முறை மறுதலித்துச் சபித்த பேதுரு முழுமையாய்க் குணப்பட்டு ஆன்மீக உச்சங்களை எட்டவில்லையா? ''விழுந்தவர்கள் எழுந்திருக்கிறதில்லையோ? வழிதப்பிப் போனவர்கள் திரும்புகிறதில்லையோ?'' (எரே 8:4).

உவர்ப்பு இழந்த உப்பு என்பது பின்மாற்றத்தைக் குறிக்கும் என்று பார்த்தோம். பின்மாற்றத்தின் பல வகைகளையும் தியானித்தோம். ஆண்டவராகிய இயேசு உப்பையும் அதின் உவர்ப்பையும் குறித்துப் பேசியதாகச் சுவிசேஷங்களில் மூன்று இடங்களில் பார்க்கிறோம்: மத்தேயு 5:13-15; மாற்கு 9:49,50; லூக்கா 14:33-35. ஒவ்வொன்றும் சொல்லப்பட்டுள்ள சூழமைவைக் கவனித்தால் உப்பில் உவர்ப்பைத் தக்க வைத்துக்கொள்வது எப்படியென விளங்கிக்கொள்ளலாம். அதுவே பின்மாற்றத்தைத் தடுப்பதற்கான வழிகளுமாகும் —

**மத்தேயு 5:13-15,** ''நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாயிருக்கிறீர்கள் ... நீங்கள் உலகிற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்.'' வெளியுலகில் நமது சாட்சியைக் (Public testimony) குறித்த பகுதி இது.



**மாற்கு 9:49,50,** ''உப்பு நல்லதுதான்; உப்பு சாரமற்றுப்போனால் அதற்கு எதினால் சாரமுண்டாக்குவீர்கள்? உங்களுக்குள் உப்புடையவர்களாயிருங்கள்; ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயுமிருங்கள்.'' சகவுறவுகளைக் (Peaceful relationships) குறித்த பகுதி இது.

**லூக்கா 14:33-35,** ''எவனாகிலும் தனக்கு உரிமையானவற்றையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீடனாயிருக்க மாட்டான். உப்பு நல்லதுதான்; உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்?'' நெடுகவே காணப்படவேண்டிய தன்னல மறுப்பைக் (Progressive self-denial) குறித்த பகுதி இது.

பிறர்முன் சாட்சியாக வாழுவோம்; ஒருவரோடொருவர் சமாதானமாய் இருப்போம்; தன்னல மறுப்பில் வளருவோம். அப்பொழுது பின்வாங்குதல் அரிதாகிவிடும். மண்ணுலகிற்கு உப்பாயிருக்கும் திருச்சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அந்திக்கிறிஸ்துவால் இவ்வுலகு மிதிக்கப்படும்.



# கேள்வி 22

***‘‘பூவுலகுக்கடுத்த காரியங்களையே நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே; விண்ணுலகக் காரியங்களை உங்களுக்குச் சொன்னால் எப்படி விசுவாசிப்பீர்கள்?’’***

**(யோவான் 3:12)**

இஸ்ரவேலரது போதகர்களில் ஒருவராகிய நிக்கொதேமு என்ற பரிசேயனிடம் ஆண்டவராகிய இயேசு இக்கேள்வியைக் கேட்டார். தேவ பக்தியுள்ள இவர் இயேசு செய்த அற்புதங்களைப் பார்த்து வியந் தார். ‘‘கடவுள் ஒருவனோடு இராவிடில் இவ்வித அற்புதங்களெல் லாம் சாத்தியமன்று’’ என்று அவர் இயேசுவுக்குப் புகழாரம் சூட்டினார். யூதர்கள் பலருக்கு, அதிலும் குறிப்பாகப் பரிசேயர் பலருக்கு, இயேசு வின் புரட்சிகரக் கருத்துக்கள் பிடிக்காது. தேவையற்ற பிரச்னை களைத் தவிர்க்க நிக்கொதேமு ஓர் ‘‘இரவில்’’ இயேசுவிடம் வந்து அவரைப் பாராட்டினார். அதற்கு ஆண்டவர் கொடுத்த பதில் நிக்கொ தேமு எதிர்பாராதது: ‘‘நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்’’ (யோ 3:7). இதை அவரால் விளங்கிக்கொள்ள முடியாததாலேயே ஆண்ட வர் இக்கேள்வியை அவரிடம் கேட்டார் (வச 12).

‘‘பூவுலகுக்கடுத்த’’ காரியங்கள் என்று இயேசு எதனைக் குறிப்பிட் டார்? அவர் இங்கு மறுபிறப்பைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார் (வச 3,5). மறுபிறப்பு என்பது மனித இயல்பினால் பிறப்பதல்ல, தூய ஆவியால் பிறப்பது என்று நிக்கொதேமுவுக்கு விளக்கினார். இதுவே அற்புதங்களிலெல்லாம் அற்புதம் என்று சுட்டிக்காட்டும் வகையில் மனிதனது கட்டுப்பாட்டுக்கு உட்படாத காற்றினை எடுத் துக்காட்டாய்க் கூறினார் (வச 8). மறுபிறப்பு என்பது மறுவுலகிற்குச் செல்வதற்காக இவ்வுலகில் நாம் மேற்கொள்ளவேண்டிய ஆயத்தம் என்பதே இயேசு இங்கு வலியுறுத்தும் கருத்து. மறுபிறப்பு என்பது



கிறிஸ்தவ வாழ்விற்கு அடித்தளமான அனுபவம். இந்த அடித் தளத்தைப் ‘‘பூவுலகக்’’ காரியம் என்பதும் அதற்கு அடுத்தவையே ‘‘விண்ணுலகக்’’ காரியங்கள் என்பதுமே ஆண்டவர் நமக்குத் தரும் உபதேசம்.

துர்ப்பாக்கியமாக, அடித்தளத்தையே மேற்கட்டிடம் என்று நினைத்துத் திருப்தியடைந்துவிடும் நிலையிலேயே இன்று கிறிஸ் தவம் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக எபிரெயர் 6:1,2ஐப் பாருங் கள். இங்கு ‘‘மனந்திரும்புதல், விசுவாசம், திருமுழுக்கு, கைகள் வைக்குதல், உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு’’ ஆகியவையெல்லாம் ‘‘மூல’’ (ஆரம்ப) உபதேசங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. இவையெல்லாம் பாலர் பள்ளிப் பாடங்கள். தொடங்கிய இடத்தி லேயே தொடர்ந்து நிற்கக்கூடாது. கிறிஸ்துவுக்குள்ளான ‘‘பரிபூரண’’ அல்லது ‘‘நிறைவான’’ வாழ்க்கை நோக்கி நகரவேண்டும். மேற் கூறிய ஆறு உபதேசங்களே இன்று ‘‘பூரண’’ சுவிசேஷம் என்ற ழைக்கப்படுவது எத்தனைத் துக்கம்! இவையெல்லாம் சுவிசேஷத் தில் அடித்தளச் சத்தியங்கள் மட்டுமே.

இந்த அறிவு இல்லாததாலேயே அநேகப் பிரசங்கிமார் திரும்பத் திரும்ப ஆரம்ப இரட்சிப்பின் அனுபவம் குறித்தே பேசிக்கொண்டி ருக்கின்றனர். இயேசுவிடம் ‘‘வாருங்கள்’’ என்ற அழைப்புதான் கொடுக்கப்படுகிறதே தவிர இயேசுவைப் ‘‘பின்பற்றுவது’’ எப்படி யென்று சொல்லிக்கொடுக்கப்படுவதில்லை. எபிரெய நிருப ஆக்கி யோன் இந்நிலையைப் பேராபத்தாய்க் கணிக்கிறார். அடித்தள உப தேசத்திலிருந்து நாம் மேற்கட்டிடச் சத்தியங்களுக்குள் கடந்து செல்லாவிடில் அது பின்மாற்றத்தில் முடிவடையும் என்று முன் னெச்சரிக்கிறார் (எபி 6:3-6). பின்மாற்றத்திற்கு முதற்காரணம் தேக்கமே. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தண்ணீர் தேங்கி நிற்கும் ‘‘குளம்’’ அல்ல; அது நீரோட்டமுள்ள ‘‘நதி!’’ (யோ 7:37-39), எந்நா ளும் ஊறுகிற ‘‘நீரூற்று’’ (4:14). ஆரம்பப்பள்ளிப் பாடங்கள் முக் கியம்தான். கூட்டல், கழித்தல், பெருக்கல் வாய்ப்பாடு ஆகியவை யெல்லாம் அத்தியாவசியந்தான். அதற்காக எத்தனை ஆண்டுகள் தான் ஆரம்ப வகுப்புகளிலேயே உட்கார்ந்திருப்பது? நடுநிலை,

உயர்நிலை என்றெல்லாம் செல்லவேண்டாமா? கட்டிடத்திற்கு அடித்தளம் முக்கியம்தான்; அதற்காக எத்தனை முறை அடித்தளம் போடுவது? மேற்கட்டிடம் கட்டியெழுப்பவேண்டுமே! பூமிக்கடியிலுள்ள அடித்தளத்தைப் ''பூவுலகக் காரியங்கள்'' என்றும், வான் நோக்கிச் செல்லும் மேற்கட்டிடத்தை ''விண்ணகக் காரியங்கள்'' என்றும் நிக்கொதேமுவுக்கு ஆண்டவர் விளக்கிக் காட்டினார் (யோ 3:12).

திரும்பத் திரும்ப அடித்தள உபதேசங்களைப் பேசி அங்கேயே தங்கிவிடக்கூடாது, தேங்கிவிடக்கூடாது, என்று அறிவுறுத்திய எபிரெய நிருப ஆக்கியோன் (எபி 6:1-3) அதற்கு முந்திய வசனங்களில் எதைக் குறித்துப் புலம்புகிறார் பாருங்கள்: ''காலத்தைப் பார்த்தால், போதகராய் இருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் துவக்க உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதிருக்கிறது; நீங்கள் புலால் அல்ல, பால் குடிக்கிறவர்களானீர்கள்'' (5:12). பாலகருக்குத்தான் பால்; வளர்ந்தவருக்குப் புலால் (வச 13,14). இவர்கள் திருவசனத்தை விளங்கிக்கொள்ளப் பழக்குவிக்கப்படாதவர்கள் (வச 13). சபை மேய்ப்பர்களுக்கு இதில் பெரும் பொறுப்புண்டு. திருமறையைச் சபையாருக்குப் போதித்தால் போதாது; அவர்களே அதனை எப்படித் தியானிக்கவேண்டும், எப்படி ஆராயவேண்டும், அர்த்தப்படுத்தவேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொடுக்கவேண்டும். மதிப்பிற்குரிய பாஸ்டர் அவர்களே, உங்கள் சபையாருக்கு எத்தனை ஆராய்ச்சி வேதாகமங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள்? எந்தெந்த வியாக்கியானங்களையும் விளக்கவுரைகளையும் வாங்கலாமென்று ஆலோசனை கூறியிருக்கிறீர்கள்? எனது கடந்த ஐம்பதாண்டு ஊழியக்காலத்தில் இவ்விதம் எத்தனை பேருக்கு நான் உதவியிருக்கிறேன் என்பதற்கு நடமாடும் ஏராளம் நிருபங்கள் சாட்சி! சபையாரையும் போதகர்களாக்கவேண்டுமென்றுதானே அப்போஸ்தலர் உழைத்தனர்! (எபி 5:12அ). ஒவ்வொரு விசுவாசியையும் ஊழியனாக்குவதுதானே ஒவ்வொரு ஊழியனின் ஊழியமாயிருக்கவேண்டும்? (எபே 4:11-13),

தனக்கும் இயேசுவுக்குமுள்ள அடிப்படை வேறுபாட்டைத் திருமுழுக்கினன் யோவான் எப்படி வரையறுக்கிறார் பாருங்கள்:



''உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; மண்ணுலகிலிருந்து உண்டானவன் மண்ணுலகு சார்ந்தவை பற்றியே பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்'' (யோ 3:31). அதாவது, மண்ணுலகிலிருந்து தோன்றிய யோவான் மனந்திரும்புதலையும் திருமுழுக்கையும் பற்றியே பேசினார் (மத் 3:2,11அ; லூக் 7:29; அப் 13:24). இயேசுவானவரோ தேவன் தமக்குக் கொடுத்திருந்த அளவில்லா ஆவியின்படி தேவனுடைய பரலோக வார்த்தைகளைப் பேசினார் (யோ 3:34). ஏனென்றால் குமாரனிடம் பிதாவானவர் ''எல்லாவற்றையும்'' ஒப்புக்கொடுத்திருக்கிறார் (வச 35). குமாரனை விசுவாசிக்கும்போது அனைத்து ஆசீர்வாதங்களும் நமதாகின்றன (வச 36). இங்கு வலியுறுத்தப்படும் சத்தியம் என்னவென்றால், மறுபிறப்பு என்பது இறையரசிற்கு நுழைவாயில் மட்டுமே (யோ 3:3,5). பரவசப்பட்டு வாசலிலேயே நின்றுவிடக்கூடாது. ''கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும்; நீர் வெளியே நிற்பானேன்?''

எபேசியர் நிருபத்தைப் புதிய ஏற்பாட்டின் எவரெஸ்ட் சிகரம் (29028 அடி) என்றழைக்கலாம். ''கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்'' என்று இந்நிருபம் துவங்குகிறது (எபே 1:3). பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையேயுள்ள ஓர் அடிப்படையான வேறுபாட்டினை இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பழைய உடன்படிக்கையின் கீழ், ''என்னை ஆசீர்வதியும், எங்களை ஆசீர்வதியும், உமது மக்களை ஆசீர்வதியும்'' என்றெல்லாம் அடிக்கடி ஏறெடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பார்க்கிறோம். புதிய உடன்படிக்கைக்குள் நுழைந்த பின்னரோ, ''ஆசீர்வதியும்'' என்பதைவிட ''ஆசீர்வதித்ததற்காய் ஸ்தோத்திரம்'' என்ற துதியே தேவனை நோக்கி எழும்புகிறது. இன்றைய நமது முக்கிய தேவை கூடுதல் ''ஆசீர்வாதங்கள்'' அல்ல; ஏற்கனவே ஆண்டவர் அருளியிருக்கிற ஆசீர்வாதங்களை அறிந்துகொள்ளும் ''பிரகாசமுள்ள மனக்கண்களே'' (வச 17-19). இதற்காய் அப்போஸ்தலன் பவுல் ஏறெடுத்த ஜெபத்தை வாசிப்போம் —

‘‘நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினால் நமக்கு உண்டாயிருக்கும் நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடம் தமக்கு உண்டாயிருக்கும் சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடம் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடம் காண்பிக்கும் தமது வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படி, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்’’ (எபே 1:17-19). அப்பப்பா, ஒரே வாக்கியத்தில் எவ்வளவு நீண்ட ஜெபம்! (இதனை எடுத்தெழுதும்போது எனது பேனாவில் மை தீர்ந்துவிட்டது!)

பிரியமானவர்களே, இந்த ஜெபத்தைத் திரும்பத் திரும்ப வாசித்துத் தியானியுங்கள். இதை உங்களது அனுதின ஜெபமாக்குங்கள். மக்களது தலை வலி, வயிற்று வலி, கால் வலி என்பது போன்றவைகளுக்காகவே பிரசங்கிமார் எப்பொழுதும் ஜெபித்துக்கொண்டிராமல், பவுலைப்போல இவ்விதம் மக்களுக்காய் ஜெபிக்கவேண்டும். விசுவாசிகளாக நாம் ஏற்கனவே பெற்றுவிட்ட ஆசீர்வாதங்களைப் புரிந்துகொள்ளவே வாழ்நாள் போதாதே; இதற்கு மேலும் என்ன ஆசீர்வாதம் தேவையோ? நமது ஆன்மீகக் குருட்டுத்தனத்திற்கு மூன்று முக்கிய காரணங்கள் இதோ —

(1) நமது ***ஜென்ம சுபாவம்*** அல்லது இயல்பான சுபாவம் தலைதூக்கும்போது ஆவிக்குரிய பார்வை மங்குகிறது. இதைக் குறித்துத் திருமறை கூறுவது: 1 கொரி 2:14, ‘‘ஜென்ம சுபாவமான மனிதன் தேவனது ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளமாட்டான்; அவை அவனுக்குப் பைத்தியமாய்த் தோன்றும்; அவை ஆவிக்கேற்றபடி ஆராய்ந்து நிதானிக்கப்படுபவையானதால் அவற்றை அறியவும் மாட்டான்.’’ பிரியமானவர்களே, எல்லாவற்றையும் மனிதனது தர்க்க ரீதியில் புரிந்துகொள்ள முயலாதீர்கள். தமது ஆவியானவர் மூலம்



தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தி விளக்கும்படி அவரை வேண்டுங்கள் (வச 10). எல்லாமே நமது கண்களுக்குத் தெரியவேண்டும், காதுகளுக்குக் கேட்கவேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது (வச 9). இயற்கைக்கு அப்பாற்பட்டுச் செயல்படும் தேவ வல்லமையை விசுவாசிக்கவேண்டும். அறிவியல் பெருத்துள்ள இக்காலத்தில் இது கடினம்தான்; ஆனால் ஆன்மீகக் காரியங்களை அறிய ஆன்மீகப் பார்வைதான் வேண்டும்.

(2) தேவ பக்தியுள்ள அனந்த பாக்கியமான ஆசிகளைக் காணக்கூடாதவாறு ***பொருளாதாரச் சிந்தை*** நமது கண்களைக் குருடாக்கிவிடும். மலைப்பிரசங்கத்தின் மையப்பகுதியாகிய மத்தேயு 6:19-34 பொருளாசையைக் குறித்தது என்பது தெரியுமா? 16 வசனங்கள்! பொருளாசையினால் ஆன்மீகப் பார்வையிழந்த இருவர் நமக்குமுன் எச்சரிப்பாய் நிற்கின்றனர். ஒருவன் பிலேயாம். ‘‘அநீதத்தின் கூலியை’’ நாடிய அவனது கண்கள் குருடாயின (எண் 22:31; 2 பேது 2:15). அடுத்தது, கேயாசி. நாகமான் கொடுத்த வெகுமதிகள் வேண்டாமென்று தீர்க்கன் எலிசா புறக்கணித்தார். ஆனால் வேலைக்காரனான கேயாசி நாகமானைப் பின்தொடர்ந்தான் (2 இரா 5:20,26). எதிரியின் சேனைகள் தங்களைச் சுற்றி வளைத்தபோது அவன் எலிசாவைப் பார்த்து, ‘‘ஐயோ, என் ஆண்டவனே, என்ன செய்வோம்?’’ என்று பதறினான். அவர்களைச் சுற்றிப் பாதுகாத்த அக்கினிக் குதிரைகளையும் இரதங்களையும் அவனால் பார்க்க முடியவில்லை. ‘‘கர்த்தாவே, இவன் கண்களைத் திறந்தருளும்’’ என்று கேயாசிக்காய் எலிசா வேண்டினார் (6:15-17). கீழானவைகளை அல்ல, மேலானவைகளை நாடும்போதுதான் ஆன்மீகப் பார்வை தெளிவாயிருக்கும் (கொலோ 3:1,2,5).

(3) ***ஒரே ஊழியக்காரரைச்*** சுற்றிச் சுற்றி வந்தால் காமாலைக் கண்தான்! கொரிந்து சபையில் ஒரு சிலர் தாங்கள் பவுலைச் சேர்ந்தவர்கள் என்று பெருமிதம் கொண்டனர்; வேறு சிலர் தாங்கள் அப்பொல்லோவைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டனர். இதை அப்போஸ்தலன் பவுல் ‘‘மாம்சீகச் சிந்தை’’ என்றும் ‘‘குழந்தைத்தனம்’’ என்றும் கடிந்துகொண்டார் (1 கொரி 3:1-4). குழு

வெறியினால் கண்சொருகிப்போனவர்கள் கிறிஸ்தவத்தில் திரளா னோர். ஒரே ஊழியனைப் பற்றிக்கொண்டு பிற ஊழியரை அசட்டை செய்வது நம்மை யானையைத் தடவிப் பார்த்த ஐந்து குருடர் போலாக்கிவிடும்! இந்த இடத்தில் முக்கியமானதொரு கருத்தை ஓர் ஊழியனாக நான் கூற விரும்புகிறேன். இறைமக்கள் நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல; நாம்தான் இறைமக்களுக்குச் சொந்தம்; இறைமக்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தம்; கிறிஸ்து தேவனுக்குச் சொந்தம் (வச 22,23). இந்தப் புரிதல் கிறிஸ்தவத்திலேயே ஒரு பெரும் புரட்சியுண்டாக்கும். இனி ஆவிக்குரிய சபையா, பாரம்பரிய சபையா என்று கேட்காதீர்; ஆவிக்குரிய சபையா, மாம்சீகச் சபையா என்று கேளுங்கள். (Not spiritual Church or traditional Church, but spiritual Church or carnal Church?)





# கேள்வி 23

***''எனது திராட்சைத் தோட்டம்
நல்ல திராட்சைப் பழங்கள் தருமென்று நான் காத்திருக்க,
அது கசப்பான பழங்கள் தந்ததேன்?''***

**(ஏசாயா 5:4)**

இஸ்ரவேலின் வம்சமே கர்த்தருடைய திராட்சைத் தோட்டம் என்றும், யூதாவின் மனிதர் அவரது மனமகிழ்ச்சியின் நாற்று என்றும் இவ்வசனப் பகுதியில் வர்ணிக்கப்பட்டுள்ளனர் (வச 7). இத்திராட் சைத் தோட்டம் ''மகா செழிப்பான'' மேட்டில் அமைந்திருந்ததாம் (வச 1). அது நன்கு பண்படுத்தப்பட்டு வேலியடைக்கப்பட்டிருந் தது. நமது ஆத்ம நேசர் அதில் ''நற்குலத் திராட்சைச் செடிகள்'' நட்டிருந்தார் (வச 2). காய்க்கும் காலம் வரும்போது தித்திப்பான பழங்கள் கிடைக்கும் என்று அவர் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். கிடைத்ததோ கசப்பான பழங்கள்தான்! தெரிந்தெடுக்கப்பட்ட உயர் ரகச் செடியை நட்டுப் பராமரித்தவருக்கு என்னே ஏமாற்றம்! அப் பொழுதுதான் அவர் புலம்பி இக்கேள்வியைக் கேட்டார் (வச 4).

தீர்க்கன் ஏசாயாவின் இப்பாடல் நமக்கு நிறையச் சத்தியங்களை யும் படிப்பினைகளையும் தருகிறது. இதே கருத்தினை ஆண்டவரா கிய இயேசு யோவான் 15ஆம் அத்தியாயத்தில் வெளிப்படுத்துகிறார். தமது பிதாவைத் தோட்டக்காரராகவும், தம்மை மெய்யான திராட்சைச் செடியாகவும், அவரது மக்களாகிய நம்மைக் கொடிகளாகவும் உருவ கப்படுத்தியுள்ளார் (வச 1,5அ). கனி தருவது ஒருபுறம் இருக்கட்டும்; ஆண்டவரது தோட்டத்தில் நாம் நடப்படும் சிலாக்கியமும் பாக்கிய மும் நமக்குக் கிடைத்தது விந்தையிலும் விந்தை! இது அவரது கிருபையினாலேயே என்பதை அழுத்திக்கூற ஆண்டவர் என்ன சொல்லுகிறார் பாருங்கள்: ''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ள வில்லை; நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்'' (வச 16). ''நான்

உங்களைத் தெரிந்துகொண்டேன்'' என்று மட்டும் சொல்லியிருக் கலாம்; ஆனால் அதற்குமுன் அவர் சொல்லுவதுதான் முக்கியம்: ''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை!'' ஒரு நாற்று எந்தத் தோட்டத்தில் நடப்படவேண்டுமென்று விரும்பித் தானாக அங்கு செல்ல முடியுமா? *கிருபையிதே, தேவ கிருபையிதே!* தனிப்பட்ட வரது இரட்சிப்பைக் குறித்துப் பேசுகையில் ''இது உங்களால் உண்டானதல்ல'' என்று அப்போஸ்தலன் பவுல் வலியுறுத்துவது இதனாலேயே (எபே 2:8). கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத் தத்தினால் விலை கொடுத்து வாங்கப்பட்ட நாற்று நாம் (அப் 20:28). அழிவில்லாத திருவசனமாகிய விதையிலிருந்தே நாம் முளைத்தோம் (1 பேது 1:23). இவ்வுண்மை என்றுமே, எப்பொழுதுமே, நமது மன தைவிட்டு அகலக்கூடாது.

''கசப்பான பழங்கள்'' என்பது எதனைக் குறிப்பிடுகின்றன? (ஏசா 5:4). இதற்கான பதில் அதே அத்தியாயத்தில் உள்ளது. ***ஏசாயா 5ஆம் அத்தியாயத்தை*** முழுவதும் வாசியுங்கள். இவ்வத்தியாயத்தில் ஆறு முறை தீர்க்கன் ஏசாயா ''ஐயோ'' என்கிறார். ஒவ்வொன்றும் கனி யின்மைக்கு அல்லது கனி கசப்பாயிருந்ததற்குக் காரணம் என எடுத்துக்கொள்ளலாம் —

**(1) வச 8,** ''தாங்கள் மட்டும் நாட்டின் நடுவில் குடியிருக்கும்படி, பிறர்க்கு இடமில்லாது போகும்வரை, வீட்டோடு வீட்டைச் சேர்த்து, வயலோடு வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ***ஐயோ!''*** இங்கு பொரு ளாசை மற்றும் திருப்தியின்மையின் மீதே ''ஐயோ'' கூறப்படுகிறது. பொருளாசை என்பது பொதுவாக ஒரு நபரைத் தன்னலவாதியாய் மாற்றிவிடும். இது ஓர் இரட்டைப் பாவம்: ''எனக்கு இருக்கவேண் டும்; அடுத்தவனுக்கு இருக்கக்கூடாது!'' இதுதான் செல்வப் பெருக் கினால் ஏற்படும் ''மயக்கம்'' என்றழைக்கிறார் இயேசு (மத் 13:22). விதைக்கிறவன் உவமையில் முள் நிலத்தில் விதைக்கப்பட்டவனின் நிலை இது எனச் சுட்டிக்காட்டுகிறார். இந்த மயக்கத்தினால் அவன் கனியற்றுப்போகிறான். செல்வம் ஒரு மனிதனுக்கு முள்ளாகிவிடு வது எத்தனைப் பரிதாபம்! முதிர்ந்த ரோமன் கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவர் சொன்னது: ''சபையார் எத்தனையோ பாவங்களை என்னிடம்



அறிக்கை செய்துள்ளனர்; ஆனால் பொருளாசை என்பதை எவரும் அறிக்கையிட்டதாக எனக்கு நினைவில்லை!'' காலா காலமாய்ப் பிசாசு பெற்றுவரும் அமோக வெற்றிகளில் இது ஒன்று. நஞ்சை அமிழ்தமென நம்மைக் குடிக்கவைத்துவிட்டான்.

''முட்கள்'' என்று இயேசு குறிப்பிட்டதை ''அம்புகள்'' என்று பவுல் அழைக்கிறார் (1 தீமோ 6:10). பண ஆசையே தீங்கு அனைத்திற்கும் ''வேர்'' என்று சொல்லுகிறார். பண ஆசை என்னும் அம்பினால் அல் லது ஈட்டியினால் மனிதன் தன்னையே குத்திக்கொள்ளுகிறானாம்! பிரியமானவர்களே, பணக்காரராகவேண்டுமென்று ஒருபோதும் விரும்பாதீர்கள். போதுமென்ற மனதுடனிருங்கள்; அதுதான் கொள்ளை லாபம்! (வச 6). ஒருவேளை பணம் குவிந்துவிட்டால் உங்கள் மனதை அதற்குப் பறிகொடுத்துவிடாதீர்கள். செல்வம் படைத்திருந்த தாவீது இவ்விதம்தான் தன்னைக் காத்துக்கொண்டார். அவர் தரும் அறிவுரை: ''செல்வம் பெருகினால் இருதயத்தை அதன் மீது வைக்காதிருங்கள்'' (சங் 62:10ஆ). செல்வம் பெருகப் பெருக தானதர்மம் பெருகட்டும் (1 தீமோ 6:17-19).

**(2) வச 11,** ''சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படித் தரித்திருந்து, இருட்டிப்போகும்வரை குடித்துக்கொண்டேயிருப்போருக்கு ***ஐயோ!''*** அடுத்த வசனத்தில் ''தம்புரு, மேளம், விருந்து'' போன்றவையெல்லாம் குறிப்பிடப்பட் டிருக்கின்றன (வச 12). ஆம், துராசைகள் நம்மைத் தேவனுக்குத் தித்திப்பான கனிகள் கொடுக்க விடாது. இதனை ரோமர் 7:4,5இல் உருவகப்படுத்திப் பவுல் விளக்குகிறார். ஊனியல்பில் நாம் கட்டப் பட்டிருந்த காலத்தில் துராசைகள் நமது உடலுறுப்புகளை ஆட் கொண்டு சாவுக்கேதுவான கனிகளையே விளைவித்தன. அது நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிருந்த காலம். இப்பொழுதோ நாம் கிறிஸ்து எனும் வெறொருவருடையவர்களாகிவிட்டோம். இப் பொழுது தேவனுக்கென்று நல்ல கனி கொடுக்க முடியும். பழைய கணவன் இறந்து புதிய கணவருக்கு வாழ்க்கைப்படுவதால் பிறக்கும் பிள்ளைகளையே இங்கு தேவனுக்கேற்கும் கனிகள் என்று அப் போஸ்தலன் விளக்குகிறார்! இதுதான் அன்றைய ''மாம்சத்தின்

கிரியைகளுக்கும்'' இன்றைய ''ஆவியின் கனிகளுக்கும்'' உள்ள வேறுபாடு. சுருக்கமாய்ச் சொன்னால், பழைய பாவ வாழ்க்கையில் நீடித்திருந்தால் நாம் கனியற்றவர்களாகிவிடுவோம்; நமது வாழ்க் கையின் விளைவுகள் கசப்பான கனிகளாகவே இருக்கும்!

**(3) வச 18,19,** ''மாயையின் கயிறுகளால் அக்கிரமத்தையும், வண்டில் வடங்களால் பாவத்தையும் இழுத்துக்கொண்டுவந்து, நாம் பார்க்கும்படி அவர் தீவிரித்துத் தமது கிரியையைச் சீக்கிரமாய் நடப் பிக்கட்டும் என்றும், இஸ்ரவேலின் பரிசுத்தருடைய ஆலோசனையை நாம் அறியும்படி அது சமீபித்து வரட்டும் என்றும் சொல்லுகிறவர் களுக்கு ***ஐயோ!''*** இங்கு கண்டிக்கப்படுவது ''கர்த்தருக்குப் பரிசுத்தம்'' என்பதை அசட்டைபண்ணி, அதற்கெதிராய்த் துணிச் சலுடன் சவால் விடுவதாகும். இவ்வித மனப்பான்மையுள்ளோர் மூட்டைகளை வண்டியில் ஏற்றுவதுபோல் பாவத்தின்மேல் பாவத் தைக் கூட்டிக்கொண்டே போவார்கள். பாறை நிலம் போன்ற இதயக் கடினம் எவ்விதம் கனி கொடுக்கத் தடை செய்யும் என்று விதைக் கிறவன் உவமையில் இயேசு சொன்னாரல்லவா? ''பரிசுத்த'' ஆவி யானவரை எதிர்த்துக்கொண்டேயிருந்தால் அவர் துக்கப்படுவார்; அவரைத் துக்கப்படுத்திக்கொண்டேயிருந்தால் அவர் அணைத்துப் போடப்படுவார்; அதாவது அமைதியாகிவிடுவார். இந்நிலையில் மனச்சாட்சி மழுங்கும்; ஆவியானவரின் சத்தம் அடங்கும்; தண் ணீரைப்போல் பாவத்தைப் பருகிக்கொண்டேயிருப்போம். பிரிய மானவரே, இந்நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகள் ஆனால்தான் ''பரிசுத்தம்'' எனும் கனி நமது வாழ்வில் விளையும் (ரோ 6:22).

**(4) வச 20,** ''தீயதை நல்லது என்றும், நல்லதைத் தீயது என்று சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பு என்றும், தித்திப்பைக் கசப்பு என்றும் சாதிக்கிறவர்களுக்கு ***ஐயோ!''*** சமரசம் (compromise) என்பதை விளக்க எத்தனை உவமானங்கள்! நமது வாழ்விலுள்ள சாம்பல் நிறப் பகுதிகளை அகற்றிவிட இங்கு நமக்கோர் அழைப்பு! கேள்விக்குரிய



காரியங்கள் எவற்றையாவது நாம் செய்துகொண்டிருக்கிறோமா? இவற்றைக் ''கனியற்ற'' இருட்டுச் செயல்கள் என்று திருமறை அழைக்கிறது (எபே 5:11). இதற்கு மாறாக, ''ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்'' (வச 9). கேள்விக்குரியக் காரியங்களை, இவை ''கர்த்தருக்குப் பிரியமானவை தானா'' என்று நாம் சோதித்துப் பார்க்கவேண்டும்'' (வச 10). இருளுக் கும் ஒளிக்கும் சம்பந்தமேது? இருட்டுச் செயல்களிலிருந்து வெளி நடப்புச் செய்யுங்கள் (2 கொரி 6:14-18). நமது உடலாகிய தேவனது ஆலயத்தில் அசுத்தமானது எதற்கும் இடம் தரக்கூடாது. சமரசம் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான், அசுத்தமானதைத் ''தொடாதிருங்கள்'' என்று கட்டளை பெற்றுள்ளோம்!

**(5) வச 21,** ''தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத் திற்குப் புத்திமான்களுமாய் இருப்பவர்களுக்கு ***ஐயோ!''*** இவை சுய நீதிக்காரருக்கு எதிரான வார்த்தைகள். பாவங்களிலெல்லாம் பெரிய பாவம் சுயநீதியே. எனவேதான் அப்போஸ்தலன் பவுல் அதனை ''நஷ்டம்'' என்றும் ''குப்பை'' என்றும் அழைக்கிறார் (பிலி 3:7,11). தீர்க்கன் ஏசாயா அதனைத் ''தீட்டு'' என்றும் ''அழுக்கான கந்தை'' என்றும் அருவருக்கிறார் (ஏசா 64:6). சுயநீதியை நிலைநாட்ட விரும்பியதாலேயே இஸ்ரவேலராகிய இயற்கையான கிளைகள் முறித்துப்போடப்பட்டன! (ரோ 11:17-21). இஸ்ரவேலரல்லாத புற வினத்தாராகிய நாமோ காட்டுமரத்துக் கிளைகள் (வச 24). நமது சொந்த நீதியை நம்பாமல் கிறிஸ்துவினால் உண்டாகும் தேவ நீதியை விசுவாசித்ததால்தான் நாம் தேவனது குடும்பம் எனும் ஒலிவ மரத்தில் ஒட்டவைக்கப்பட்டிருக்கிறோம். இப்பொழுது நமக் குத் தலைக்கனம் வந்துவிடக்கூடாது (வச 20). நம்மில் நன்மை ஏது மில்லை என்ற உணர்வு ஒருபோதும் அகலக்கூடாது (ரோ 7:18). நாகர்கோவிலைச் சேர்ந்த யோ. பால்மர் அவர்களது கீர்த்தனை (141) நினைவுக்கு வருகிறது —

*உன்றன் சுயமதியே நெறி என்-று*
*உகந்து சாயாதே — அதில் நீ*
*மகிழ்ந்து மாயாதே!*

**(6) வச 22,23,** ''சாராயத்தைக் குடிக்க வீரரும், மதுவைக் கலந்து வைக்கப் பலவான்களுமாயிருந்து, கையூட்டுக்காகக் குற்றவாளியை நீதிமான் என்று தீர்த்து, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ***ஐயோ!''*** பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களில் பலர் லஞ்சத்திற்கும் அநியாயத்திற்கும் எதிராகக் குரலெழுப்பினர். அந்த வரிசையில் கடைசியானவராகிய திருமுழுக்கினன் யோவானின் மனந்திரும்புதலுக்கான அழைப்பிலும் இது இடம் பெற்றிருந்தது. மனந்திரும்புதலுக்கேற்ற ''கனிகள்'' கொடுங்கள் என்று அழைப்பு விடுத்தபோது மக்களிடம் சொல்லிய வார்த்தைகள்: ''சம்பளம் போதும், கிம்பளம் வேண்டாம்; பொய்க் குற்றச்சாட்டு வேண்டாம்'' (லூக் 3:8,13,14). அரை நிர்வாணமாய் மக்கள் திரியும்போது எவரும் ஆடைகளை அலமாரியில் நெருக்கி அடுக்குவது நியாயமா? ஒருவேளை சோற்றுக்கு வழியில்லாது பசியில் வாடும் மக்கள் கூட்டம் சுற்றியிருக்கும்போது மிஞ்சிய சோற்றையும் குழம்பையும் குளிர்சாதனப் பெட்டிக்குள் திணிப்பது நியாயமா? இதுவே யோவானின் வாதம் (வச 11).

பணப்பித்தருக்கு ஐயோ! துராசைக்காரருக்கு ஐயோ! பரிசுத்தத்தை அசட்டை செய்வோருக்கு ஐயோ! சமரசக்காரருக்கு ஐயோ! சுயநீதிக்காரருக்கு ஐயோ! ஊழல்வாதிகளுக்கு ஐயோ! கசப்பான கனிகளையே தந்த இவர்களுக்கெல்லாம் நேரிடவிருப்பது என்னவென்று முடிவாக ஏசாயா என்ன கூறுகிறார், பாருங்கள்: ''இதனால் அக்கினி ஜுவாலை வைக்கோலைப் பொசுக்குவது போலவும், செத்தையானது நெருப்புக்கு இரையாக எரிந்துபோவது போலவும், அவர்கள் வேர் வாடி, அவர்கள் துளிர் தூசியைப்போல் பறந்துபோகும்'' (ஏசா 5:24). கனி கொடுப்பதற்குப் பதிலாக கருகிப்போவார்கள். மற்றவர்கள்மீது ''ஐயோ, ஐயோ'' என்று அள்ளி வீசிய தீர்க்கன் ஏசாயா அடுத்த அத்தியாயத்திலேயே ''எனக்கு ஐயோ'' என்று அலறுகிறார். மனந்திரும்பாதோர்மீது ஐந்தாம் அத்தியாயத்தில் ''பட்சிக்கும் அக்கினி'' விழுகிறது; மனந்திரும்பிய தீர்க்கன்மீது ஆறாம் அத்தியாயத்தில் ''பரிசுத்தமாக்கும் அக்கினி'' இறங்குகிறது (6:6,7). தெரிந்தெடுப்பு நமதே!



# கேள்வி 24

***''பரிசுத்தவான்கள் உலகையும் தேவதூதரையும் நியாயந்தீர்க்கவிருக்க, அற்ப வழக்குகளையும் இந்த வாழ்வுக்குரியவைகளையும் தீர்க்க அவர்கள் தகுதியற்றவர்களா?''***

**(1 கொரிந்தியர் 6:2,3)**

சவால் மிகுந்த திருவசனப் பகுதி இது. சவால் விடும்போது கேள்விகளை வாசகருக்குமுன் வரிசைப்படுத்துவது அப்போஸ்தலன் பவுலின் வழக்கம். திருச்சபையில் உருவாகக்கூடிய வழக்குகளைக் குறித்த இவ்வசனப் பகுதியில் (வச 1-7) அப்போஸ்தலன் ஏழு கேள்விகளை முன்வைக்கிறார். புறவினத்தாருக்குமுன் சாட்சியாய் நடக்காத யூதருக்குமுன் ஆறு கேள்விகள் வைக்கிறார் (ரோ 2:21-26). இறைமக்களை எவரும் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாக்க முடியாது என்பதனை வலிறுத்த ஆறு கேள்விகள் கேட்கிறார் (8:31-36). மிஷனரிச் சவால் கொடுக்கையில் நான்கு கேள்விகள் கேட்கிறார் (10:14,15). அப்போஸ்தலரது உரிமை மற்றும் அதிகாரத்தை நியாயப்படுத்தும்போது பதினேழு கேள்விகளை அடுக்குகிறார் (1 கொரி 9:1-13). ஆன்மீக வரங்கள் குறித்து விளக்கும்போது ஏழு கேள்விகள் (12:29,30). அவிசுவாசிகளோடுள்ள ஐக்கியத்துக்கெதிராய் ஐந்து கேள்விகள் (2 கொரி 6:14-16). இப்படிப் பல.

1 கொரிந்தியர் 6:2,3இலிருந்து நமது தியானத்திற்கு நாம் எடுத்துக்கொண்ட கேள்வி இன்றையச் சபையின் நடைமுறை வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது. நீதிமன்றங்களில் வழக்குகள் இல்லாத சபைப்பிரிவுகளும் உள்ளூர்ச் சபைகளும் அபூர்வமாகிவிட்டன. திருச்சபையிடமிருந்து உலகு கற்றுக்கொள்வதற்குப் பதிலாக உலகின் வழிகளையே திருச்சபை பின்பற்ற ஆரம்பித்துவிட்டது. திருச்சபையாகிய தமது ''சிநேகிதரின் வீட்டிலேயே'' இயேசு காயப்பட்டுள்ளார் (சக 13:6). திருச்சபை இனி இப்படித்தான்; இதை

யெல்லாம் மாற்ற முடியாது என்று நாம் சும்மா இருந்துவிட முடியாது. ‘‘கறைதிரை முதலானவை ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழை யற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்ளக் கிறிஸ்து தம்மைத்தாமே அதற்காய் ஒப்புக்கொடுத்தாரே!’’ (எபே 5:27). இதுதானே தேவனது தீர்மானம், அவரது தரிசனம்? இவ்விதம் சபையைக் கழுவிச் சுத்தமாக்குவதற்குக் கிறிஸ்துவானவர் பயன்படுத்தும் சோப்பு ‘‘திருவசனம்தானே?’’ (வச 26). அப்படியா னால், திருச்சபையின் அவல நிலை குறித்து நாம் இளக்கரித்துப் போகாமல் திருவசனத்தைத் தியானிக்க வேண்டும், திருவசனத்தை வியாக்கியானிக்க வேண்டும். இவ்விதப் பின்னணியுடன் நமது தியானத்தைத் தொடர்வோம்.

எகிப்தைவிட்டு இஸ்ரவேலர் புறப்பட்டு வந்தபின்னர் தேவன் அவர்களுக்கு மோசே மூலம் பத்துக் ‘‘கட்டளைகள்’’ (Command-ments) தந்தார். அதைக் குறித்த விபரங்களை யாத்திராகமம் 20ஆம் அத்தியாயம் முழுவதும் வாசிக்கிறோம். இவ்வத்தியாயம் முடிந்த வுடன், 21ஆம் அத்தியாயம் எப்படித் துவங்குகிறது பாருங்கள்: ‘‘மேலும், நீ அவர்களுக்கு அறிவிக்கவேண்டிய பிரமாணங்களாவன’’ (வச 1). ‘‘பிரமாணங்கள்’’ என்றால் ‘‘நீதிச் சட்டங்கள்’’ (Judgments) என்று பொருள். தமது மக்கள் தமக்கு முன்பாகவும் பிறர்க்கு முன்பா கவும் செம்மையாகவும் நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ளவேண்டும் என்ற தேவனது நோக்கு ‘‘கட்டளைகள்’’ மற்றும் ‘‘நீதிச் சட்டங்கள்’’ மூலம் வெளியாயிற்று. எனவேதான் பின்னர் ஒரு முறை மக்களைப் பார்த்துச் சவாலுடன் மோசே கேட்டது: உபா 4:8, ‘‘இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒப்பான இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கும் வேறே பெரிய மக்களினம் எது?’’ ‘‘கட்டளைகள்’’ அத்துடன் ‘‘நியாயங்கள்!’’ எனவேதான் நீதியரசர்கள் பைபிள்மீது கைவைத்துப் பதவிப் பிரமாணம் செய்யும் பழக்கம் உல கெங்கிலும் உண்டு. திருவிவிலியத்திற்கு மிஞ்சின சட்டப் புத்தகம் உலகில் இல்லை. அப்படியானால், நீதி நியாயம் என்று வரும்போது இறைமக்களாகிய நாம்தானே உலகிற்கு முன்மாதிரிகளாய்த் திகழ வேண்டும்?

திருவிவிலியத்தில் மிக நீண்ட அத்தியாயம் 119ஆம் சங்கீதமே. 176 வசனங்கள் கொண்ட இச்சங்கீதத்தில் ‘‘நீதி நியாயங்கள், நியாயத்தீர்ப்புகள்’’ போன்ற பதங்கள் 15 தடவை வருகின்றன (வச 7,13,20 ...). இதன் அடிப்படையில் சங்கீதக்காரன் ஏறெடுக்கும் விண்ணப்பம் அர்த்தமுள்ளது: ‘‘கர்த்தாவே, உமது வசனத்தின்படி உமது அடியேனை நன்றாய் நடத்தினீர். உத்தம நிதானிப்பையும் (good judgment) அறிவையும் எனக்குப் போதித்தருளும்; உமது கற்பனைகள்மீது (commandments) விசுவாசமாயிருக்கிறேன்’’ (வச 65,66). சகோதர சகோதரிகளுக்குள் சச்சரவு வருவது அபூர்வமல்ல. ஆனால் அவை சரி செய்யப்படவேண்டுமானால் திருவிவிலியத்தில் தேவன் கொடுத்துள்ள நீதி நியாயங்களே நமக்கு அடிப்படையாய் உதவும். அவற்றிற்கு மிஞ்சியது எதுவுமில்லை. ‘‘திருமறை நமக்குப் போதுமானது’’ (Sufficiency of the Scripture) என்று நாம் முழங்குவது இதனாலேயே.

நமது தேவன் நீதியுள்ளவர்; அவர் நீதியுள்ள நியாயாதிபதி. இக் கருத்து இழைபோல் திருவிவிலியம் எங்கும் ஓடுகிறது. வேறு வார்த் தைகளில் இது ‘‘தேவன் பாரபட்சமுள்ளவரல்ல’’ என்று சொல்லப் பட்டிருக்கிறது. எனவேதான் தசமபாகம், காணிக்கை ஆகியவற்றை விட அவர் ‘‘இரக்கத்தையும் நியாயத்தையும்’’ விரும்புகிறார். இந்த வாசகம் திருமறையில் மூன்று இடங்களில் வருகிறது (ஓசி 6:6; மத் 9:13; 12:7). ‘‘பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்ப தின் கருத்து என்னவென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்’’ என்று ஆண்டவர் அறிவுறுத்தினார் (மத் 9:13). நீதியையும் இரக்கத்தையும் விட்டுவிட்டுத் தசமபாகம் செலுத்துவதிலேயே ஆர்வம் காட்டிய பரிசேயரை ஆண்டவர் ‘‘குருடரான வழிகாட்டிகளே’’ என்று கடிந்து கொண்டார். தேவன் தந்துள்ள நீதி நியாயங்களைக் கவனியாது, பிறரிடம் கனிவிரக்கம் காட்டாது, ஆனால் பக்திப்பூனைகளாய் நாம் வாழ்ந்தால், அது கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்கும் கதை தான் (23:23,24).

நீதி நியாயங்களின் அத்தியாவசியத்தை அறிந்ததாலேயே இஸ்ர வேலர் கானானுக்குள் நுழைந்ததும் தேவன் அவர்களுக்காய் ‘‘நியாயாதிபதிகளை’’ (Judges) எழுப்பினார். இந்த நீதியரசர்கள் இறைச்சித்தத்தின்படியே நடந்து, இறைச்சட்டங்களின்படியே செயல்படவேண்டும் என்பதற்காகவே தேவன் அவர்களைத் தமது

தூயாவியால் நிரப்பினார். ஒத்னியேல் மீது கர்த்தரின் ஆவி வந்தது (நியா 3:10); கிதியோன் மீது கர்த்தருடைய ஆவியானவர் இறங்கினார் ((6:34); சிம்சோனைக் கர்த்தருடைய ஆவியானவர் ஏவி நடத்தினார் (13:25). ''நியாயத்தின் ஆவி'' என்று ஆவியானவர் அழைக்கப்படுகிறார் (ஏசா 4:3). கர்த்தருடைய ஆவி அருளும் ''நியாயத்தினால்'' தீர்க்கன் மீகா நிரப்பப்பட்டிருந்தார் (மீகா 3:8). பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிற நம்மிடம் நீதி நியாயம் எவ்வளவாய்த் தழைத்தோங்கவேண்டும்! பெந்தெகொஸ்தே விசுவாசிகள் ஒருவருக்கொருவர் எதிராய் வழக்கு தொடுக்கலாமா?

திருச்சபையில் உறுப்பினர்களுக்கு இடையே ஏற்படும் மனத்தாங்கல்கள், வாக்குவாதங்கள், கருத்து வேறுபாடுகள், பாதிப்புகள் போன்றவற்றையெல்லாம் எப்படித் தீர்க்கவேண்டுமென்று திருமறையில் நமக்குத் தெளிவான நடைமுறை ஆலோசனைகள் உண்டு. அவற்றில் மூன்றினை இங்குச் சுருக்கமாய்ப் பார்ப்போம் —

(1) நேருக்குநேர் ஒருவருக்கொருவர் பேசிக் காரியங்களைச் சரிசெய்துகொள்ளுதலுக்கு நிகரில்லை. இதனைத் தனிப்பட்ட முறையில் ஒப்புரவாதல் (Personal reconciliation) எனலாம். இவ்விதமான ஒப்புரவாதல் இரு காரணங்களுக்காய்த் தேவைப்படலாம். ஒன்று தவறிழைத்தது நீங்கள்; அடுத்தது தவறிழைக்கப்பட்டவர் நீங்கள் (Offender or the offended). இவையிரண்டு நிலைகளிலும் ஒப்புரவாவதற்கு ஆண்டவர் கொடுத்துள்ள உபதேசம் ஒன்றே. தவறிழைத்தவர் நீங்களானால், ''நீ பலிபீடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறைவு உண்டு என்று அங்கே நினைவு வந்தால், அங்கேயே பலிபீடத்திற்குமுன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முதலாவது உன் சகோதரனோடு ஒப்புரவாகி, பின்னர் வந்து உன் காணிக்கையைச் செலுத்து'' (மத் 5:23,24). தவறிழைக்கப்பட்டவர் நீங்களானால், ''உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றம் செய்தால், அவனிடம் போய், நீயும் அவனும் தனித்திருக்கும்போது, அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்கு இசைந்தால் உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் இணங்காவிடில் ...'' (18:15,16). இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால், குற்றம்



யார் மீதுள்ளது என்பது காரியமல்ல. தேவனிடம் இன்னும் நெருங்கிச் சேர விரும்புபவரே ஒப்புரவாகுதலுக்கு முதல்படி எடுத்து வைக்க வேண்டும். தாழ்மையும் சாந்தமும் இங்கு அத்தியாவசியம். ஒப்புரவாதல் தள்ளிப்போடப்படுமானால், குழப்பங்கள் அதிகரிக்கும் (5:25).

(2) ஒப்புரவாகுதலில் சபையினரின் உதவி மிகுந்த பயனளிக்கும். நீங்கள்தான் தவறிழைக்கப்பட்டவர் என்றிருந்தும், தவறிழைத்த அந்த நபருடன் தனித்துப் பேசியும் எவ்விதப் பயனுமில்லையேல் இரண்டு மூன்று சக விசுவாசிகளைக் கூட்டிக்கொண்டு அவரிடம் சென்று பேசலாம். அதிலும் பயனில்லையெனில் சபை மூப்பர்களிடம் தெரிவித்து உதவி நாடலாம். எல்லாவித முயற்சிகளும் தோல்வியடையுமானால் அவரை விட்டுவிடவேண்டியதுதான் (மத் 18:16,17). பிடி''வாதம்'' என்பதற்கு மருந்து கிடையாது! ''கூடுமானால்'' உங்களால் முடிந்தவரை எல்லா மனிதரோடும் சமாதானமாயிருங்கள் என்பதுதான் வேதப் போதனை (ரோ 12:18).

அப்போஸ்தலன் பவுலின் கேள்விகளை இங்கு நினைவுபடுத்துவோம்: ''நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை? ஏன் இழப்பைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை?'' (1 கொரி 6:7). நாம் எவருக்குமே விரோதமாய் எதையுமே செய்யவில்லை என்று மார்தட்ட முடியுமா? என்னால் முடியாது! பவுல் இதனைச் சுட்டிக்காட்டுகிறார்: ''நீங்களே அநியாயம் செய்கிறீர்கள்; இழப்புண்டாக்குகிறீர்கள்; சகோதரர்க்கும் அப்படிச் செய்கிறீர்களே'' (வச 8). இயேசுவுக்கு நீதி நியாயம் மறுக்கப்பட்டதே! அவர் செய்ததென்ன? அவர் எதிர்ச்செயல் புரியவில்லை; மாறாக, ''நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்'' (1 பேது 2:23). நாம் பின்பற்றவேண்டிய ''அடிச்சுவடுகள்'' இவைதானே? (வச 21). பிரியமானவர்களே, ஒன்றை மறந்துவிடாதிருங்கள்: ''ஏமாறுவது பாவம் அல்ல; ஏமாற்றுவதுதான் பாவம்!''

(3) ஏதாவதொரு காரியத்தைச் சரிசெய்வதற்காய் நீங்கள் எடுக்கும் எந்த முயற்சியும் பயன் தராவிடில், அந்தக் காரியத்தை அப்படியே தேவனிடம் விட்டுவிடுங்கள். அநீதியுள்ள ஒரு நீதிபதியைக் குறித்து நமதாண்டவர் ஓர் உவமை சொன்னார் (லூக் 18:1-8). நியாயம் செய்ய வேண்டி அவரிடம் அடிக்கடி சென்ற அந்த விதவையின்

தொந்தரவு தாங்க முடியாமல் அவர் அவளுக்கு நியாயம் செய்தாராம். அநீதியுள்ள நீதிபதியே உதவி செய்திருக்கும்போது, ''தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் காரியத்தில் நீடிய பொறுமையுள்ளவராய் இருந்து அவர்களுக்கு நியாயம் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரம் அவர்களுக்கு நியாயம் செய்வார்'' என்றார் இயேசு (வச 7,8). உடனுக் குடன் தேவன் எதையும் செய்துவிடமாட்டார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவர் ''நீடிய பொறுமையுள்ளவராயிருந்து'' செயல் படுவார். நாம்தான் ஆத்திரக்காரர்; தேவனோ யாவற்றிற்கும் ஆதி காரணரும் யாவற்றின்மீதும் ஆளுநராகவும் இருக்கிறபடியால் பதறா மல் நிதானமாகவே தமது காரியங்களை நடப்பிப்பார்.

நமது தியானத்தின் தலைப்பு வசனப்பகுதியாகிய 1 கொரிந்தியர் 6:1-7 வலியுறுத்துவது என்னவென்றால், திருச்சபையின் உள் விவ காரங்கள் அல்லது கிறிஸ்தவர்களிடையேயுள்ள வாக்குவாதங்கள் எதனையும் தெருவுக்குக் கொண்டுவரக்கூடாது, நீதிமன்றங்களுக்கு எடுத்துச்செல்லக் கூடாது. திருச்சபைக்கு வெளியிலிருப்போரை அப்போஸ்தலன் இப்பகுதியில் ''அநீதக்காரர்'' என்றும் ''அவிசுவாசி கள்'' என்றும் குறிப்பிடுகிறார் (வச 1,6). திருச்சபையினர் ஒருவரோ டொருவர் வழக்காடுவது ''எவ்விதத்திலும் குற்றம்'' என்கிறார் பவுல் (வச 7). அதாவது, நீதிமன்றத்திற்குப் போகுமுன்னரே அதைப் ''படுதோல்வி'' என்றழைக்கிறார்! திருவுபதேசம் இவ்வளவு திட்டமும் தெளிவுமாயிருக்கும்போது, ஒரு சபையின், ஐக்கியக் குழுவின், நிறு வனத்தின் அல்லது ஊழியனின் பிரச்னைகள் அல்லது குறைபாடு களை வெளியுலகிற்குமுன் பகிரங்கப்படுத்தப்படுவதை எவ்விதத் திலும் நியாயப்படுத்த முடியாது. அது கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை நாமே காட்டிக்கொடுப்பதாம். அது சிங்கத்தின் வாய்க்குள் தலை விட்ட கதைதான்! தேவனது இதயத்திற்கேற்ற தாவீதின் மனப்பான்மையே நமக்குத் தேவை. சவுலரசன் பின்வாங்கிப்போன வன்; ஆனாலும் அவனது மரணத்தைக்கூட ''பெலிஸ்தரின் குமாரத் திகள் மகிழாதபடிக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத் திகள் கும்மாளம் போடாதபடிக்கும் அதைக் காத் நகரில் அறிவியா மலும் அஸ்கலோனின் வீதிகளில் விளம்பரப்படுத்தாமலும் இருங் கள்'' என்றார் தாவீது! (2 சாமு 1:19,20). இதுவன்றோ இறை வனுக்கினிய இதயம்?



# கேள்வி 25

***''நான் வரும்வரை இவன் இருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன?''***

**(யோவான் 21:22)**

இயேசுவானவர் உயிர்த்தெழுந்த பின்னர் தமது சீடருக்கு அருளிய மூன்றாம் தரிசனத்தின்போது, சீமோன் பேதுருவைப் பார்த்து, ''நீ என்னை நேசிக்கிறாயா?'' என்று மும்முறை வினவினார் (யோ 21: 14-17). தான் இயேசுவை நேசிப்பதை அறிந்திருந்தும் தன்னிடம் மூன்று முறை இப்படிக் கேட்டுவிட்டாரே என்பது பேதுருவுக்குத் துக்கம். இதைத் தொடர்ந்து பேதுருவின் மரணத்தைக் குறித்து ஆண்டவர் சில காரியங்களை முன்னறிவித்தார். தனக்குப் பின்னால் யோவான் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்த பேதுரு, ''ஆண்டவரே, இவன் காரியம் என்ன?'' என்று கேட்டார் (வச 20,21). அப்பொழுது ஆண்டவர் கேட்ட கேள்விதான் நாம் தியானத்திற்கு எடுத்துக் கொண்டதாகும் (வச 22). யோவானைக் குறித்துப் பேதுரு விசாரித் ததின் காரணம் அவர்மீதுள்ள ''கரிசனை'' அல்ல; அவரது காரியங் களை அறியத் ''துடிப்பு.'' (Not concern but curiosity). எனவேதான் பேதுருவை ஆண்டவர் கடிந்துகொண்டார்.

பிறரது காரியங்களில் தேவையற்ற தலையீடுகளை நாம் தவிர்க்க வேண்டுமென்று அப்போஸ்தலர் அடிக்கடி தங்கள் நிருபங்களில் எழுதியுள்ளனர். ''உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், சோம்பேறிகளாய்ச் சுற்றித்திரிந்து, பிறர் காரியங்களில் தலையிடு வதாகக் கேள்விப்படுகிறோம்'' (2 தெச 3:11). தங்களது அர்ப்பணிப் பில் தவறும் விதவைகளைக் குறித்துப் பவுல் எழுதுவது: ''அவர்கள் சோம்பலுள்ளவர்களாய், வீடு வீடாய்த் திரியப் பழகுவார்கள்; சோம்ப லுள்ளவர்களாய் மட்டுமல்ல, தகாதவைகளைப் பேசி வம்பளக்கிறவர்

களாகவும், பிறர் அலுவல்களில் தலையிடுகிறவர்களாகவும் இருப்பார்கள்'' (1 தீமோ 5:13). இதே காரியத்தைப் பேதுருவும் எழுதி எச்சரிக்கிறார்: ''உங்களில் ஒருவனும் கொலைகாரனாகவோ, திருட னாகவோ, தீயவை செய்பவனாகவோ, அந்நியக் காரியங்களில் தலை யிடுகிறவனாகவோ துன்புறக்கூடாது'' (1 பேது 4:15). இத்தனை முறை திருமறையில் கண்டிக்கப்பட்டுள்ள காரியத்தில் நாம் கவலை யீனமாய் இருக்கலாமா? பிறர் காரியங்களில் அனாவசியமாய்த் தலை யிடுவோர் புரளி பேசுவோராகவும், அரட்டையடிப்போராகவும், கதை திரிப்போராகவுமே செயல்படுவர். பிறர் காரியங்களை அவர்கள் தவ றாகவே புரிந்துகொள்வர். யோவான் இறப்பதில்லை என்ற பேச்சு சகோதரர்க்குள் பரவி விட்டதாம் (யோ 21:23)! கதை எப்படித் திரும்பு கிறது, பாருங்கள்!

பேதுருவை ஆண்டவர் திருத்தும்போது ''நீ'' என்னைப் பின்பற்றி வா என்றார் (யோ 21:22). அதாவது, ''உனது'' அழைப்பிலிருந்து திசை மாறாதே! பிரியமானவர்களே, இறையரசின் விரிவாக்கத்திற்கு ஏற்பட்டுள்ள தடைகளில் ஒன்று நாம் நமது அழைப்பில் உறுதியாய் நில்லாது அங்குமிங்கும் திரும்புவதாலேயே ஏற்படுகிறது. திரு மறை இங்கு நம்மைத் தெளிவாய் அறிவுறுத்துகிறது: ''அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலையில் நிலைத்திருக்கவேண்டும்'' (1 கொரி 7:20). மூன்று வசனங்கள் கழித்து இந்த அறிவுறுத்தல் இன் னும் கூடுதல் தெளிவாக வருகிறது: அவனவன் தான் அழைக்கப் பட்ட நிலையில் ''தேவனுக்குமுன்'' நிலைத்திருக்கவேண்டும் (வச 24). உயிர்த்த கர்த்தர் பேதுருவை மேய்ப்பனாயிருக்கும்படி அழைத் தார் (யோ 21:15-17). முதலாவது ''ஆட்டுக்குட்டிகள்,'' அடுத்து ''ஆடுகள்!'' தனது நிருபத்தில் மந்தை மேய்ப்பைக் குறித்து எழுதும் போது ''இளைஞர், மூப்பர்'' ஆகிய இருதிறத்தாரையும் பேதுரு குறிப் பிடுவதைக் கவனியுங்கள் (1 பேது 5:1-5). யோவானுக்கு வந்ததோ தீர்க்கதரிசியாயிருக்கும்படியான அழைப்பு. திருமறையில் அவர் எழு திய இறுதிப் புத்தகம் முழுவதும் தீர்க்கதரிசனமே (வெளி 1:1,19).

நண்பரே, பிறரது ஊழியங்கள் எவ்வளவுதான் கவர்ச்சியாயிருந் தாலும் அவற்றின்மீது ஆசை கொள்ளாதீர்கள், அவற்றிற்கு ஆதர வாயிருங்கள். (Do not covet other ministries but compliment them!)



திருமறைப் போதகனாயிருக்கவேண்டுமென்பதே தேவன் எனக்குத் தந்த அடிப்படை அழைப்பு. எனவே கடந்த ஆண்டுகளிலெல்லாம் சுவிசேஷக் கூட்டங்களிலும் பொதுவான கன்வென்ஷன்களிலும் பிரசங்கிக்கும்படி எனக்கு வந்த எத்தனையோ அழைப்புகளை நான் ஏற்கவில்லை. திருமறைப் ''போதகர்கள்'' பிரபலமாக மாட்டார்கள்; ''சுவிசேஷக் கூட்டங்களுக்குத்தான்'' கவர்ச்சி அதிகம் இருக்கும். இங்குதான் சோதனையை மேற்கொள்ளவேண்டும்.

யாக்கோபு, யோவான் ஆகியோரது தாயார் இயேசுவிடம் வந்து விண்ணரசில் அவரது வலது இடது ஆசனங்களைத் தனது இரு மகன்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று வேண்டியதிலிருந்து இவ்விருவர் மீது அடுத்தப் பத்துப் பேருக்கும் ஏற்கனவே ''எரிச்சல்'' இருந்தது (மத் 20:20-24). எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்று வதுபோல் இப்பொழுது யோவானைப்பற்றித் தேவையற்ற பேச்சு சீடருக்குள் பரவுகிறது (யோ 21:23). இயேசுவுக்குத் தன்மீது தனிப் பாசம் என்று ஏற்கனவே யோவான் சொல்லிவந்திருப்பார் என்று எண்ணவும் இடமிருக்கிறது (13:23; 21:20). ஊழியர் மற்றும் ஊழி யங்களுக்கு நடுவில் போட்டாபோட்டி இன்று தலைவிரித்தாடுகிறது. இதனைத் தவிர்ப்பது எப்படியென்று திருமறையிலுள்ள சில எடுத் துக்காட்டுகளிலிருந்து கற்றுக்கொள்வோம் —

**(1)** ஆபிரகாமின் மேய்ப்பருக்கும் லோத்துவின் மேய்ப்பருக்கும் இடையில் வாக்குவாதம் உண்டாயிற்று. இதையறிந்த ஆபிரகாம் லோத்துவிடம் கூறிய வார்த்தைகள் பொன்னில் பொறிக்கப்பட வேண்டியவை: ''எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர்'' (ஆதி 13:7,8). வாக்குவாதம் வேண்டாம் என்பதற்கு ஆபிரகாம் முன்வைத்த ஒரே காரணம், ''நாம் சகோதரர்!'' இன்று பாஸ்டர்மாருக்கிடையே எவ் வளவு சண்டைகள், வாக்குவாதங்கள்! ஆபிரகாமின் பெருந்தன்மை யைப் பாருங்கள்: ''இந்தத் தேசம் எல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ இடது பக்கம் போனால் நான் வலது பக்கம் போகிறேன்; நீ வலது பக்கம் போனால் நான் இடது பக்கம் போகிறேன்'' (வச 9). ஆபிரகாம் கானானில் தங்கினார்; லோத்து சோதோமுக்கு நேராகக் கூடாரம் போட்டார். லோத்து சிறைப்பட்டுப் போனபோது, ''அவ

னுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்'' என்று ஆபிரகாம் நினைத்துக்கொண்டிராமல் தனது 318 சேவகரோடு சென்று லோத்துவையும் அவருடையவைகளையும் மீட்டு வந்தார் (14:14,16). ஏற்கனவே ஒரு சபை இருக்குமிடத்திலேயே ஏன் இன்னொரு சபை? ''சபை'' (Church) இல்லாத இடத்திற்கு செல்வதற்குப் பதிலாகத் தங்கள் ''சபைப்பிரிவு'' (denomination) இல்லாத இடங்களையே இச்சிக்கும் பெரிய சபைப் பிரிவுகள் இந்தியாவில் இருக்கத்தான் செய்கின்றன. இதைத் ''தரிசனம்'' (vision) என்றழைக்க ஓரளவு பைபிள் தெரிந்த எனது மனது மறுக்கிறது (ரோ 15:20,21; லூக் 4:42,43).

**(2)** கோலியாத்தைத் தாவீது கொன்ற பின்னர், வீரர்கள் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, இஸ்ரவேலின் எல்லா நகர்களிலிருந்தும் பெண்கள் ஆடல் பாடலுடன் ''சவுலைச்'' சந்திக்க வந்தனர். வெற்றியை அப்பெண்கள் கொண்டாடுகையில் ''சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்'' என்று மாறி மாறிப் பாடினர் (1 சாமு 18:6,7). இந்த வார்த்தைகள் சவுலுக்கு அறவே பிடிக்கவில்லை. அவர் மிகவும் சினமுற்று, அன்று முதல் தாவீதைப் பொறாமைக்கண்ணோடு பார்த்தார் (வச 8,9). அவர்கள் வாழ்த்துப் பாடல் பாடி வந்தது சவுலுக்காகவே! ''இவ்வளவு காலம் ஆயிரங்களை மட்டுமே கொல்ல முடிந்த உமக்கு இப்பொழுது தாவீதின் துணையுடன் பதினாயிரங்களைக் கொல்ல முடியும்'' என்பதே அவர்கள் பாடலின் கருத்து, ஆனால் தாவீதைத் தனக்குப் போட்டியாகப் பார்த்த சவுலின் கண்கள் குருடாயின. கடுங்கோபத்திற்கு இடம் கொடுத்த சவுலின் இருதயத்தில் ''அடுத்த நாளே'' பிசாசு இடம் பிடித்தான் (வச 10). கதிரவன் மறையுமுன் உங்கள் கடுப்பு மறையாவிடில் பிசாசுக்குக் கொண்டாட்டம்தான் (எபே 4:26,27). உங்களது உடன் ஊழியர் எவராவது நன்கு வளர்ந்து வருவது உங்களைப் பொறாமையினாலும் கோபத்தினாலும் நிரப்புமானால் எச்சரிக்கை! பிசாசின் கைகளில் சிக்கிக்கொள்வீர்கள்!

**(3)** தாவீதின் இராணுவத் தலைவனாகிய யோவாபிடமிருந்து நாம் கற்கவேண்டிய முக்கியமானதொரு பாடம் 2 சாமுவேல் 10:9-12இல் உண்டு. அவன் எவ்வளவுதான் தந்திரசாலியாக இருந்தாலும் இந்த



இடத்தில் அவன் நடந்துகொண்ட விதம் மெச்சத்தக்கது. அம்மோனியரும் சீரியரும் தாவீதுக்கு எதிராக அணிவகுத்து வருகிறார்கள். யோவாப் தனது ''சகோதரனாகிய'' அபிசாயிடம் கூறியது: ''சீரியரது கை ஓங்கினால் நீ எனக்கு உதவவேண்டும்; அம்மோனியரின் கை ஓங்கினால் நான் உனக்கு உதவ வருவேன். தைரியமாயிரு; நமது மக்களுக்காகவும் நமது நகர்களுக்காகவும் நாம் வீறுகொண்டு போராடுவோம்; கர்த்தர் தமக்குப் பிரியமானதைச் செய்யட்டும்'' (வச 11,12). எனது ஊழிய நண்பரே, நம்மில் எவரும் சகலகலா வல்லவன் அல்ல. நம்மில் ஒவ்வொருவருக்கும் பலங்களும் உண்டு, பலக் குறைவுகளும் உண்டு. யோவாபையும் அபிசாயையும்போல் ஒருவருக்கொருவர் நாம் கைகொடுத்தால் இன்னும் எவ்வளவோ சாதிக்கலாமே!

**(4)** திருமுழுக்கினன் யோவானும் ஆண்டவராகிய இயேசுவும் ஒருவரோடொருவர் எவ்விதம் பாசத்துடனும் மதிப்புடனும் நடந்து கொண்டனர் என்பது நமக்குப் பெரும் சவால். யோவானைவிடப் பெரிய தீர்க்கன் எவருமில்லை என்று இயேசு வெளிப்படையாய்க் கூறினார் (லூக் 7:28). யோவானது மனநிலையோ எப்படியிருந்தது பாருங்கள்: ''இயேசு பெருகணும்; நான் சிறுகணும்'' (யோ 3:30). யோவானுடைய சீடர் சிலர் ஒரு நாள் அவரிடம் வந்து, ''ரபீ, உம்முடன் யோர்தானுக்கருகில் ஒருவர் இருந்தாரே; அவரைக் குறித்து நீரும் சாட்சி கொடுத்தீரே; இதோ, அவர் திருமுழுக்கு கொடுக்கிறார், எல்லாரும் அவரிடம் போகிறார்கள்'' என்றனர் (வச 26). இப்படி ஊழியருக்கிடையில் சிண்டு முடித்துவிடும் பரிசுத்தவான்கள் நமது சபைகளில் ஏராளம்! யோவானின் ஆன்மீகக் கண்ணோட்டம் நிறைந்த பதிலைப் பாருங்கள்: ''விண்ணகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டால் தவிர அவன் ஒன்றும் பெற்றுக்கொள்ளமாட்டான்'' (வச 27). யோவானைவிட அதிகமானோருக்கு இயேசு திருமுழுக்கு கொடுக்கிறார் என்று பரிசேயர் கேள்விப்பட்டது இயேசுவுக்குத் தெரியவந்தபோது, இது பிரச்னைக்கு வழிவகுக்கும் என்றுணர்ந்து, அவர் யூதேயாவை விட்டுக் கலிலேயாவுக்கு நகர்ந்துவிட்டார் (4:1-3). கிறிஸ்தவ நண்பரே, நாம் கிறிஸ்துவைத்தான் பின்பற்றுகிறோமா? இயேசுவும் யோவானும் எவ்வளவு பெருந்தன்மையுடன் நடந்துகொண்டனர் பாருங்கள்!

(5) இரு பெரிய அப்போஸ்தலராகிய பேதுருவையும் பவுலையும் வெவ்வேறு மக்களுக்குப் பணியாற்றும்படித் தேவன் அழைத்தார். பேதுருவை விருத்தசேதனம் பெற்ற யூதருக்கும், பவுலை விருத்த சேதனம் பெறாத புறவினத்தாருக்கும் நற்செய்தியறிவிக்கும்படி ஆண்டவர் சிறப்பாய்த் தெரிந்துகொண்டார். இது அவரவர்க்கு அருளப்பட்ட ''பலம், கையளிப்பு, கிருபை'' எனப்பட்டது (கலா 2:7-9). யூதருக்கு அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்பட்ட யாக்கோபும், பேதுருவும், யோவானும் யூதரல்லாதோருக்கு அப்போஸ்தலராக அழைக்கப்பட்ட பவுலுக்கும் பர்னபாவுக்கும் ''வலது கை'' கொடுத்து நட்புறவையும் கூட்டுறவையும் வெளிப்படுத்தினர். இவ்விதக் கலாச்சாரம் இன்று மறைந்ததேன்? அடுத்தவர்கள் செய்வதையே நாமும் செய்ய முற்படுகிறோமே! செய்யப்பட்டவையே செய்யப்படுகின்றன; செய்யப்படாதவையோ செய்யப்படாமலிருக்கின்றன. இறையரசிற்கு எவ்வளவு இழப்பு! போட்டிகள் உருவாகுவது இதனால்தானே? பிரியமானவர்களே, மற்றவர்கள் செல்லாத பணியிடங்களுக்குச் செல்வோம்; மற்றவர்கள் செய்யாத பணிகளைச் செய்வோம். ''தரித்திரர்'' நலம் பெறுவர் (வச 10). இயேசு அகமகிழ்வார். இத்தத்துவத்தை ஊழியப் பயிற்சியின் காலத்திலேயே பயிற்சியரின் நரம்பு நாளங்களுக்குள் செலுத்திவிடவேண்டும்.

(6) பவுலும் அப்பொல்லோவும் எவ்வளவு அழகாய் இணைந்து செயல்பட்டனர் பாருங்கள். பவுல் நட்ட நாற்றுகளுக்கு அப்பொல்லோ தண்ணீர் ஊற்றினார் (1 கொரி 3:6). நடுகிறவர்களை மிஷனரிகள் என்றும், நீரூற்றுகிறவர்களை மேய்ப்பர்கள் என்றும் அழைக்கலாம். நமக்குள் இவ்வித ஒருங்கிணைப்பு இல்லாததால் நாற்றுகள் வாடுகின்றன. விவசாயம் குறித்துப் பேசும்போது பணியாட்களை இரு வகுப்பினராய்ப் பிரிக்கலாம்: ஒன்று விதைப்போர்; அடுத்தது, அறுப்போர். விதைப்பின் காலத்தைவிட அறுப்பின் காலத்தில்தான் குதூகலம் மிகுதியாயிருக்கும். விதைப்போரைவிட அறுப்போருக்கே நற்செய்திப்பணியில் கைதட்டல் நிறைய கிடைக்கும். நூற்றுக்கணக்கில் ஏற்கனவே பிரசங்கங்கள் கேட்டவர்கள் ஒரு பிரபல சுவிசேஷக் கூட்டத்தில் கைதூக்கிவிடுகிறார்கள். உடனே காமிராக்கள்



எத்தனை பிளாஷ்! ''விதைக்கிறவன் ஒருவன், அறுக்கிறவன் ஒருவன்'' என்ற பழமொழியை மேற்கோள் காட்டி, இருவரும் ''ஒருமித்துச் சந்தோஷப்படவேண்டும்'' என்ற கருத்தினை ஆண்டவர் தமது சீடருக்கு வலியுறுத்தினார் (யோ 4:36,37). சுவிசேஷக் கூட்டத்தில் இத்தனை பேர் கைதூக்கிவிட்டார்கள் என மார்தட்டிப் பிரசுரிக்கும் நட்சத்திரப் பிரசங்கிமாரின் கவனத்திற்கு: ''நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன்; மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களது பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள்!'' (வச 38).



# கேள்வி 26

***''எனக்குத் தூதரது பாதுகாப்பிற்காய்
நான் என் பிதாவை வேண்டிக்கொண்டால்,
வேத வாக்கியங்கள் எப்படி நிறைவேறும்?''***

**(மத்தேயு 26:53,54)**

கெத்செமனே தோட்டத்தில் நமதாண்டவர் தமது பிதாவிடம் தமது ஆத்தும வேதனையை ஜெபத்தில் கொட்டிக்கொண்டிருக்கிறார். அவரது வியர்வையே இரத்தத் துளிகளாய் விழுந்துகொண்டிருந்த நிலை அது. அவரோடு அவரது துக்கத்தைப் பகிர்ந்துகொள்ள முடியாத அவரது சீடர் தூக்கத்திற்குப் பலியாயினர். இயேசுவுக்கு இருந்த ''துக்கம், வியாகுலம், திகில்'' ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முடியாத உடன் ஊழியர்! மும்முறை முழங்கால்படியிட்டுப் பலத்த சத்தத்தோடு பிதாவை நோக்கி ஜெபித்து எழுந்த ஆண்டவரைப் பிடிக்க ஒரு திரள் கூட்டம் பட்டயங்களோடும் தடிகளோடும் வந்தது. உடன் ஊழியனாகிய யூதாஸ் இயேசுவுக்குக் கள்ள முத்தம் கொடுத்தான். ஆயுதமணிந்திருந்த மக்கள் அவரைப் பிடித்தனர். அப்பொழுது ''இயேசுவோடு இருந்தவர்களில் ஒருவன்'' தனது பட்டயத்தால் பிரதான ஆசாரியனின் காதைத் துண்டித்தான். இந்தச் சீடன் யாரென்று மத்தேயுவோ, மாற்குவோ, லூக்காவோ சொல்லவில்லை (மத் 26:51; மாற் 14:47; லூக் 22:50). யோவான் மட்டுமே அது ''சீமோன் பேதுரு'' என்று குறிப்பிடுகிறார் (யோ 18:10). தனது பெயரைக்கூடத் தனது சுவிசேஷத்திலேயே குறிப்பிடாத யோவான் ஏன் இங்கு பேதுருவின் பெயரைக் குறிப்பாய்ச் சொல்லுகிறார் என்ற கேள்வி எனக்கு எழாமலில்லை! இச்சந்தர்ப்பத்தில்தான் ஆண்டவர் பேதுருவிடம் கேட்ட கேள்வி: ''எனக்குத் தூதரது பாதுகாப்பிற்காய் நான் என் பிதாவை வேண்டிக்கொண்டால், வேத வாக்கியங்கள் எப்படி நிறைவேறும்?'' (மத் 26:53,54).



''நான் வேண்டியிருந்தால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என் பிதா அனுப்பியிருப்பாரே'' என்றார் இயேசு (26:53). ''லேகியோன்'' (legion) என்பது தமிழ்ச் சொல் அல்ல. அது ரோமப் படையில் 6000 சேவகரைக் கொண்ட ஓர் அணியின் பெயர். பன்னிரண்டு லேகியோன் என்று ஆண்டவர் சொன்னதை, ஒவ்வொரு சீடனுக்கும் ஒரு லேகியோன் என்று வைத்துக்கொண்டால், 72000 படைவீரர் என அர்த்தப்படுத்தலாம். அதுவும் விண்ணிலிருந்து இறங்கும் படைகள்! ரோமரது சேனை முழுவதையுமே இது நசுக்கிவிட முடியும்! இங்கு நாம் கற்கவேண்டிய சத்தியம் என்னவென்றால், ''திருமறைக்கேற்பவே'' நாம் ஜெபிக்கவேண்டும். திருமறைக்கேற்ப நாம் ''ஜெபிக்க'' வேண்டுமானால், திருமறைக்கேற்ப நாம் ''வாழவும்'' வேண்டும். மண்ணுலகிற்குள் நுழையுமுன் விண்ணுலகில் தமது பிரிவுரையில் பிதாவானவரிடம் ஆண்டவர் சொன்னது: ''புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது: இதோ, உம் சித்தம் செய்ய வருகிறேன்'' (எபி 10:7). நம்மைக் குறித்தும் திருமறையில் எழுதப்பட்டிருப்பதால்தானே அது நமது உண்மை நிலையைக் காட்டும் கண்ணாடியாயிருக்கிறது? திருவசனம் எந்த அளவு நமது வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகிறதோ அந்த அளவுதான் நமது ஜெபங்கள் திருமறைக்கு ஏற்ப அமையும்.

திருமறையில் எழுதப்பட்டதின் அடிப்படையிலேயே தேவனுக்கு முன் ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு நேர்த்தியான இரு எடுத்துக்காட்டுகள், ஒன்று பழைய ஏற்பாட்டிலும், அடுத்தது புதியதிலும் உண்டு. பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டுச் சென்றிருந்த ***தானியேலை*** தேவனுடைய நகரமாகிய எருசலேமைக் குறித்த நினைவு வாட்டிக்கொண்டேயிருந்தது. அவரது கரங்களில் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் இருந்தது அவருக்குப் பேராசீர்வாதம். அவர் எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகங்களை வாசித்துக்கொண்டிருந்தபோது எருசலேமின் பாழ்நிலை எழுபது ஆண்டுகள் நீடிக்கும் என்பது தெரிய வந்தது (தானி 9:2). உடனே அவர் நோன்பு மேற்கொண்டு சாக்கு உடையணிந்து சாம்பலில் அமர்ந்து தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேடுவதற்குத் தனது கவனத்தைத் திருப்பினார் (வச 3). பதினாறு வசனங்களில் அடங்கியுள்ள அவரது பாவ அறிக்கையுடன் கூடிய வேண்டலில் எவ்வளவு

திருவசனச் செறிவு இருக்கிறது பாருங்கள் (வச 4-19). அவர் ஜெபித்து முடித்தபின் அல்ல, ''ஜெபித்துக்கொண்டிருக்கும்போதே'' காபிரியேல் தூதன் மூலம் விண்ணிலிருந்து வெளிப்பாட்டுடன் கூடிய பதில் அவருக்கு வந்தது (வச 21-27). ஆம், தமது வசனத்தின் அடிப்படையிலேயே ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் தேவனுக்கு அலாதிப் பிரியம். ஆனால் வேதத்தை ஒதுக்கி வைத்துவிட்டுச் செய்யப்படும் ஜெபம் அவருக்கு அருவருப்பு (நீதி 28:9).

அடுத்த எடுத்துக்காட்டை ***ஆதிச்சபை*** ஏறெடுத்த ஜெபத்தில் காண்கிறோம். இயேசுவின் பெயரையே மக்கள்முன் உச்சரிக்கக் கூடாது என்று எருசலேமின் ஆலோசனைச் சங்கத்தார் பேதுருவையும் யோவானையும் கண்டிப்பாய் எச்சரித்தனர். கண்டவற்றையும் கேட்டவற்றையும் பேசாமலிருக்க முடியாது என்று இவ்விரு சீடரும் அவர்களுக்குப் பதில் கூறிவிட்டு, நடந்தவற்றையெல்லாம் தங்கள் உடனாளிகளுக்கு விவரித்துச் சொன்னார்கள். உடனே அவர்கள் ஒருமனதாய்ச் சத்தத்தை உயர்த்தி தேவனை நோக்கிக் கதறினார்கள் (அப் 4:15-30). 24ஆம் வசனம் முதல் 30ஆம் வசனம் வரையிலுமுள்ள அவர்களது ஜெபத்தை வாசித்துப் பாருங்கள். அவர்கள் ஆதியாகமம் முதலாம் அத்தியாயத்தில் துவங்கி, சங்கீதப் புத்தகத்தின் இரண்டாம் அத்தியாயம் வழியாய்ப் பயணித்து ஜெபித்தார்கள்! திருவசனத்தின் அடிப்படையிலான இவ்வித ஜெபங்கள்தான் தேவனுக்கு அதிகம் பிடிக்கும். சீடர்கள் ஜெபம்பண்ணி முடித்தவுடன், விண்ணையும் மண்ணையும் படைத்தவர் அவர்கள் கூடியிருந்த இடத்தை அசைத்து மாறாத தமது வல்லமையை வெளிப்படுத்தினார் (வச 31; ஆதி 1:1). ஏற்கனவே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்த அவர்களை இன்னொரு முறை நிரப்பினார் (அப் 2:4; 4:31). ஆம், ''அப்பா, நீங்க சொன்னீங்களே'' என்று பிள்ளை கேட்டுவிட்டால் எந்தத் தந்தை சும்மாயிருப்பார்? திருவசன நிறைவு எவ்வளவாய் ஜெபத்தை வளமாக்குகிறதென்பதை ஆண்டவர் உறுதிப்படுத்தினார்: யோ 15:7, ''நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் வேண்டுவது எதுவோ அது உங்களுக்கு அருளப்படும்.'' நீங்கள் ஆண்டவரைக் கட்டிப்பிடியுங்கள்; அவரது வசனம் உங்களைக் கட்டிப்பிடிக்கட்டும்!



இன்று நமக்கு உபவாச ஜெபக்கூட்டங்கள் ஏராளம்; திருவசனத் தியானக் கூட்டங்களோ அபூர்வம். இந்தியாவில், அதிலும் குறிப்பாக தமிழகத்தில், துர்வுபதேசங்கள் தலைவிரித்தாடுவதற்கு முக்கிய காரணம் இதுவே. ஜெபமும் திருவசனத் தியானமும் சமநிலைப்படுத்தப்பட்டால்தான் அந்நிய அக்கினி உள்ளே வருவதைத் தடுக்க முடியும். தேவனுடைய ''வார்த்தையின்படி'' எலியா செயல்பட்டதால்தான் வானாக்கினி இறங்கிற்று (1 இரா 18:36-38). எஸ்றா-நெகேமியா காலத்து எழுப்புதலுக்குக் காரணமும் இதுவே: நெகே 9:3, ''ஒவ்வொரு நாளும் பகலில் கால் பகுதியைக் கடவுளாகிய ஆண்டவரின் திருச்சட்ட நூலை வாசிப்பதிலும், மற்றொரு கால் பகுதியைத் தங்கள் பாவங்களை அறிக்கையிடுவதிலும், தங்கள் கடவுளாகிய ஆண்டவரைத் தொழுவதிலும் செலவழித்தனர்.'' நமது ஆராதனைகளில் இச்சமநிலை இழக்கப்படுவதாலேயே சரிவுகள் ஏற்பட்டுள்ளன. பாலை நிலத்தில் நமதாண்டவர் மேற்கொண்ட நாற்பது நாள் உபவாசத்தின்போது ''தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளால்'' தம்மை நிறைத்துக்கொண்டிருந்தார் (மத் 4:1-4). எனவேதான் அவர் பிசாசின் தந்திரங்களை அடையாளம் கண்டுகொண்டார். முழுப் பகல் அல்லது முழு இரவு ஜெபம் நடத்தும் ஊழியருக்கு எனது தாழ்மையான வேண்டுகோள்: ''துதியிலும், பாடலிலும், மன்றாட்டிலும் செலவழிக்கும் அதே அளவு நேரத்தைத் திடமான திருவசனப் போதனைக்கும் தியானத்திற்கும் செலவிடுங்கள். அதுவே பாதுகாப்பு.'' ''கர்த்தாவே, சொல்லும், அடியேன் கேட்கிறேன்'' என்ற வார்த்தைகளோடுதான் தீர்க்கன் சாமுவேலின் மன்றாட்டுப்பணி துவங்கியது; அவர் ஓய்வு பெற்றபோதும் சொன்ன வார்த்தைகள்: ''நன்மையும் செம்மையுமான வழியை உங்களுக்குப் போதிப்பேன்'' (1 சாமு 3:9,10,19; 12:23). ஆம், மன்றாட்டுப்பணியிலிருந்து போதகப் பணியைப் பிரிப்பது பேராபத்து.

''இயேசுவின் நாமத்தில்'' ஜெபித்துவிட்டால் எல்லாம் கிடைத்துவிடும் என்பது அரை வேக்காட்டு உபதேசம். ''இயேசுவின் நாமம்'' என்பது ஒரு மந்திரச்சொல் அல்ல. இயேசுவின் பெயரால் ஜெபம் என்றால் இயேசு எப்படி ஜெபிப்பார் என்பதே. இதனை நான்கு சுவிசேஷங்களிலுமிருந்தே நாம் கற்றுக்கொள்ள முடியும். நமக்காய்ப் பிதாவானவரிடம் இயேசு எதை ஜெபிக்க விரும்புவாரோ அதற்காய்

நாம் ஜெபிப்பதே இயேசுவின் பெயரால் ஜெபிப்பது என்பதற்குப் பொருள். அப்பொழுதுதான் அவர் நமக்காய்ப் பிதாவிடம் பரிந்துரைத்து வேண்டுதல் செய்வார். பரிசுத்த ஆவியானவரும் ''தேவனுடைய சித்தத்தின்படியே'' நமக்காய் வேண்டுதல் செய்வார். என்ன ஜெபிக்கவேண்டும், எப்படி ஜெபிக்கவேண்டும் என்று தெரியாததே ஜெபத்தில் நமது அடிப்படைப் பலவீனம் (ரோ 8:26). திருவசனத்தின்படி ஜெபிக்க நமக்கு உதவுபவர் ஆவியானவரே. ஏனெனில் திருவசனத்தின் ஆக்கியோனும் அவரே, ஆசானும் அவரே! நாம் ''வேண்டுவதற்கு'' அதிகமாக மட்டுமல்ல, நாம் ''நினைப்பதற்கும்'' மிஞ்சி நமக்குத் தேவன் செய்யும் யாவற்றிற்கும் காரணம் ஜெபத்தில் தூயாவியானவரே நமக்குத் துணையாளருமாய் இருப்பதே. இங்குதான் நவநாவுகளில் ஜெபிப்பது பேருதவியாயிருக்கும். மனதின் வரம்பைக் கடந்து ஆவியில் ஜெபிப்பதற்கு இவ்வரம் உதவுகிறது (1 கொரி 14:14,15).

பிரியமானவர்களே, சங்கீதப் புத்தகத்தை முடிந்த வேளைகளிலெல்லாம் முழங்காலில் நின்று வாசியுங்கள். இதுதான் பாவ அறிக்கைகளுக்கும், விண்ணப்பங்களுக்கும், புலம்பல்களுக்கும், துதிகளுக்கும், போற்றுதல்களுக்கும் இஸ்ரவேல் மக்கள் பயன்படுத்திய புத்தகம். இப்புத்தகத்தில் ''உண்மைகள்'' (facts) என்பவற்றைவிட ''உணர்வுகளே'' (feelings) அதிகம் இருக்கும். கிறிஸ்துவின் பாடுகளில் பெரும்பாலானவை சங்கீதப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளவற்றின் நிறைவேறுதலே. ஜெபத்தில் அலங்கார வார்த்தைகள் தேவையில்லை; ஆனால் அர்த்தமுள்ள வார்த்தைகளைப் பயன்படுத்த நாம் பழகவேண்டும். சங்கீதப் புத்தகத்தைத் திரும்பத் திரும்ப வாசிப்பது இதற்கு நமக்குதவும்.

ஒருவர் இப்படிச் சொன்னார்: ''உங்கள் ஜெபங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; தேவன் அவற்றைக் கேட்டுவிடலாம்!'' (Beware of your prayers; God may hear them!). ஜெபத்தில் நாம் கேட்காத சில காரியங்களுக்காகவும் தேவன் நம்மை மெச்சிக்கொள்ளுகிறார். இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு சாலொமோன். கர்த்தர் அவருக்கு ஓரிரவு சொப்பனத்தில் தரிசனமாகி ''நீ விரும்புவதை என்னிடம் கேள்'' என்றார் (1 இரா 3:5). அவரது மனதில் எது தலையோங்கி இருந்ததோ அதையே அவர் உடனே தேவனிடம் கேட்டார்:



''இறைமக்களைத் தலைமை தாங்கி நடத்துவதற்குத் தேவையான ஞானம்!'' (வச 6-9). சாலொமோன் இதனைக் கேட்டது ஆண்டவருக்கு உகந்ததாயிருந்தது. ''நீடிய ஆயுளையோ, செல்வத்தையோ, எதிரிகளின் அழிவையோ நீ கேளாமல், என் மக்களை நடத்துவதற்கான ஞானத்தையே கேட்டதால், நீ கேட்டதையும் தருவேன், நீ கேளாததையும் தருவேன்'' (வச 11-14). தூங்கியெழுந்த பின்னர்தான் சாலொமோனுக்கு அது சொப்பனம் என்று தெரிந்தது. இதைத்தான் சாலொமோனிலும் பெரியவரான நமதாண்டவர் நமக்குப் போதித்தார்: ''முதலாவது இறையரசையும் அதற்கு ஏற்புடையவற்றையுமே தேடுங்கள்; மற்றவையெல்லாம் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்'' (மத் 6:31-33). நமது ஜெப வாழ்வில் மாபெரும் புரட்சி ஏற்படுத்தக்கூடிய சத்தியம் இது.

தேவனிடம் நாம் கேட்கும் காரியங்களைக் குறித்துக் கவனமாயிருக்கவேண்டும். தமது மக்களுக்குத் தேவன் எத்தனையோ அற்புதங்களைச் செய்து அவர்களை ஆதரித்து வந்திருந்தும் அவர்கள் சீக்கிரமாய் அவரது செயல்களை மறந்தனர். பாலை நிலத்தில் எகிப்தின் புலால் உணவு வேண்டுமெனப் பெரு விருப்பம் கொண்டனர். அவர்கள் கேட்டதை ஆண்டவர் அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்; அவர்களது ஆத்துமாக்களிலோ தொய்வை உண்டாக்கினார் (சங் 106:13-15; எண் 11:31-34). உடலுக்கடுத்த நன்மைகளைப் பெற்று ஆன்மீக ஆசிகளை இழப்பது எவ்வளவு பரிதாபம்? இதே விதமான ஒரு தவற்றை இஸ்ரவேலர் இன்னொரு முறை செய்தனர். நியாயாதிபதிகள் மூலமாகவும் அடுத்துத் தீர்க்கதரிசியாகிய சாமுவேல் மூலமாகவும் இறையாட்சி (theocracy) நடந்துவந்தது. ஆனால் பிறவினத்தார் போலவே தங்களுக்கும் முடியாட்சி (monarchy) வேண்டுமென்று இஸ்ரவேலர் வேண்டினர் (1 சாமு 8:6,7). அவர்கள் கேட்டது அவர்களுக்குக் கிடைத்தது. ஆனால் சரித்திரத்தில் நாம் காண்பது என்னவென்றால், முதலாம் அரசன் முதல் பெரும்பாலான அரசர்களால் இஸ்ரவேலருக்குத் தலைவலிதான்.

பிரியமானவர்களே, திருவசனத்தினால் நிறைந்து திருவசனத்திற்கேற்ப ஜெபித்தால்தான் நாம் தேவனது ''பரிபூரணச் சித்தம்'' (perfect will) அறிய முடியும்; இல்லையேல் அவரது ''அனுமதிச் சித்தம்'' (permissive will) எனும் இரண்டாம் தரமானதே நமது பங்காகும். திருவசனமே திருச்சித்தம்! திருவசனமே திருமனம்!

# கேள்வி 27

***“தேவனே, இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ள முடியாதிருக்க, நான் கட்டிய இந்த ஆலயம் எப்படி உம்மைக் கொள்ளும்?”***

**(1 இராஜாக்கள் 8:27)**

கர்த்தருடைய பலிபீடத்திற்குமுன் இஸ்ரவேல் சபையார் அனைவர் முன்னிலையில் நின்று, வானத்திற்கு நேராய்த் தன் கைகளை விரித்துச் சாலொமோன் ராஜா சொன்ன வார்த்தைகள் இவை. 23ஆம் வசனம் முதல் 53ஆம் வசனம் வரையுள்ள அவரது ஆலயப் பிரதிஷ்டை ஜெபத்தில் இக்கேள்வி அடங்கியுள்ளது. அவர் முழங்காலில் நின்று மிகுந்த பயபக்தியுடன் ஏறெடுத்த ஜெபம் இது (வச 54). இந்த நீண்ட ஜெபத்தைத் தியானிப்பது நமக்குப் பெரும் பயனளிக்கும். இஸ்ரவேலரைத் தேவன் கடந்த காலங்களில் நடத்தி வந்த விதத்தை நொறுங்கிய மனதுடன் சாலொமோன் நினைவுகூருகிறார். தான் கட்டிய பிரம்மாண்டமான ஆலயம் தேவனது அதிவுன்னத மகத்துவத்திற்குமுன் எம்மாத்திரம் என்று பிரதிஷ்டை ஜெபத்தின் துவக்கத்திலேயே கூறிவிடுகிறார். வேறொருவர் இக்கேள்வியைக் கேட்டிருந்தால் அதில் பல உள்நோக்கங்கள் இருந்திருக்கலாம். ஆனால் ஆலயத்தைக் கட்டிய அரசனே தேவனுக்குமுன் இவ்விதம் கேட்பது உபதேசச் செறிவு நிறைந்ததொரு கேள்வியாகும்.

சாலொமோனின் பிரதிஷ்டை ஜெபத்தைத் தேவன் ஏற்றுக்கொண்டார். தேவன் சொன்னது: ‘‘நீ கட்டிய இந்த ஆலயத்தில் என் பெயர் என்றும் விளங்கும்படி அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் என்றும் அங்கேயிருக்கும்’’ (1 இரா 9:3). ஆம், பழைய உடன்படிக்கையின் காலத்தில் ஆசரிப்புக் கூடாரம், ஆலயம் போன்ற இடங்களைத் தேவன் தெரிந்துகொண்டு அங்கு தமது பிரசன்னத்தை வெளிப்படுத்தினார். மட்டுமல்ல, அவர்



தெரிந்துகொண்ட அவரது வாசஸ்தலத்தில்தான் பலிகளைச் செலுத்த வேண்டும்; கண்ட இடமெல்லாம் பலி செலுத்தக்கூடாது என்ற கட்டளையும் கொடுத்திருந்தார் (உபா 12:5,13). ஆனால் என்று எருசலேம் தேவாலயத்தின் தொங்குதிரை மேலிருந்து கீழாய் இரண்டாய்க் கிழிந்ததோ அன்றிலிருந்து தேவன் ஒரு குறிப்பிட்ட இடத்தையோ கட்டிடத்தையோ தாம் தங்கும் இடமாய்த் தெரிந்துகொள்வதில்லை. ஆலயத்தின் தொங்குதிரை கிழிந்ததுதான் ஆண்டவர் உயிர் விட்டதும் நடந்த முதல் நிகழ்வு (மத் 27:50,51).

புதிய ஏற்பாட்டில் முழுமையாய் வெளிப்படவிருந்த இத்திருச் சத்தியம் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களின் கண்களிலேயே தோன்றலாயிற்று: ஏசாயா 66:1,2, ‘‘ஆண்டவர் கூறுவது இதுவே: விண்ணகம் எனது அரியணை; மண்ணகம் எனது கால்மணை; அவ்வாறிருக்க எத்தகைய கோவிலை நீங்கள் எனக்காய்க் கட்டவிருக்கிறீர்கள்? எத்தகைய இடத்தில் நான் ஓய்வெடுப்பேன்? இவைகள் அனைத்தையும் எனது கைகளே உண்டாக்கின; இவை யாவும் என்னால் உருவாகின, என்கிறார் ஆண்டவர். எளியவரையும், உள்ளம் வருந்துபவரையும், என் வார்த்தைக்கு நடுங்குபவரையுமே நான் கண்ணோக்குவேன்.’’ இதை அப்படியே ஏற்றுக்கொண்டு திருச்சபையின் முதல் இரத்த சாட்சியானவர் என்ன சொல்லுகிறார் பாருங்கள்: அப் 7:47-49, ‘‘சாலொமோனோ தேவனுக்கு ஆலயம் கட்டினான்; ஆனாலும் உன்னதமானவர் கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் வாசமாயிருக்கமாட்டார். விண்ணகம் எனது அரியணை; மண்ணகம் எனது கால்மணை ...’’ மார்க்க பக்தி நிறைந்த யூதரிடம் ஸ்தேவான் இப்படிப் பேசியிருந்தால் அவர்கள் பல்லைக் கடிக்கமாட்டார்களா, என்ன? (வச 54).

இன்று மனந்திரும்பி, அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைத்து, அவரது வசனத்தின்படி நடக்கும் ஒவ்வொருவரது உள்ளிலும் தேவன் குடிகொள்கிறார். இயேசுவின் வார்த்தைகளைக் கேளுங்கள்: யோ 14:23, ‘‘ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்; அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடம் வந்து அவனுடன் குடிகொள்ளுவோம்.’’ இதயக் கதவைத் திறப்பவனின்

இதயமே இன்று இறைவன் தங்கும் இடமாகிறது (வெளி 3:20). தூயாவியால் பிறந்த, தூயாவியால் நிறைந்த ஒவ்வொருவரின் உடலும் தேவனது ஆலயம் (1 கொரி 3:16; 6:19). *''எந்தன் உள்ளம் தங்கும், இயேசு நாயகா; உந்தன் வீடாய்க் கொள்ளும், இயேசு நாயகா!''* தங்களது வழிகளையும் செயல்களையும் சீர்ப்படுத்தாமல், வெறும் கோவில் பக்தியுள்ளவர்களைத் தீர்க்கன் எரேமியா மூலம் தேவன் கடிந்துகொண்டார்: ''கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லி, பொய் வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள்'' (எரே 7:1-4). இன்றும் கிறிஸ்தவர் பலருக்கு ஆண்டவரது கட்டளைகளைவிட ஆலயக் கட்டிடங்கள்தான் முக்கியம். அவர்கள் கடவுள்பிள்ளைகள் அல்ல, கோவில்பிள்ளைகள்!

அடுத்து, ஆண்டவர் தமது பெயரால் எங்கெல்லாம் இரண்டு மூன்று பேர் கூடுகிறார்களோ அவர்கள் ''நடுவில்'' இருக்கிறார் (மத் 18:20). சபையைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது ஆண்டவர் இவ்வாக்கினைக் கொடுக்கிறார் (வச 17). தமது பிள்ளைகளாகிய உயிருள்ள கற்களால் கட்டப்பட்ட மாளிகையாகிய திருச்சபையிலேயே தூயாவியானவர் மூலம் தேவன் வாசம்பண்ணுகிறார். திருச்சபை வளர்ச்சியை அப்போஸ்தலன் பவுல் எவ்விதம் வர்ணிக்கிறார் பாருங்கள்: ''இனி நீங்கள் அந்நியரல்ல, பரதேசிகளல்ல, பரிசுத்தவான்களோடு ஒரே நகர்வாசிகள், தேவனது வீட்டார் ... இயேசு கிறிஸ்துமீது நீங்கள் ஆவியினால் தேவனது வாசஸ்தலமாய்க் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்'' (எபே 2:19-22). இதனை அப்போஸ்தலன் பேதுருவும் அழகாய் வர்ணிக்கிறார்: ''நீங்கள் கர்த்தரை ருசித்தவர்கள், புதிதாய்ப் பிறந்தவர்கள், திருவசன ஞானப்பாலைப் பருகுகிறவர்கள், உயிருள்ள கற்களாக ஆவிக்குரிய மாளிகையாக ... பரிசுத்த ஆசாரியக் கூட்டமாய்க் கட்டப்பட்டு வருகிறீர்கள்'' (1 பேது 2:1-5). இறைமக்களாகிய திருச்சபையே இன்று தேவன் தங்கும் ஆலயம்; எந்தக் கட்டிடமும் அல்ல.

தேவனானவர் இன்று எந்த இடத்தையும், கட்டிடத்தையும் புனிதப்படுத்துவதில்லை. கட்டிடங்களுக்கான பிரதிஷ்டை ஜெபங்கள் திருவசன அடிப்படையிலான செயல்பாடுகளையே ஆசீர்வதிக்குமே



தவிர அவற்றிலுள்ள செங்கற்களை அல்ல. சமாரியப் பெண்மணியுடன் ஆண்டவர் நிகழ்த்திய உறவாடலின்போது இச்சத்தியத்தை அவர் தெளிவுறக் கூறிவிட்டார். அவள் கெரிசீம் மலையைக் குறிப்பிட்டு, ''இந்த மலையிலேயே'' எங்கள் மூதாதையர் தொழுதுகொண்டனர்; நீங்களோ ''எருசலேமில்'' தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்று இயேசுவுடன் வாதாடினாள். ஆண்டவரது பதில் அபாரம்: இந்த மலையில் மட்டுமல்ல, ''எங்கும்'' பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது; அது ''இப்பொழுதே'' வந்திருக்கிறது! (யோ 4:20-23). கடவுள் ஒரு திடப்பொருள் அல்லவே; அவர் ஆவியாய் அல்லவோ இருக்கிறார்? அப்படியானால் அவரை ஓரிடத்தில் இருத்தி வைக்க முடியாதே! இதுதான் சிலை வணக்கத்திற்கு எதிரான வாதம்! ஆலயம் என்றொரு கட்டிடம் கட்டி, பீடம் (altar) என்று ஓரிடத்தை அலங்கரித்து, அதில் சிலுவைச் சின்னமொன்று வைத்து அதின்முன் தலை வணங்குவது என்னே அபத்தம்! திருவசன வெளிச்சமில்லாத இருண்ட கால ரோமன் கத்தோலிக்கத்திலிருந்து மிச்சம் மீதியாய் வந்தவைகளை இன்றையச் சபைகள் என்றுதான் தூக்கியெறியுமோ? சீர்கெட்ட உலகிலுள்ள சீர் கெட்ட சபைக்கு ''ஒரு'' மார்ட்டின் லூத்தர் போதாது!

சிலை வணக்கத்திற்கு எதிராய் அத்தேனே நகரில் அப்போஸ்தலன் பவுல் குரலெழுப்பியபோதும் இதே சத்தியத்தைத்தான் வலியுறுத்தினார்: ''உலகையும் அதிலுள்ள யாவையும் படைத்த தேவனானவர் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவராயிருப்பதால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் குடியிருப்பதில்லை'' (அப் 17:24). மறுரூப மலைக்காட்சியைக் கண்ட பேதுரு பரவசமடைந்து, அதை ஒரு திருமலை எனக் கணித்து, அங்கேயே மூன்று கூடாரங்கள் போடுவதற்கு ஆண்டவரிடம் ஒப்புதல் கேட்டார். தான் பேசுவது என்னவென்றே தெரியாத அளவு அவருக்குப் பக்திப் பரவசம்! (மாற் 9:5,6). அதற்கு இயேசுவானவர் அல்ல, பிதாவானவரே பதில் கொடுத்துவிட்டார் (வச 7,8). பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கிய அந்த மேலறையில் அன்று நடந்தவை சாதாரண காரியங்களா? பலத்த காற்று! திடீர் முழக்கம்! அக்கினிமய நாவுகள்! பரிசுத்த ஆவியானவரின் நிறைவு! அந்நிய பாஷைகள்! மக்கள் தங்களது பாதங்

களில் கொட்டிய பணத்தை வைத்து அப்போஸ்தலர் அங்கு ஒரு திருத்தலம் கட்டியெழுப்பவில்லையே! எவ்வளவு பணம் அன்று வந்து குவிந்தது! இன்று தேவைக்கு மிஞ்சிப் பணம் சேரும்போது தானே ''கர்த்தர் சொன்னார்'' என்று பிரம்மாண்ட கட்டிடத் திட்டங்கள் உருவாகின்றன! சரித்திரத்திலிருந்து நாம் கற்பது சரித்திரத்திலிருந்து கற்கவில்லை என்பதே!

நூற்றிருபது பேராயிருந்த ஆதிச்சபையினர் மூவாயிரம், ஐயாயிரம் என்று திரளாய்ப் பெருகிக்கொண்டே போனார்களே! தொடர்ந்து வீடுகளில்தானே கூடிவந்தார்கள்? இருந்த ஆலயக் கட்டிடத்தைப் பயன்படுத்திக்கொண்டார்கள் (அப் 2:46,47). ஆதித் திருச்சபையின் ஏறத்தாழ 40 ஆண்டுச் சரித்திரம் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. ஓரிடத்தில்கூட மக்கள் ஆராதனைக் கூடுகைக்காகப் பெரியக் கட்டிடங்கள் எதுவும் எழுப்பியதாகத் தகவல் இல்லையே! ''நம்மைக் கொன்றது செங்கற்கள்தான்'' என்று புலம்புகிறார் ஒரு சபைச் சரித்திராசிரியர்! இன்று எங்கு பார்த்தாலும் கிறிஸ்தவத்தில் கட்டிடங்கள் போட்டா போட்டியாய் எழும்புகின்றன. பிரியமானவர்களே, 50,000 பேர் கூடி ஆராதிக்கக்கூடிய ஒரே அரங்கத்தைவிடத் தலா 1000 பேர் கூடிவரக்கூடிய 50 அரங்கங்கள் இருப்பதுதான் மேல். ஏன் தெரியுமா? கிறிஸ்தவத்தின் எதிரிகள் 50 கட்டிடங்களைத் தகர்த்தெறிவதைவிட ஒரே கட்டிடத்தை உடைத்து நொறுக்குவது எளிது. மட்டுமல்ல, 50 ஆராதனையகங்கள் இருக்குமானால் 50 தலைவர்கள் எழும்புவாரே! சூப்பர் ஸ்டார்கள் தேவைப்படமாட்டார்! அழைப்பும் அபிஷேகமும் இல்லாத வாரிசுகள் தலைமைப் பொறுப்புகளுக்கு வரும் அவல நிலையும் ஒழியுமே! பரிசுத்த அக்கினி விழாததைச் சமாளிக்க மேடையில் செயற்கைப் புகை எழுப்பும் மதியீனக் கலாச்சாரமும் அழியுமே!

இத்தியானத்தின்போது திருவசனத்திற்குப் புறம்பான இன்னொரு நவீனப் பழக்கத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதுரைக்காய் ஜெபிக்க மதுரையைச் சுற்றி வலம் வரவேண்டியதில்லை. நாட்டின் பாராளுமன்றத்திற்காய் ஜெபிக்கப் புது டெல்லியில் கட்டிடம் தேவையில்லை. எருசலேமிற்காய் ஜெபிக்க இஸ்ரவேல் நாட்டிற்குப் போகவேண்டிய அவசியமில்லை. தேவனுக்குத் தூரம் ஒரு காரியமா? இதோ, தேவன் நம்மைப் பார்த்து விடும் சவால்: எரே 23:23,24,



''நான் சமீபத்திற்கு மட்டுமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார் ... நான் வானுலகையும் பூவுலகையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' தேவன் என்னை அங்கே கட்டச் சொன்னார், இங்கே கட்டச் சொன்னார் என்று, ''சொப்பனம் கண்டேன், சொப்பனம் கண்டேன் என்று என் பெயரைச் சொல்லிப் பொய்த் தீர்க்கதரிசனம் சொல்லும் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கை!'' (வச 25). உலகின் எப்பகுதிக்காக ஜெபிக்கவேண்டுமானாலும் தேவன் வகுத்துள்ள தலைசிறந்த இடம் உங்கள் ''அறைவீடுதான்'' என்று அழுத்திக் கூறுகிறேன் (மத் 6:6). மறைவில் பார்க்கிற உங்கள் பிதாவானவர் வெளிப்படையாய் உங்களுக்குப் பலன் அளிப்பார். தமது வல்லமையை வெளிப்படுத்தக் கர்த்தரின் கண்கள் பூவுலகெங்கும் உலா வருகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? (2 நாளா 16:9). இடம் அல்ல, இதயமே முக்கியம்! உலகை அசைக்கும் கரத்தை அசைக்கும் ஜெபத்தினால் ஜெபத்தைக் கேட்கிறவரின் கரங்களைப் பற்றிப் பிடியுங்கள். நவீனக் கண்டுபிடிப்புகளுக்குப் பலியாகிவிடாதீர்கள். அவைகளெல்லாம் மழையில்லாத மேகங்கள், தண்ணீரில்லாத கிணறுகள், கனிகளில்லாத ஆனால் இலைகள் நிறைந்த மரங்கள்!

இந்த யுகத்தில் இடங்களைத் தேவன் புனிதப்படுத்துவதில்லை என்று பார்த்தோம். அப்படியே பொருட்களையும் ஆண்டவர் புனிதப்படுத்துவதில்லை. வெண்கல சர்ப்பம் ஒன்று செய்து அதனை ஒரு கோலில் உயர்த்தச் சொன்னது ஆண்டவர்தான். அதின் நோக்கம் முடிந்ததும் மோசே அதனை உடைத்து நொறுக்கி எறிந்திருக்கவேண்டும். அவரோ அதனை வருங்காலச் சந்ததிக்கு ஒரு நினைவுச் சின்னமாய் விட்டுச் சென்றார். இஸ்ரவேல் மக்களோ அதற்குத் தூபம் காட்டி வந்தனர். இருபத்தைந்து வயதில் இராஜாவான எசேக்கியா அதனை உடைத்து நொறுக்கினார். ''வெறும் வெண்கலம்'' எனப் பொருள்படும் ''நிகுஸ்தான்'' என்ற பெயரை அதற்குச் சூட்டித் தூக்கியெறிந்தார் (2 இரா 18:4). இது கர்த்தரின் பார்வைக்குச் சரியானதாயிருந்தது (வச 3). இன்னொரு எடுத்துக்காட்டு: ஏராளம் தங்கம் கிடைத்த வேளையில் அதைக் கொண்டு கிதியோன் ஏபோத்து (ephod) எனும் அலங்கார மார்பக ஆடையைச் செய்தார். அது அவருக்

கும் அவர் வீட்டாருக்கும் மட்டுமல்ல, இஸ்ரவேலர் அனைவருக்கும் கண்ணியாக மாறிற்று (நியா 8:27). ஆரோனுக்கு இவ்வித ஏபோத் ஒன்றைத் தங்கத்தில் செய்யச் சொன்னது கர்த்தர்தான் (யாத் 39:1,2). காலப்போக்கில் எவ்விதம் இவையெல்லாம் விக்கிரகங்களாய் மாறிவிடுகின்றன பாருங்கள். எவ்வளவு கவனமாயிருக்கவேண்டிய திருக்கிறது! எவ்வகையான சிலை வணக்கத்திற்கும் எதிராக நம தாண்டவர் ''எரிச்சல்'' உள்ளவராயிருக்கிறார் (யாத் 20:4,5).

இப்படி நான் எழுதிக்கொண்டே போகும்போது வாசக நண்பர் களுக்கு ஒரு கேள்வி எழலாம். ''அப்படியானால் ஆலயக் கட்டிடங்கள் தேவையில்லையோ?'' அன்றுபோல் இன்றும் நாம் இல்லங்களி லேயே கூடிவந்துகொண்டிருக்க முடியாது. ஆனால் மக்கள் கூடிவந்து ஆராதிப்பதற்கான கட்டிடங்களில் டாம்பீகமும் பகட்டும் கூடாது. பிரம்மாண்டமே நமது குறியாயிருக்கக்கூடாது. அடிப்படைத் தேவை களுக்குப் போதுமானதாக, எளியதாக, அமைப்பாகக் கட்டிடங்கள் இருந்தால் அதுவே நாசரேத்துத் தச்சனுக்குப் பொருத்தமாயிருக்கும் என்பதே எனது கருத்து. நான் ஒரு கட்டிடப் பொறியியலர் என்பதை மறந்துவிடாதீர்கள். நான் எதற்கு எதிராய்ப் பேசிக்கொண்டிருக் கிறேன் என்பது உங்களுக்குப் புரியாதிருக்க வாய்ப்பில்லை.

ஆதித் திருச்சபையினருக்கு ''மிகுந்த பலம்'' இருந்தது (அப் 4:33); ''மிகுந்த கிருபை'' இருந்தது (4:33); அவர்களைக் குறித்து மக்களுக்கு ''மிகுந்த பயம்'' இருந்தது (5:5); அவர்கள் மூலம் ''பெரிய அற்புதங்கள்'' நடந்தன (6:8); அவர்கள் நாட்களில் ''பெரிய அடையாளங்கள்'' காணப்பட்டன (16:26; 22: 6); அவர்களைக் குறித்து ''மிகுந்த கலகம்'' உண்டாயிற்று (19:23; 23:10); அவர் களோடு ''திரள்கள்'' சேர்க்கப்பட்டனர் (2:41; 4:4; 6:7); அவர் களுக்கு ''மிகுந்த உபத்திரவம்'' உண்டாயிற்று (8:1); அவர்கள் ஊழியம் செய்த இடங்களில் மக்களுக்கு ''மிகுந்த சந்தோஷம்'' உண்டாயிற்று (8:8). கட்டிடங்கள் மட்டும்தான் நமக்குப் பெரியவை என்ற தரித்திரம்தான் நமக்கு மிஞ்சியதா? ஆதிச்சபைக்கு ஆயிரங்கள் என்றால் நமக்கு இலட்சங்களும் கோடிகளும் சேரவேண்டுமே! திருப்திதான் நமது சாபமா?



# கேள்வி 28

***''தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருப்பவன், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?''***

**(1 தீமோத்தேயு 3:5)**

தீமோத்தேயு, தீத்து போன்ற வாலிபர்களைத் திருச்சபையின் அடுத்த வரிசைத் தலைமைத்துவத்திற்குப் பவுலடியார் பயிற்று வித்து வந்தார். அவரது மிஷனரிப் பயணங்களின்போது நிறுவப் பட்ட உள்ளூர்ச் சபைகளில் மூப்பர்களைத் தெரிந்தெடுத்து, அவர்கள் மீது கரங்கள் வைத்து, அவர்களைத் தலைமைப் பொறுப்பில் நிய மிக்கும் முக்கியப் பணியை இவ்வாலிபர் வசம் பவுல் ஒப்புவித்தார் (1 தீமோ 5:22; தீத்து 1:5). சபைத் தலைமைத்துவத்தில் மூப்ப ருக்குமேல் (elders) மேய்ப்பர் (shepherds) அல்லது ஆயர் (pastors), ஆயருக்குமேல் கண்காணி (bishop) அல்லது பேராயர் என்ற நிய மனங்கள் மனித முறைமையாகும். திருவசனத்தில் காண்கிறபடித் தேவனது ஒழுங்கு ''மூப்பர்'' அல்லது ''மேய்ப்பர்'' அல்லது ''கண் காணி'' ஆகிய யாவும் ஒரே பணியைக் குறிக்கும் வெவ்வேறு பெயர் களாகும். ''மூப்பர்'' என்பது தலைவர்களின் முதிர்ச்சியையும், ''மேய்ப்பர்'' என்பது மந்தைக்குப் போதகமாகிய மேய்ச்சல் காட்ட வேண்டிய அவர்களது கடமையையும், ''கண்காணி'' என்பது சபை யின் காரியங்களைக் கவனித்து முன்னின்று நடத்தும் அவர்களது பொறுப்பையும் குறிக்கும் (அப் 20:17,28; 1 தீமோ 3:1; தீத்து 1:5-7; 1 பேது 5:1-4). இவர்களுக்குப் பல்வேறு துறைகளில் உதவியாக நியமிக்கப்படுகிறவர்கள் ''மூப்பர்கள்'' அல்ல, ''உதவிக்காரர்'' (அப் 6:3,6; 1 தீமோ 3:12,13). இதனை நான் இங்கு சுட்டிக்காட்டுவது சிலருக்கு எரிச்சலூட்டினாலும், திருவசனத்தின்படியான இவ் வொழுங்குக்கு நாம் திரும்பி வரும்வரை, சபைத் தலைமைத் துவத்தையடுத்த பெரும்பாலான பிரச்னைகள் தீராது.

மூப்பர் அல்லது ஆயருக்கு இருக்கவேண்டிய தகுதிகளைப் பவுல் வரிசைப்படுத்தும்போதுதான் இக்கேள்வியைக் கேட்கிறார்: ''ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?'' (1 தீமோ 3:5). சபைத் தலைவர் களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளை எடுத்துக்கூறும்போது ஆரோக் கியமான குடும்ப வாழ்வை ஒரு நிபந்தனையாகப் பவுல் முன்நிறுத்து கிறார் (தீத்து 1:6). ஏனென்றால், தலைமைத்துவப் பண்புகளாகிய பொறுமை, அன்பு, சகிப்புத் தன்மை, பாரபட்சமின்மை, நேர்மை, உண்மை, உத்தமம், தன்னலமின்மை போன்றவற்றைப்பற்றி நாம் அனுபவரீதியாகத் தேறுவது குடும்பம் என்ற பாடசாலையிலேயே. பவுலடியாரின் குடும்பம்பற்றி நமக்குத் தகவல் அதிகமில்லை. அவர் மணமானவர் அல்லது மனைவியிழந்தவர் என்று யூகிக்க மட்டுமே இடமுண்டு (1 கொரி 9:5; 7:8). ஆனால் வெற்றியுள்ள குடும்ப வாழ்க்கைபற்றி அவர் எழுதியுள்ளவை அத்தனையும் அகத்தூண்டு தலானவை.

கடைசிக்காலத்தின் கடைசிக்கட்டத்திற்குள் நாம் வர வரப் பெற் றோர்-பிள்ளைகள் உறவுப் பிரச்னைகள் அதிகரிக்கத்தான் செய்யும். தந்தையரது இதயங்கள் பிள்ளைகளை விட்டும், பிள்ளைகளது இத யங்கள் தந்தையரை விட்டும் தூரமாகும் சாப நிலையைப் பழைய ஏற்பாட்டின் இறுதி வசனம் முன்னறிவிக்கிறது (மல் 4:6). இதனைச் சீர்ப்படுத்தும் முயற்சியைக் கிறிஸ்துவின் முதல் வருகைக்குமுன் திருமுழுக்கினன் யோவான் மேற்கொண்டார் (லூக் 1:16,17; மத் 17:11-13). கொடிய காலங்களாகிய கடைசி நாட்களில் பிள்ளைகள் ''தாய் தந்தையருக்குக் கீழ்ப்படியாதவர்களாய் இருப்பார்கள்'' என்பது தீர்க்கதரிசனம் (2 தீமோ 3:1,2). பெற்றோர்-பிள்ளைகள் உறவினை மேம்படுத்தும் முயற்சியில், தூயாவியானவரின் உதவியோடு, கிறிஸ் துவின் இரண்டாம் வருகைக்குமுன், திருச்சபை தீவிர ஈடுபாடு கொள்ளவேண்டும். அது முதலில் திருச்சபைக்குள் தொடங்கவேண் டும்; அது முதலில் திருச்சபைத் தலைவர்களது குடும்பங்களில் தொடங்கவேண்டும். சபை போகிற போக்கில்தானே சமுதாயம் போகும்?



குடும்பங்களில் பிள்ளைகள்பற்றிய பிரச்னை புதிதல்ல. இது தொன்றுதொட்டே இருந்துவந்தது. ஆபிரகாம் வீட்டில் இஸ்மவேலுக் கும் ஈசாக்குக்கும் இடையில் பிரச்னை. இஸ்மவேலை அவனது தாயுடன் வெளியேற்றியதாலேயே சச்சரவு ஒருவாறு தீர்ந்தது. ஆனா லும் ''தேவன் பிள்ளையுடன் இருந்தார்'' எனும் வசனத்தை நாம் மறந்துவிடக்கூடாது (ஆதி 21:20). ஈசாக்கின் குடும்பத்தில் ஏசா-யாக்கோபு ஆகிய குமாரரிடையே பிரச்னை இருந்தது. பெற்றோர்-பிள்ளைகளிடையே பாரபட்சமும் இருந்தது. யாக்கோபின் குடும்பத் தில் பிள்ளைகள் நடுவிலிருந்த பிரச்னைகளைச் சொல்லத் தேவை யில்லை. சின்ன சாமுவேலுக்கு முதலில் ஜெபிக்கக் கற்றுத்தந்த ஆசாரியனும் நியாயாதிபதியுமாயிருந்த ஏலி என்பவர் தனது பிள்ளை களது மீறுதல்களை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார்; ஆனால் போதுமான அளவு கண்டிக்கவில்லை (1 சாமு 2:12,22-25; 3:13). தாவீது தனது குமாரரில் ஒருவனாகிய அதோனியா என்பவனைக் கண்டிக்கவில்லை; அவன் ஓர் அழகனாயிருந்ததால் அவனைத் தாவீது அப்படி விட்டுவிட்டாரோ என்னவோ? (1 இரா 1:5,6). இந்த எடுத்துக்காட்டுகளை நமக்கு எச்சரிப்புகளாய்த்தான் எடுத்துக்கொள் ளவேண்டுமே தவிர நாம் செய்யத் தவறியவற்றை நியாயப்படுத்தப் பயன்படுத்தக்கூடாது.

பிள்ளைகளுக்குப் பெற்றோர் கர்த்தருடைய சத்தியங்களைப் போதித்து அவர்களைக் கர்த்தருக்கேற்ற விதத்தில் வளர்க்கவேண் டும் என்ற காரியத்திற்குத் தேவன் அதிமுக்கியத்துவம் கொடுக்கிறார். ஆபிரகாம் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்து, அவரைத் தமது நண்பனாகக் கருதி, தாம் செய்யவிருக்கும் காரியங்களை அவரிடம் பகிர்ந்துகொள்ளத் தேவன் முற்பட்டது ஏன் என்று தேவனே கூறும் காரணம்: ''அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தனது வீட்டாருக்கும் ... நீங்கள் கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்'' (ஆதி 18:19). இரத்தினச் சுருக்கமாய் தேவன் கொடுத்த பத்துக் கட்டளை களில் வாக்குத்தத்தம் இணைக்கப்பட்ட ஒரே கட்டளை, பெற்றோ ருக்குப் பிள்ளைகள் கீழ்ப்படியவேண்டும் என்பதே (யாத் 20:12; எபே 6:1,2). பஸ்கா பண்டிகையை நித்திய நியமமாய்க் கொண்டு

ஆசரிக்கவேண்டுமென்று இஸ்ரவேலரிடம் ஆண்டவர் கட்டளையிட்டபோது, அவர்கள் பிள்ளைகள் ''இதன் கருத்து என்ன'' என்று கேட்டால் என்ன பதில் சொல்லவேண்டும் என்றும் சேர்த்துச் சொன்னார் (யாத் 12:24-27). அப்படியே, கர்த்தர் கொடுத்த கட்டளைகள் மற்றும் நியாயங்களைப்பற்றி பெற்றோரிடம் பிள்ளைகள் வினவினால் என்ன பதில் சொல்லவேண்டுமென்றும் தேவன் சொல்லி வைத்தார் (உபா 6:20-25). எவ்வளவுதான் அறிவியல் முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் பரிசுத்தப் பழக்கங்கள், பரிசுத்தப் பாரம்பரியங்கள் போன்றவற்றை அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டிய பெற்றோரின் பொறுப்பு எவ்வளவு பாருங்கள்!

அரசியல்வாதிகள், திரைப்பட நடிகர்கள், இவர்களைப் பற்றியெல்லாம் வெட்டிக்கதை பேசி இல்லத்தில் நேரத்தை வீணடிக்கக்கூடாது. விருந்தினர் அறையிலும், சாப்பாட்டு மேசையிலும், படுக்கையறையிலும் திருவிவிலிய வசனங்களைக் குறித்து உரையாடவேண்டும். இதுதான் திருக்கட்டளை (உபா 6:6-9). அப்பொழுதுதான் நமது பிள்ளைகள் ஒலிவ மரக்கன்றுகளைப்போலச் செழிப்புடனும் பொலிவுடனும் வளருவார்கள் (சங் 128:3). குடும்ப ஜெப நேரங்களைத் தொலைக்காட்சி நிகழ்வுகள் திருடிவிட இடங்கொடுக்கக்கூடாது. பிள்ளைகளுக்கு விசுவாசத்தை ஊட்டும் கடமை பெற்றோரது மட்டுமல்ல, பாட்டி தாத்தாவும் இதற்குக் கைகொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் தீமோத்தேயு போன்ற தலைவர்களை நாம் கிறிஸ்தவ உலகிற்குத் தர முடியும் (2 தீமோ 1:5; 3:15). குடும்ப ஜெபங்களில் நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து படிப்பினை எடுக்கப்படுமானால் பேராசீர்வாதமாயிருக்கும். அப்புத்தகத்தில் எத்தனை முறை ''என் மகனே, என் மகனே'' என்று அழைப்பு வருகிறது பாருங்கள் (நீதி 1:8,10; 2:1; 3:1; 4:10,20; 5:1; 6:1; 7:1). பெரும்பாலான கிறிஸ்தவ இல்லங்களில் குடும்ப ஜெபம் இல்லாது போவதற்கு முக்கிய காரணம் தந்தையரின் ஒத்துழைப்பு இல்லாமையே. எல்லாவற்றிலும் தலைமை நாடும் இவர்கள் இதில் மட்டும் தவறுவதேன்? பிள்ளை வளர்ப்பில் தந்தையருக்குத்தான் பிரதான பொறுப்பு (எபே 6:4; கொலோ 3:21). கணவர், மனைவியர் என்று தனித்தனியே குறிப்பிட்ட பவுலடியார் இவ்விரு வசனப்பகுதியில் தந்தையரிடம் மட்டுமே பேசுகிறார்!



வீட்டுக் காரியங்களில் சில பொறுப்புகள் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படவேண்டும். வீட்டிற்குக் குடத்தில் தண்ணீர் சுமந்து வருவது ரெபெக்காளின் பொறுப்பாயிருந்தது; அவளது கடின உழைப்புதான் எலியேசரைக் கவர்ந்தது (ஆதி 24:15,20). ராகேல் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தாள்; கொளுத்தும் வெயிலில் அது சுலபமான வேலையல்ல (29:6). மீதியான் நாட்டு ஆசாரியனின் ஏழு மகள்களும் ஆடுகளுக்காய்த் தண்ணீர்த் தொட்டிகளை நிரப்பினார்கள் (யாத் 2:16). தனது தந்தைக்கு எட்டாவது மகனாகிய தாவீது மிகுந்த கவனமாய் ஆடுகளை மேய்த்தான் (1 சாமு 16:11). ஓர் ஆட்டுக் குட்டிதான் என்றாலும் அதைக் காப்பாற்ற சிங்கத்தோடும் கரடியோடும் போராடத் தயங்கமாட்டான் அவன் (17:34-36). ஜான் வெஸ்லி மற்றும் சார்லஸ் வெஸ்லி போன்ற பத்தொன்பது பிள்ளைகளின் தாயாராகிய சூசன்னா வெஸ்லி (1669-1742) அவர்கள் தனது பெற்றோருக்கிருந்த 25 பிள்ளைகளில் 25ஆம் பிள்ளை! சரித்திரம் போற்றும் இக்குடும்பங்களில் பிள்ளைகளுக்கு வெவ்வேறு வீட்டு வேலைகள் கொடுக்கப்பட்டிருந்தன. தச்சராயிருந்த தமது தந்தையிடமிருந்து தச்சுத் தொழிலை நாசரேத்து வாலிபன் இயேசு கற்றுக்கொண்டு தச்சரானார் (மத் 13:55; மாற் 6:3). தச்சுப்பட்டறை வேலை எளிதோ? நல்ல மீன் பார்த்து வாங்குவதும், அதைக் கழுவி மசாலா போட்டு வைப்பதும் எங்கள் வீட்டில் எனது பல வேலைகளில் ஒன்று. எனது அப்பாவிடமிருந்து இவற்றைக் கற்றுக்கொண்டேன். படிப்பு படிப்பு என்று பிள்ளைகளை மக்குகளாக்கிவிடாதீர்! சபைக்கும் சங்கத்திற்கும் சமுதாயத்திற்கும் ''உழைக்கும் கரங்கள்'' இன்று எவ்வளவாய்த் தேவை!

இப்படியெல்லாம் எழுதிக்கொண்டே போகும்போது, பிள்ளை வளர்ப்பு என்பது சுலபமல்ல என்பதையும் இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேவனது ஒத்தாசையில்லாது நாம் இதில் சித்தி பெற முடியாது. பிள்ளை கருவாய் வயிற்றிலிருக்கும்போதே அதற்காய்ப் பெற்றோர் ஊக்கமாய் ஜெபிக்கத் துவங்கிவிடவேண்டும். அதைத்தான் சிம்சோனின் பெற்றோராகிய மனோவாவும் அவரது மனைவியும் செய்தனர் (நியா 13:8,12). எதற்காய் ஜெபிக்கிறோமோ இல்லையோ,

நமது பிள்ளைகளுக்காய்த் தேவனுக்குமுன் மன்றாடவேண்டும். இந்தப் பொறுப்பை, பெற்றோரே, பிரசங்கிமாரிடம் விட்டுவிடாதிருங்கள். பக்தன் யோபுவிற்கு ஏழு மகன்களும் மூன்று மகள்களும் இருந்தனர். சகோதர சகோதரிகளாக இவர்கள் அடிக்கடி கூடிச் சாப்பிட்டு மகிழ்ந்தனர். சொந்த சகோதர சகோதரிகளுடன்தானே கூடிக் குலாவுகிறார்கள் என்று யோபு அமர்ந்திராமல், தனது மகன்கள் ஒவ்வொருவருக்காகவும் பரிசுத்த பலி செலுத்தினார் (யோபு 1:4,5). பெரிய வெள்ளிக் கண்ணீர் வடிப்பது சுலபம். நமது பிள்ளைகளுக்காகவே அழும்படி இயேசு அழைக்கிறார் (லூக் 23:27,28). இதோ, ஒவ்வொரு தாய்க்கும் தந்தைக்கும் வரும் அழைப்பு: ‘‘எழுந்திரு, இராத்திரியில் முதற்சாமத்தில் கூப்பிடு; ... உன் குழந்தைகளின் உயிருக்காக உன் கைகளை அவரிடம் ஏறெடு!’’ (புல 2:19). திடீரென்று இரவில் எழுந்துவிட்டால், எங்கள் அம்மாவின் கண்ணீரால், மாட்டுச்சாணத்தால் மெழுகப்பட்ட எங்கள் வீட்டின் தரை நனைந்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். எனது தம்பிக்காகவும் எனக்காகவும் அவர்கள் அவ்விதம் ஜெபித்தார்கள்! மகன் அமெரிக்கா போனாலென்ன, போகாவிட்டாலென்ன, நரகத்திற்குப் போய்விடக்கூடாதே!

சபை மேய்ப்பிற்குப் பிள்ளை வளர்ப்பு சிறந்த பயிற்சி என்பேன். தெசலோனிக்கேயத் திருச்சபையினருக்குமுன் பவுல் கொடுத்த சாட்சிக்கு விளக்கம் தேவையில்லை: 1 தெச 2:7,8,12, ‘‘உங்களிடம் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கும் ***தாயானவள்*** தனது பிள்ளைகளைக் காப்பாற்றுவதுபோல, நாங்கள் உங்கள்மீது பிரியமாயிருந்து எங்கள் உயிரையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம் ... ***தந்தை*** தனது பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், ஊக்குவிப்பும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்.’’ சபை மேய்ப்பர்கள் இப்படியிருந்தால் விசுவாசிகள் எளிதில் சபை விட்டுச் சபை தாவமாட்டார்கள் (யோ 10:11). தீமோத்தேயுவைப் பவுல் தனது மகனாகப் பாவித்தார்; தீமோத்தேயு பவுலைத் தனது தந்தையாய் மதித்துச் சேவித்தார் (1 தீமோ 1:2; பிலி 2:22). பிரம்பால் அடித்த பெற்றோருக்கும், அடிபட்ட பிள்ளைகளுக்கும்தான் தேவனது சிட்சையின்



தாற்பரியம் புரியும் (உபா 8:5; நீதி 3:12; எபி 12:6). பிள்ளைகளுக்குப் பெற்றோர் பொருள் சேர்த்துவைக்கவேண்டும்; அப்படியே சபை மேய்ப்பர்கள் தங்கள் மந்தையிலுள்ள விசுவாசிகளை இனி வரும் காலங்களுக்காய் ஆயத்தப்படுத்தவேண்டும் (2 கொரி 12:14).

கிறிஸ்தவ ஊழியருக்கு ஒரு முக்கிய ஆலோசனை கூற விரும்புகிறேன். ஊழியம் வளரும்போது நமக்குப் பொறுப்புகள் கூடும். அதற்கு நாம் செலவழிக்கவேண்டிய நேரமும் அதிகரித்துக்கொண்டே இருக்கும். இதில் பலியாவது நமது குடும்பம்தான். வாழ்க்கைத் துணையோடும் பிள்ளைகளோடும் நாம் செலவிடவேண்டிய தரமான நேரம் குறைந்துகொண்டே வருகிறது. இதனால் ஏற்படும் தீய விளைவுகள் ஏராளம். ஓர் ஊழியனின் வாழ்க்கை ஒரு சமபக்க முக்கோணம் (equilateral triangle) போல் சமநிலைப்படுத்தப்படவேண்டும். முக்கோணத்தின் உச்சி தேவனுக்குரியது. கீழுள்ள இரு முனைகளில் ஒன்று ஊழியத்திற்கும் அடுத்தது குடும்பத்திற்கும் கொடுக்கப்படவேண்டும். தேவனுக்குக்கீழ் இவையிரண்டும் சமநிலையில் செயல்படவேண்டும். ஒன்றிற்காய் ஒன்று பலியாகக்கூடாது. இதனை முன்னுரிமை முக்கோணம் (priority triangle) என்றழைக்கிறேன்.

மேற்கண்ட பத்திகளிலுள்ள அத்தனைக் காரியங்களிலும் கவனமாயிருந்தால் எந்தப் பிரச்னையும் வராது என்று உத்திரவாதமாய்க் கூறிவிட முடியாது; ஆனால் இவ்விதம் வாழ்வதே பாதுகாப்பு. பிசாசானவன் ஊழியத்தைத் தாக்குவதற்குமுன் ஊழியனையே தாக்குகிறான். மேய்ப்பனை வெட்டினால்தானே மந்தை சிதறடிக்கப்படும்? (சக 13:7; மத் 26:31). ஒன்று ஊழியக்காரனின் உடல்நலத்தைப் பாதிப்பான், அல்லது அவனது பரிசுத்தத்திற்குப் பங்கம் விளைவிப்பான், அல்லது அவனது குடும்பத்தைத் தொடுவான். எனவே ஒவ்வொரு ஊழியனும் தனக்குத் தெரிந்த மற்ற ஊழியரது ஆன்மீக ஆரோக்கியம், உடல் நலம் மற்றும் குடும்பச் சமாதானத்திற்காய்க் குறிப்பாய் ஜெபித்துவரவேண்டும் (யோ 17:9). சத்துருவின் வெள்ளம் ஓர் ஊழியன் அல்லது அவரது குடும்பத்தின்மீது மோதும்போது

கைகொட்டிச் சிரிக்காதீர்கள். அப்புயல் உங்கள் பக்கம் திடீரென்று திரும்பலாமே! தீர்க்கன் சாமுவேல் தனது ஊழியக் காலத்தில் தனது குடும்பத்தைக் கவனியாது விடவில்லை; ஆனாலும் அவரது மகன் கள் வழிதப்பிப்போயினர் (1 சாமு 7:15-8:3). கீழ்ப்படியும் பிள்ளை களைவிடக் கீழ்ப்படியாத பிள்ளைகள்தானே தேவனுக்கு அதிகம்? ஜான் வெஸ்லி மற்றும் வில்லியம் கேரியின் குடும்ப வாழ்க்கையில் ஏராளம் பிரச்னைகள் இருந்தன. பில்லி கிரஹாமின் ஐந்து பிள்ளை களில் ஒரு மகள் இரு முறை விவாகரத்து செய்யவேண்டியதாயிற்று. கண்ணீரின் பள்ளத்தாக்கு வழியாய்ச் செல்லும் ஊழியர் குடும்பங்கள் நிறையவுண்டு. அழுகிறவர்களுடன் அழுங்கள், அம்பலப்படுத்தா திருங்கள். நிற்கிறேன் என்று பெருமிதம் கொள்பவனுக்குத்தான் விழுவதற்கு நிறைய வாய்ப்பு (1 கொரி 10:12). தேவ கிருபை யினால் அல்லவோ நிற்கிறோம்?





# கேள்வி 29

***“நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகள் விதைத்திருக்க, உங்கள் பொருளாதார நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?”***

**(1 கொரிந்தியர் 9:11)**

சபைகள் பலவிதம்! அப்போஸ்தலர்கள் நிறுவிய சபைகளில் ஒவ் வொன்றும் ஒவ்வொரு விதமாய் இருந்தது. அந்தந்தச் சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களிலிருந்து அந்தந்தச் சபைகளின் நிலவரத்தை ஓரளவு நாம் புரிந்துகொள்ளலாம். அன்றிருந்த கொரிந்து சபைக்காய் நாம் தேவனைத் துதிப்போம்! அச்சபையில்தான் உபதேசத்திற்குக் குறைவில்லை, அறிவுக்குக் குறைவில்லை, வரங்களுக்குக் குறை வில்லை, பிரிவினைகளுக்கும் பிரச்னைகளுக்கும் குறைவில்லை. இவ்வித நிலவரமுள்ள ஒரு சபை இல்லாதிருக்குமானால் நமது சபை வாழ்விற்கு இத்தனை நடைமுறை ஆலோசனைகளும் உபதேசங் களும் நிறைந்த இரு நிருபங்கள் நமக்குக் கிடைத்திருக்காது! பவு லின் அப்போஸ்தலத்துவமே கொரிந்து சபையினரால் சவாலிடப் பட்டது. 1 கொரிந்தியர் 9ஆம் அத்தியாயத்தை ‘‘நான் அப்போஸ் தலன் அல்லவா?’’ என்ற கேள்வியுடன் தொடங்கி அடுத்தடுத்து 17 கேள்விகளைப் பவுல் அடுக்குகிறார் (வச 1-17).

சீலாவுடன் பவுல் மேற்கொண்ட தனது இரண்டாம் மிஷனரிப் பய ணத்தின்போது அவர் இச்சபையை நிறுவினார் (அப் 18:1). கொரிந்து நகர் ஊழியம் பல எதிர்ப்புகள் நடுவிலேயே தொடங்கியது (வச 6). ஆனாலும் இங்கு ‘‘கொரிந்தியரில் அநேகர்’’ விசுவாசித்துத் திரு முழுக்கு பெற்றனர். இந்நகரிலிருக்கும்போதுதான் ஓரிரவு பவுலுக் குக் கர்த்தர் தரிசனமாகி, ‘‘நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடன் இருக்கிறேன் ... இந்நகரில் எனக்கு அநேக மக்கள் உண்டு’’ என்றார் (வச 9,10). ஒன்றரை ஆண்டுகள் இங்குப் பவுல்

தங்கிப் பணியாற்றினார். நாளாவட்டத்தில் கொரிந்து விசுவாசிகள் பவுலைக் கேள்விக் கேட்கத் துவங்கினர். அச்சமயத்தில்தான் பவுல் அவர்களுக்குப் பதில் கொடுக்கும் வகையில் இக்கேள்விகளை அவர் கள்முன் வைத்தார். நமது தியானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கேள்வி இப்பட்டியலிலேயே இடம் பெற்றுள்ளது (வச 11).

நம்மில் அநேகரது பிரச்னையும் இதுதான். திருப்பணியாளரை உற்சாகமாய் ஆதரிக்கத் துவங்குவோம். நாளாவட்டத்தில் ஊழியர் மீதுள்ள நமது அன்பு தணிந்துவிடுகிறது. கொரிந்து சபை போன்ற நிலை கலாத்திய சபையிலும் ஏற்பட்டது. தொடக்கத்தில் கலாத்திய நாட்டு விசுவாசிகள் பவுலைத் ''தேவதூதனைப் போலவும் கிறிஸ்து இயேசுவைப் போலவும்'' ஏற்றுக்கொண்டு அன்பு செலுத்தினர் (கலா 4:14). அந்தக் காலக்கட்டத்தில் பவுலுக்கு அதிகமான உடல்நலக் கேடு இருந்தும் அவரை அசட்டைப்பண்ணாது அரவணைத்தனர். அதனை ''ஆனந்த பாக்கியம்'' என்றழைக்கிறார் பவுல்! (வச 15அ). அந்நாட்களில் அவர்களது கண்களை வேண்டுமானாலும் பவுலுக்குப் பிடுங்கிக் கொடுத்திருப்பார்களாம்! இப்பொழுதோ அவரை ஓர் ''எதிரி'' என்று பார்க்கின்றனர் (வச 16). கசப்பான இவ்வித அனுப வத்திற்குத் தப்பிய ஊழியர் மிக மிகக் குறைவு. அவர்கள் இவ்வித ஏமாற்றங்களை ஏற்றங்களுக்கு உதவும் ஏணிகளாய்ப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று ஊக்குவிக்கிறேன். ஆனாலும் அவர்கள் மீதுள்ள தங்கள் அன்பும் பாசமும் குறைவதற்கு மக்கள் இடம் கொடுக்கக்கூடாது. எனது அன்புத் தம்பி எசேக்கியா பிரான்சிஸ் இயற்றிய பாடல் ஒன்றிலுள்ள சில வரிகளை என் உடன் ஊழியருக்கு நினைப்பூட்டுகிறேன்: *''மனிதர்கள் அன்பு மாறலாம், மறைவாகத் தீது பேசலாம்; அன்பு காணா இதயமே, அன்பின் தேவனை அண் டிக்கொள்!''*

இறைப்பணியாளர் மீதுள்ள நமது ஆதி அன்பு எவ்விதத்திலும் குறைந்துவிட நாம் இடங்கொடுக்கக்கூடாது. அதிலும் குறிப்பாக, திருவசனத்தை நமக்குப் போதிப்பவர்களுக்கு நாம் அனுபவிக்கும் ''அனைத்து ஆசிகளிலும்'' பகிர்ந்துகொடுக்கவேண்டும் (கலா 6:6). ''சகல நன்மைகள்'' என்ற தமிழ் வார்த்தைகளுக்கு விளக்கம் வேண்



டுமோ? நாளடைவில் அன்பும் பாசமும் குறைவதற்கான வாய்ப்பை எச்சரித்துதான் ''மோசம்போகாதிருங்கள்'' என்ற அறிவுரை இவ் வசனத்தை அடுத்து உடனே கொடுக்கப்பட்டுள்ளது (வச 7). திரு மறைப் போதகர்களை ஆதரிப்பதை ''விதைப்பது'' என்கிறார் பவுல் (வச 7,8). இதில் நாம் ''சோர்ந்துபோகாதிருந்தால், தளர்ந்துபோகா திருந்தால், ஏற்ற காலத்தில் அறுவடை செய்வோம்'' (வச 9). தேவை யிலிருக்கும் விசுவாசிகளும், பொது மக்களும் இப்பட்டியலில் அடுத்து இடம் பெறுகின்றனர் (வச 10).

இதே சத்தியத்தை எபிரெயர் நிருப ஆக்கியோன் தனது நிருபத் தில் வலியுறுத்துகிறார். அவர் ஒரு மிஷனரியாகத்தான் இருந்திருக்க வேண்டும். தான் ''கட்டப்பட்டிருந்த'' காலத்தை விசுவாசிகளுக்கு நினைப்பூட்டுகிறார். அதனை ''முந்திய நாட்கள்'' என்கிறார் (எபி 10:32-34). ''உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளை யிடக் கொடுத்தீர்கள்'' என்று நினைப்பூட்டுகிறார். அதாவது, மிஷ னரிகளை விருந்தினர் அறையில் உட்கார வைத்து உபசரித்து அனுப்பிவிடாமல், அலமாரிச் சாவிகளையும் அவர்களது கைகளில் கொடுத்து, அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் எடுத்துக்கொள் ளவும் அகமகிழ்வுடன் அழைத்தார்களாம்! இதற்கு வேறு அர்த்தம் உண்டோ? ஊழியருக்கும் ஊழியங்களுக்கும் உதவுவதால் நாம் இன் னொரு கார் வாங்கவும், இன்னொரு வீடு கட்டவும் செல்வம் கொழிக் கும் என்ற மட்டரகமான எதிர்பார்ப்பினால் அல்ல, ''பரலோகில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம்'' கிடைக்கும் என்றே அப்படிச் செய்தார்களாம்! இவ்வித நம்பிக்கையைத்தான் ''மிகுந்த பலனுக்கேதுவான நிச்சயம்'' என்றழைக்கிறார் அந்த மிஷனரி (வச 35). இதைத்தான் ''விட்டுவிடாதிருங்கள்'' என அறிவுறுத்துகிறார்!

முக்கியமான இந்த உபதேசத்தைப் பவுலடியாரும் ஆங்காங்கே வலியுறுத்தியுள்ளார். மூப்பர்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கை யில் இவ்விதம் எழுதுகிறார்: ''நன்றாய் விசாரித்து நடத்தும் மூப்பர் களை, குறிப்பாகத் திருவசனத்தை அறிவிப்பதிலும் உபதேசிப் பதிலும் ஈடுபட்டு உழைப்பவர்களை, இரு மடங்கு மதிப்பிற்குத் தகுதியுள்ளவர்களாய் எண்ணவேண்டும்'' (1 தீமோ 5:17). புதிய

ஏற்பாட்டில் மூப்பர், மேய்ப்பர், கண்காணி (Elder, Pastor, Shepherd, Bishop) ஆகிய பதங்களெல்லாம் ஒரே பொறுப்பைத்தான் குறிக்கும். இங்கு இரு மடங்கு ''கனம்'' என்பதை இரு மடங்கு ''ஊதியம்'' என்றே பொருள்படுத்தவேண்டும் என்பது 18ஆம் வசனத்திலிருந்து தெளிவு. திருவசனப் போதக ஊழியம் என்பது எளிதல்ல. கர்த்தருக்கு முன்பாகக் காத்திருப்பதிலும் திருவசனத் தியானத்திலும் ஊற்றி விடாதோருக்கு விண்ணிலிருந்து புத்துயிர்ச் செய்திகள் வராது. ஒவ்வொரு பிரசங்கமும் ஒரு பிரசவம் போலத்தான்! எனவேதான் விதவைகளைக் கவனிக்கும் வேலை எவ்வளவு முக்கியமானதும் அவசியமானதுமாக இருப்பினும், அதில் தங்கள் நேரத்தைச் செல விடாமல், ஜெபம்பண்ணுவதிலும் திருவசனத்தைப் போதிப்பதி லுமே ''இடைவிடாமல் தரித்திருப்போம்'' என்று ஒதுங்கிக்கொண் டனர் அப்போஸ்தலர் (அப் 6:1-4). இத்தத்துவம் மீறப்படுவதா லேயே பெரும்பாலான நமது பிரசங்கப்பீடங்களில் திருவசனப் பஞ்சம் தாண்டவமாடுகிறது. ''உங்களது ஆத்துமாக்களுக்காக நான் செலவு பண்ணவும் செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன்'' என்று பவுல் எழுதும்போது பணத்தையா குறிப்பிட்டார்? இல்லவே இல்லை! திருவசனப்பணியில் தன்னை வார்த்துவிடுவதையே சாட்சியிட்டார் (2 கொரி 12:15).

ஒரு புத்தகம் உங்கள் ஆன்மீக வாழ்வை மேம்படுத்தியிருக்குமா னால் அந்நூலாசிரியருக்கு எவ்விதத்திலாவது நன்றி தெரிவிக்கிறீர் களா? அப்புத்தகத்தை எழுதி வெளியிட அவர் எவ்வளவு பாடுபட்டி ருப்பார்! ஒரு பிரசங்கம் உங்களை உயிர்ப்பித்திருக்குமானால் அப் பிரசங்கியாருக்கு நன்றி தெரிவிக்கும் பழக்கம் உண்டா? அப்பிரசங் கத்தை ஆயத்தம்பண்ண அவர் எவ்வளவு நேரமெடுத்திருப்பார்! மகி மையைத் தேவனுக்குத்தான் செலுத்தவேண்டும்; ஆனால் நன் றியை நபர்களுக்குத் தெரிவிக்கக்கூடாதென்று திருமறையில் கட்டளை இல்லையே. கண்ட சகோதரனுக்கு நன்றி சொல்லத் தெரியாதவன் காணாத தேவனுக்கு எப்படி நன்றி சொல்வான்?

ஊர் ஊராய்ச் சுற்றித் திரிந்து ஆண்டவர் நற்செய்தியறிவித்தார் (லூக் 8:1). பயண வசதிகள் குறைவாயிருந்த அக்காலத்தில் அவர்



எவ்வளவு தூரம் நடந்திருப்பார்! அழகிய பாதங்கள்! யோவன்னாள், சூசன்னாள் மற்றும் அநேகப் பெண்மணிகள் அவருக்கு ஆதரவாய்க் கூடச் சென்றனர். அவர்கள் தங்கள் ''ஆஸ்திகளால்'' அவருக்கு ஊழி யம் செய்தார்களாம் (வச 3). அவர்களுக்குக் கிடைத்த இலாபத்தைக் கொண்டோ, வருவாயைக் கொண்டோ அல்ல, அவர்களது ''சொத் துக்களால்'' ஆண்டவரை ஆதரித்தார்கள். வெறும் பத்திலொன்றைக் கொடுத்துவிட்டுப் பரம திருப்தி அடைந்துவிடுகிறோமே!

சாறிபாத் எனும் ஊரில் தனது கணவனை இழந்த ஒரு மாது. அவ ளுக்கு ஒரே மகன். இச்சிறு குடும்பம் வறுமையால் வாடிக்கொண்டி ருந்தது. தேவன் தமது ஊழியனாகிய எலியா தீர்க்கதரிசிக்கு உண வளிக்கும்படி அவ்விதவைக்குக் கட்டளையிட்டார். அவளை எலியா சந்தித்தபோது அவள் விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள் (1 இரா 17:8-10). அவளிடம் அவர் தண்ணீரும் ஓரிரு சப்பாத்தியும் கேட் டார். அவள் தனது வறுமையையும் இல்லாமையையும் தீர்க்கதரிசிக் குத் தெரிவித்தாள். ஆனாலும் எலியா சொன்னது: ''முதலில் ஒரு சிறு சப்பாத்தி சுட்டு அதை எனக்குக் கொண்டுவா'' (வச 13). நடந்த அற்புதத்தை நாமறிவோம் (வச 14-16). எலியா இவ்விதம் கேட்டதை மனிதாபிமானமின்மை என்று சொல்ல முடியாது. நமக்கு இருக்கி றதோ இல்லையோ, இறைப்பணியாளரின் தேவைகளை ''முதலா வது'' சந்திக்கவேண்டும் என்பதே இங்கு படிப்பினை! ஊழியர்களை இரண்டாந்தரக் குடிகளாய் மதிப்பிடும் கலாச்சாரம் ஒழிக! ஊழியரின் தாகத்தை முதலாவது தீர்த்திடுங்கள்; நியாயத்தீர்ப்பு நாளில் ஏமாற்ற மடைய மாட்டீர்கள் (மத் 10:40-42).

பல இடங்களுக்கு அலைந்து திரிந்து கர்த்தருடைய வார்த்தை யைத் தீர்க்கதரிசனமாக அறிவித்து வந்த எலிசா ஒரு முறை சூனேம் எனும் ஊருக்குச் சென்றார். அங்கேயிருந்த வசதி படைத்த அம்மை யார் ஒருவர் அவரை உணவருந்தும்படி வற்புறுத்தினார். அதன்பின் அவர் அவ்வழியே சென்றபோதெல்லாம் அங்கே உணவருந்தி விட்டுச் செல்வார் (2 இரா 4:8). அம்மையார் தனது கணவனைப் பார்த்து, ''நம்மிடம் அடிக்கடி வரும் தேவனுடைய மனிதனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் முதல் மாடியில் ஓர் அறை

யைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டில், மேசை, நாற்காலி, குத்து விளக்கு ஆகியவற்றை வைப்போம்; அவர் வரும்போதெல்லாம் அங்கு தங்கிவிட்டுச் செல்லட்டும்'' என்றார் (வச 9,10). எழுத்தாளர் களுக்குப் பொருத்தமான வசதி! பிரியமானவர்களே, இப்படியெல் லாம் நமக்குத் தோன்றுகிறதா? ஊழியர் குடும்பம் ஒன்றிற்கு நமது செலவில் விடுமுறைப் பயணம் ஒழுங்கு செய்யலாமே! ஆராய்ச்சி வேதாகமங்கள், வேத வியாக்கியானங்கள் போன்றவற்றைப் போத கர்களுக்கு வாங்கிக் கொடுக்கலாமே! பல்பொருள் அங்காடிகளுக்கு மிஷனரிகளை அழைத்துச்சென்று வேண்டியதெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லலாமே! இப்படிப்பட்ட பலிகளில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

அடுத்து, ஊழியர்களோடு பேச விரும்புகிறேன். மக்களுக்குத் திரு வசனத்தில் செழிப்பான மேய்ச்சல் காட்டுங்கள். அவர்கள் விரும்பு வதை அல்ல, அவர்களுக்குத் தேவையானதைப் பிரசங்கியுங்கள். அரைகுறை ஆயத்தத்துடன் பிரசங்கித்துச் சபையாரை அவமதிக்கா திருங்கள். உங்கள் வாழ்வின் முடிவில், ''பிதாவே, மக்களுக்கு உமது வார்த்தையைக் கொடுத்தேன்'' என்று சொல்ல முடியவேண்டும் (யோ 17:8). மக்களிடம், ''தேவனது முழு ஆலோசனையை உங்க ளுக்கு அறிவித்தேன்'' என்று சொல்ல முடியவேண்டும் (அப் 20:26). திருமறையைத் தியானிப்பதும் ஆராய்வதும் எப்படியென்று விசுவாசி களுக்குக் கற்றுக்கொடுங்கள். வேத ஆராய்ச்சி நூல்களை அவர் களுக்கு அறிமுகம் செய்யுங்கள். பிள்ளைகளின் வளர்ச்சியில் இன்பம் காணும் பெற்றோர் போலிருங்கள். ஒவ்வொரு விசுவாசியையும் ஊழி யனாய் மாற்றுவதே உங்கள் ஊழியம் (எபே 4:11-13).

வரி வசூலிப்பவர் போல மிஷனரி இயக்கத்தினர் மாறிவிடக்கூடாது. காணிக்கை சேகரிக்க இல்லங்களுக்குச் செல்கையில் இல்லத்தின ருக்குத் திருவசனத்தைப் பகிர்ந்துகொண்டு அவர்களுக்காய் ஜெபி யுங்கள். ''ஐயோ, வந்துவிட்டாரே'' என்றெண்ணாது, நீங்கள் எப் பொழுது வருவீர்கள் என்று அவர்கள் ஆவலாய் எதிர்நோக்கியிருக்க வேண்டும்.



1971 முதல் 2003 வரை 33 ஆண்டுகள் ஓர் ஊழிய இயக்கத்தின் முதல் தலைவனாயிருந்த அனுபவத்துடன் கிறிஸ்தவ நண்பர் களுக்கு ஒரு காரியத்தைக் கூற விரும்புகிறேன். புறவினத்தாரிட மிருந்து ஒன்றும் வாங்காமல் முன்னோடி மிஷனரிகள் புறப்பட்டுச் செல்கின்றனர் (3 யோ 7). அவர்களைத் தகுதியானபடித் தாங்குவது நமது பொறுப்பு (வச 6). மிஷனரிகள் பெறும் மாதாந்திர உதவித் தொகை பரிதாபமானது. அவர்களை மனரம்மியமாய் வைத்துக் கொள்ள நாம் ''கடனாளிகள்'' (வச 8). மிஷனரிகளைத் தாங்குவோ ரது சராசரி வருமானத்தோடு மிஷனரிகள் பெறும் உதவித்தொ கையை ஒப்பிட்டுப் பாருங்கள். வெட்கக்கேடு! ஊழியத்தைவிட ஊழியன்தானே முக்கியம்? ''தமது ஊழியக்காரனின் சுகத்தை (செழிப்பை) விரும்பும் கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக'' என்று நாம் ''எப்போதும்'' சொல்லவேண்டுமாம்! (சங் 35:27). இந்தக் கோட்பாடு மறக்கப்படுமானால் மிஷனரி இயக்கங்கள் நாளடைவில் வெறும் இயந்திரங்கள் ஆகிவிடும். நிறுவனத்தின் முன்னேற்றத் திற்காகவே மிஷனரிகளைக் காட்சிப்பொருளாய் முன்நிறுத்தும் கலாச்சாரம் ஒழிக!



# கேள்வி 30

***''நீர் கிறிஸ்துவுமல்ல,***
***தீர்க்கதரிசியானவருமல்ல என்றால்,***
***ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீர்?''***

**(யோவான் 1:25)**

எருசலேமிலிருந்து யூதர்கள் தங்கள் மார்க்கத் தலைவர்களான ஆசாரியரையும் லேவியரையும் திருமுழுக்கினன் யோவானிடம் அனுப்பி, ''நீர் யார்?'' என்று கேட்டனர் (யோ 1:19). கிறிஸ்துவுக்கு முன்னோடியாய் வந்த அவர் அவர்களுக்கு, ''நான் கிறிஸ்து அல்ல'' என்று பதில் கூறினார் (வச 20). அவர்களோ விடாமல், ''அப்படியா னால் நீர் எலியாவா, அல்லது தீர்க்கதரிசியானவரா?'' என்று அடுத்தடுத்துக் கேட்டனர். ''இல்லை'' என்று மறுமொழி கொடுத்த அவரைத் தொடர்ந்து அவர்கள் வினவியபோது, ''நான் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்த வனாந்தரத்தில் ஒரு சத்தம்'' என்றார் (வச 21-23). அப்பொழுதுதான் அவர்கள் ''அப்படியானால் நீர் ஏன் திரு முழுக்கு கொடுக்கிறீர்?'' என்று சவாலிட்டனர் (வச 25). யோவானி டம் கேள்விகளை அடுக்கியவர்கள் பரிசேயர் வகுப்பைச் சேர்ந்த வர்கள். புறவினத்தாரிலிருந்து யூத மார்க்கத்தில் சேருகிறவர்களுக் குத்தான் அவர்களது அஞ்ஞான அசுத்தம் நீங்கவேண்டுமென்று அக் காலத்தில் ஞானஸ்நானம் எனும் சுத்திகரிப்புச் சடங்கு செய்யப் பட்டது. இங்கேயோ யூதருக்கே ஞானஸ்நானம் கொடுத்துக்கொண் டிருந்தார் யோவான்! பரிசேயருக்கு ஒரே குழப்பம்!

இக்கேள்வியை நாம் தியானிப்பது சில முக்கியமான புதிய ஏற் பாட்டு உபதேசங்களுக்குள் நம்மை நடத்துகிறது —

**(1)** கிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஆண்டவரும் இரட்சகருமாய் ஏற்றுக்கொள்ளும் அத்தனை பேரும் தேவனுக்கு முன்பாக ''ஆசாரியராய்'' மாறுகின்றனர். ''அனைத்து விசுவாசிகளின் ஆசாரி



யத்துவம்'' (Priesthood of all believers) எனும் இந்தப் புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தை அடித்துக் கூறியது அப்போஸ்தலன் பேதுரு: 1 பேது 2,5,9, ''நீங்கள் ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்குரிய மாளிகை யாகவும், இயேசு கிறிஸ்து மூலம் தேவனுக்குப் பிரியமான ஆவிக் கேற்ற பலிகளைச் செலுத்தும்படிப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் ... உங்களை இருளிலிருந்து தமது ஆச்சரிய மான ஒளியிடம் வரவழைத்தவரது புண்ணியங்களை அறிவிக்கும் படித் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாகவும், ராஜரீக ஆசாரியக் கூட்டமாகவும், பரிசுத்த இனமாகவும் அவருக்குச் சொந்தமான மக் களாயும் இருக்கிறீர்கள்.'' பரிசுத்த ஆசாரியக் கூட்டம்! ராஜரீக ஆசா ரியக் கூட்டம்!

ஆசாரியர் (clergy) மற்றும் ஆசாரியரல்லாதோர் (laity) என்று இறைமக்களை இரு வகுப்பினராய்ப் பிரிப்பதை இயேசுவானவர் பல வழிகளில் கண்டித்தார். எடுத்துக்காட்டாக, மத்தேயு 23ஆம் அத்தி யாயத்திற்குத் திருப்புங்கள். அவரது பூவுலகப் பணியின் இறுதிக் கட்டத்தில் அதிமுக்கியமான சத்தியங்களைப் போதிக்கும்போது கூறிய வார்த்தைகள் இவை. இவ்வார்த்தைகளை அவர் ''மக்களுக் கும்'' அத்துடன் ''சீடருக்கும்'' சேர்த்துப் பேசினார் (வச 1). பட்டம் பெற்றவர்கள்போல் மோசேயின் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு ஆதிக்கம் செலுத்திவந்த வேதபாரகர் மற்றும் பரிசேயரை முதலாவது சுட்டிக்காட்டி அவர்களது மாய்மாலத்தை அம்பலப்படுத்தினார் (வச 2). அவர்களுக்குப் பட்டமே பிரதானம். அதனைக் காட்டவும் நிலை நிறுத்தவும் விரும்புவர். ''விருந்துகளுக்குப்'' போனால் அவர்களுக் குத்தான் முதலாவது பரிமாறவேண்டும். ''ஆலயங்களுக்குப்'' போனால் அவர்களுக்குத்தான் உயர்ந்த நாற்காலிகள் வேண்டும். ''சந்தைவெளிகளுக்குப்'' போனால் ''ரபீ, ரபீ,'' என்று அனைவரும் அவர்களைக் கும்பிடவேண்டும் (வச 6,7). இப்பாரம்பரியத்தில் ஆண்டவர் எவ்விதம் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருகிறார் பாருங் கள்: ''நீங்களோ ரபீ என்று அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒரு வரே உங்களுக்குப் போதகர்; நீங்கள் எல்லாரும் சகோதரர். இவ் வுலகில் ஒருவனையும் உங்கள் தந்தை என்று சொல்லாதிருங்கள்;

விண்ணுலகிலிருக்கும் ஒருவரே உங்களுக்குத் தந்தை. நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குரு'' (வச 8-10).

மேற்கூறிய வசனங்களுக்கு வியாக்கியானம் தேவையோ? இதனைப் புரிந்துகொள்ளவா இறையியல் கல்லூரிக்குச் செல்லவேண்டும்? இதில் இறைமக்களுக்கும் பொறுப்புண்டு; இறைப்பணியாளருக்கும் பொறுப்புண்டு (வச 1). பட்டங்களைச் சொல்லி மக்கள் எவரையும் அழைக்கக்கூடாது; பட்டங்களைச் சொல்லி அழைக்கப்படத் தலைவர்கள் எவரும் விரும்பக்கூடாது. அன்று இயேசு திட்டமாய்ச் சொன்ன வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்தும் என்மீது உங்களுக்கு வரும் கோபம் எனக்குப் புரிகிறது! இன்று இறைமக்கள் எவருக்கும் ''பட்டம்'' (title) என்பது கிடையவே கிடையாது; ''பணி'' (function) மட்டுமே உண்டு.

இந்தியாவின் தலைசிறந்த *அப்போஸ்தலரில்* ஒருவராகிய பக்தசிங் (1903-2000) அவர்கள் ''சகோதரன்'' என்றே கண்ணியமாய் அழைக்கப்பட்டார். அகிலவுலகப் புகழ்பெற்றிருந்த *தீர்க்கதரிசியாகிய* D.G.S. தினகரன் (1935-2008) அவர்கள் ''சகோதரன்'' என்றே அன்புடன் அழைக்கப்பட்டார். திரள்களைக் கவரும் பிரபல *சுவிசேஷகர்களில்* ஒருவரான எனது நண்பர் மோகன் C. லாசரஸ் (1954- ) அவர்கள் இன்றுவரை (2018) ''சகோதரன்'' என்றே பாசமாய் அழைக்கப்படுகிறார். பெந்தெகொஸ்தே *மேய்ப்பர்களில்* பழுத்திருந்தவரான G. சுந்தரம் (1909-1989) அவர்கள் தனது செய்திமடல்களில் தன்னைச் ''சகோதரன்'' என்றே அழைத்துக்கொண்டார். திருமறைப் *போதகர்களில்* உயர்ந்து நிற்கும் சகரியா பூணன் (1939- ) அவர்கள் எங்கும் ''சகோதரன்'' என்றே மதிப்புடன் அழைக்கப்படுகிறார். திருச்சபைக்கு தேவன் தந்துள்ள ஐவகை ஊழியருக்கான எடுத்துக்காட்டுகள் இவர்கள் (எபே 4:13). சில ஆண்டுகளுக்கு முன்புவரை பெந்தெகொஸ்தேயினரால் ''பாரம்பரியச்'' சபையினர் என்று பழிக்கப்பட்ட ''புராதனச்'' (mainline) சபையினர் நடுவில்தான் பட்டங்களுக்கு நாட்டம் அதிகமிருந்தது. இப்பொழுதோ தங்களை ''ஆவிக்குரிய'' (spiritual) சபையினர் எனத் தம்பட்டம் அடித்துக்



கொள்ளும் பெந்தெகொஸ்தேயினருக்கும் பட்டங்களுக்கான பைத்தியம் பிடித்திருக்கிறது. அனைத்து விசுவாசிகளின் ''சகோதரத்துவம்'' (brotherhood) என்பது தேவனுக்குமுன் நமது சமத்துவத்தையும் (equality), அனைத்து விசுவாசிகளின் ''ஆசாரியத்துவம்'' (priesthood) என்பது தேவனுக்குமுன் நமது பொறுப்பையும் (responsibility) சுட்டிக்காட்டும் புதிய ஏற்பாட்டு உபதேசம்.

(2) நாம் தியானத்திற்கு எடுத்துக்கொண்ட கேள்வி நமக்கு அறிமுகப்படுத்தும் இன்னொரு உபதேசம் ''அனைத்து விசுவாசிகளின் தீர்க்கதரிசனப்பணி'' (Prophethood of all believers) என்பதாகும். பழைய உடன்படிக்கையின் காலத்தில் ஒரு சில தலைவர்கள் மட்டுமே எண்ணெயால் அபிஷேகிக்கப்பட்டனர். சிறப்பான பணிகளுக்காய் ஆவியானவரது வல்லமை அவர்கள்மீது இறங்கியது. புதிய உடன்படிக்கை அமுலாக்கத்திற்கு வந்தபின்னரோ பரிசுத்த ஆவியானவர் தமது மக்கள் ''யாவர் மீதும்'' ஊற்றப்படுகிறார் (அப் 2:17). அதில் மகன்கள், மகள்கள், வாலிபர், நங்கையர், முதியோர், வேலைக்காரர், வேலைக்காரிகள் ஆகிய அனைத்து வகுப்பினரும் இடம் பெறுவர். அவர்கள் ''தீர்க்கதரிசனம்'' சொல்லுவார்களென்று தீர்க்கன் யோவேலினால் முன்னுரைக்கப்பட்டபடியே பெந்தெகொஸ்தே நாளன்று நிறைவேறத் துவங்கியது (வச 16-18). இறைமக்கள் அத்தனைபேரும் ''தேவனது மகத்துவங்களை'' (வச 11) தீர்க்கதரிசனமாய் முழங்கவேண்டுமென்ற எதிர்பார்ப்பு மோசேயிடமே காணப்பட்டது. கூடாரத்திற்குச் செல்லாது பாளையத்திலேயே இருந்துவிட்ட இருவர் தீர்க்கதரிசனம் சொன்னது யோசுவாவுக்குப் பிடிக்காமல், அதை மோசேயிடம் யோசுவா முறையீடு செய்தார் (எண் 11:25-28). அதற்கு மோசே கொடுத்த பதில் அபாரம்: ''கர்த்தருடைய மக்கள் எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லும்படிக் கர்த்தர் தமது ஆவியை அவர்கள்மீது இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே!'' (வச 29). இவ்விதப் பரந்த மனதும் அகன்ற இதயமும் இன்றையத் தலைவர்கள் பலரிடம் காணப்படாததால் அல்லவோ நமது இளைஞர் நசுக்கப்படுகின்றனர்?

விசுவாசிகளே, உங்கள் பின்னணி எதுவாயினும் ஆண்டவர் உங்கள் உதடுகளைத் தொட்டுத் தமது வார்த்தைகளை நீங்கள்

தைரியமாய், தீர்க்கதரிசனமாய், அறிவிக்க உங்களைப் பயன் படுத்தலாம். இதோ, நமக்குமுன் நம்மை ஊக்குவிக்க, உந்தித்தள்ள, தீர்க்கன் ஆமோஸ் நிற்கிறார். அவரது சாட்சியைக் கேளுங்கள்: ''நான் தீர்க்கதரிசியும் அல்ல, தீர்க்கதரிசியின் மகனுமல்ல; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவனுமாய் இருந்தேன். ஆனால் மந்தையின் பின்னால் போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் ... தீர்க்கதரிசனம் சொல் என்று உரைத் தார்'' (ஆமோஸ் 7:14,15). ''கர்த்தர்'' அழைத்தார், ''கர்த்தர்'' அனுப்பி னார்; இதுதான் இங்கு காரியம். கர்த்தருக்காக எவரும் பேசலாம் எனும் தாற்பரியம் ஏற்கனவே அவர் மனதில் இருந்திருக்கிறது. எனவேதான் தனது முந்திய அத்தியாயம் ஒன்றில் அவர் சவால் விட்டுக் கேட்டது: ''சிங்கம் கெர்ச்சிக்கிறது; யார் பயப்படாதிருப்பான்? கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார்; யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான்?'' (3:8). திருச்சபையின் அமைதிப் பெரும்பான்மையினரை (silent majority) தட்டியெழுப்பவே இவ்வசனங்களையெல்லாம் நினைவு படுத்துகிறேன். ஆண்டவரின் ஏக்கத்தை எமில் அண்ணன் ஒரு பாடலாக்கி விட்டார்கள் —

*எனக்காய்ப் பேசிட நாவு வேண்டும்,*
*என்னைப்போல் அலைந்திடக் கால்கள் வேண்டும்;*
*என்னில் அன்புகூர ஆட்கள் வேண்டும்,*
*அதை உன்னிடம் கேட்கிறேன் — தரவேண்டும்!*

இவ்வுலக வழக்கத்தின்படி, வெறும் சட்டதிட்டங்களாலேயே இயக்கப்படும் சபைகள் மற்றும் சங்கங்களுக்குத் திருவார்த்தை பொதுவாக வெளியேயிருந்துதான் வருகிறது என்பது சரித்திரம் கூறும் சான்று. சிங்கங்களுக்குக் கூண்டுகள் பிடிக்காது! Lions hate cages! ஆவியானவரை அடைத்துவைக்க முடியாது; அவர் அசை வாடிக்கொண்டேயிருப்பார். அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரி யராயிருந்தனர்; ஆனால் தேவனுடைய வார்த்தை ஆலயத்திற்கு வெளியே வனாந்தரத்தில் இருந்த யோவானுக்குத்தான் உண்டா யிற்று (லூக் 3:2). கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னோடி



யான ஒரு சத்தமாய் யோவான் வந்தார். அவரது மறுவருகைக்கு முன்னோடியான ஆவியானவரின் சத்தமாய் நாம் சபையிலும் சமுதாயத்திலும் ஒலிப்போமா?

தீர்க்கதரிசியாய் இயேசு வந்தார்; ஆசாரியராய் விண்ணேறினார்; இராஜாவாய்த் திரும்பி வருவார். ஒருங்கே இம்முப்பணிக்காக அவர் அபிஷேகிக்கப்பட்டதாலேயே அவர் ''கிறிஸ்து'' எனப்பட்டார். அவரது பரிபூரணத்தினால் கிருபையின் மேல் கிருபை பெற்ற நாம் எல்லாரும் இன்று தீர்க்கர்களாகவும், ஆசாரியர்களாகவும், இராஜாக் களாகவும் தேவனுக்குமுன், தேவனுக்காக, பணியாற்ற அழைக்கப் பட்டிருக்கிறோம் (யோ 1:16). கிறிஸ்துவின் மற்றும் கிறிஸ்தவர் களின் இம்முப்பணி குறித்து 1988இல் ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM) நடத்திய ஆசீர்வாத முகாமில் (Blesso '88) விரிவாகப் போதித் தேன். அச்செய்திகள் *''தீர்க்கதரிசி, ஆசாரியர், இராஜா''* என்ற தலைப் பில் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒரு புத்தகமாக வெளிவந்துள்ளது. வாங்கிப் படித்து உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் இடறிவிழாமல் கனி நிறைவுடன் வாழுவீர்கள் (2 பேது 1:10,8).

அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம் எனும் புதிய ஏற் பாட்டு உபதேசம் 1517இல் உருவாகிய புராட்டஸ்டன்ட் சீர்திருத் தத்தின்போது வலியுறுத்தப்பட்டது. ஆனாலும் பெரும்பாலான புராட் டஸ்டன்ட் சபைகளிலும் இது ஏட்டுச் சுரைக்காய்தான். இவ்வுப தேசத்தை நடைமுறைப்படுத்த சபையினரும் தலைவர்களும் எவ்வளவாய்த் தயங்குகின்றனர்! பிரியமானவர்களே, திருமறையின் தெளிவான உபதேசம் எதனையும் சார்ந்து தைரியமாய்ச் செயலாற்ற லாம். அது ஒரு மண் குதிரை அல்ல; அது கன்மலையான அஸ்தி பாரம்! திருச்சபைச் சீர்திருத்தம் என்பது நெடுகவே நடந்தேறவேண் டியது. அப்போஸ்தலர் பிரசங்கித்த சுத்த சுவிசேஷம் சபையின் இருண்ட காலத்தில் (Dark Ages) கலப்படமானது. சீர்திருத்தச் செம் மல்களால் 16ஆம் நூற்றாண்டில் துவங்கப்பட்ட சீர்திருத்தம் நின்று விடக்கூடாது. இன்றிருக்கும் சபை அன்றிருந்த ஆதிச்சபை போன்ற தல்ல; அது இருக்கவேண்டிய நிலைக்குத் திரும்பும்வரை சீர்திருத்தம் தொடரவேண்டும் (அப் 3:19-21).

எனது பிரசங்கங்களிலும் எழுத்துக்களிலும் நெடுகவே சில தேவ மனிதரது கூற்றுக்களை மேற்கோள் காட்டி வந்திருக்கிறேன். அவற்றில் தலையோங்கி நிற்பது சுவிசேஷகர் T. L. ஆஸ்போர்ன் (1923-2013) அவர்கள் கூறியதே: ‘‘முழுநேர ஊழியரல்லாத கிறிஸ்தவரே திருச்சபையின் இறுதி அத்தியாயத்தை எழுதி முடிப்பர்!’’ (The laymen shall write the last chapter of Church History!) வாலிபரே, நங்கையரே, வீறுகொண்டு எழுந்திருங்கள்! சபைத் தலைவர்களே, சவுலும், எலியாபும், கோலியாத்தும் சின்ன தாவீதை அசட்டை செய்ததுபோல் இளைஞரை அசட்டை செய்யாதீர்கள்! தம்பித் தங்கையரே, ‘‘நான் சிறு பிள்ளை என்று சொல்லாதீர். பிடுங்கவும், இடிக்கவும், கட்டவும் தேவன் உங்களையே தெரிந்துகொண்டுள்ளார்!’’ தீமோத்தேயுக்களே, ‘‘உங்கள் இளமையைக் குறித்து ஒருவரும் உங்களை அசட்டை செய்ய இடங்கொடாதிருங்கள். உங்களை அசட்டை செய்ய முயலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிருங்கள்!’’ தளபதி இயேசுவின் பின்னால் அணிவகுப்போம்! முழுச் சபையும் முழுச் சுவிசேஷத்தையும் முழு உலகிற்கும் எடுத்துச் செல்லட்டும்! அப்பொழுது இன்றிருக்கும் யுகம் முடியும்; இனிவரும் யுகம் விடியும்!





# கேள்விகளுக்குப் பதில் தரும் கேள்விகள்



இப்புத்தகத்தில் தியானிக்கப்பட்ட
30 கேள்விகளில் 28 கேள்விகள்
நாகர்கோவில், பாளையங்கோட்டை, நாசரேத், ஈரோடு
ஆகிய ஊர்களில் நடந்த நான்கு ***பைபிள் பிரியர் கூடுகைகளில்***
ஆசிரியரால் தமிழில் பிரசங்கிக்கப்பட்டவை.
இவை ஒலிப்பதிவாகியுள்ளன.

4 ஒலித்தட்டுகள் (mp3)
மொத்த நேரம்: 10 மணி

தொகுப்பு ஒன்றின் விலை ரூ. 200/-
அனுப்பச் செலவு ரூ. 50/-

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>   <evangeline@stanleyonbible.com>*

## “ஊழியரும் மக்களும்”




**Preachers**
**&**
**People**

ஊழியரே மக்களை உருவாக்குகின்றனர்;
மக்களே ஊழியரை உருவாக்குகின்றனர்!
*“மக்களுக்கு எப்படியோ, ஆசாரியனுக்கும் அப்படியே!”* (ஓசி 4:9)
நடத்தப்படுவோர் நடத்துவோரைப் பாதிப்பர்;
நடத்துவோர் நடத்தப்படுவோரைப் பாதிப்பர் (ஏசா 24:2).
கடவுளுடைய நித்தியமான திட்டங்களை நிறைவேற்றுவதில்
கிறிஸ்தவத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் உள்ள
சரிசமப் பொறுப்பைச் சகோதரன் ஸ்டான்லி
இந்நூலில் எடுத்துரைக்கிறார்.

*22 நேரடிச் செய்திகள்*
*216 பக்கங்கள்*
*விலை ரூ. 80/-; அனுப்பச் செலவு ரூ. 50/-*
*ஆங்கிலத்திலும் உண்டு.*

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*






## வாலிபர் எழுப்புதல் கடிதங்கள்

**அன்றையக் கடிதங்கள் தரும்**
**ஓர் எழுப்புதல் சரித்திரம்**
**1970-1990**

*by R. ஸ்டான்லி*

☐ *160 இதயம் பேசும் கடிதங்கள்* ☐
☐ *800 புகைப்படங்களும் வரைபடங்களும்* ☐
☐ *30 எழுப்புதல் அறிக்கைகள்* ☐
☐ *50 சவால் நிறை கட்டுரைகள்* ☐
☐ *33 கிளர்ச்சியூட்டும் பாடல்கள்* ☐
☐ *8 தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்கள்* ☐

1024 பக்கங்கள் ☐ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/- மட்டும்; அனுப்பச் செலவு ரூ. 100/-
இந்நூல் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

## “பைபிள் புதையல்கள்”

by **R. ஸ்டான்லி**



ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல்
இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்;
உறையுடன் தடித்த அட்டை; ரூ. 500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-
*ஆங்கிலம், தெலுங்கு, இந்தி மற்றும் கன்னடத்திலும் உண்டு.*

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
*ஆங்கிலத்திலிருந்து தமிழ்.*

□

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

□

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 50/-

■

***100 மணி நேரத் திடமான வேத போதனை***

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்துடன் ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!

*இவை ஆசிரியரிடம் கிடைக்கும்.*



*வாசியுங்கள் ...*



# பைபிள் பதில்கள்

**(BIBLE ANSWERS)**
by
R. ஸ்டான்லி

அடிக்கடி கேட்கப்பட்டும் அபூர்வமாய்ப் பதிலளிக்கப்படும்
100 கேள்விகளுக்குப் பின்வரும் ஏழு பிரிவுகளின் கீழ்
தெளிவான பதில்கள் —

*(1) கிறிஸ்தவ வாழ்வு (2) கிறிஸ்தவ உபதேசம்*
*(3) ஆவியானவரும் வரங்களும் (4) திருச்சபை*
*(5) கிறிஸ்தவ ஊழியம் (6) பாலுறவும் திருமணமும்*
*(7) சமூக வாழ்வு*

ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஊழியனும்
கட்டாயம் வாசிக்கவேண்டியது.
256 பக்கங்கள்
சாதா அட்டை ரூ. 100/-; தடித்த அட்டை ரூ. 125/-
அனுப்பச் செலவு ரூ. 25/-
**ஆங்கிலத்திலும் உண்டு.**

ஆசிரியரிடமும், கீழ்க்கண்ட முகவரியிலும் கிடைக்கும் —

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

***கிறிஸ்தவ வாழ்வில்***
***நிறைவாய் வளர உணவளிக்கும்***
***ஒரு தினசரித் தியான நூல் ...***



**Better Everyday**

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில் எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும் ...**
**அனைத்து வயதினரும் ...**
**அனைத்துத் துறையினரும் ...**
**விரும்பி வாசிக்கும்**
**ஒரு புதிய படைப்பு!**

*432 பக்கங்கள்; விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-*
*10 பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி*

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி, மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 100/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

*கிடைக்குமிடம்:*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*



## ஆசிரியரது பிற நூல்கள்

- அறிவூட்டும் அகவுணர்வுகள்
- ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?
- ஆனந்த அறுவடை
- இரட்சிக்கப்படுவது எப்படி?
- இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?
- இயேசுவின் அடிச்சுவடுகள்
- இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!
- உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்
- எதிர்நீச்சல் வாலிபர்
- எழுப்புதல் வரும்போது ...
- ஐந்தப்பம் இருமீன்
- கண் திறக்கும் கட்டுரைகள்
- காட்டுத் தேன்
- கீழ்ப்படிதலே மேல்படி!
- சமநிலைக் கிறிஸ்தவன்
- சிறு நரிகள்
- திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்)
- திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்)
- தீர்க்கதரிசி, ஆசாரியர், இராஜா
- நான் நிற்கும் கன்மலை
- நெஞ்சில் நெருப்பு
- பூர்வ பாதைகள்
- பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!
- பொற்பழங்கள்
- பைபிள் பதில்கள்
- பைபிள் பரிசுத்தம்
- பைபிள் வல்லமை
- மாணவ மணிகளுக்கு...
- வல்லமை தேவனுடையது!
- விசுவாச வாழ்வு

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச்செய்திகள்
அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam Road, Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

**StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

**CONTENTS**

***My Letters***
Stanley talks heart to heart with the Visitors of this Website.

❒

***General Messages***
Enlightening Articles for Christian Growth

❒

***Sermon Outlines***
Outlines on miscellaneous subjects for Personal Meditation and Pulpit Preaching

❒

***Bible Studies***
Studies on specific themes and select books of the Bible

❒

***Doctrinal Essays***
Corrective Teaching to uphold Sound Doctrines of the Bible

❒

***Youth Matters***
Practical Guidelines to Young Men and Young Women for Successful Living

❒

***Leaders Column***
Biblical Insights and Practical Lessons on Christian Leadership

❒

***Missionary Challenge***
Calling Christians to obey the Great Commission of Christ

❒

***My Answers***
Answers to Questions frequently asked but rarely answered

❒

***Quotable Quotes***
Stanley's analytical Statements about Christian Life and Ministry

❒

***Video Talks***
Freely downloadable video and audio sermons of Stanley

*(Register your e-mail id on this website to receive daily devotions & updates instantly.)*



## முடிவு வரிகள் ...

- இந்நூலிலுள்ள ஒவ்வொரு அத்தியாயத்திலும் பல்வேறு திருத்துதல் உபதேசங்கள் தரப்பட்டுள்ளன. துர்வுபதேச வெள் ளங்களுக்குத் தப்பவும் ஆரோக்கிய உபதேசத்தைத் தழுவிக் கொள்ளவும் இவை உங்களுக்குப் பேருதவியாயிருக்கும். இதனை இருமுறையாவது வாசிப்பது அவசியம். வாசிக்கும் பழக்கம் குறைந்துவரும் இக்காலத்தில் முயற்சி எடுக்காமல் இவ்விதப் புத்தகங்களிலிருந்து ஆசி பெறுவது சாத்தியமல்ல.

- இன்றையக் காலக்கட்டத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும், ஊழியனும், தலைவனும் கட்டாயம் வாசிக்கவேண்டிய புத்தகம் இது. உங்கள் நண்பர்களுக்குக்கெல்லாம் இதனை வாங்கி வினியோகியுங்கள். விலை ரூ. 100/-. பத்து பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி. அனுப்பச் செலவு தனி. இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் ஆளுக்குக் குறைந்தது 10 பிரதிகள் வாங்கி வினியோகித்தால் கிறிஸ்தவத்தில் காணப் படும் எத்தனையோ சீர்கேடுகள் மறையும், சீர்திருத்தம் மலரும்.

- இந்நூலினால் நீங்கள் பெற்ற நன்மைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். பதினோரு மொழிகளில் ஆசிரியரும் அவரது குழுவினரும் செய்துவரும் இலக்கியப்பணிக்காய் ஜெபியுங்கள்; பொருளுதவி செய்ய விரும்புவோர் வங்கி விபரம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*